இளங்கலை கல்வியியல் (B.Ed.,)

பருவம் - II

# குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமை

## பாடநூல்


நூல் ஆசிரியர்கள்

**முனைவர் ஆ.இராஜேஸ்வரி**
துறைத்தலைவர் & உதவிப்பேராசிரியர்
கலைத்திட்ட வரைவு மதிப்பீட்டுத்துறை
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
சென்னை

**அ.தேவநேயன்**
இயக்குநர், தோழமை
சென்னை - 20

**எல்.டி.ஸ்டெகனா ஜென்சி**
இயக்குநர்
குழந்தை உரிமைகள் மற்றும் வளர்ச்சி மையம்
சென்னை

**ஆண்ரூ சேசுராஜ்.ம**
ஆலோசகர் - பொதுக் கொள்கை
மாநில திட்டக்குழு தமிழ்நாடு அரசு

**முனைவர் மு.அண்ணாதுரை**
வளர்ச்சிக் கொள்கை ஆலோசகர்
மதுரை

**வி.சு.வருணன்வேலு**
உதவி பேராசிரியர் (முதுநிலை)
சமூகப் பணித் துறை
அமிர்தா பல்கலைக்கழகம், கோயமுத்தூர்

**க.குமரேசன்**
குழந்தைகள் பாதுகாப்பு நிபுணர்
யுனிசெஃப் தமிழ்நாடு

**ஐஷ்வர்யா**
ஆதரவு திரட்டு மேலாளர்
தோழமை, சென்னை

**வழக்கறிஞர் சோ.பிரபாகர்**
ஒருங்கிணைப்பாளர்
தோழமை, சென்னை

மொழிபெயர்ப்பு

**கா.வேணி**
மூத்த ஒருங்கிணைப்பாளர்
குழந்தை உரிமைகள் மற்றும் வளர்ச்சி மையம், சென்னை



**தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்**
சென்னை - 97

இளங்கலை கல்வியியல் (B.Ed.,)

பருவம் - II

# குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமை

பாடநூல்

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
சென்னை - 97

## நூல் ஆசிரியர்கள்

**முனைவர் ஆ.இராஜேஸ்வரி**
துறைத்தலைவர் & உதவிப்பேராசிரியர்
கலைத்திட்ட வரைவு மதிப்பீட்டுத்துறை
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
சென்னை

**அ.தேவநேயன்**
இயக்குநர்,
தோழமை
சென்னை

**எல்.டி.ஸ்டெகனா ஜென்சி**
இயக்குநர்
குழந்தை உரிமைகள் மற்றும் வளர்ச்சி மையம்
சென்னை

**ஆண்ரூ சேசுராஜ்.ம**
ஆலோசகர்– பொதுக் கொள்கை
மாநில திட்டக்குழு
தமிழ்நாடு அரசு

**முனைவர் மு.அண்ணாதுரை**
வளர்ச்சிக் கொள்கை அலோசகர்
மதுரை

**வி.சு.வருணன்வேலு**
உதவி பேராசிரியர் (முதுநிலை)
சமுகப் பணித் துறை
அமிர்தா பல்கலைக்கழகம், கோயமுத்தூர்

**க.குமரேசன்**
குழந்தைகள் பாதுகாப்பு நிபுணர்
யுனிசெப் தமிழ்நாடு

**ஐஷ்வர்யா**
ஆதரவு திரட்டு மேலாளர்
தோழமை, சென்னை

**வழக்கறிஞர் சோ.பிரபாகர்**
ஒருங்கிணைப்பாளர்
தோழமை, சென்னை

## மொழிபெயர்ப்பு

**கா.வேணி**
மூத்த ஒருங்கிணைப்பாளர்
குழந்தை உரிமைகள் மற்றும் வளர்ச்சி மையம், சென்னை

ISBN: 978-81-971105-4-2

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 5 |
| நுழையும் முன் | 7 |
| இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான குழந்தைகள் பற்றிய புள்ளிவிவரங்களும் - அவை தொடர்பான குறியீடுகளும் | 9 |
| **அலகு - 1: குழந்தை உரிமைகள் என்னும் கருத்தாக்கம்** | **11** |
| குழந்தை என்றால் யார் என்ற வரையறையும் கருத்தாக்கமும் | 11 |
| வரலாற்று ரீதியாக குழந்தைகள் நடத்தப்பட்ட விதம் | 12 |
| குழந்தை உரிமைகள் பற்றிய வரையறையும் கருத்தாக்கமும் | 13 |
| குழந்தைகள் பற்றிய புரிதல்களும் புனைவுகளும் | 14 |
| பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணோட்டத்திலிருந்து குழந்தை உரிமைகளைப் புரிந்துகொள்வது | 15 |
| குழந்தை உரிமைகளின் முக்கியத்துவமும் அவற்றைப் புரிந்துகொண்டு உறுதிப்படுத்துவதின் அவசியமும் | 18 |
| குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை | 20 |
| குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை  ஒரு பார்வை | 22 |
| இந்தியாவின் பல்வேறு சட்டங்களில் 'குழந்தை' என்பதற்கான வரையறைகள் | 28 |
| தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தை உரிமைகள் குறித்த வரலாறு | 29 |
| தமிழ்நாட்டில் சமூக நீதி மற்றும் சீர்திருத்த இயக்கங்களின் வரலாறு | 32 |
| இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் குழந்தை உரிமைகளுக்காகப் பணி புரியும் அரசு சாரா நிறுவனங்கள் | 33 |
| ஆயிரமாண்டு வளர்ச்சிக்கான இலக்குகளும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும் | 34 |
| குழந்தை உரிமைகளும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும் | 36 |
| **அலகு - 2: குழந்தைகளுக்கு எதிரான வன்முறை** | **40** |
| குழந்தைகளுக்கு எதிரான வன்முறை  தமிழ்நாட்டில் நிலவும் வெவ்வேறு வடிவங்களும் போக்குகளும் | 41 |
| நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத்தி தீங்கிழைத்தல் | 45 |
| பாகுபாடு | 45 |
| குழந்தைகள் போதைப் பொருட்களை சார்ந்திருப்பது | 47 |
| சட்டத்தோடு முரண்படும் குழந்தைகள் | 49 |
| இணைய வழி தீங்கிழைத்தல் | 50 |
| குழந்தைகள் தற்கொலை செய்துகொள்வது | 51 |
| இனமும், வர்க்கமும், பாலினமும், பாலியலும், மனிதர் அடையாளத்தின் பல்வேறு வடிவங்களும் இயல்பில் இணைந்து, ஊடுறுவியிருக்கும் நிலையும் ஒடுக்குமுறையின் வடிவங்களும் (Intersectionality) | 53 |
| குழந்தைகள் மீதான வன்முறையின் தாக்கமும் விளைவுகளும் | 53 |
| தமிழ்நாட்டில் குழந்தைகள் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதற்கான காரணிகளும் அடிப்படைக் காரணங்களும் | 55 |
| **அலகு - 3: குழந்தை உரிமைகள் - கொள்கைகளும், சட்டங்களும் நிறுவனங்களும்** | **57** |
| குழந்தை உரிமைகளுக்கான இந்திய அரசியல் சாசன விதிகள் | 58 |
| இளம் சிறார் நீதி பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம்  2015 | 59 |
| இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 | 61 |
| பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (போக்ஸோ சட்டம்) 2012 | 62 |
| குழந்தைத் திருமண தடைச் சட்டம் 2006 | 64 |

| | |
|---|---|
| குழந்தை உழைப்பு (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 | 66 |
| குழந்தைகளுக்கான தேசிய மற்றும் மாநிலக் கொள்கைகள் | 67 |
| குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை | 70 |
| இந்தியாவில் குழந்தைப் பாதுகாப்பு முறை | 72 |
| மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் குழு (கவுன்சில்) | 79 |
| ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகளுக்கான குழுவும், குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளில் சிறப்பு அறிக்கைகளை அளிப்பவரும் | 80 |
| **அலகு - 4: குழந்தை நேயப் பள்ளிகளும் ஆசிரியர்களின் பங்கும்** | **82** |
| குழந்தை நேயப் பள்ளிகளும் கற்றல் சூழலும் கருத்து வடிவமும் (Concept) அதன் முக்கியத்துவமும் | 83 |
| பள்ளிகளில் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆசிரியர்களின் பங்கும் பொறுப்புகளும் | 84 |
| பள்ளிகளில் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையின் முக்கியத்துவம் | 86 |
| கற்பித்தல் கலையும் மதிப்பீடும் | 87 |
| கற்பித்தல் கலையும் மதிப்பிடுதலும் பற்றிய உரிமைகள் | 89 |
| கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான இடங்களையும் வாய்ப்புகளையும் குழந்தைகளுக்கு உருவாக்குவது | 89 |
| பள்ளி மேலாண்மைக் குழுக்களின் பங்கு | 91 |
| குழந்தை உரிமைகளை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்கள் சந்திக்கும் சவால்கள் | 92 |
| **அலகு - 5: குழந்தைகளின் பாதுகாப்புக்கும் அவர்களது பங்கேற்பை மேம்படுத்துவதற்குமான திறன்கள்** | **95** |
| பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் வாழும் குழந்தைகளைக் கண்டறிவது | 96 |
| தீங்கிழைத்தல்களும் புறக்கணிப்புகளும் குழந்தைகளுக்கு நடக்கிறதா என்பதற்கான எச்சரிக்கைகளையும் காரணிகளையும் அடையாளம் காணுதல் | 98 |
| வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கையாள்வதற்கான திறன்கள் | 100 |
| குழந்தைகளுக்குத் தீங்குகள் இழைக்கப்பட்டுள்ளனவா, அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்களா என சந்தேகம் எழுகிற பிரச்சனைகளைக் கண்டறிவதிலும் அவை தொடர்பாக அறிக்கைகள் அளிப்பதிலும் ஆசிரியர்கள், மற்ற நிபுணர்களின் பங்கு | 101 |
| பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சமூக ரீதியான உளவியல் ஆதரவும் பரிந்துரைக்கப்பட்ட சேவை அமைப்புகளும் | 102 |
| குழந்தைகளின் நம்பிக்கையை ஆசிரியர்கள் பெறுதல் வழியாக குழந்தைகளின் பங்கேற்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல் | 103 |
| குழந்தைகளை நேர்மறை ஒழுங்குபடுத்துவதற்கான ஆசிரியர்களுக்கான தொழிற்நுட்பம் | 103 |
| குழந்தை உரிமைகளைக் கொண்டாடுவதற்கான திறன்கள் | 106 |

**இந்தப் படிப்பின் கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்ட செயல்பாடுகள்**

செயல்பாடுகள்

**வன்முறையால் குழந்தைகள் பாதிக்கப்படுதல் பற்றிய தனியான ஆய்வுகள்**

தனி ஆய்வு 1 குழந்தைகளுக்குத் திருமணம் செய்தல்

தனி ஆய்வு 2 உடல் சார்ந்த வன்முறை

தனி ஆய்வு 3 குழந்தைகளுக்கு பாலியல் சார்ந்த தீங்குகளைச் செய்தல்

தனி ஆய்வு 4 சட்டத்தோடு முரண்படுதலில் குழந்தை

தனி ஆய்வு 5 பள்ளியிலிருந்து பாதியிலேயே நின்றுவிடுதல்

இந்தியாவில் குழந்தைப் பாதுகாப்புச் சட்டங்கள் குறித்த வரைபடம்

உதவி (ஹெல்ப் லைன்) எண்கள்

# முன்னுரை

இந்த உலகின் ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனித்துவமான பொக்கிஷம். வயது, பாலினம், இனம் மற்றும் மதச் சார்பு ஆகியவற்றைக் கடந்து சமமான முக்கியத்துவத்துடன் சமூகத்தின் கட்டமைப்பில் அவர்கள் பிணைக்கப்பட்டுள்ளனர். ஒரு கூட்டு எதிர்காலத்தின் முகவர்களாக, குழந்தைகள் இயல்பிலேயே வாழும் உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தை வடிவமைப்பதில் தீவிரமாக பங்கேற்கும் உரிமையைக் கொண்டுள்ளனர், இது ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையால் (ஹிழிசிஸிசி) மொழியப்பட்டது. உண்மையில், குழந்தைப் பருவம் என்பது மனிதகுலத்திற்கு வழங்கப்பட்ட மிக விலையுயர்ந்த பரிசு. இந்தப் பருவம் சமுதாயத்தின் பிரகாசமான எதிர்காலத்தை இன்றே உருவாக்கும் கட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இருப்பினும், இந்தியச் சூழலில், குழந்தைப் பருவம் ஒரு கடினமான சவாலை எதிர்கொண்டுவருகிறது. வன்முறை, சுரண்டல் மற்றும் கடத்தல் போன்ற நிகழ்வுகளால் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. துரதிர்ஷ்டவசமாக, பல குழந்தைகள் ஆபத்தான சூழ்நிலைகளில் உழைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர், பாலியல் சுரண்டல் மற்றும் கடத்தல் ஆகியவற்றின் கட்டுகளுக்கும் இரையாகிறார்கள். இந்த குற்றங்களின் விளைவுகள் மிக ஆழமானவை, இதனால் அப்பாவிக் குழந்தைகளுக்கு நீடித்த உடல் மற்றும் மனதளவிலான பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்தச் சூழல் இதுபோன்ற பிரச்சினைக்கு எதிராக அழுத்தமானதொரு தீர்வை காண வேண்டிய அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் முன்வைக்கும் சவால்களை எதிர்கொண்டு வரும் அதே வேளையில், கொரோனா பெருந்தொற்று காலம் இதில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியது.குறிப்பாக குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை எண்ணிக்கை அதிகரித்தது.

குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை பல்வேறு வடிவங்களில் நிகழ்கிறது குறிப்பாக குடும்பம், சமூகம், கல்வி நிறுவனங்கள், நிறுவன மையங்கள் மற்றும் பணியிடம் என அனைத்து இடங்களிலும் இது நிகழ்கிறது. குற்றவாளிகள் பெரும்பாலும் குழந்தைகளுக்கு நெருங்கியவர்களாகவே இருக்கின்றனர். இந்த மாறுபட்ட சூழல்களில் குழந்தைகளின் நல்வாழ்வைப் பாதுகாக்க ஒரு தெளிவான இலக்கு மற்றும் விரிவான அணுகுமுறைத் தேவையாக இருக்கிறது.

இதற்கு விடை தேடுகையில் கிடைத்த கலங்கரை விளக்கமாக ‘தோழமை’ உடனான தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் தொடர்பு ஏற்பட்டது. 2006ம் ஆண்டு முதல் மக்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்பாக இயங்கி வரும் தோழமை, கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. அவர்களின் தொலைநோக்கு முன்முயற்சியாக, ’குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு’ என்கிற பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு தற்போது பல்கலைக்கழகத்தின் பி.எட். பாடத்திட்டத்தில் அடிப்படைத்தாளாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திட்டம் குழந்தைகளுக்கு உகந்த அவர்களை அச்சமின்றி வளரக்கூடிய சமுதாயத்தை வளர்த்தெடுப்பதற்கான முதல்படியாகும்.

யுனிசெஃப் ஆதரவுடன்,தோழமையின் தொடர்ச்சியான முயற்சி பி.எட். படிப்பின் இரண்டாம் செமஸ்டரில் குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்கிற புதிய பாடத்திட்டத்தை ஒரு முக்கிய தாளாக அங்கீகரிக்க வழிவகுத்தது. பத்து மாத உன்னதமான திட்டமிடல் மற்றும் இருதரப்புக் கூட்டு உழைப்பின் காரணமாக நிகழ்ந்த குறிப்பிடத்தக்க இந்தச் சாதனையால், இப்போது தமிழகம் முழுவதும் உள்ள 639 பி.எட். கல்லூரிகளில் இந்தப் பாடம் அடிப்படைத்தாளாகக் கற்பிக்கப்படும். இதுபோன்ற முயற்சி யாமறிந்த வரையில் தெற்காசியாவிலேயே முதன்முறையானது.

இந்த முயற்சிக்கு உந்து சக்தியாக திகழ்ந்தவர் தோழமை இயக்குநரான திரு. அ. தேவநேயன், அவரது பேரார்வம்தான் இந்தத் திட்டத்துக்கான வழிகாட்டும் வெளிச்சமாக அமைந்தது. அவருக்கு யானை பலம் போல அமைந்த முனைவர் அண்ணாதுரை முத்துசாமி, திரு.வருணன்வேலு , திருமிகு ஸ்டெகனா ஜென்சி எல்.டி., பேராசிரியர் ஆண்ட்ரூ சேசுராஜ், ஆகியோர் அடங்கிய குழுவினர் பாடத்திட்டம் மற்றும் கையேட்டினை பலகட்ட சந்திப்பு மற்றும் விவாதத்திற்குப் பிறகு வரைவு மற்றும் கையேட்டினை வடிவமைத்தனர். இவர்கள் அனைவருமே குழந்தை உரிமை சார்ந்து இரு தசாப்தங்களாக இயங்கி வருபவர்கள். அதனால் அனுபவத்தின் அடிப்படையில் அமைந்துள்ள இந்தப் பாடத்திட்டம் சர்வதேசத் தரம் வாய்ந்ததாகவே அமைந்துள்ளது. தோழமை ஒருங்கிணைப்பாளர் திரு.பிரபாகர் அவர்களின் குறிப்பிடத்தக்க ஒருங்கிணைப்பு, இதனைச் செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது. இந்த அற்புதமான முயற்சியில் பல்கலைக்கழகம் சார்பாக தோழமைக்கு ஆதரவளித்த முனைவர்.அ.ராஜேஸ்வரி, துறைத்தலைவர், பாடத்திட்டத் திட்டமிடல், மேம்பாடு மற்றும் கல்வித் தொழில்நுட்பத் துறை பேராசிரியர் ஷர்மிளா ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிட வேண்டியது. தோழமையின் ஆதரவுதிரட்டு மேலாளர் திருமிகு நி. ஐஸ்வர்யா இந்தச் செயல்பாட்டில் உயர்கல்வித் துறைக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான தொடர்பு இடைவெளியைக் குறைப்பதில் உயர்கல்வித்துறையின் ஒத்துழைப்பைப் பெறுவதில் முழுதாகப் பங்களித்துள்ளார். இந்த செயல்திட்டத்தில் உறுதுணையாக இருந்த தமிழ்நாடு மற்றும் கேரளாவின் யுனிசெஃப் அலுவலகத்தின் குழந்தைகள் பாதுகாப்பு நிபுணர் திரு.குமரேசன் அவர்களுக்கு நன்றி.

குழந்தைகளுக்கு உகந்த தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தப் பயணம் தொடங்கியுள்ளது. குழந்தை உரிமைகளும் மனித உரிமைகளே என்பதை இந்த வேளையில் நாம் நினைவூட்ட வேண்டியுள்ளது. வன்முறை மற்றும் சுரண்டலின் நிழல்களிலிருந்து விடுபட்டு, ஒவ்வொரு குழந்தையும் வளரக்கூடிய குழந்தை நேயச் சூழலை நோக்கிய ஒரு பாதையை உருவாக்குவோம்.

எந்த ஒரு மாற்றத்தையும் நிகழ்த்த கல்வி ஒன்றே ஆற்றல் வாய்ந்த கருவியாக இருப்பதால் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இந்த முயற்சி நமது குழந்தைகளுக்கு ஒளிமயமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதில் ஒரு இன்றியமையாத பங்காக இருக்கும் என்கிற நம்பிக்கையுடன்...

**பேராசிரியர். முனைவர். நாக சுப்பிரமணி,**
பதிவாளர் (பொ.)
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்,
காரப்பாக்கம்,
சென்னை

# நுழையும் முன்...!

**"புவி மக்கள் எல்லாம் சமம் என்று முழக்கினர் தோழா" – பாரதிதாசன்**

இந்திய அரசியல் சாசனம் சம உரிமை, கருத்துச் சுதந்திரம், உயிர் வாழ்வதற்கான உரிமை, கல்வி பெறுவதற்கான உரிமை உள்ளிட்ட பல்வேறு குடியுரிமைகளை உறுதி செய்கிறது. இதன் அடிப்படையில் 2006ல் மனித உரிமைகளுக்கான வள ஆதார மையமாக தோழமை அமைப்பு நிறுவப்பட்டது.அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களுக்காக அரசு இயந்திரம் உட்பட பல்வேறு அமைப்புகளுடன் வாதிடுதல் மற்றும் அவர்களது சமூக மேம்பாட்டில் தவிர்க்கமுடியாத ஆற்றலாகப் பரிணமித்துள்ளது. இந்த 17 ஆண்டு காலப் பயணத்தில் தோழமை அமைப்பு குறிப்பாக குழந்தைகள் மீதான பல்வேறு வன்முறைகளைக் கள அளவில் சந்தித்துள்ளது. உரிமை மீறல்களுக்கு எதிராகத் தோழமை தொடங்கிய பல்வேறு வழக்குகள் பல முன்னோடியான மாற்றங்களுக்கு அடித்தளமாக இருந்துள்ளன. குழந்தைகளுக்கு எதிராக கடந்த தசாப்தத்தில் நிகழ்ந்த சகித்துக்கொள்ள முடியாத பல்வேறு வன்முறைகளில் அதன் உண்மைக் கண்டறியும் குழுவில் தோழமை ஒரு அங்கமாக இருந்துள்ளது. இந்தக் கள அனுபவங்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்ததன் வழியேதான் ஒரு குற்றம் நிகழ்ந்த பின்பு அதன்மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதை விட அந்த குற்றம் நிகழாமல் தடுப்பதே பகுத்தறிவு என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்தோம். குழந்தைகளின் பாதுகாப்பு அவர்களின் உரிமைகளை உறுதி செய்வதன் வழி மட்டுமே சாத்தியப்படும்.

குழந்தை உரிமையை ஒரு பண்பாடாக வளர்த்தெடுப்பதற்கு கல்வியே சிறந்த கருவி என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன், தோழமை அமைப்பு கள அளவில் ஊடகங்களிலும், அரசியல் துறைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் குழந்தை உரிமைகளை மேம்படுத்துவதற்கு அயராது குரல் கொடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாகதான் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் (TNTEU) உடனான எங்களது செயல்பாடுகள் தொடங்கின, அதன் வளர்ச்சியாகத் தற்போது 'குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு' என்கிற ஒரு முக்கிய பாடத்திட்டத்தை பி.எட். படிப்பின் இரண்டாவது செமஸ்டரில் அடிப்படைத்தாளாகக் கொண்டு வந்துள்ளோம். குழந்தை உரிமைகள் குறித்தான பாடத்திட்டம் பட்டப்படிப்பில் அடிப்படைத்தாளாக இடம்பெறுவது தெற்காசியாவில் இதுவே முதன்முறை என்கிற பெறுமையை தோழமை அமைப்பு பல்கலைக்கழகத்துடன் பகிர்கிறது. இதன்படி பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் 639 கல்லூரிகளில் பயிலும் சுமார் 50000 மாணவர்கள் வருடாந்திரமாக இதற்கான தேர்வை எழுதுவார்கள். இந்த முயற்சி செயல்வடிவம் பெற முழு முதல் காரணமாக இருந்த முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் வே.இறையன்பு ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கு எங்களது உளமார்ந்த அன்பை இங்கே பகிர்கிறோம்.

ஊர்கூடினால்தான் தேர் இழுக்க முடியும். அந்த வரிசையில் எங்களது இந்த கனவை நனவாக்க உறுதுணையாக இருந்த பலரில் முக்கியமான இருவர் உயர்கல்வித்துறை செயலாளர் திரு.கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., மற்றும் உயர்கல்வித்துறை கூடுதல் செயலாளர் திரு.இளங்கோ ஹென்றிதாஸ் அவர்கள். இருவருக்கும் தோழமையின் பேரன்பு. பாடத்திட்டத்தை வடிவமைப்பதில் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் முனைவர் பி.சி.நாக சுப்பிரமணி அவர்களின் முனைப்பான ஈடுபாடும் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறைத் தலைவர் டாக்டர். ஏ. ராஜேஸ்வரி அவர்களின் ஒருங்கிணைப்பு உதவியும் இங்கே குறிப்பிட வேண்டியது.

இந்த பத்து மாதகால நீண்ட பயணத்தில், பாடத்திட்டத்தை மிக நுணுக்கமாக வடிவமைத்து அதற்கான விரிவான கையேட்டையும் உருவாக்கியுள்ளோம். இந்த முயற்சிக்கு உந்து சக்தியாக டாக்டர் அண்ணாதுரை முத்துசாமி, திருமிகு ஸ்டெகானா ஜென்சி எல்.டி., பேராசிரியர் ஆண்ரூ சேசுராஜ் மற்றும் பாடத்திட்டம் மற்றும் வழிகாட்டி புத்தகத்தை உருவாக்குவதில் பாராட்டத்தக்க பங்கு வகித்த

திரு.வருணன்வேலு ஆகியோரின் அர்ப்பணிப்பும் ஒத்துழைப்பும் போற்றுதலுக்குரியது.தோழமையின் ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் திரு.பிரபாகர் தலைமையிலான ஒருங்கிணைப்பு இந்த லட்சியத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்காற்றியுள்ளது.

தோழமையின் முயற்சிக்கும் உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான தொடர்பு இடைவெளியைக் குறைத்த தோழமையின் ஆதரவு திரட்டு மேலாளர் திருமிகு ஐஸ்வர்யா அவர்களது முயற்சிகளுக்கு எங்கள் பாராட்டுகள். இந்த லட்சிய செயல்பாட்டின் தொடக்கத்திலிருந்து அசைக்க முடியாத ஆதரவை நல்கிவரும் தமிழ்நாடு மற்றும் கேரளா யுனிசெஃப் அலுவலகத்தின் குழந்தைகள் பாதுகாப்பு நிபுணர் திரு. குமரேசன் அவர்களுக்கு அன்பு கலந்த நன்றி.

வெறுமனே பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதுடன் மட்டும் நிறுத்திவிடாமல் அதனைத் திறம்பட செயல்படுத்த, தோழமை மற்றும் பல்கலைக்கழகம் இணைந்து எட்டு மண்டலங்களில் அந்தப் பகுதியைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தோம். பல்வேறு கல்லூரிகளுடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சிகளில் 639 பி.எட். கல்லூரிகளிலிருந்து ஆசிரியர்கள் பங்கேடுத்தனர். அவர்களுக்கு ஒரு நாள் பயிற்சிக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்த பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்களே அவர்களது கல்லூரிகளில் இந்த பாடத்தை கற்பிப்பார்கள்.இந்தப் பயிற்சியாளர்களும் அவர்களது மாணவர்களும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள குழந்தைப் பாதுகாப்பு நெட்வொர்க்களில் உள்ள அரசு சாரா அமைப்புகள் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள் (DCPU) மற்றும் குழந்தைகள் நலக் குழுக்கள் (CWCs) போன்ற அரசாங்க அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவார்கள்.

நீண்ட கால அடிப்படையில், இந்த கூட்டு முயற்சியானது, தமிழ்நாட்டில் 6 முதல் +2 வகுப்பு வரை உள்ள ஆண்டுதோறும் சுமார் 6.8 மில்லியன் குழந்தைகளுக்கு பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்வழி ஒரு குழந்தை நேயத் தமிழகத்தை உருவாக்குவதே எங்கள் அனைவரின் நோக்கம்.

வன்முறையின் நிழல்கூடப் படாமல் ஒவ்வொரு குழந்தையும் செழித்து வளரக்கூடிய எதிர்காலத்தை உருவாக்க ஒன்றுபட்ட சிந்தனை உள்ளவர்கள் ஒருங்கிணைந்து இந்த சமூகத்துக்கு அளித்துள்ள லட்சிய முயற்சி இது. இதன்வழி குழந்தை உரிமைகளை ஒரு பண்பாடாக வளர்த்தெடுப்பதில் இந்த பாடத்திட்டம் ஒரு அசைக்கமுடியாத ஆற்றலாக இருக்கும்.

தோழமையுடன்,

**அ.தேவநேயன்**

இயக்குநர்,

தோழமை

## இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே குழந்தைகள் பற்றிய புள்ளி விவரங்களும் - அவை தொடர்பான குறியீடுகளும்

| (INDICATORS) குறியீடுகள் | தமிழ்நாடு | இந்தியா | ஆதாரம் |
|---|---|---|---|
| பல்வேறு பரிமாணங்களோடு வறுமை நிலவுகிற நிலை (சதவீதத்தில்) | 30.5 | 52.7 | வறுமை நிலையும் மனித மேம்பாடும் பற்றிய ஆகஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் முன் முயற்சி OPHI, 2016 (Oxford Poverty and Human Development Initiative) |
| வருமானம், ஆரோக்கியம், கல்வி ஆகியவற்றில் நிலவும் ஏற்றதாழ்வால் மனித வளக் குறியீட்டில் சரிவு | 27 | 32 | ஆரோக்கியம் பற்றிய ஒருங்கிணைந்த தகவல், ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டம் IHDI (Inequality-adjusted Human Development Index),UNDP (United Nations Development Programme) 2011 |
| மக்கள் தொகையில் குழந்தைகள் எண்ணிக்கை (லட்சத்திலும் சதவீதத்திலும்) | 22 29% | 440 34% | மக்கள் தொகை கணக்கெடுப்பு CENSUS 2011 |
| கடந்த 5 ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளில் ஆண் பெண் (பாலின) விகிதம் - (1,000 ஆண் குழந்தைகளுக்கு எத்தனை பெண் குழந்தைகள் இருக்கிறார்கள் என்கிற எண்ணிக்கை) | 878 | 929 | தேசிய குடும்ப நலவாழ்வுக் கணக்கெடுப்பு NFHS-5, 2019-21 |
| 5 வயதுக்கு குறைவான வயதில் உள்ள குழந்தைகளில் வயதுக்கு உரிய வளர்ச்சி குறைவாக உள்ள குழந்தைகள் | 25 | 35 | NFHS-5, 2019-21 |
| 6 மாதங்கள் முதல் 59 மாதங்கள் வரை வயதுள்ள குழந்தைகளில் ரத்தசோகையோடு இருக்கும் குழந்தைகள் (11.0gm/dl) (சதவீதத்தில்) | 57.4 | 67.1 | NFHS-5, 2019-21 |
| தடுப்பூசிகளும் மருந்துகளும் எடுத்துக்கொண்டு முழுமையாக நோய்த்தடுப்பு செய்துகொண்ட குழந்தைகள் (12 -23 மாதங்கள்) சதவீதம் | 69.7 | 62 | NFHS-5, 2019-21 |
| உடல் நிறை குறியீட்டு எண் - BMI (BMI - உயரத்துக்கு ஏற்ற எடை) 18க்கும் குறைவாக உள்ள 15 வயதிலிருந்து 18 வயது வரை உள்ள சிறுமிகள் (சதவீதத்தில்) | 35.2 | 44.7 | குழந்தைகள் பற்றி விரைவாகச் செய்யும் கணக்கெடுப்பு RSOC (Rapid Survey on Children), 2013-14 |
| பிறக்கும்போதே இறந்துவிடுகிற குழந்கைகள் விகிதம் IMR (உயிரோடு பிறக்கும் 1000 குழந்தைகளுக்கு) (per 1000 live births) | 12 | 23 | SRS 2018 |

| | | | |
|---|---|---|---|
| 5 வயதுக்குள் இறந்துவிடுகிற குழந்தைகள் விகிதம் (1000 குழந்தைகளில்) | 17 | 36 | மாதிரி பதிவு முறை SRS (Sample Registration System) 2018 |
| பிரசவ காலத்தில் இறக்கும் குழந்தைகள் விகிதம் | 60 | 113 | SRS 2018 |
| பள்ளியில் சேர்க்கை விகிதம் (1லிருந்து 8ம் வகுப்பு வரை) GER (Class 1- 8) | 98 | 97.8 | கல்விக்கான மாவட்ட தகவல் அமைப்பு UDISE+ 2019-20 (Unified District Information System for Education Plus) |
| பள்ளியில் சேர்க்கை விகிதம் (9, 10 வகுப்பு) GER (Class 9-10) | 90.5 | 77.9 | UDISE+ 2019-20 |
| பள்ளியில் சேர்க்கை விகிதம் (11 மற்றும் 12ம் வகுப்பு) GER (Class 11-12) | 73.2 | 51.4 | மாவட்ட அளவில் பள்ளிகளைப் பற்றிய தரவுகள் UDISE+ 2019-20 |
| தற்போது 22 முதல் 23 வயது வரை உள்ள ஆனால் 18 வயதுக்கு முன்னர் திருமணம் செய்துகொண்ட பெண்கள் சதவீதத்தில் | 12.8 | 23.3 | தேசிய குடும்ப நல்வாழ்வுக் கணக்கெடுப்பு (சர்வே) NFHS-5, 2019-21 |
| குழந்தைத் தொழிலாளர்களாக உள்ள 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 2.49 | 4.5 | மக்கள் தொகை கணக்கெடுப்பு CENSUS 2011 |
| திறந்த வெளியில் மலம் கழிக்கும் வீட்டினர் (சதவீதத்தில்) | 43.4 | 45.5 | குழந்தைகள் பற்றிய அதிவிரைவு சர்வே RSOC 2013-14 |
| குழந்தைகளுக்கு எதிரான மொத்த குற்றங்கள் (100000 குழந்தைகளில் எவ்வளவு என்ற விகிதத்தில்) | 4338 (21) | 128531 (28.9) | தேசிய குற்ற ஆவணக் காப்பகம் NCRB 2020 |
| சட்டத்தோடு முரண்படுகிற குழந்தைகள் (100000 குழந்தைகளில் எவ்வளவு என்ற விகிதத்தில்) | 3394 (16.4) | 29758 (6.7) | தேசிய குற்ற ஆவணக் காப்பகம் 2020 |

அலகு-1

# ‘குழந்தை உரிமைகள்’ என்கிற கருத்தாக்கம்

குழந்தைகள் பற்றிய பார்வை, தவறான புரிதல்கள் – தமிழ்நாட்டில் குழந்தை உரிமைகள் வரலாறு – குழந்தை உரிமைகளைப் புரிந்துகொள்தல் – குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை –குழந்தை என்றால் யார் என்ற இந்தியாவின் வரையறை.

## ‘குழந்தை’ என்றால் யார் எனும் கருத்தாக்கமும் வரையறையும்

பெற்றோர்களின் ஒரு சொத்தாக காலங்காலமாக குழந்தைகள் கருதப்படுகிறார்களே தவிர ஒரு தனிப்பட்ட நபராகவோ, குழுவாகவோ பார்க்கப்படுவதில்லை. ‘குழந்தை’ என்றால், ஒரு குறிப்பிட்ட வயதுக்கு குறைவாக இருக்கிற அல்லது வயது வந்தோர் என்று கருதத்தக்க வயதை இன்னமும் அடையாத ஒரு இளம் மனிதர் (இளைஞர்) என்பது பொதுவான வரையறை. எந்த ஒரு குறிப்பிட்ட வயதில் ஒரு தனி நபர் குழந்தை என்று கருதப்படுகிறார் என்பது சட்டம், பண்பாடு மற்றும் சமூகம் ஆகிய சூழல்களைப் பொருத்தது. இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில், குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை ஒரு குழந்தை என்றால் யார் என்ற பலரும் ஒப்புக் கொண்டுள்ள வரையறையை வழங்குகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையின் படி, 18 வயதிற்குட்பட்ட எந்தவொரு தனிநபரும் குழந்தை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த தனி நபர் 18 வயதை எட்டுவதற்குள் ஒரு குறிப்பிட்ட நாட்டின் தேசியச் சட்டத்தின் கீழ் ‘இளைஞருக்கு’ உரிய வயதை எட்டாதவராக இருக்க வேண்டும். ‘குழந்தை’ என்பதற்கான குறிப்பிட்ட வரையறைகளும் வயது வரம்புகளும் வெவ்வேறு சட்டங்கள், ஒழுங்குமுறைகள், அவற்றின் நோக்கங்கள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் வேறுபாடுகளோடு இருக்கலாம் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த வரையறைகள் பரவலாக வெவ்வேறு அதிகார வரம்புகளுக்கு ஏற்ப மாறுபடலாம். மேலும் இவை கல்வி, பாதுகாப்பு, உழைப்பு மற்றும் குற்றவியல் பொறுப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

## வரலாற்று ரீதியாக குழந்தைகள் நடத்தப்படும் முறை

வரலாறு முழுவதிலும் வெவ்வேறு பண்பாடுகளில் குழந்தைகள் பலவிதங்களில் நடத்தப்பட்டுள்ளனர். குழந்தை வளர்ப்பு நடைமுறைகளும் குழந்தைகளை எவ்வாறு அணுகுவது என்பதும் காலப்போக்கில் கணிசமாக உருவாகியுள்ளன. மேலும், சமூக, பொருளாதார, மதம் மற்றும் பண்பாடு சார்ந்த நம்பிக்கைகள் இந்த நடைமுறைகளிலும் அணுகுமுறையிலும் தாக்கத்தை செலுத்தியிருக்கின்றன. பண்டைய நாகரீகங்கள் எப்போதும் குழந்தைகளை சமூகத்தின் மதிப்புமிக்க உறுப்பினர்களாகவும் எதிர்காலத்துக்கு பங்களிப்பவர்களாகவும் பார்த்தன. உதாரணத்துக்கு, பண்டைய ரோமாபுரியில், குழந்தைகள் அவர்களின் அப்பாக்களின் சொத்தாகக் கருதப்பட்டனர், அவர்களின் நலன் குடும்பத்தின் முதன்மைப் பொறுப்பாக இருந்தது. பண்டைய கிரேக்க நாகரீகத்தில், கல்வியும் உடற்பயிற்சியும் ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் மிக முக்கியமானதாகவும் மதிப்பு வாய்ந்ததாகவும் கருதப்பட்டது. ஐரோப்பாவில் இடைக்காலத்தில், குழந்தைகள் பொதுவாக குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு பங்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர்கள் பெரியவர்களின் சிறிய நகல்களாக பார்க்கப்பட்டனர். அவர்கள் பெரும்பாலும் சிறு வயதிலிருந்தே வேலை செய்ய வேண்டியிருந்தது. பெரியவர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு அல்லது உரிமைகள் குழந்தைகளுக்கு வழங்கப்படவில்லை.

அறிவு முதிர்ச்சியடைந்த சிந்தனையாளர்கள், குழந்தைகளை மனிதத் தன்மையுடன் நடத்த வேண்டும் என்று 17 மற்றும் 18ம் நூற்றாண்டுகளில், வாதிடத் துவங்கினர். குழந்தைகளைப் பராமரிப்பது மற்றும் கல்வி அளிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் குழந்தைப் பருவம் என்பது வாழ்க்கையின் ஒரு தனித்துவமானதும் பாதிக்கப்படக்கூடியதுமான கட்டமாக உருவானது. தத்துவஞானி ஜான் லாக் அவர்களின் 'தபுலா ராசா' (வெற்று ஸ்லேட்) பற்றிய கருத்துக்களும் குழந்தைகளை மென்மையாக வளர்க்க வேண்டியதன் தேவை பற்றிய கருத்துக்களும் இந்தக் காலகட்டத்தில் குழந்தை வளர்ப்பு நடைமுறைகளில் தாக்கத்தை செலுத்தின. 18, 19ம் நூற்றாண்டுகளில் நடந்த தொழிற்புரட்சி குழந்தைகளின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை கொண்டுவந்தது. பல குழந்தைகள் கடுமையான பணிச் சூழலில், தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டார்கள். பெரும்பாலும் பல மணிநேரங்கள் ஆபத்தான பணிகளை சகித்துக்கொள்ளும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள். குழந்தைத் தொழிலாளர்களின் நிலை வேறுவழியில்லாமல் தொழிலாளர் நிலை குறித்த சீர்த்திருத்தங்களும் குழந்தைகளை சுரண்டலிலிருந்து பாதுகாப்பதற்கான சட்டங்களும் வர வழிவகுத்தது. 20 ஆம் நூற்றாண்டு முழுவதும், குழந்தைகளின் உரிமைகளுக்கும் அவர்களின் பாதுகாப்பின் தேவைக்குமான அங்கீகாரம் அதிகரித்து வந்தது. 'குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை' 1989ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. வாழ்வதற்கான உரிமை, ஆரோக்கியமாக வாழ்வதற்கான உரிமை, கல்வி உரிமை, தீங்கிழைத்தலுக்கும் சுரண்டப்படுவதற்கும் ஆட்படாமல் இருப்பதற்கான உரிமை உள்ளிட்ட குழந்தைகளுக்கான அடிப்படை உரிமைகளை கோடிட்டுக்காட்டியது.

குழந்தைகளின் தனித்துவமான பண்புகள், அவர்கள் வாழும் சூழல்கள் உள்ளிட்ட பல காரணங்களால் இன்று குழந்தைகள் நலிந்தவர்களாக கருதப்படுகிறார்கள்:

**உடல் அளவில் பாதுகாப்பற்ற நிலை:** குழந்தைகளின் உடல் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. இதனால் அவர்கள் நோய்களுக்கும், காயங்களுக்கும் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கும் ஆளாகிறார்கள். 18 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களை ஒப்பிடும் போது குழந்தைகளுக்கு குறைவான பலமும் குறைவான நெகிழ்வுத் தன்மையும் உள்ளது. அதனால் அவர்கள் விபத்துக்கள், தீங்கிழைத்தல், புறக்கணிப்பு ஆகியவற்றால் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

**அறிவு ரீதியாக பாதிக்கப்படுவது:** குழந்தைகளின் அறிவுத்திறன்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. தகவல்களை அறிந்துகொண்டு முடிவெடுக்க அவர்களுக்கு அறிவு, புரிதல், சிக்கலான சூழல்களை எதிர்கொள்ளத் தேவையான விமர்சனப் பூர்வமான சிந்தனைத் திறன்கள் இல்லாது இருக்கலாம். இவ்வாறு அறிவாற்றல் முதிர்ச்சியடையாத நிலை, குழந்தைகளை சுரண்டப்படுதலுக்கும் தீங்கிழைக்கப்படுதலுக்கும் எளிதில் ஆட்படுத்தி பாதிக்கப்படுபவர்களாக ஆக்குகிறது.

**உணர்வு ரீதியான பாதிப்பு:** மன அழுத்தம், அதிர்ச்சி, மன ரீதியான சிக்கல்கள் ஆகியவற்றிலிருந்து மீண்டு வருவதற்குத் தேவையான ஆற்றலும் சமாளிக்கும் வழிமுறைகளும் குழந்தைகளிடம் உருவாகியிருக்காது. எதிர்மறையான அனுபவங்களில் அவர்கள் எளிதில் மூழ்கடிக்கப்படலாம். அவை அவர்களின் மனநிலையிலும் உணர்ச்சிகளிலும் நீண்டகால எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

**சார்ந்து இருத்தல்:** குழந்தைகள் அவர்களின் பராமரிப்புக்கும், பாதுகாப்புக்கும் பெரியவர்களின் ஆதரவைச் சார்ந்தும் நம்பியும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், பாதுகாப்பான, வளர்ப்புச் சூழலை வழங்குவதற்கும், அவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதற்கும் பெரியவர்களைச் சார்ந்துள்ளனர். இவ்வாறு சார்ந்திருப்பது, குழந்தைகளை பராமரிப்பாளர்களின் தயவில் வைக்கிறது. தவறாக நடத்தப்படுதலுக்கும் புறக்கணிக்கப்படுதலுக்கும் ஆளாகி, பாதிக்கப்படுகிறவர்களாக குழந்தைகளை இந்த சார்புநிலை மாற்றுகிறது.

**அதிகாரமும் உரிமைகளுக்காக வாதாடுகிற அமைப்பும்:** குறைவாக உள்ள நிலை சமூக, பொருளாதார, அரசியல் விவகாரங்களில் குழந்தைகளுக்கான அதிகாரம் குறைவு. தங்கள் உரிமைகளை நிலைநிறுத்தவோ, தங்களுக்காக வாதிடவோ அல்லது தங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கவோ திறன் இல்லாமல் குழந்தைகள் இருக்கிறார்கள். குழந்தைகள் சுரண்டப்படுவதும், பாகுபாடு காட்டப்படுவதும் அவர்களது உரிமைகள் மீறப்படுவதற்கும் இந்த அதிகார ஏற்றத்தாழ்வால் கூடுதல் வாய்ப்புகள் உருவாகின்றன.

**சட்டப் பாதுகாப்பு:** குழந்தைகளால் தங்களுக்கு நேரக்கூடிய துன்புறுத்தல்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியாது. இத்தகைய நிலையில் குழந்தைகள் இருப்பதை பல நாடுகளில் உள்ள சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் அங்கீகரிக்கின்றன. அவர்களின் உரிமைகளுக்கு குறிப்பிட்ட சட்டப் பாதுகாப்புகளை வழங்குகின்றன. இந்தச் சட்டங்கள் அவர்களின் நல்வாழ்வையும், பாதுகாப்பையும் மேம்பாட்டையும் உறுதி செய்கின்றன. மேலும், தீங்கிழைத்தல், சுரண்டல் மற்றும் பாகுபாடு ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதையும் இந்தச் சட்டங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

நலிவடைந்த நிலை என்பது குழந்தைப் பருவத்தின் நிலையான பண்பு அல்ல. அது ஒவ்வொரு குழந்தை இருக்கும் சூழல்கள், சுற்றுப்புறம், ஆதரவு அமைப்புகள் ஆகியவற்றை சார்ந்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குழந்தைகள் நலிந்த நிலையில் இருக்கிறபோது, பெரியவர்களும் சமூகக் குழுக்களும் சமுதாயமும் அரசும் இணைந்து அனைவரும் குழந்தைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும். அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும். அவர்களின் எல்லாவகையிலுமான நலனை உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

## ‘குழந்தை உரிமைகள்’ என்ற கருத்தாக்கமும் வரையறையும்

‘குழந்தைகள் உரிமைகள் என்னும் கருத்தாக்கம் குழந்தைகளை ‘அவர்கள் தனி மனிதர்கள்’ என்பதை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. உயிர் வாழ்வதற்கு அவசியமான, தங்களை மேலும் வளர்த்துக்கொள்வதற்கும் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் சமூகத்தின் நடைமுறைகளில் பங்கேற்பதற்கும் அவசியமான, தனித்தன்மையான உரிமைகளை குழந்தைகள் பெற்றுள்ளார்கள் என்பதை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டுதான் ‘குழந்தைகள் உரிமைகள்’ என்னும் கருத்தாக்கம் இருக்கிறது. சமத்துவம், பாகுபாடுகள் இல்லாத நிலைமைகள், குழந்தைகளின் ஆகச் சிறந்த நலன்கள் என்னும் கோட்பாடுகளில்தான் குழந்தைகள் உரிமைகள் வேர்ப்பிடித்து உள்ளன.

குழந்தைகளின் உரிமைகள் சார்ந்த, மிக விரிவானதும் முழுமையானதுமான ஒரு சர்வதேச உடன்படிக்கையாக குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை (UNCRC) இருக்கிறது. அது சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் என வேறுபட்ட உரிமைகளை இந்த உடன்படிக்கை வடிவமைக்கிறது. இத்தகைய உரிமைகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் உறுதியாக அமல்படுத்தப்பட்டாக வேண்டும் என்று அது நிர்ணயிக்கிறது.

குழந்தை உரிமைகள் என்பவை வெறும் கோட்பாடு ரீதியான கொள்கைகள் அல்ல. அனைத்துவகையிலும் சிறப்பான வளர்ச்சிகளை அடைகிற நிலைமையில் குழந்தைகள் இருப்பதையும் அத்தகைய நிலைமையை மேலும் வளர்த்தெடுப்பதையும் அதனைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்ட கொள்கைள், சட்டங்கள் மற்றும் வழிமுறைகளுக்கான நடைமுறைகளைக் கொண்டவை அவை. அரசாங்கங்களுக்கும், சமூகங்களுக்கும், குடும்பங்களுக்கும் தனிநபர்களுக்கும், குழந்தைகளின் உரிமைகளை நிலைநிறுத்த வேண்டிய, மதிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளது. குழந்தைகள் அவர்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய, ஆதரவான சூழலில் வளர்வதையும் முன்னேறுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

## குழந்தைகள் பற்றிய புரிதல்களும் புனைவுகளும்

பல்வேறு சமூகங்களில் உள்ள வெவ்வேறு பண்பாடுகளைப் பொறுத்து, வரலாற்றுக் காலகட்டங்களைப் பொறுத்து, குழந்தைகள் பற்றிய புரிதல்களும் புனைவுகளும் மாறுபடும். குழந்தைகளோடு தொடர்புடைய பொதுவான சில பார்வைகளும் கட்டுக்கதைகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. **குழந்தைகள் ஏதும் அறியாதவர்கள்:** இயல்பாகவே குழந்தைகள் ஏதும் அறியாதவர்கள் என்றும் கலவையான குணங்கள் இல்லாதவர்கள் என்றும் பரவலான நம்பிக்கை உள்ளது. பொதுவாக, நேர்மையானவர்களாக, நம்பகத்தன்மையுள்ளவர்களாக, முதிர்ச்சி இல்லாதவர்களாக உள்ள குழந்தைகளோடு தொடர்புள்ளதாக இந்த நம்பிக்கை உள்ளது. ஆனால், பெரியவர்களைப் போலவே குழந்தைகளும் பலவிதமான நடத்தைகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகிறவர்கள் என்பதை அங்கீகரிப்பது அவசியம்.

2. **குழந்தைகள் எளிதில் நொறுங்கிப் போவார்கள்:** குழந்தைகள் எளிதில் நொறுங்கிப்போவார்கள் என்றும் நலிந்துபோவார்கள் என்பதும் மற்றொரு பொதுவான கருத்து. குழந்தைகள் உடல் அளவில் வளர்கிறார்கள் என்பதும் அவர்களுக்கு அக்கறையான கவனிப்பும் பாதுகாப்பும் தேவை என்பது உண்மையாக இருந்தாலும், குறிப்பாக அவர்கள் எந்தவொரு பிரச்சனையிலிருந்தும் வேகமான மீண்டுவிடும் தன்மையோடும் எந்தவொரு சூழலோடும் தங்களைப் பொருத்திக்கொள்ளும் தன்மையோடும் அவர்களின் திறன்களைக் குறைத்து மதிப்பிடுவது அவர்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் தடையாக இருக்கும்.

3. **குழந்தைகள் வெள்ளைப் பேப்பர்கள் :** குழந்தைகள் எந்தச் சூழலில் வளர்கிறார்களோ அந்த சூழலால் மட்டும்தான் வடிவமைக்கப்படுகிறார்கள் என்று இந்தப் பார்வை தெரிவிக்கிறது. குழந்தைகளின் வளர்ச்சியில் சுற்றுச்சூழல் முக்கியமான பங்கை வகிக்கிறதுதான். அதே வேளையில், குழந்தைகளின் குணங்கள் மீதும் நடத்தைகள் மீதும், பிறப்பிலேயே அவர்களுக்குள் உருவாகிற மரபணுக்களின் தாக்கங்களும் பாதிப்புகளும் அவர்களின் உள்ளார்ந்த குணங்களும் செல்வாக்கு செலுத்துகின்றன.

4. **குழந்தைகள் இயல்பாகவே கீழ்படிந்து நடப்பார்கள்:** கேள்வி எதுவும் கேட்காமல் குழந்தைகள் எப்போதும் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்றும் கீழ்படியாமல் நடப்பது என்பது அவ மரியாதை அல்லது தவறான நடத்தையின் அறிகுறி என்ற பொதுவான நம்பிக்கை உள்ளது. ஆனால், குழந்தைகள் அவர்கள் முன்பாக விதிக்கப்பட்டுள்ள எல்லைகளை இயல்பாகவே சோதனை செய்து பார்ப்பார்கள். தங்களது அறிவுத் திறனையும் உணர்வுகளின் திறனையும் வளர்த்துக்கொள்கிற நிகழ்வின் பகுதியாக, குழந்தைகள் தாங்களே சுயமாக செயல்பட்டுக்கொள்வதை வளர்த்துக்கொள்வார்கள். அதிகாரம் செய்பவர்களை எதிர்த்து கேள்வி கேட்பார்கள்.

5. **எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரியானவர்கள்:** ஒரு குறிப்பிட்ட வயதுடைய அல்லது குறிப்பிட்ட பாலினத்தை சேர்ந்த குழந்தைகள் ஒரே மாதிரியான குணங்கள் அல்லது நடத்தைமுறைகளை வெளிப்படுத்துவார்கள் என்று பெரும்பாலும் கருதப்படுகிறது. எனினும், குழந்தைகளுக்கு தனித்துவமான ஆளுமைகள், திறமைகள், ஆர்வங்கள் உண்டு. குழந்தைகளை அவர்களுக்கு

உரிய தனித்துவமான ஆற்றல்களையும் பலவீனங்களையும் கொண்ட தனிநபர்களாக அங்கீகரிக்கவேண்டும்.

6. **குழந்தைகள் பெரியவர்களின் அன்பை தவறாகப் பயன்படுத்துபவர்கள்:** குழந்தைகள் தங்களுக்கு வேண்டியதைப் பெற பெரியவர்களின் அன்பை வேண்டுமென்றே தவறாகக் கையாள்கிறார்கள் என்று சிலர் நம்புகிறார்கள். பெரியவர்களைக் குழந்தைகள் தவறாகக் கையாள்வதாகத் தோன்றினாலும், அவை பெரும்பாலும் சமூக அளவிலான வெளிப்பாடுகளைப் பற்றிய அவர்களின் குறைவான புரிதல்கள் ஆகும். அவர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்கான அவர்களின் முயற்சிகளின் விளைவுகள் ஆகும்.

7. **பெற்றோர்கள்தான் குழந்தைகளுக்கான ஒட்டுமொத்த பொறுப்பாளர்கள்:** குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்களுக்கு முதன்மையான பங்கு உள்ளது என்றாலும், குழந்தைகள் சமூகத்தின் பகுதியாக இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்வது அவசியம். குடும்பத்தின் விரிவடைந்த பகுதியாக உள்ளவர்கள், பள்ளிகள், சமூகம் உள்ளிட்ட பல்வேறு மட்டங்களில் குழந்தைகளுக்குத் தேவையான ஆதரவு தேவைப்படுகிறது.

மேலே சொன்ன உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் விமர்சன மனப்பான்மையுடன் அணுகவேண்டும். குழந்தைகளின் பன்முகத்தன்மைகளையும் தனித்துவங்களையும் புரிந்துகொள்வதும் ஏற்றுக்கொள்வதும் மிகவும் முக்கியமானது. குழந்தைப் பருவத்தின் உண்மையான நிலவரங்களைப் புரிந்துகொள்வது என்பது, குழந்தைகளின் வளர்ச்சியை நோக்கிய நல்ல நடத்தைகளையும், இப்போதிருப்பதை விட கூடுதலாக தகவல்கள் அறிந்த அணுகுமுறைகளையும் வளர்க்க உதவும்.

## பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணோட்டத்திலிருந்து குழந்தை உரிமைகளைப் புரிந்து கொள்வது

வர்க்கம், சாதி, மதம், இனம், பாலினம் ஆகியவற்றின் அடிப்படையிலான ஏற்றதாழ்வுகளின் மீது இந்திய சமூகம் கட்டமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் பின்தங்கிய வகுப்பினர்கள் பெரும்பாலும் தலைமுறை தலைமுறையாக இந்திய சமூகத்தில் நிலவி வரும் பழமையான சாதிய அடிப்படையிலான பிரிவினைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதன் விளைவாக, இன்றளவும் தலித் சமூகத்தினர் கொத்தடிமை முறைமை, தீண்டாமை உள்ளிட்ட நிலப்பிரபுத்துவ நடைமுறைகளுக்கு ஆளாகிறார்கள். இதனால் அவர்களுக்கு கல்வி, மருத்துவ உரிமைகள் போதுமான அளவுக்கு கிடைப்பதில்லை. ஏழை விவசாயிகள், சிறு கைவினைக் கலைஞர்கள் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நிலையும் மிக மோசமாகத்தான் உள்ளது.

இந்திய சமூகத்தின் இந்தப் பிரிவினர்களுக்கு எதிராக மிக மோசமான வடிவங்களில் வன்முறைகள் நடப்பதை நாம் அடிக்கடி காணலாம். இந்தியாவில், மதச் சிறுபான்மையினர் சமூகங்களின் நிலை, கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அம்சங்களில் மற்ற பிரிவினர்களை ஒப்பிடுகையில் மிக மோசமான நிலையில் உள்ளது.

இந்தியாவில் உள்ள பழங்குடி சமூகங்கள் தங்களின் பண்பாட்டு வேறுபாடுகளால் பொதுசமூகத்திலிருந்து தனிமைப்படுதலையும் அந்நியமாதலையும் சந்திக்கின்றனர். அவற்றால் மட்டுமல்ல, அவர்களின் நிலமும், சுற்றுச்சூழலும், பண்பாடும் அவர்களிடமிருந்து பிடுங்கப்படுகிறது. பழங்குடி மக்களின் வாழ்வுரிமையையும் வாழ்வாதார உரிமையையும் பறித்துக்கொண்டதில் பொதுச் சமூகத்துக்கு பங்கு உள்ளது. அவற்றாலும் அவர்கள் பொதுசமூகத்திலிருந்து தனிமைப்படுதலையும், அந்நியமாதலையும் சந்திக்கின்றனர்.

அதே போல, பெண்கள் நீண்ட காலமாக ஆண்களால் தொடர்ந்து சுரண்டப்படுவதால் துன்பப்படுகின்றனர். இந்தியாவில் உள்ள குழந்தைகள் தங்களின் வயதின் காரணமாக அடிபணிய வேண்டியிருப்பதோடு மேலே சொன்ன ஏற்றதாழ்வுகளாலும் பாகுபாடுகளை அனுபவிக்க வேண்டியுள்ளது. எனவே, இந்தியாவில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் ‘அவர்கள் குழந்தைகள்’ என்பதாலேயே சில வகையான வன்முறைகளால் பாதிக்கப்படுகிறார்கள். ஒருதலைப்பட்சமாக தங்கள்

நம்பிக்கைகளையும் சிக்கல்களையும் குழந்தைகள் மீது பெரியவர்கள் திணிக்கிறார்கள். பெற்றோரின் சொத்தாக குழந்தைகள் கருதப்படும் இடங்களில், பெரியவர்களின் சுரண்டலான செயல்பாடுகளுக்குப் பதிலடி கொடுக்க குழந்தைகளுக்கு அரசியல்ரீதியாக எந்த இடமும் இல்லை. இவற்றோடு கூடுதலாக, குழந்தைகள் தங்கள் வகுப்பு, சாதி, மதம், இனம் மற்றும் பாலினம் ஆகியவற்றின் காரணமாக பாகுபாடுகளுக்கு ஆளாகிறார்கள். இவற்றால் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் மேலும் மோசமாகின்றன.

**உரிமைகள் என்கிற கருத்தாக்கம்**

அடிப்படை மனித உரிமைகளின் மதிப்பீடுகளுக்கும் ‘உரிமைகள்’ என்கிற கருத்தாக்கத்துக்கும் நீண்ட வரலாறு உண்டு. வரலாற்றின் ஒவ்வொரு தருணத்திலும், மத ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறை அல்லது தனி நபர் ஒடுக்குமுறை எதுவாக இருந்தாலும், அதற்கு எதிராக போராட்டம் நடந்தால், அது தொடர்பாக மனித உரிமைகளுக்கு அழுத்தமான கடமை உள்ளது. டார்வின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை வெளியிட்டபோது அது மதக் குழுக்களிடம் எத்தகைய விவாதத்தை துவக்கியது என்பதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

ஆரம்ப கால நாட்களில், மனிதர்கள் சிறு குழுக்களாக வாழத் தொடங்கியபோது, ஒடுக்குமுறை எண்ணங்கள் இல்லை. குடும்பமும், தனிச் சொத்தும் பரிணமிக்கத் தொடங்கியபோது அதிகாரமான அடக்குமுறை நடத்தைகள் மெதுவாக நுழையத் துவங்கின. சொத்து குவியத் தொடங்கும்போதும் நிலப்பிரபு சமூகங்கள் வளரத் தொடங்கியபோதும், ஆட்சி செய்பவர், ஆளப்படுபவர் என்று இரு பிரிவினர் தோன்றத் துவங்கினர். பெண்களை ஒடுக்குவதும் மெதுவாக ஆரம்பித்தது.

நிலப்பிரபுத்துவ சமூகத்தில், சாதாரண மக்கள் அவர்களின் அனைத்து மனித உரிமைகளையும் இழந்தனர். அடிமைகளாக இருக்க கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**உரிமைகள் ஏன் முக்கியமானவை?**

கண்ணியமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான உரிமை அனைத்து நபர்களுக்குமான ஒரு உத்தரவாதம் போல, சமூகங்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உரிமை இருப்பதால் இவை முக்கியமானவை. மனிதத் தன்மையற்றதாக உள்ள எந்தவொரு நடைமுறையையும் மனித உரிமைகள் மறுக்கின்றன.

i) அனைத்து நபர்கள், சமூகங்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஒரு உத்தரவாதமாக, கண்ணியமாகவும் பாதுகாப்புடனும் வாழ்வதற்கான உரிமை உள்ளது. எந்த வடிவத்திலும் உள்ள மனிதாபிமானமற்ற நடைமுறைகளை மனித உரிமைகள் மறுக்கின்றன.

ii) அரசின் நிறுவன அளவிலான முடிவுகளுக்கும் கண்காணிப்பு செயல்பாடுகளுக்கும் அதன் முகமை அமைப்புகளான பெருநிறுவனங்களின் களத்தில் நிறுவன அளவிலான முடிவுகளுக்கும் கண்காணிப்பு செயல்பாடுகளுக்கும் உரிமைகள் என்பவை மிக முக்கியமானவை.

iii) சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைத் தர நிலைகளை உள்ளடக்குவது ஒடுக்கப்படுகிறவர்களை அவர்களின் துயரங்களிலிருந்து விடுவிக்க உதவுகிறது. ஒரு நாட்டை மதிப்பிடவும் அந்த நாட்டு அரசாங்கம் பொறுப்புடைத் தன்மையுடையது என்பதை உறுதிப்படுத்தவும் சர்வதேசத் தரங்கள் உதவுகின்றன.

iv) மனித உரிமைகள் பாகுபாடுகள் அல்லாத சமத்துவமானதுமான பாரம்பரிய உரிமைகளாகும். இந்த உரிமைகள் எல்லா காலத்திலும் அரசால் மதிக்கப்பட்டவைகளாக, சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவைகளாக இருந்தவை அல்ல. ஆனாலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் முக்கியமாக மூன்றாம் உலக நாடுகளில் உள்ள ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் அவை முக்கியமான உரிமைகள்.

v) குழந்தைகளுக்கும் வயதுவந்தவர்களுக்கும் உரிமைகள் அவசியமானவை. அது ஜனநாயக சிந்தனையையும் பண்பாட்டையும் உருவாக்குகிறது வெளிப்படைத்தன்மைக்கும் பொறுப்புடைத்தன்மைக்கும் தேவையான முயற்சிகளை ஆதரிக்கிறது.

vi. ஒடுக்கப்பட்டவர்கள், சுரண்டப்பட்டவர்கள், பழங்குடி மக்கள், மீனவ சமூகங்கள், பெண்கள், தலித்துகள், குழந்தைகள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள், விவசாயிகள் ஆகியோரின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய மனித உரிமைகள் குறிப்பாக நமது நாட்டில் முக்கியமானது. ஆளும் வர்க்கத்தின் / சாதியின் சுரண்டல், ஆதிக்கம், ஊழலுக்கு எதிரான குரல்களுக்கு மனித உரிமைகள் அவசியம்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வர்க்கம், சாதி, பாலினம், மொழி, தேசியம் தாண்டி மாண்புடன் கூடிய வாழ்க்கையையும் நீடித்த சுற்றுச் சூழலையும் உருவாக்கவும் அது தொடரவும் மனித உரிமைகள் மிக அவசியம். இன்றைய தலைமுறைக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் தேவையான நீடித்த சுற்றுச் சூழலையும் வாழ்வாதாரத்தையும் குறைத்து மதிப்பிடாத பொருளாதார மற்றும் பண்பாட்டு அமைப்பை பற்றிய அக்கறை மனித உரிமைகளுக்கு இருக்கிறது.

அடிப்படையான மனித உரிமைகள் அரசியல் அமைப்புகளாக உள்ளன. அவை தங்கள் சொந்த குடிமக்களை ஒடுக்காது. மக்களின் மனித உரிமைகளில் அரசாங்கம் தலையிடுவதைத் தடுக்கிற தேசிய அளவிலான, சர்வதேச அளவிலான மேற்பார்வையிடுகிற அமைப்பு அது.

மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் இயற்றப்பட்ட தனது சொந்த சட்டங்களை அரசே மீறுவது இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வருகிறது. சித்ரவதை, கொலைகள், பாகுபாடு, புறக்கணிப்பு ஆகியவற்றில் அரசு ஈடுபடுகிறது. முடிவெடுத்தலில் சட்ட விரோதத் தன்மையையும் ரகசியத்தன்மையையும் மேற்கொள்கிறது. தேசிய பாதுகாப்புச் சட்டம், “குண்டாஸ்” சட்டம் உள்ளிட்ட தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் மக்களை துப்பாக்கியால் சுட, கொல்ல அல்லது கைது செய்ய பாதுகாப்புப் படைகளுக்கு வரம்பற்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலைகளில் அரசு ஒடுக்குமுறைக்கு எதிராகத் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு மனித உரிமைகள் ஒருவருக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

1. மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியையும் மனித உரிமைப் பாதுகாப்பையும் பெறுவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுவதற்கும், இழப்பீடு, ஆலோசனை, மறுவாழ்வு, தங்குமிடம் உள்ளிட்ட உரிமைகளைப் பெறுவதற்கும் உரிமைகள் அவசியம்.

2. ஏற்றதாழ்வுகளின் சுரண்டல்களும், சமூக அநீதியும் நிலவுகிற சமூகங்களில் பாகுபடுத்தப்பட்ட தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் மனித உரிமைகள் இந்த உரிமைக் கலாச்சாரத்தை எதிர்ப்பதற்கும், கருத்து வேறுபாடு கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

3. வாழ்வுக்கான உரிமையும் சுதந்திரத்துக்கான உரிமையும் அனைத்து மனித உரிமைகளின் மையம் ஆகும். இருக்கும் உரிமைகளைப் பாதுகாக்கவும் புதிய உரிமைகளை பெறவும் நமக்கு மனித உரிமைக் கண்ணோட்டம் தேவை.

4. ஜனநாயகத்தின் மையமாக தகவல்கள் இருக்கின்றன தகவல்கள் கிடைக்கவும் கிடைத்த தகவல்களை பரவலாக்கவும் நமக்கு உரிமைகள் தேவை.

5. வளங்கள் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படுவதையும் சொத்துடைய வர்க்கங்கள் / சாதிகள் சொத்துக்களையும் வளங்களையும் குவிப்பது மனித உரிமை மீறல் என்பதை உறுதிப்படுத்தவும் - மிக முக்கியமாக, ஒரு பண்பாட்டை உருவாக்கவும் நமது அரசியல் சாசனத்தைப் புரிந்து கொள்ளவும் உரிமைகள் நமக்கு அவசியம்.

பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணோட்டத்திலிருந்து குழந்தை உரிமைகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் போது நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. **குழந்தைகளின் குரலுக்கு (கருத்துக்களுக்கு) மரியாதை கொடுங்கள்:** குழந்தைகளின் பார்வைகளையும் கருத்துக்களையும் அனுபவங்களையும் அங்கீகரிப்பதும், மதிப்பதும் அடிப்படையானது. அவர்களை பாதிக்கும் விஷயங்களில் தங்கள் எண்ணங்கள்,

உணர்வுகள் மற்றும் கவலைகளை வெளிப்படுத்த குழந்தைகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கும்போது அவர்களின் கண்ணோட்டங்கள் என்ன என்று கேட்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும்.

2. **சூழ்நிலை சார்ந்த புரிதல்:** குழந்தைகள் வாழும் குறிப்பிட்ட கலாச்சார, சமூக மற்றும் பொருளாதாரச் சூழல்களை கருத்தில் கொள்வது அவசியம். ஒவ்வொரு சமூகமும் குழந்தை உரிமைகள் பற்றிய புரிதலையும் உணர்தலையும் பாதிக்கும் தனித்துவமான சவால்களையும், மரபுகளையும் விதிமுறைகளையும் கொண்டிருக்கலாம். சூழ்நிலை சார்ந்த இந்தக் காரணிகளை அங்கீகரிப்பது குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மிகவும் பயனுள்ள உத்திகளை உருவாக்க உதவுகிறது.

3. **பராமரிப்பாளர்களோடும் சமூகங்களோடும் வேலையில் ஈடுபடுதல்:** பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள், சமூகங்களோடு வேலையில் ஈடுபடுவது குழந்தைகளின் தேவைகளையும் அனுபவங்களையும் புரிந்துகொள்வதற்கு மிகவும் அவசியம். இந்த தனிநபர்கள் குழந்தைகளின் வாழ்வை ஒரு வடிவத்துக்கு கொண்டுவருவதில் மிக முக்கியப் பங்காற்றி வருகிறார்கள்.

4. **விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட / ஓரம்கட்டப்பட்ட குழுக்களின் குரலை கவனிப்பது:** பல வடிவங்களில் பாகுபாடுகளை அல்லது பாதகங்களை சந்திக்கும் ஓரம்கட்டப்பட்ட, பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளின் கண்ணோட்டங்களுக்கு குறிப்பாக கவனம் செலுத்துவது முக்கியம். இதில் மாற்றுத் திறனாளிக் குழந்தைகள், சிறுபான்மை இனக்குழுக்கள், பழங்குடி சமூகங்கள், அகதிகள் மற்றும் வறுமையில் வாடும் குழந்தைகள் உள்ளனர். அவர்களின் தனித்துவமான சவால்களையும் அனுபவங்களையும் புரிந்துகொள்வது குழந்தை உரிமைகளுக்கான உள்ளடக்கியதும் சமமானதுமான அணுகுமுறைகளை உருவாக்குவதற்கு முக்கியமானது.

5. **வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்குவது:** பாதிக்கப்பட்ட தனிநபர்களின் வாழ்க்கை அனுபவங்களைக் கவனித்துக் கேட்பது விலைமதிக்க முடியாத நுண்ணறிவைக் கொடுக்கும். குழந்தைகளையும் குழந்தைகளோடு தொடர்புடைய மற்றவர்களையும் அவர்கள் கதைகளை, சவால்களை, ஆசைகளை பேட்டிகள், தரமான ஆய்வு மற்றும் பங்கேற்பு முறைகளில் பகிர்ந்துகொள்ளச் செய்வதன் மூலம் அந்த அறிவைப் பெறமுடியும். இந்த தனிப்பட்ட விவரிப்புகள் குழந்தைகளின் உண்மையான தேவைகளையும் ஆசைகளையும் நிவர்த்தி செய்யும் கொள்கைகள், திட்டங்கள், தலையீடுகளை முடிவு செய்ய உதவுகின்றன.

குழந்தை உரிமைகளைப் புரிந்து கொள்ள முழுமையானதும் அனைவரையும் உள்ளடக்கியதுமான அணுகுமுறையைக் கையாள்வதில் மூலம் ஒருவர் குழந்தைகள் சந்திக்கும் சவால்களைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறமுடியும். அவ்வாறு புரிந்துகொள்வதன் வாயிலாக குழந்தைகளின் உரிமைகள் அர்த்தமுள்ளவகையிலும் நீடித்தும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக வேலை செய்ய முடியும்.

## குழந்தை உரிமைகளைப் புரிந்துகொள்வதும் அதை உறுதிப்படுத்துவதன் அவசியமும் தேவையும்

மனித உரிமைகள் உடன்படிக்கையிலிருந்து குழந்தைகளின் உரிமைகளை தனியாக எடுத்து முக்கியத்துவம் தருவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

1. **குழந்தைகள் தனிநபர்கள்.** குழந்தைகள் அவர்களின் பெற்றோர்களுடைய அல்லது அரசின் உடமைப் பொருள் அல்ல. ஒரு குடும்பம் / சமூகத்தை உருவாக்கும் நபர்கள் மட்டும் அல்ல, மனிதக் குடும்பத்தில் அவர்கள் சம மதிப்பு உள்ள உறுப்பினர்கள்.

2. **குழந்தைகள் தங்கள் வாழ்வை முழுவதும் பெரியவர்களைச் சார்ந்தே துவங்குகிறார்கள்.** சுதந்திர மனிதர்களாக வளர பராமரிப்புக்கும் வழிகாட்டலுக்கும் குழந்தைகள் பெரியவர்களை நம்பியிருக்க வேண்டும். அத்தகைய பராமரிப்பு குழந்தைகளுக்கு அவர்களது குடும்பங்களில் பெரியவர்களிடமிருந்து கிடைக்கின்றது. ஆனால் வயதுவந்த முதன்மை பராமரிப்பாளர்களால் குழந்தைகளின் தேவைகளை முழுவதும் பூர்த்தி செய்ய முடியாதபோது, அதற்கான மாற்று வழியை குழந்தையின் சிறந்த நலனை மனதில் வைத்து முதன்மைக் கடமையாளராக அரசு மேற்கொள்ள வேண்டும்.

3. **அரசாங்கத்தின் செயல்பாடுகள் அல்லது செயலற்ற தன்மை, சமூகத்தில் உள்ள மற்ற குழுவை விட குழந்தைகளை மிகவும் வலுவாக பாதிக்கிறது.** நடைமுறையில் அரசாங்கக் கொள்கையின் ஒவ்வொரு பகுதியும் கல்வி முதல் பொது சுகாதாரம் வரை குழந்தைகளை ஓரளவு பாதிக்கிறது. குழந்தைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறிய குறுகிய பார்வை கொண்ட கொள்கை வகுப்பது சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் எதிர்காலத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

4. **அரசியல் செயல்பாட்டில் குழந்தைகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டு பரிசீலிக்கப்பட வேண்டும்.** குழந்தைகள் ஓட்டுப் போடுவதில்லை. பாரம்பரியமாக தேர்தல் செயல்பாடுகளில் கலந்துகொள்வதில்லை. குழந்தைகளின் கருத்துக்களுக்கு சிறப்பு கவனம் கொடுத்து கேட்கப்படவில்லை என்றால் அவர்கள் தங்கள் கருத்துக்களை வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும், உள்ளூர் சமூகங்களில், அரசாங்கங்களிடம் வெளிப்படுத்தும்போது அவர்களை பாதிக்கிற அல்லது எதிர்காலத்தில் பாதிக்கக்கூடிய பல முக்கிய விஷயங்களில் குழந்தைகளின் கருத்துக்கள் கேட்கப்படாமலேயே போகின்றது.

5. **சமூகத்தில் ஏற்படும் பலவித மாற்றங்கள் அவர்களின் வயதுக்கு பொருந்தாத விகிதத்தில், பெரும்பாலும் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.** குடும்ப அமைப்பில் ஏற்படும் மாற்றம், உலகமயம், காலநிலை மாற்றம், டிஜிட்டல் மயம், பெருமளவிற்கான இடப்பெயர்வு, வேலை வாய்ப்புகளில் ஏற்படும் மாறுதல்கள், பல நாடுகளில் சுருங்கி வரும் சமூகப் பாதுகாப்புக்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஆகிய எல்லாம் குழந்தைகள் மீது வலுவான பாதிப்பை ஏற்படுத்துகின்றன. போர்ச்சூழலிலும் பிற அவசரகாலங்களிலும் இத்தகைய மாற்றங்களின் பாதிப்புகள் மிக மோசமான விளைவை குழந்தைகளிடம் ஏற்படுத்தும்.

6. **எந்த ஒரு சமூகமும் வருங்காலத்தில் நல்ல நிலையில் இருக்க குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி முக்கியம்.** குழந்தைகள் இன்னமும் வளர்ந்துகொண்டிருப்பவர்களாக இருப்பதால், பெரியவர்களைவிட குழந்தைகள் நலிந்த நிலைக்கு எற்ப அவர்கள் இன்னும் வளர்ச்சியடைந்து வருவதால், வறுமை, போதிய சுகாதார பராமரிப்பு, ஊட்டச்சத்து, பாதுகாப்பான நீர், வீட்டுவசதி மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற மோசமான வாழ்க்கை நிலைமைகளால் குழந்தைகள் பெரியவர்களை விட அதிகமாக பாதிக்கப்படுகின்றனர் . நோய், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வறுமை ஆகியவற்றின் விளைவுகள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் அதனால் அவர்கள் வாழும் சமூகங்களின் எதிர்காலத்தையும் அச்சுறுத்துகின்றன.

7. **சமுதாயம் தன் குழந்தைகளை தோல்வியடையச் செய்வதால் ஏற்படும் இழப்புகள் மிக அதிகம்.** சமூக ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகள் குழந்தைகளின் ஆரம்பகால அனுபவங்கள் அவர்களின் எதிர்கால வளர்ச்சியை கணிசமாக பாதிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. அவர்களின் வளர்ச்சியின் போக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பை அல்லது இழப்பை தீர்மானிக்கிறது.

# குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை (UNCRC)

## பின்னணி

கடந்த நூற்றாண்டில், மனித உரிமைகள் என்கிற கருத்தோடு இணைந்தே குழந்தைப்பருவத்துக்கான சமூக அக்கறை என்பதும் உலகளாவிய அளவில் வளர்ந்துவந்துள்ளது. இன்றைய காலகட்டத்தில், ஒரு நாட்டுக்குள் தனிநபர்களின் சிவில் உரிமைகள் வடிவத்தில் மனித உரிமைகள் புரிந்துகொள்ளப்படுகின்றன. குழந்தைகளை எப்படி நடத்துவது என்பது உட்பட பல விஷயங்களில் சிறந்த தரநிலைகளை நிர்ணயித்திருக்கிற ஒரு சர்வதேச சமூகத்தை ஐக்கிய நாடுகள் அமைப்புகள் நிறுவியுள்ளன . இவ்வாறு, குழந்தைகள் மீதான அக்கறை, ஒரு தனிப்பட்ட தேசத்தின் எதிர்காலத்திற்கான அக்கறையின் ஒரு பகுதியாக ஆரம்பத்தில் பார்க்கப்பட்டது. இன்று தேசத்தின் எல்லைகளுக்கு மேல் வளர்ந்து உலகளாவிய அளவில் அக்கறை செலுத்தவேண்டிய ஒரு விஷயமாக மாறியுள்ளது. குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை எவ்வாறு உருவானது என்கிற முழு செயல்முறையையும் பார்க்கும்போது, இது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்தச் சூழலில் குழந்தையின் நலன்களைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றுள் 1924ல் “சேவ் தி சில்ட்ரன் ஃபண்ட் இன்டர்நேஷனல் யூனியன்” மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட “ஜெனிவா பிரகடனம்” மிகவும் குறிப்பிடத்தக்கது என்று நாம் கூறலாம். இந்தப் பிரகடனம் குழந்தை நலனுக்காகவும் பாதுகாப்புக்காவும் ஐந்து அடிப்படைக் கொள்கைகளை முன்வைத்தது.

‘லீக் ஆஃப் நேஷன்ஸ்’ அதே ஆண்டில் இந்த பிரகடனத்திற்கு ஒப்புதல் அளித்தது. அதற்குப் பிறகு மிகவும் அழிவுகரமான இரண்டாம் உலகப் போர் வந்தது. அதைத் தொடர்ந்து 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபை (U.N.O.) உருவாக்கப்பட்டது. ஜெனீவா பிரகடனம் 1948 இல் மேலும் திருத்தப்பட்டு நீட்டிக்கப்பட்டது. நவம்பர் 20, 1959 இல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய பிரகடனம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், பிரகடனங்கள் உடன்படிக்கைகள் அல்ல.

பிரகடனங்கள் பொதுவான சில கொள்கைகள், அவை வழிகாட்டுதல்களாக முன்வைக்கப்படுகின்றன. அவற்றைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. இவை “மென்மையான சட்டங்கள்” என்று அழைக்கப்படுகின்றன, அதே சமயம் உடன்படிக்கைகள் பின்பற்றப்படவேண்டும் என்ற கட்டுப்பாடு உள்ளவை. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் அங்கீகரித்து கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கைகள் சட்டமாக மாறும். இவை “கடினமான சட்டங்கள்” என்று அழைக்கப்படுகின்றன. எனவே 1959 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் குழந்தை உரிமைகள் பற்றிய பிரகடனம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் அது உறுப்பு நாடுகள் மீது சட்டப்படியாக கட்டுப்படுத்தும் தன்மையுடையவை அல்ல. எனவே, குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தை உடன்படிக்கையாக்குவதை நோக்கிய இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இறுதியாக ஐ.நா பொதுச் சபை குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது. 1989 இல் உறுப்பு நாடுகள் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டது.

## குழந்தை உரிமைகளுக்கான ஐக்கியநாடுகள் சபை உடன்படிக்கை

1989 ஆம் ஆண்டில், ஐநா பொதுச் சபை குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது. இது செப்டம்பர் 2, 1990 இல் நடைமுறைக்கு வந்தது. இந்த உடன்படிக்கை எல்லா இடங்களிலும் உள்ள குழந்தைகளின் அடிப்படை மனித உரிமைகளைப் பற்றி பேசும் 54 சட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள அனைத்து குழந்தைகளும் அனுபவிக்க வேண்டிய அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்புகளையும் குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (UNCRC) கோடிட்டுக் காட்டுகிறது. UNCRC குழந்தைகளின் உரிமைகளை நடைமுறைப்படுத்த வழிகாட்டும் நான்கு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது:

1. **பாகுபாடு இல்லாமை:** இனம், பாலினம், மதம், இயலாமை / மாற்றுத் திறன் அல்லது சமூகப் பின்னணி போன்ற காரணிகளின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல், அனைத்து குழந்தைகளும் சமமாகவும் நியாயமாகவும் நடத்தப்படுவதற்கு உரிமை உண்டு என்பதை பாகுபாடு இல்லாமை என்கிற கோட்பாடு வலியுறுத்துகிறது. அனைத்து

குழந்தைகளுக்கும் அவர்களின் உரிமைகளும் வாய்ப்புகளும் சமமாக அணுகமுடிவதை உறுதி செய்ய குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கையில் கையெழுத்திட்ட உறுப்பு நாடுகள் கடமைப்பட்டுள்ளன.

2. **குழந்தையின் சிறந்த நலன்:** குழ்ந்தையின் சிறந்த நலன் என்கிற கொள்கை / கோட்பாடு குழந்தைகளுக்கான முடிவுகளை எடுக்கும் போது குழந்தையின் நலனும் தேவைகளும் மையமாக இருக்க வேண்டும் என்பதை முன்வைக்கிறது. அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் உடல் ரீதியான, உணர்வு ரீதியான மற்றும் சமூக ரீதியான வளர்ச்சியின் அடிப்படையில் எது குழந்தைக்கு ஆகச் சிறந்தது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

3. **வாழ்வதற்கான, உயிரோடு இருப்பதற்கான மற்றும் வளர்ச்சிக்கான உரிமை:** குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ளார்ந்து இருக்கும் குழந்தையின் வாழ்வு, உயிர்திருப்பது மற்றும் வளர்ச்சிக்கான உரிமையை அங்கீகரிக்கிறது. குழந்தைகளுக்கு போதுமான ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி மற்றும் பிற அத்தியாவசிய சேவைகள் கிடைப்பதை உறுதிசெய்வதற்கு இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடட உறுப்பு நாடுகளின் பொறுப்பாகும்.

4. **பங்கேற்பு:** தன் கருத்துக்களை வெளிப்படுத்தவும், அவர்களின் பார்வைகள் / கருத்துக்கள் கவனத்தில் கொள்ளவும், அவர்களைப் பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்கவும் ஒவ்வொரு குழந்தைக்கும் இருக்கும் உரிமையை பங்கேற்பு சார்ந்த கொள்கை நிலைநிறுத்துகிறது. இது அவர்களை பாதிக்கிற அவர்கள் சம்மந்தப்பட்ட விஷயங்களில் குழந்தைகள் தீவிரமாக பங்கேற்பதை இந்தக் கொள்கை ஊக்குவிக்கிறது. அவர்கள் ஆற்றல் படுத்தப்பட்டுள்ளதை மேம்படுத்துகிறது. ஜனநாயக மதிப்புகள் மற்றும் செயல்படக்கூடிய குடியுரிமை பற்றிய அவர்களின் புரிதலை வளர்க்கிறது.

இந்த நான்கு கோட்பாடுகளும் குழந்தைகளின் உரிமைகளை உணர்ந்து கொள்வதற்கான அடித்தளமாக செயல்படுகின்றன மற்றும் ஹிழிசிஸிசி ஐ செயல்படுத்துவதற்கும் விளக்குவதற்கும் வழிகாட்டுகின்றன. குழந்தைகளின் கண்ணியம், பாதுகாப்பு மற்றும் அவர்களின் வாழ்க்கையை பாதிக்கும் விஷயங்களில் சுறுசுறுப்பான ஈடுபாடு ஆகியவற்றை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஐநா உடன்படிக்கையை ஒரு நாடு அங்கீகரிக்கும் போது, அது அந்த நாட்டின் எல்லைக்குள் சட்டமாகிறது. குழந்தைகளின் உரிமைகளை அடைவதில் அடைந்த முன்னேற்றத்தைக் கண்காணிக்க, குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை, இந்த ஒப்பந்தத்தின் கொள்கைகள் மற்றும் விதிகள் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் வழங்கக்கூடிய ‘குழந்தைகளின் உரிமைகளுக்கான குழு’ என்ற சர்வதேச நிபுணர் அமைப்பை நிறுவியுள்ளது. இந்திய அரசாங்கம் 11 டிசம்பர் 1992 அன்று இந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டது.

குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை, “குழந்தை உரிமைகள் பற்றிய ஒரு முழுமையான அறிக்கை” . 1959ல் கொண்டுவரப்பட்ட குழந்தை உரிமைகளுக்கான பிரகடனத்திலிருந்து 10 கோட்பாடுகளை குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை எடுத்துக்கொண்டு அவற்றை 54 சட்டக்கூறுகளாக விரிவுபடுத்தியுள்ளது. இந்த 54 சட்டக்கூறுகளில் 41 நேரிடையாக குழந்தைகளின் உரிமைகளோடு தொடர்புடையது. இந்த 41 சட்டக்கூறுகளும் ஏறக்குறைய குழந்தையின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளது. ஒட்டுமொத்த மனித உரிமைகள் கோட்பாடு மற்றும் நடைமுறையில் இது உண்மையில் ஒரு புதுமையான ஆவணமாகும். உண்மையில், மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா பிரகடனத்திற்குப் பிறகு, இது ஒரு தனி மனிதனின் வாழ்க்கையின் பிரிக்க முடியாத கூறுகளாக முழு அளவிலான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளையும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளையும் ஒன்றிணைக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளை அடைவதற்கான வழி. இது குழந்தைகளை ஒரு பொருளாதார அல்லது சமூகஅரசியல் அமைப்பின் கூறுகளாகக் கருதாமல், முழுமையான தனிநபர்களாகக் கருதுவதால் இதைச் செய்ய முடியும்.

குழந்தைகளின் உரிமைகளுக்கும் அவர்களின் உயிர்த்திருத்தல், வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கு பொறுப்பான பெற்றோர் அல்லது பெரியவர்களின் உரிமைகளுக்கு இடையே சமநிலையை உருவாக்குவதை இந்த உடன்படிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. குழந்தைகள் அவர்கள் தொடர்பானதும் அவர்களின் எதிர்காலம் தொடர்பானதுமான முடிவுகளில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை உறுதி செய்வதன் மூலம் மேலே குறிப்பிட்ட நோக்கம் அடையப்படுகிறது. எனவே, ஒவ்வொரு சட்டக்கூறும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது. இது ஒரு முழுமையான ஆவணம்.

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையின் சட்டக்கூறுகளை மேலோட்டமாக கீழே உள்ள கட்டத்தில் பார்க்கலாம்:

## குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை ஒரு பார்வை

**1. முகவுரை**

உடன்படிக்கையில் பின்பற்ற வேண்டிய முக்கிய ஆதாரங்களையும் கொள்கைகளையும் பற்றி இது கூறுகிறது.

**2. பகுதி 1**

குழந்தையின் உள்ளார்ந்த உரிமைகள் பின்வருமாறு:

இதில் 41 சட்டக்கூறுகள் உள்ளன (சட்டக்கூறு 1 முதல் சட்டக்கூறு 41) உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட நாடுகளில் குழந்தையின் உரிமைகளுக்கான பொறுப்புகள் என்ன என்பது இந்தப் பகுதியில் உள்ளது.

குழந்தையின் உரிமைகள் பின்வருமாறு:

**1. குழந்தை என்றால் யார் என்ற வரையறை**

சட்டப்படி 18 வயதுக்கு முன்பே மேஜராகிவிட்டார் என்று குறிப்பிடப்படாதவரை 18 வயதுக்கு குறைவான வயதுடைய எந்த ஒரு நபராக இருந்தாலும் அவர் குழந்தை என்றே கருதப்படுவார்.

**2. பாகுபாடின்மை**

அனைத்து உரிமைகளும் விதிவிலக்கு இல்லாமல் அனைத்து குழந்தைகளுக்கும் பொருந்தும், மேலும் எந்தவொரு பாகுபாட்டிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்க அரசு கடமைப்பட்டுள்ளது. அரசு எந்த உரிமையையும் மீறக்கூடாது. மேலும் அனைத்து உரிமைகளையும் மேம்படுத்துவதற்கு சாதகமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**3. குழந்தையின் சிறந்த நலன்**

குழந்தை தொடர்பான அனைத்து செயல்களும் அவரது சிறந்த நலன்களை முழுமையாக கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்களோ அல்லது பொறுப்பான மற்றவர்களோ அவ்வாறு செய்யத் தவறும் போது அரசு போதுமான கவனிப்பை வழங்க வேண்டும்.

**4. உரிமைகளை நடைமுறைப்படுத்துவது**

குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையில் உள்ள உரிமைகளை நடைமுறையாக்க அரசு கடமைப்பட்டுள்ளது.

**5. பெற்றோரின் வழிகாட்டுதலும் குழந்தையின் வளரும் திறன்களும்**

குழந்தைகளுக்கு அவர்களின் உரிமைகளைப் பயன்படுத்துவதில் எந்த பாதையில் செல்லவேண்டும் என்பதையும் சரியான வழிகாட்டுதலையும் வழங்குவதற்கு பெற்றோருடைய அல்லது கூட்டுக் குடும்பத்தின் உரிமைகளையும் பொறுப்புகளையும் கணக்கில் எடுக்க வேண்டிய / மதிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.

**6. உயிர் வாழ்வதும் வளர்ச்சியும்**

குழந்தைக்கு வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமை உள்ளது, மேலும் குழந்தையின் அதிகபட்ச உயிர்திருத்தலையும் வளர்ச்சியையும் அரசு உறுதி செய்ய வேண்டும்.

**7. பெயரும் தேசிய அடையாளமும்**

ஒவ்வொரு குழந்தைக்கும் பிறப்பிலிருந்து ஒரு பெயரைப் பெறுவதற்கும் ஒரு தேசிய அடையாளத்தைப் பெறுவதற்கும் வழங்குவதற்கும் உரிமை உண்டு.

**8. அடையாளத்தைப் பாதுகாத்தல்**

குழந்தையின் அடையாளம் சார்ந்த (பெயர், தேசியம் மற்றும் குடும்ப உறவுகள்) அடிப்படைகளைப் பாதுகாக்கவும், தேவைப்பட்டால், மீண்டும் நிறுவவும் அரசு கடமைப்பட்டுள்ளது.

**9. பெற்றோர்களிடமிருந்து பிரிந்து இருப்பது**

'குழந்தைகளின் சிறந்த நலனுக்கு உகந்ததாக இருக்காது' என்ற சூழலைத் தவிர மற்ற எல்லா சூழல்களிலும் தங்கள் பெற்றோருடன் வாழ குழந்தைகளுக்கு உரிமை உண்டு, பெற்றோர்கள் விவாகரத்தில் பிரிந்து இருந்தாலும் அப்பா, அம்மா யாரிடம் குழந்தைகள் வளர்கிறார்களோ அம்மாவோடு அல்லது அப்பாவோடு இருவரிடமும் குழந்தைகள் தங்களது தொடர்பை பராமரிக்கப்பதற்க உரிமை உண்டு; அரசின் நடவடிக்கையின் விளைவாக ஒரு குழந்தை தன் பெற்றோரை விட்டுப் பிரிந்தால் பெற்றோரின் இருப்பிடத்தை அரசிடமிருந்து தெரிந்து கொள்ளும் உரிமை குழந்தைகளுக்கு உண்டு.

**10. பிரிந்த குடும்பம் மீண்டும் இணைவது**

எந்த நாட்டையும் விட்டு வெளியேறவும், மீண்டும் ஒன்றிணைவதற்கும் அல்லது குழந்தை/ பெற்றோர் உறவைப் பேணவும் தங்கள் சொந்த நாட்டுக்குள் நுழையவும் குழந்தைகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் உரிமை உண்டு.

**11. சட்டவிரோத பரிமாற்றமும் திரும்பப் பெறாததும்**

பெற்றோர் அல்லது மூன்றாம் தரப்பினர் வேறு நாட்டில் குழந்தைகளை கடத்துவதையோ அல்லது தக்கவைப்பதையோ தடுக்கவும், அதற்கு தீர்வு காணவும் அரசு முயற்சிக்க வேண்டும்.

**12. குழந்தையின் கருத்து**

ஒரு குழந்தைக்கு தன்னைப் பாதிக்கிற எந்த ஒரு விஷயத்தில் அல்லது நடைமுறையில் தன் கருத்தை தெரிவிக்க உரிமை உண்டு. மேலும் குழந்தையின் கருத்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

**13. பேச்சு சுதந்திரம்**

மற்றவர்களின் உரிமைகளை மீறும் என்கிற நிலை தவிர, குழந்தைகளுக்கு தகவல்களைப் பெறுவதற்கும், அந்த தகவல்களைக் கொண்டு கருத்துக்களை உருவாக்கிக் கொள்வதற்கும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் உரிமை உண்டு.

**14. சிந்திக்க, தான் நம்புவதை பின்பற்றி நடக்க (மனசாட்சி), விரும்பிய மதத்தை பின்பற்ற சுதந்திரம்**

பெற்றோரின் தகுந்த வழிகாட்டுதல் மற்றும் சட்டத்திற்கு உட்பட்டு, குழந்தைக்கு சிந்திக்க, தான் நம்புவதை பின்பற்றி நடக்க (மனசாட்சி) மற்றும் மத சுதந்திரத்திற்கான உரிமை உள்ளது.

**15. ஒரு குழுவாக / சங்கம் அமைக்க சுதந்திரம்**

மற்றவர்களைச் சந்திக்கவும், சங்கங்களில் சேரவும் அல்லது சங்கங்களை அமைக்கவும் குழந்தைக்கு உரிமை உண்டு. அவ்வாறு செய்வது மற்றவர்களின் உரிமையை மீறுவதாக இருக்கக்கூடாது.

**16. தனியுரிமைப் பாதுகாப்பு**

குழந்தைகளுக்கு அவர்கள் தனிமையில், குடும்பத்தில், வீட்டில், கடிதப்பரிமாற்றங்களில், இடையூறு இல்லாமல் அவதூறுகளிலிருந்து பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

**17. வயதுக்கு உரிய தகவலைப் பெறுதல்**

சமூக, கல்வி, பண்பாட்டு நலன்கள் மற்றும் அவர்களின் பண்பாட்டுப் பின்னணியை மதிக்கும் தகவல்களை குழந்தைகளுக்கு பரப்ப வேண்டிய கடமை ஊடகங்களுக்கு உள்ளது. மதிப்பீடுடன் கூடிய தகவல்களை குழந்தைகளுக்கு ஊடகங்கள் வெளியிடுவதை அரசு ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும் தகவல்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**18. பெற்றோர்களின் கடமைகள்**

தங்களின் குழந்தையை வளர்ப்பதற்கு குழந்தையின் தாய், தந்தை இருவரும் கூட்டாக முதன்மைப் பொறுப்பாளர்கள். அவர்களின் இந்த முயற்சியில் அரசு அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.

**19. தீங்கிழைத்திலிருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் பாதுகாத்தல்**

பெற்றோர்கள் அல்லது குழந்தைகளை பராமரிப்பதற்கு பொறுப்பானவர்கள் செய்யும் அனைத்து விதமான உடல்ரீதியான அல்லது மன ரீதியான வன்முறையிலிருந்தும் குழந்தைகளை பாதுகாப்பதும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதும் அவ்வாறு வன்முறை நிகழ்த்தப்பட்டால் அவற்றை சரி செய்வதற்கும் அரசு கடமைப்பட்டுள்ளது. .

**20. குடும்பங்கள் இல்லாத குழந்தைகளின் பாதுகாப்பு**

குடும்பச் சூழலை இழந்த குழந்தைகளுக்கு சிறப்புப் பாதுகாப்பை வழங்குவதற்கும், குழந்தையின் பண்பாட்டுப் பின்னணியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குப் பொருத்தமான மாற்றுக் குடும்பப் பராமரிப்பு அல்லது நிறுவன வேலைவாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் அரசு கடமைப்பட்டுள்ளது.

**21. தத்தெடுப்பு**

தத்தெடுப்பு அங்கீகரிக்கப்பட்டதும்/ அல்லது அனுமதிக்கப்படும் நாடுகளில், தத்து கொடுக்கப்பட்ட குழந்தைக்கு தேவையான அனைத்து பாதுகாப்புகளும் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் குழந்தையின் சிறந்த நலனுக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

**22. அகதிக் குழந்தைகள்**

அகதிகள் அல்லது அகதி அந்தஸ்து கோரும் குழந்தைகளுக்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும், அத்தகைய பாதுகாப்பையும் உதவியையும் வழங்கும் திறமையான அமைப்புகளுடன் ஒத்துழைக்க அரசு கடமைப்பட்டுள்ளது.

**23. மாற்றுத் திறனாளிக் குழந்தைகள்**

மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு சிறப்பாக கவனிக்கப்பட, கல்விபெற, பயிற்சி பெறுவதற்கான உரிமை உள்ளது. அவர்கள் முழுமையானதும் சுறுசுறுப்பானதுமான வாழ்க்கையை நடத்துவதற்கான அதிகபட்ச தன்னம்பிக்கையையும் பங்கேற்பையும் அடைய உதவும் வகையில் இந்த உரிமை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**24. சுகாதாரமும் சுகாதார சேவைகளும்**

ஆரம்பகால மற்றும் நோய் தடுப்பு சார்ந்த சுகாதாரப் பராமரிப்பு, பொது சுகாதாரக் கல்வி, குழந்தை இறப்பைக் குறைத்தல் ஆகியவற்றில் சிறப்பு கவனத்துடன் கூடிய தரமான உயர்ந்த சுகாதாரமும் மருத்துவ சேவைகளையும் பெற ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உள்ளது. குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும் பாரம்பரிய நடைமுறைகளை ஒழிக்க அரசு கடமைப்பட்டுள்ளது. இந்த உரிமையை உறுதி செய்ய சர்வதேச ஒத்துழைப்பு தேவை என வலியுறுத்தப்படுகிறது.

**25. தங்க வைக்கப்படும் இடம் பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்வது**

கவனிப்பு, பாதுகாப்பு அல்லது ஏதாவது சிகிச்சை ஆகிய காரணங்களுக்காக அரசால் ஏதாவது ஒரு இடத்தில் குழந்தை தங்க வைக்கப்பட்டால் அந்த இடத்தின் அனைத்து அம்சங்களையும் தவறாமல் மதிப்பீடு செய்யும் உரிமை அங்கு தங்க வைக்கப்படும் குழந்தைக்கு உண்டு.

**26. சமூகப் பாதுகாப்பு**

சமூகப் பாதுகாப்பினால் கிடைக்கும் நன்மைகளைப் பெற குழந்தைகளுக்கு உரிமை உண்டு

**27. வாழ்க்கைத் தரம்**

போதுமான வாழ்க்கைத் தரத்தினால் கிடைக்கும் நன்மைகளைப் பெற குழந்தைகளுக்கு உரிமை உண்டு. இதை வழங்குவது பெற்றோரின் முதன்மைப் பொறுப்பு. பெற்றோர்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதி செய்வது அரசின் கடமை. தேவைப்படும் பட்சத்தில் அரசு பொருள் ஆதரவை வழங்கலாம். இந்த பொறுப்பை சரிவர செய்யாத பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடமிருந்து குழந்தை பராமரிப்பு செலவுகளை மீட்டெடுப்பதை உறுதிசெய்ய அரசு முற்படலாம்.

**28. கல்வி**

குழந்தைக்குக் கல்வி கற்கும் உரிமை உண்டு, ஆரம்பக் கல்வியையாவது இலவச, கட்டாயக் கல்வியாக உறுதி செய்ய வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. ஒழுங்கு பற்றிய பள்ளியின் நிர்வாகம் என்பது குழந்தையின் மனித மாண்பை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். இந்த உரிமையை உறுதி செய்ய சர்வதேச ஒத்துழைப்பு தேவை என வலியுறுத்தப்படுகிறது.

**29. கல்வியின் இலக்குகள்**

கல்வி என்பது குழந்தையின் ஆளுமையையும் திறமைகளையும் வளர்ப்பதும், 18 வயதுக்கு மேல் சுறுசுறுப்புடன் கூடிய செயல்திறன்மிக்க வாழ்க்கை வாழ குழந்தைகளை தயார்படுத்துவதும், அடிப்படை மனித உரிமைகளுக்கான மரியாதையை வளர்ப்பதும், தான் பின்பற்றும் பண்பாடு சார்ந்த மதிப்பீடுகள் மீதும் தேசிய மதிப்பீடுகள் மீதும் ஒரு குழந்தை மரியாதையோடு இருக்க வேண்டும். அதே நேரத்தில் பிறரின் பண்பாட்டு மதிப்பீடுகள் மீதும் மரியாதை செலுத்த வேண்டும்.

**30. சிறுபான்மையினக் குழந்தைகள் அல்லது பழங்குடி மக்கள்**

சிறுபான்மை சமூகங்களும் பழங்குடியின மக்களும் தங்கள் சொந்தப் பண்பாட்டை பின்பற்றவும் அனுபவிக்கவும் தங்கள் சொந்த மதத்தையும் மொழியையும் பின்பற்றவும் உரிமை உண்டு.

**31. ஓய்வு, பொழுதுபோக்கு. பண்பாட்டு செயல்பாடுகள்**

ஓய்வு எடுக்கவும், விளையாட்டு, பண்பாட்டு, கலைநடவடிக்கைகளிலும் பங்கேற்க உரிமை உண்டு.

**32. குழந்தைத் தொழிலாளர் முறை**

குழந்தைகளின் உடல்நலம், கல்வி அல்லது வளர்ச்சிக்கு அச்சுறுத்தலான வேலைகளில் ஈடுபடுவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், வேலைக்கான குறைந்தபட்ச வயதை நிர்ணயிக்கவும், வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும் அரசு கடமைப்பட்டுள்ளது.

**33. போதைப் பொருள் பயன்படுத்துதல்**

போதைப்பொருள் மற்றும் சைக்கோட்ரோபிக் மருந்துகளின் பயன்பாட்டிலிருந்தும் அவற்றின் உற்பத்தி அல்லது விநியோகத்தில் ஈடுபடுவதிலிருந்தும் பாதுகாக்கப்பட குழந்தைக்கு உரிமை உண்டு.

**34. பாலியல் சுரண்டல்**

பாலியல் தொழில் மற்றும் ஆபாசப் படங்களில் பயன்படுத்தப்படுதல் உள்ளிட்ட பாலியல் சுரண்டலிருந்தும் தீங்கிழைத்தலிலிருந்தும் பாதுகாக்கப்படுவதற்கு குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

**35. விற்பனை, உழைப்பு / பாலியல் சுரண்டல் / உறுப்புகளை எடுப்பது உள்ளிட்ட காரணங்களுக்காக குழந்தையை கடத்துவது (trafficking), குழந்தையைக் கடத்தி பணம் கேட்டு மிரட்டுதல் (abduction)**

குழந்தைகளின் விற்பனை, பணம் கேட்டு கடத்துவது, உழைப்பு / பாலியல் சுரண்டல் உள்ளிட்ட காரணங்களுக்காக குழந்தைகள் கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க அனைத்து முயற்சிகளையும் செய்ய அரசு கடமைப்பட்டுள்ளது.

**36. பிற வடிவங்களிலான சுரண்டல்**

சட்டக்கூறு 32, 33, 34 மற்றும் 35ல் குறிப்பிடப்படாத பிற வடிவங்களிலான அனைத்துவித சுரண்டலிலிருந்தும் பாதுகாக்கப்பட குழந்தைக்கு உரிமை உண்டு.

**37. சித்ரவதையும் சுதந்திரம் மறுக்கப்படுவதும்**

சித்ரவதை, கொடூரமாக நடத்துதல் அல்லது தண்டனை, மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை ஆகியவற்றுக்கு தடை.

கைதும் எந்த வகையான சுதந்திரக் கட்டுப்பாடும் கடைசி முயற்சியாக, குறுகிய காலத்துக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். சட்டத்துக்கு உட்பட்ட உரிய முறையில் நடத்தப்படுதல், கைதுசெய்யப்பட்டுள்ள பெற்றோர்கள் / பெரியவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுதல், தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ளுதல், சட்ட மற்றும் பிற உதவிகளை அணுகுதல் உள்ளிட்டவற்றுக்கு குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

**38. ஆயுத மோதல்கள் / போர்**

மனிதாபிமானச் சட்டங்கள் குழந்தைகளுக்கும் பொருந்துவதால், அரசுகள் அவற்றை மதித்து, மரியாதை அளிக்கக் கடமைப்பட்டுள்ளன. 15 வயதிற்குட்பட்ட எந்தவொரு குழந்தையும் நேரடியாக விரோதப் போக்கில் ஈடுபடுத்தப்படக்கூடாது அல்லது ஆயுதப் படையில் சேர்க்கப்படக்கூடாது, மேலும் ஆயுத மோதலால் பாதிக்கப்பட்ட அனைத்து குழந்தைகளும் பாதுகாப்பினாலும் பராமரிப்பினாலும் பயனடைய வேண்டும்.

**39. மறுவாழ்வுக்கான பராமரிப்பு**

ஆயுத மோதல்கள், சித்ரவதை, புறக்கணிப்பு, தீங்கிழைத்தல் அல்லது சுரண்டல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், அவர்களின் மீட்சிக்காகவும் சமூகத்தில் ஒன்றுகலந்து சராசரி வாழ்வை மீண்டும் தொடரவும் (மறுசீரமைப்பு) முறையான கவனிப்பைப் பெறுவதை உறுதி செய்ய அரசு கடமைப்பட்டுள்ளது.

**40. இளம் சிறார் நீதி நிர்வாகம்**

குற்றம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட அல்லது குற்றம் செய்ததாக அங்கீகரிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அவர்களின் மனித உரிமைகள் மதிக்கப்படவும், குறிப்பாக, அவர்களின் பாதுகாப்புக்கு தேவையானவற்றை செய்வதில் சட்டப்படி அல்லது பிற உதவிகள் உட்பட, சட்டத்தின் அனைத்து அம்சங்களிலிருந்தும் பயனடைவதற்கும் உரிமை உண்டு. சாத்தியமானதும் பொருத்தமானதுமான இடங்களில் நீதித்துறை நடவடிக்கைகள் மற்றும் கூர்நோக்கு இல்லங்கள் உள்ளிட்ட நிறுவனங்களில் குழந்தைகளை தங்க வைப்பதை தவிர்க்க வேண்டும்.

**41. நடைமுறையில் இருக்கும் தரநிலைகளுக்கு மதிப்பளிப்பது**

சர்வதேசச் சட்டம் அல்லது பொருந்தக்கூடிய பிற சர்வதேச உடன்படிக்கைகள் உள்ளிட்டவற்றால் நிர்ணயிக்கப்பட்ட ஏதேனும் தரநிலைகள் இந்த உடன்படிக்கையின் தரத்தை விட உயர்ந்த தரத்தோடு இருந்தால், அதுவே பொருந்தும். இதில் 4 சட்டக்கூறுகள் உள்ளன (சட்டக்கூறு 42 முதல் சட்டக்கூறு 45 வரை) இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்ட நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலும் உடன்படிக்கைக்குத் தேவையான பணிகளைக் கண்காணிக்கவும் ஒருங்கிணைக்கவும் குழந்தை உரிமைகள் குழுவை நிறுவ வேண்டும். இதில் 9 சட்டக்கூறுகள் (சட்டக்கூறு 46 முதல் பிரிவு 54 வரை) மாநாட்டில் ஒப்புதல் பெறுவதற்கான நாடுகளுக்கான நடைமுறைகளை வரையறுக்கின்றன.

**பகுதி II**

கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் இருந்து பார்க்க முடிந்தால், இந்த உடன்படிக்கை சர்வதேச அளவில் இதை ஏற்றுக் கொண்ட நாடுகளின் செயல்திறனைக் கண்காணிப்பது மட்டுமல்லாமல் தேசிய அளவில் குழந்தைகளுக்காக என்ன செய்யப்படுகிறது என்ற தகவலையும் வழங்குகிறது. பிரிவு 43, குழந்தைகளின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளுடைய குழுவை நிறுவுவதற்கான அளவுகோல்களை உருவாக்குகிறது, இது பிரிவு 44 ன் படி உடன்படிக்கையை செயல்படுத்துவதில்

ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நாடுகளால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளைப் பெறுவதோடு மதிப்பாய்வும் செய்கிறது.

UNCRC - <https://www.ohchr.org/Documents/ProfessionalInterest/crc.pdf>

## ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையின் படி குழந்தை உரிமைகள் வகைப்பாடு

| உயிர்வாழ்தல் | வளர்ச்சி |
|---|---|
| • வாழ்வதற்கான, உயிரோடு இருப்பதற்கான மற்றும் வளர்ச்சிக்கான உரிமை (சட்டக்கூறு 6)<br>• வாழ்க்கைத் தரம் (சட்டக்கூறு 27, 18.3)<br>• பெற்றோர்களுக்கான வழிகாட்டல் (சட்டக்கூறு.5)<br>• பெயரும் தேசியமும் (சட்டக்கூறு 7)<br>• அடையாளத்தை பாதுகாப்பது (சட்டக்கூறு.8)<br>• தத்தெடுத்தல் (சட்டக்கூறு 21)<br>• குழந்தைகளை பராமரிப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக தங்க வைக்கும் இடத்தை அவ்வப்போது பரிசீலனை செய்வது (Periodic review of placement) (சட்டக்கூறு 25) | • உயிரோடு இருப்பதும் வளர்ச்சியும் (சட்டக்கூறு 6.2)<br>• சுகாதாரமும் சுகாதார சேவைகளும் (சட்டக்கூறு. 24)<br>• கல்வி, தொழிற்பயிற்சி உள்ளிட்ட தொழிற்பயிற்சியும் வழிகாட்டுதலும் (சட்டக்கூறு. 28)<br>• ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் பண்பாட்டு செயல்பாடுகள் (சட்டக்கூறு. 31)<br>• உடல் ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான மீட்புக்கும் சமூக ஒருங்கிணைப்புக்குமான உரிமை மற்றும் (சட்டக் கூறு 39) |
| **பாதுகாப்பு** | **பங்கேற்பு** |
| • பாகுபாடின்மை (சட்டக்கூறு.2)<br>• குழந்தைகளின் தனிப்பட்ட தகவலை பாதுகாப்பது (சட்டக்கூறு 16)<br>• சித்ரவதை அல்லது பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான சிகிச்சை அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமை (சட்டக்கூறு. 37)<br>• தீங்கிழைத்தலும் புறக்கணிப்பும் (சட்டக் கூறு 19)<br>• மரண தண்டனை தடுப்பும் ஆயுள் தண்டனையும் (சட்டக் கூறு 37 a)<br>• குழந்தைத் தொழிலாளர் முறை உள்ளிட்ட பொருளாதாரச் சுரண்டல் (சட்டக் கூறு.32)<br>• போதைப் பொருள் தவறாகப் பயன்படுத்துவது (சட்டக்கூறு. 33)<br>• பாலியல் சுரண்டலும் தீங்கிழைத்தலும் (சட்டக்கூறு 34)<br>• பிற வடிவிலான சுரண்டல் (சட்டக் கூறு. 36)<br>• விற்பனை, உழைப்பு / பாலியல் சுரண்டல் / உறுப்புகளை எடுப்பது உள்ளிட்ட காரணங்களுக்காக குழந்தையை கடத்துவது (trafficking), பணம் கேட்டு குழந்தையின் விருப்பமில்லாமல் அக்குழந்தையை கடத்துவது (abduction) (சட்டக் கூறு. 35) | • குழந்தையின் கருத்துக்களை மதித்தல் (சட்டக் கூறு. 12)<br>• பேச்சு சுதந்திரம் (சட்டக்கூறு. 13)<br>• சிந்திக்க, தான் நம்புவதை பின்பற்றி நடக்க (மனசாட்சி), விரும்பிய மதத்தை பின்பற்ற சுதந்திரம் (சட்டக் கூறு. 14)<br>• சங்கம் அமைப்பதற்கும் அமைதியாக கூட்டம் கூடுவதற்கான உரிமை சட்டக்கூறு 15<br>• தகுந்த தகவல்களுக்கான உரிமை (சட்டக்கூறு. 17) |

## இந்தியாவில் பல்வேறு சட்டங்களில் ஒரு குழந்தை என்றால் யார் என்பதற்கான வரையறை

இந்தியாவில், குறிப்பிடப்படும் சட்டத்தைப் பொறுத்து குழந்தைகள் என்றால் யார் என்பதற்கான வரையறை மாறுபடும். இந்தியாவில் பல்வேறு சட்டங்களின் படி குழந்தைகளுக்கான சில பொதுவான வரையறைகள் இங்கே:

| சட்டங்கள் | நோக்கம் | வயது | |
|---|---|---|---|
| | | சிறுவர்கள் | சிறுமிகள் |
| கல்வி உரிமைச் சட்டம், 2009 (<http://mhrd.gov.in/rte>) | குழந்தைகளின் கல்வி உரிமையைப் பாதுகாக்க | 14 | 14 |
| குழந்தைத் தொழிலாளர் முறை (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 (<http://labour.gov.in/content/division/acts-and-rules.php> | சில வேலைகளில் குழந்தைகளை பணி அமர்த்துவதை தடுக்க மற்றும் வேலைச் சூழலை முறைப்படுத்த | 14 | 14 |
| சுரங்கங்கள் சட்டம் 1952 (<http://indiacode.nic.in/fullact1.asp?tfnm=195235> fnm=195235, <http://indiacode.nic.in/fullact1.asp?tfnm=195235> <http://faolex.fao.org/docs/pdf/ind132410.pdf> 410.pdf <http://faolex.fao.org/docs/pdf/ind132410.pdf>) | அபாயகரமான வேலைச் சூழல்களில் குழந்தைகள் வேலை செய்ய வைக்கப்படுவதை தடுக்க | 18 | 18 |
| தொழிற்சாலைகள் சட்டம் 1948 | தொழிற்சாலைகளில் குழந்தைகள் வேலை செய்வதை தடுக்க | 14 | 14 |
| இளம் சிறார் நீதி பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம், 2015 (<http://wcd.nic.in/childprot/jjactamedment.pdf> ment.pdf <http://wcd.nic.in/childprot/jjactamedment.pdf>) | குழந்தைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் குழந்தைகள் தீங்கிழைத்தலுக்கு ஆளாக்கப்படுவதை தடுக்க | 18 | |
| குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006 <https://www.indiacode.nic.in/handle/123456789/2055?sam_handle=123456789/1362> | குழந்தைத் திருமணத்தை தடுக்க | 21 | 18 |
| பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 https://www.indiacode.nic.in/handle/123456789/2079?sam_handle=123456789/1362#:~:text=India%20Code%3A%20Protection%20of%20Children%20from%20Sexual%20Offences%20Act%2C%202012&text=Long%20Title%3A,connected%20therewith%20or%20incidental%20thereto <https://www.indiacode.nic.in/handle/123456789/2079?sam_handle=123456789/1362>. | 18 வயதுக்குக் குறைவான வயதுடைய குழந்தைகள் பாலியல் துன்புறுத்தல், பாலியல் தாக்குதல், குழந்தைகளை ஆபாசமாக படம் எடுப்பது உள்ளிட்ட குற்றங்களிலிருந்து தடுப்பது. | 18 | 18 |

# தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தை உரிமைகளின் வரலாறு

எல்லா காலத்திலும் மனித உரிமைகள் பட்டியலில் / நிகழ்ச்சி நிரலில் குழந்தைகள் இருந்ததில்லை. தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தை உரிமைகள் காலப்போக்கில் வளர்ச்சியடைந்துள்ளன. வரலாறு, சமூகம் சட்டங்களின் வளர்ச்சி ஆகியவை குழந்தை உரிமைகளில் தாக்கத்தை செலுத்தியிருக்கின்றன. இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் குழந்தை உரிமைகளின் வரலாறு பற்றிய ஒரு பார்வை இதோ

**சுதந்திரத்துக்கு முன்னர்:**

சுதந்திரத்துக்கு முன்னர், இந்தியாவில் குழந்தை உரிமைகள் வெளிப்படையாக அங்கீகரிக்கவோ அல்லது பாதுகாக்கப்படவோ இல்லை.

இங்கு நிலவும் சமூக பண்பாட்டு விதிகளும் பொருளாதார நிலமைகளும் அவ்வப்போது குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம், குழந்தைகளுக்கு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே கல்வியும் சுகாதாரப் பராமரிப்பும் கிடைப்பது உள்ளிட்ட பல வகைகளில் குழந்தைகள் சுரண்டப்படுவதற்கும் புறக்கணிக்கப்படுவதற்கும் காரணமாக இருக்கிறது.

இந்திய சுதந்திரத்துக்கு முன்னர், சமூக அநீதிகளுக்கு எதிராக போராடிய சமூக சீர்திருத்தவாதிகள் குறிப்பிடத்தகுந்த அளவில் பலர் இருந்தனர். அவர்கள் குழந்தைகளின் உரிமைகளுக்காகவும் நல்வாழ்வுக்காகவும் தொடர்ந்து குரல்கொடுத்தும் வாதாடியும் வந்தனர். அவர்களுள் முக்கியமானவர்கள் சிலரைப் பற்றி பார்ப்போம்

1. **மகாத்மா காந்தி:** இந்திய நாட்டின் தந்தையான மகாத்மா காந்தி, குழந்தை உரிமைகளுக்காக வலிமையாக வாதாடியவர். கல்வி மற்றும் குழந்தை நலன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். குழந்தைகளுக்கு சுதந்திரம், அன்பு, பராமரிப்புச் சூழல் ஆகியவை வழங்கப்படவேண்டும் என்று காந்தி நம்பினார். குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் முறை, எந்த வடிவத்திலும் குழந்தைகள் சுரண்டப்படுவது ஆகிய கொடுமைகளுக்கு எதிராக அவர் குரல்கொடுத்தார்.

2. **முத்துலட்சுமி ரெட்டி:** மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி ஒரு முன்னோடியான சமூக சீர்திருத்தவாதி. அவர் இந்தியாவின் முதல் பெண் சட்டசபை உறுப்பினரும் ஆவார். இந்தியப் பெண்களின் சங்கத்தில் குறிப்பிடத்தகுந்த பங்காற்றி குழந்தைத் திருமணத்துக்கு எதிராகவும் தேவதாசி முறைக்கு எதிராகவும் போராடினார். குழந்தைகளின் உடல்நலம் மற்றும் கல்வி மேம்பாட்டுக்காகவும் அவர் பணி செய்தார்.

3. **பெரியார் ஈ.வே.ராமசாமி பெரியார்:** ஒரு சமூக செயல்பாட்டாளர், அரசியல்வாதி. சமூக நீதிக்காவும் சமத்துவத்துக்காகவும் போராடினார். கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர் குழந்தைத் திருமணம், சாதிய அடிப்படையிலான பாகுபாட்டுக்கு எதிராகப் போராடினார். அனைத்து பின்னணியிலிருந்து வரும் அனைத்துக் குழந்தைகளுக்கும் சம உரிமைகளும் சம வாய்ப்புகளும் வழங்கப்படவேண்டும் என்று வாதிட்டார்.

4. **டாக்டர் அம்பேத்கர்:** பெண் குழந்தைகளின் உரிமைகளுக்காக அரசியல் சாசனச் சட்டத்தில் சிறப்பு சட்டப் பிரிவுகளை உள்ளடக்கினார். கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்தியதன் மூலம் குழந்தைகளின் உரிமைகளை அவர் நிலைநிறுத்தினார்.

5. **பண்டிட் ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்:** ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் 19 ஆம் நூற்றாண்டின் ஒரு முக்கிய சமூக சீர்திருத்தவாதியும் கல்வியாளரும் ஆவார். அவர் பெண்களின் நிலையை மேம்படுத்த அயராது உழைத்தார் மற்றும் குழந்தைத் திருமணங்களுக்கு எதிரான சட்டங்களுக்கு ஆதரவு திரட்டினார். 1856 ஆம் ஆண்டு விதவை மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டதில் அவர் முக்கியப் பங்காற்றினார், இது குழந்தைத் திருமண நடைமுறையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டது.

6. **பாரதியார் (சுப்ரமணிய பாரதி):** பாரதியார் ஒரு புகழ்பெற்ற கவிஞர், எழுத்தாளர் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். அவரது சக்திவாய்ந்த கவிதைகள் மூலமாகவும் எழுத்துக்கள் மூலாமாகவும், அவர் குழந்தைகளுக்கான கல்வி மற்றும் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அவர் பாலின சமத்துவத்திற்காக வாதிட்டார். குழந்தை திருமணம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை கண்டித்தார்.

7. **அன்னி பெசன்ட்:** தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் இல்லையென்றாலும், ஆங்கிலேய ஆர்வலரான அன்னி பெசன்ட், இப்பகுதியில் குழந்தைகள் நலனில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார். அவர் சென்னையில் சென்ட்ரல் இந்து பள்ளியை நிறுவி, அப்பகுதியில் கல்வி மற்றும் குழந்தை உரிமைகளை மேம்படுத்துவதற்காக பணியாற்றினார்.

8. ராஜா **ராம் மோகன் ராய்:** வங்காள மறுமலர்ச்சியின் முன்னோடிகளில் ஒருவரான ராஜா ராம் மோகன் ராய், குழந்தை திருமணத்தையும் இறந்த கணவனோடு மனைவியையும் உயிரோடு எரிக்கும் 'சதி' நடைமுறை உட்பட சமூகத்தில் நிலவும் சமூகத் தீமைகளை ஒழிக்க பாடுபட்டார். அவர் கல்வியின் முக்கியத்துவத்தை நம்பினார், மற்றும் பாலினம் அல்லது சாதியைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் அது கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று பிரச்சாரம் செய்தார்.

9. **சாவித்ரிபாய் பூலே:** ஒரு இந்திய சமூக சீர்திருத்தவாதி மற்றும் கவிஞர், 19 ஆம் நூற்றாண்டில் குழந்தைகளின் உரிமைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினார். இந்தியாவில் பெண் கல்வி பெரிதும் புறக்கணிக்கப்பட்ட நேரத்தில் சாவித்ரிபாய் ஃபுலே பெண் கல்விக்காக வலுவாக வாதாடுபவராக இருந்தார். அவர் 1848 இல் புனேவில் பெண்களுக்கான முதல் பள்ளியை நிறுவினார், முன்பு அவர்களுக்கு மறுக்கப்பட்ட கல்விக்கான அணுகலை வழங்கினார். பெண்களின் கல்வியில் கவனம் செலுத்துவதன் மூலம், அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதையும், ஒடுக்குமுறை மற்றும் பாகுபாடுகளின் சுழற்சியை உடைப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்தச் சீர்திருத்தவாதிகள், சுதந்திரத்திற்கு முந்திய காலத்தில் தமிழகத்தில் சமூக நெறிமுறைகளை எதிர்த்து செய்வதிலும், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வுக்காகப் போராடுவதிலும் முக்கியப் பங்காற்றினர். அவர்களின் முயற்சிகள் மாநிலத்தில் குழந்தை உரிமைகள் மற்றும் நலனில் அடுத்தடுத்த முன்னேற்றங்களுக்கு அடித்தளம் அமைத்தது மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கிறது.

**இந்திய விடுதலையும் அரசியல் அமைப்புச் சட்டமும்:**

1947ல் விடுதலை அடைந்த பிறகு, குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை இந்தியா அங்கீகரித்தது.

1950ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய அரசியல் சாசனச் சட்டம், குழந்தைகளின் பாதுகாப்புக்கானதும் நலனுக்கானதுமான பிரிவுகளை உள்ளடக்கியதாக இருந்தது.

i. குழந்தைகளுக்காக சிறப்பு சட்டப் பிரிவுகளை அரசு உருவாக்க சாசனக் கூறு 15(3) அனுமதி அளிக்கிறது.

ii. அபாயகரமான தொழிற்சாலைகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை சாசனக் கூறு 24 தடைசெய்கிறது.

**கொள்கைகள் மற்றும் நிறுவனங்களின் உருவாக்கம்:**

1970 மற்றும் 1980 களில், குழந்தை உரிமைகள் சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்ள பல்வேறு கொள்கைகளும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

i. குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை 1974ல் உருவாக்கப்பட்டது. இது குழந்தைகளின் உரிமைகள், சுகாதாரம், கல்வி மற்றும் நலனை மையப்படுத்தி உள்ளது.

ii. இது இளம் குழந்தைகளின் ஊட்டச் சத்து, சுகாதாரம், வளர்ச்சிக்கான தேவைகளை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த குழந்தைப் மேம்பாட்டு சேவைகள் (ICDS) 1975ல் துவக்கப்பட்டது.

iii. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் (TINP) 1980 களின் பிற்பகுதியில் குழந்தை ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவும், தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட்டது.

**சட்டங்களும் சட்டச் சீர்திருத்தங்களும்:**

இந்தியாவில் பல்வேறு சட்டங்களை இயற்றியதன் மூலம் குழந்தை உரிமைகளுக்கான சட்டக் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

i. இளம் சிறார் நீதிச் சட்டம் புறக்கணிக்கப்பட்ட, குற்றம் இழைத்த குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, மறுவாழ்வுக்காக முதலில் 1986ல் இயற்றப்பட்டது.

ii. குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986ல் சில அபாயகரமான வேலைகளில் குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்துவதை தடைசெய்ய இயற்றப்பட்டது.

iii. கல்வி உரிமைச் சட்டம் 2009ல் 6 லிருந்து 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வியை ஒரு அடிப்படை உரிமையாக வழங்கியது.

iv. சட்டத்தோடு முரண்பட்ட குழந்தைகளின் தேவைகளை எதிர்கொள்ள இளம் சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015ல் இயற்றப்பட்டது.

**கல்வி மற்றும் நலவாழ்வு மீது கூர்மையான கவனம்:**

தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தைகளுக்கு தரமான கல்வி மற்றும் நலவாழ்வை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

i. சமக்ர சிக்ஷ (முன்னர் சர்வ சிக்ஷ அபியான் (SSA) ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷ அபியான் (RMSA) போன்ற திட்டங்கள் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வியை வழங்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்டன.

ii. தேசிய நலவாழ்வு இயக்கமும் (NHM) இனப்பெருக்க, கர்ப்பகால, புதிதாகப் பிறந்த குழந்தை, குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினரின் நலவாழ்வு (RMNCH+A) உத்திகள், தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன.

**குழந்தைப் பாதுகாப்பும் நலமும்:**

குழந்தைப் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் குழந்தைகளின் ஒட்டுமொத்த நலனை மேம்படுத்தவும் அரசாங்கமும் சிவில் சமூக அமைப்புகளும் வேலை செய்து வருகின்றன.

i. குழந்தை நலக் குழுமங்கள் (CWCs), இளம் சிறார் நீதிக் குழுமங்கள் (JJBs), குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான மாநில ஆணையங்கள் (SCPCRs) ஆகியவை குழந்தைப் பாதுகாப்பு சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ii. குழந்தைகளுக்கு எதிரான தீங்கிழைத்தல், சுரண்டல், குழந்தைக் கடத்தல் ஆகியவற்றை தடுத்தல் மற்றும் அதற்கு எதிர்வினையாற்றும் நோக்கத்தோடு ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தை உரிமைகளின் வரலாறு ஒரு ஆற்றல்மிக்கதும் தொடர்ச்சியானதுமான செயல்முறை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், சேவை வழங்கலை மேம்படுத்தவும், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காகவும் அவர்கள் எதிர்கொள்ளும் வளர்ந்து வரும் சவால்களை நிவர்த்தி செய்யவும் முயற்சிகள் தொடர்கின்றன.

## தமிழ்நாட்டில் சீர்திருத்தம் மற்றும் சமூக நீதிக்கான இயக்கங்கள்

தமிழ்நாட்டில் குழந்தைகளின் உரிமைகளுக்காக பல்வேறு இயக்கங்கள், பிரச்சாரங்கள், கூட்டமைப்புகள், கூட்டணிகள் வேலை செய்கின்றன.

குழந்தைகளின் உரிமைகளுக்காக சிறப்பான முறையில் பணிபுரியும் பல்வேறு இயக்கங்கள், பிரச்சாரங்கள், கூட்டணிகள், கூட்டமைப்புகள் தமிழ்நாட்டில் உள்ளன. இத்தகைய முன்முயற்சிகள் குழந்தைகளின் உரிமைகளுக்காக ஆதரவு திரட்டும் நோக்கிலும், கல்வி, சுகாதாரம், குழந்தை தொழில் முறை, குழந்தைப் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் ஒட்டுமொத்த நலன்கள் சார்ந்த பிரச்சனைகளை கையாளும் நோக்கத்தோடும் உள்ளன. சில முக்கிய உதாரணங்களை இங்கே பார்ப்போம்:

1. **தமிழ்நாடு குழந்தை உரிமைகள் கண்காணிப்பகம் (TNCRW)** - தமிழ்நாட்டில் குழந்தை உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் நோக்கி பணி செய்யும் தனிநபர்களையும் அமைப்புகளின் கூட்டமைப்பு. இந்தக் கூட்டமைப்பு குழந்தை உரிமைகள் சார்ந்த பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை எழுப்புவதற்கான ஆய்வு, ஆதரவு திரட்டல், பிரச்சாரங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளும், கொள்கை அளவிலான மாற்றங்களுக்கும் அழுத்தம் கொடுக்கும்.

2. **குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான பிரச்சாரம் (CACL)** - குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான பிரச்சாரம் என்பது தமிழ்நாட்டில் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக அர்ப்பணிப்போடு வேலை செய்துகொண்டிருக்கும் அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் கூட்டணியாகும். சுரண்டல் தொழிலாளர் நடைமுறைகளிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்படுவதையும், அவர்கள் கல்வியை அணுகுவதற்கும் பாதுகாப்பான சூழலையும் உறுதி செய்வதில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு பிரச்சாரத்தினர் செயல்படுகிறார்கள்.

3. **தமிழ்நாட்டில் கல்வி உரிமைக்கான பிரச்சாரம் (RTE Forum)** - இலவச கட்டாய கல்வி உரிமைச்சட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு ஆதரவு திரட்டம் அமைப்புகளையும் தனிநபர்களையும் கொண்ட கூட்டமைப்பாகும். அனைத்து குழந்தைகளுக்கும் இலவச, தரமான கல்வியை உறுதி செய்வதற்கும் குழந்தைகள் கல்வியை அணுகுவது, பள்ளிகள் கட்டமைப்பு, ஆசிரியர் பயிற்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வி ஆகிய பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கும் இந்த கூட்டமைப்பு வேலை செய்கிறது.

4. **தட்பவெப்ப நீதிக்கான குழந்தைகளின் இயக்கம் (CMCJ)** - இந்தியாவின் 7 மாநிலங்களில் விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த 12 முதல் 18 வயதுள்ள குழந்தைகள் நமக்கு இருக்கும் ஒரே பூமியை ஒவ்வொரு மனிதரும் குறிப்பாக நாமும் எதிர்கால சந்ததியினரும் வாழ்வதற்கேற்ற வகையில் பாதுகாக்கும் உறுதிப்பாட்டோடு ஒன்றிணைந்துள்ளனர். “பாலர் பஞ்சாயத்து” ஜெர்மனியில் உள்ள கிண்டர்நாத்லைஃப் (KNH) என்ற நிறுவனம் மற்றும் மதுரையில் உள்ள பங்கேற்பு வளர்ச்சிக்கான ஆதார மையத்தின் (RCPDS) முன்முயற்சியால் துவக்கப்பட்ட குழந்தைகளை மையப்படுத்திய சமூக மேம்பாடு (CFCD) எனும் தலையீட்டின் பரந்த ஆதரவில் செயல்படுகிற ஒரு அமைப்பு. தட்ப வெப்ப நீதிக்கான குழந்தைகள் இயக்கம் - CMCJ’ உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை பின்பற்றும் “பாலர் பஞ்சாயத்து” லிருந்து வந்த ஒரு இயக்கம்.

இந்த இயக்கங்களும் பிரச்சாரங்களும் கூட்டணிகளும் கூட்டமைப்புகளும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கொள்கை மாற்றங்களுக்கு ஆதரவு திரட்டுதல், சேவைகளை வழங்குதல் மற்றும் தமிழ்நாட்டில் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியையும் பாதுகாப்பையும் நோக்கி செயல்படுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை குழந்தை உரிமைகளோடு தொடர்புடைய பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து வேலை செய்து குழந்தை உரிமைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்க பங்களிக்கின்றன.

## தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் குழந்தை உரிமைகளுக்காக வேலை செய்யும் அரசு சாரா நிறுவனங்கள்

**தோழமை:** தோழமை சென்னையை மையமாகக் கொண்டு குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பிலும் கவனம் செலுத்துகிற ஒரு நிறுவனம் குழந்தைகள் மீதான தீங்கிழைத்தல், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தை திருமணம், குழந்தை கடத்தல் ஆகியவற்றை தடுப்பதை நோக்கி தோழமை வேலை செய்துவருகிறது. தமிழ்நாடு முழுவதும் நலிவடைந்த குழந்தைகளுக்கு மறுவாழ்வு, ஆற்றல்படுத்துதல், கல்விக்கான ஆதரவு ஆகியவற்றை தோழமை செய்து வருகிறது.

**குழந்தை உரிமை மற்றும் முன்னேற்ற மையம் (CCRD):** சிசிஆர்டி குழந்தை உரிமைகளிலும் குழந்தை முன்னேற்றத்திலும் கவனம் செலுத்துகிற சென்னையில் உள்ள ஒரு அரசு சாரா நிறுவனம். அவர்கள், குழந்தைகளுக்கு குறிப்பாக ஒதுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு கல்வி, நலவாழ்வு மற்றும் பாதுகாப்பு கிடைப்பதை மேம்படுத்த வேலை செய்கிறார்கள். குழந்தைகளையும் சமூகத்தையும் ஆற்றல்படுத்துவற்கான விழிப்புணர்வு பிரச்சாரங்களையும் பயிற்சிகளையும் கூட சிசிஆர்டி நடத்துகிறது.

**துளிர்:** குழந்தை பாலியல் தீங்கிழைத்தல் தடுப்பு மற்றும் ஆற்றுப்படுத்துவதற்கான மையம் இது சென்னையில் உள்ள ஒரு அரசு சாரா நிறுவனம். குழந்தைகள் பாலியல் ரீதியாக தீங்கிழைக்கப்படுகிற பிரச்சனையை கையாள்வதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்குவதிலும் கவனம் செலுத்துகிறது. குழந்தைகள் பாலியல் ரீதியாக தீங்கிழைக்கப்படுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பாலியல் தீங்கிழைத்தல் நடக்காமல் தடுப்பதற்கான நிகழ்வுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகிறது. குழந்தைகள், பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள், வல்லுநர்கள் ஆகியோர் தீங்கிழைத்தலை தடுப்பதற்கும் எதிர்வினையாற்றுவதற்கும் தேவையான தகவல்களோடும் திறன்களோடும் இருக்க அவர்களை தயார்படுத்துகிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் சமூகத்துக்கு ஒரு புரிதலை ஏற்படுத்துவதையும் தீங்கிழைத்தல் சார்ந்த வழக்குகளை அடையாளம் கண்டு புகார் அளிக்க தனிநபர்களை ஆற்றல்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

**என்ஃபோல்ட் அறக்கட்டளை:** குழந்தைப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான இடங்களை உருவாக்கும் பணியையும் அர்ப்பணிப்போடு செய்து வருகிறது. இது இந்தியாவில் பெங்களூருவில் இயங்குகின்ற லாப நோக்கமற்ற ஒரு நிறுவனம் ஆகும். குழந்தைகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் நிகழாமல் தடுப்பதற்கான வழிமுறைகளிலும் கவனம் செலுத்திவருகிறது. பெற்றோர்கள், குழந்தைகளைப் பராமரிப்பவர்கள், ஆசிரியர்கள், குழந்தைகளோடு தொடர்புடைய மற்றவர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கு பாலியல் ரீதியான தீங்கிழைத்தல் நடக்காமல் தடுக்கவும் நடந்தால் அதைக் கையாளவும் தேவையான திறன்களோடும் அறிவோடும் இருக்க கருத்துப் பட்டறைகள், பயிற்சிகள்,விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்துகிறது.

**என்ஃபோல்ட் அறக்கட்டளை:** பாலியல் ரீதியாக தீங்கிழைக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஆற்றுப்படுத்துதலையும் ஆதரவையும் வழங்குகிறது. குழந்தைகள் தங்களுக்கு நேர்ந்ததை பேசுவதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குகிறது. மேலும் ‘அவர்கள் சொன்ன தகவல்கள் மற்றவர் முன் வெளிப்படுத்தப்படாமல் இருக்கும்’ என்கிற சூழலையும் உருவாக்கும். கூடுதலாக, என்ஃபோல்ட் நிறுவனம் பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் சவால்களை சமாளிக்கவும் மீட்பு நடவடிக்கைக்கும் தனது ஆதரவை வழங்குகிறது.

**சேவ் த சில்ர்டன்:** சேவ் த சில்ர்டன் என்ற நிறுவனம் உலகளாவிய ஒரு நிறுவனம். குழந்தைகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் உறுதியான நோக்கத்தோடு பணி புரிந்துவருகிறது. சேவ் த சில்டர்ன் குழந்தைகளை தீங்கிலிருந்து பாதுகாத்தல், தரமான கல்வியும் சுகாதாரமும் குழந்தைகளுக்கு கிடைக்கச் செய்தல், குழந்தைகளின் உரிமைக்காக ஆதரவு திரட்டுதல் ஆகியவற்றுக்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் சேவ் த சில்டன் அமைப்பு வேலை செய்துவருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம், குழந்தைக் கடத்தல், ஊட்ட சத்துக் குறைபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

**குழந்தை உரிமைகளும் நீங்களும் 'க்ரை':** இந்தியாவில் உள்ள ஒரு அரசு சாரா நிறுவனம். வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் உரிமைகளை உயர்த்திப் பிடிக்க வேலை செய்துகொண்டிருக்கிறது. இந்தியா முழுவதும் பரவலாக உள்ள நலிந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு கல்வி, நலவாழ்வு, பாதுகாப்பு வழங்க அடித்தட்டு அமைப்புகளோடு இணைந்து க்ரை வேலை செய்கிறது. க்ரை நிறுவனம், குழந்தை நேய சூழலை உருவாக்கவும் குழந்தை நேயக் கொள்கைகளும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யவும் ஆதரவுப் பிரச்சாரங்களை மேற்கொள்கிறது. கொள்கை சார்ந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறது.

**பிரதம்:** பிரதம் நிறுவனம், வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி வெளிப்பாடுகளை மேம்படுத்த இந்தியாவில் வேலை செய்துவருகிற அரசு சாரா நிறுவனங்களில் மிகப் பெரிய நிறுவனம் ஆகும். கற்றலில் உள்ள இடைவெளிகளைக் குறைப்பதற்கும் அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவுத் திறன்களை மேம்படுத்துவதற்கும் குழந்தைகள் தரமான கல்வி பெறுவதை உறுதிசெய்வதற்கும் புதுமையான திட்டங்களை செயல்படுத்துகின்றனர். குழந்தைகளுக்கான முன் பருவக் கல்வி, தொழிற் பயிற்சி, இணைய வழி கற்றல் ஆகியவை பிரதம் நிறுவனத்தின் முன்முயற்சிகளில் சில.


**பட்டர்ஃப்ளைஸ்:** இந்தியாவில் தெருவோரக் குழந்தைகள் மற்றும் குழந்தைத் தொழிலாளராக உள்ள குழந்தைகளின் உரிமைகளுக்காகவும் அவர்களின் நலனுக்காகவும் வேலை செய்து கொண்டிருக்கும் ஒரு அரசு சாரா நிறுவனம் பட்டர்ஃப்ளைஸ். அந்த நிறுவனம் குழந்தைகளை ஆற்றல்படுத்தவும் அவர்கள் தங்களின் வறுமை மற்றம் சுரண்டல் சுழற்சியிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் அவர்களுக்கு, முறை சாராக் கால்வி, சுகாதாரப் பராமரிப்பு, ஊட்டச்சத்துக்கான உதவி, தொழிற்பயிற்சி ஆகியவற்றை வழங்குகிறது. பட்டர்ஃப்ளைஸ் நிறுவனம் குழந்தைகள் பாதிப்படைவதற்கு அடி வேராக உள்ள மூல காரணங்களைக் சரி செய்வதற்காக ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளிலும் விழிப்புணர்வு பிரச்சாரங்களிலும் ஈடுபடுகிறது.

**சலாம் பாலக் அறக்கட்டளை:** நகர்புறங்களில் சாலையோர / தெருவோரத்தில் வசிக்கும் குழந்தை தொழிலாளர்களாக இருக்கும் குழந்தைகளோடு பணி செய்கிறது சலாம் பாலக் அறக்கட்டளை. அவர்களுக்கு தங்குமிடம், கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் பயிற்சியை வழங்குகிறது. இந்தக் குழந்தைகளின் மறுவாழ்விலும் அவர்களை பொதுச் சமூகத்தோடு மறுஒருங்கிணைப்பதிலும் கவனம் செலுத்துகிறது. அவர்கள் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான ஆதரவை வழங்குகிறது. சலாம் பாலக் அறக்கட்டளை சாலையோரக் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கத் தேவையான கொள்கை மாற்றங்களுக்காகவும் ஆதரவு திரட்டுகிறது.

**ஹக்:** குழந்தை உரிமைகளுக்கான மையம் என்பது குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இந்தியாவில் புதுடெல்லியை மையமாகக் கொண்டு துவக்கப்பட்ட ஒரு அமைப்பு. ஹக் குழந்தை உரிமைகளுக்கான மையம் இந்தியாவில் உள்ள முக்கியமான குழந்தை உரிமைகள் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு அவற்றைத் தீர்ப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது. ஆதரவு திரட்டல், ஆராய்ச்சி, திறன் மேம்பாடு மற்றும் சட்டப்பூர்வ ஆதரவு ஆகியவற்றில் தங்களுடைய விரிவான அணுகுமுறை மூலம், குழந்தைகள் தங்கள் உரிமைகளை முழுமையாக அனுபவிக்கக்கூடியதும் அவர்கள் தங்களின் திறனை உணரக்கூடியதுமான சூழலை உருவாக்க ஹக் பங்களிக்கிறது.

## ஆயிரமாண்டு வளர்ச்சிக்கான இலக்குகளும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும்

வளர்ச்சிக்காக உலகளாவிய அளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு வழிகாட்ட உருவாக்கப்பட்ட தனித் தனியான இரண்டு கட்டமைப்புகள் ஆயிரமாண்டு வளர்ச்சிக்கான இலக்குகளும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும் ஆகும்.




ஆயிரமாண்டு வளர்ச்சிக்கான இலக்குகள் ஆயிரமாண்டு வளர்ச்சிக்கான இலக்குகள் என்பது 2000 மாவது ஆண்டில் ஐக்கிய நாடுகள்

சபையின் உறுப்பினர் நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலவரையறை கொண்ட குறிப்பிட்ட 8 இலக்குகள் ஆகும். இந்த இலக்குகள் 2015 ஆம் ஆண்டிற்குள் உலகில் நிலவும் மிக முக்கியமான சில சவால்களை எதிர்கொள்ள உருவாக்கப்பட்டன. அந்த மில்லினியம் வளர்ச்சிக்கான இலக்குகள் பின்வருமாறு:

i. தீவிர வறுமையையும் பசியையும் ஒழிப்பது
ii. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்பதை எட்டுவது
iii. பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதும் பெண்களை ஆற்றல்படுத்துவதும்
iv. குழந்தை மரண விகிதங்களைக் குறைப்பது
v. பிரசவ காலத்து ஆரோக்கியத்தை மேம்படுத்துவது
vi. எச்.ஐ.வி / எயிட்ஸ், மலேரியா மற்றும் இதர நோய்களை ஒழிப்பது
vii. சுற்றுச் சூழல் நீடித்த தன்மையை உறுதிப்படுத்துவது
viii. வளர்ச்சிக்கான உலகளாவிய உறவை உருவாக்குவது

மில்லினியம் வளர்ச்சிக்கான இலக்குகள், முதன்மையாக வளரும் நாடுகளை மையமாகக் கொண்டது, வளர்ச்சியின் குறிப்பிட்ட பகுதிகளை இலக்காகக் கொண்டது. சில முனைகளில் முன்னேற்றம் ஏற்பட்டாலும், அவற்றின் எல்லை, அனைத்தையும் உள்ளடக்கும் தன்மை, சுற்றுச்சூழல் சார்ந்த அக்கறைகளின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மில்லினியம் வளர்ச்சிக்கான இலக்குகள் வரம்புகளை எதிர்கொண்டன.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் 2030ம் ஆண்டுக்குள் எட்டப்படவேண்டும் என்ற இலக்கோடு மில்லினியம் வளர்ச்சிக்கான இலக்குகளின் தொடர்ச்சியாக நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் 2015ல் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஷிஞ்நிடீ என்பது நிலையான வளர்ச்சியின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பரிமாணங்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட, ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட 17 இலக்குகளின் தொகுப்பாகும். அந்த இலக்குகள் பின்வருமாறு:

i. வறுமை இல்லை
ii. பசியின்மை அறவே இலலை
iii. தரமான சுகாதாரமும்
iv. நல்வாழ்வும்
v. தரமான கல்வி
vi. பாலின சமத்துவம்
vii. தூய்மையான நீரும்
viii. கழிவறைகளும்
ix. விலைகுறைந்த மற்றும்
x. சுத்தமான ஆற்றல்
xi. கண்ணியமான வேலையும்
xii. பொருளாதார வளர்ச்சியும்
xiii. தொழில், புதுமையும்
xiv. கட்டமைப்பும்
xv. குறைக்கப்பட்டஅசமத்துவங்கள்
xvi. நீடித்தநகரங்களும்
xvii. சமூகங்களும்
xiii. பொறுப்பானநுகர்வும் உற்பத்தியும்
xviii. காலநிலை செயல்பாடு
xix. கடலுக்கு அடியில் வாழ்க்கை
xx. நிலத்தில் வாழ்க்கை
xxi. அமைதி, நீதி, பலமான நிறுவனங்கள்
xxii. இலக்குகளை நோக்கி இணைந்து செயல்படுபவர்கள்



அவை வறுமை, உடல்நலம், கல்வி, பாலின சமத்துவம், காலநிலை மாற்றம், உயிர்ச்சூழல் மற்றும் பல உள்ளிட்ட பரந்துபட்ட சவால்களை மில்லினியம் வளர்ச்சிக்கான இலக்குகளைவிட நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் எதிர்கொள்கிறது. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் உலகளாவியவை, அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக்கூடியவை. மேலும், வளர்ச்சியின் பொருளாதார, சமூக, சுற்றுச் சூழல் அம்சங்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நீடித்த வளர்ச்சியை அடைவதற்கு கூட்டாண்மை, தரவுக் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் வலியுறுத்துகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், மில்லினியம் வளர்ச்சிக்கான இலக்குகளும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும் இவை இரண்டும் வளர்ச்சிக்கான உலகளாவிய கட்டமைப்புகள். ஆனால் நீடித்த வளர்ச்சிக்கான கட்டமைப்புகள் விரிவானதும் ஒருங்கிணைந்ததுமான அணுகுமுறையை பிரநிதித்துவப்படுத்துகின்றன. இது பரந்த அளவிலான சிக்கல்களை உள்ளடக்கியது. நீடித்த வளர்ச்சிக்கான பல்வேறு அம்சங்களுக்கிடையேயான தொடர்புகளை வலியுறுத்துகிறது.

## குழந்தைகளின் உரிமைகளும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும்

இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்துள்ளன. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் குழந்தை உரிமைகள் சார்ந்த வெவ்வேறு சவால்களை எதிர்கொள்வதற்கும் குழந்தைகளின் நல்வாழ்வை மேம்படுததுவற்குமான கட்டமைப்பை வழங்குகிறது. இந்தியாவில் குறிப்பிட்ட நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளோடு குழந்தைகளின் உரிமைகள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை பார்ப்போம்.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 1:** வறுமை இல்லை இந்தியாவில் குழந்தைகள் வறுமையில் வாடுவது ஒரு முக்கியமான பிரச்சனை. உணவு, மருத்துவம் / சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு போன்ற அடிப்படை தேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவது, குழந்தைகளை வறுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் முக்கியமானவை.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 2:** குழந்தை சத்துக் குறைபாட்டை சரி செய்வதும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதும் குழந்தையின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அவசியமானதாகும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி சேவைகள், மதிய உணவுத் திட்டம் போன்ற முன்முயற்சிகள் குழந்தைகளுக்கு சத்தாண உணவு வழங்குவதையும் இந்தியாவில் குழந்தை பட்டினியை அறவே ஒழிப்பதையும் நோக்கமாகக் கொண்டவை.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 3:** மேம்படுத்தப்பட்ட சுகாதாரமும் நல்வாழ்வும் குழந்தையின் சுகாதாரத்தை மேம்படுத்துவதும் குழந்தை இறப்பு விகிதத்தை குறைப்பதும் முன்னுரிமை கொடுத்து கவனிக்கப்படவேண்டியவை. தரமான சுகாதார சேவைகள் கிடைப்பதை மேம்படுத்துதல், நோய் தடுப்புத் திட்டங்கள், ஊட்டச் சத்து தலையீடுகள், கழிவறை மற்றும் சுகாதாரம் சார்ந்த பிரச்சனைகளை சரி செய்தல் ஆகியவை குழந்தையின் சுகாதாரத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதில் பங்காற்றுகின்றன.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 4:** தரமான கல்வி இந்தியா கல்வி பெறுவதற்கான வழிமுறைகளை மேம்படுத்துவதில் முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆனால் இன்னமும் அதில் சவால்கள் இருக்கின்றன. அனைவரையும் உள்ளடக்கிய சமமான கல்வியை உறுதிப்படுத்துவதும் பாலினப் பாகுபாடுகளை ஒழிப்பதும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதும் குழந்தைகளின் கல்விக்கான உரிமையை நிஜமாக்க தேவையானவை ஆகும்.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 5:** பாலின சமத்துவம் பாலின சமத்துவத்தை வளர்த்தெடுப்பதும் பெண் குழந்தைகளையும் சிறுமிகளையும் ஆற்றல்படுத்துவதும் குழந்தை உரிமைகள் முழுமையாக நிறைவேறுவதற்கு மிகவும் அவசியமானவை. குழந்தை திருமணங்கள், பாலின அடிப்படையிலான வன்முறை, பெண் குழந்தை கல்வியை ஊக்குவித்தல், சம வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவை பாலின சமத்துவத்துக்கும் குழந்தைகளின் நலனுக்கும் ஒட்டுமொத்தமாக வழிவகுக்கும்.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 6:** தூய்மையான நீரும் கழிவறை வசதியும் தூய்மையான குடிநீரும் போதுமான கழிவறை வசதிகளும் கிடைப்பது குழந்தைகளின் சுத்தம் மற்றும் சுகாதாரமான வாழ்வுக்கு மிகவும் அவசியம். ஸ்வச் பாரத் அப்யான் (தூய்மை இந்தியா) திட்டம் போன்ற திட்டங்கள் கழிவறை உள்கட்டமைப்பை வழங்குவதையும் சுகாதாரமான நடைமுறைகளை வளர்த்தெடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இவை நாடு முழுவதும் பரவலாக குழந்தைகளுக்கு பலனளித்தது.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 8:** மாண்புடன் கூடிய வேலையும் பொருளாதார வளர்ச்சியும் குழந்தை தொழில்முறையிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது, 18 வயதுக்கு மேற்பட்ட வயதுவந்தவருக்கு மாண்புடன் கூடிய வேலையை முன்னெடுப்பது, சமத்துவமான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவது ஆகியவை குழந்தைகள் நலமுடன் வாழ்வதற்கான ஆதரவான சூழலை அளிக்கும் அது மறைமுகமாக குழந்தைகளின் உரிமைகளுக்கு வலுசேர்க்கும்.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு -10:** குறைக்கப்பட்ட ஏற்றதாழ்வுகள் குழந்தைகளின் உரிமைகளை சாத்தியப்படுத்துவதற்கு, சாதி, வர்க்கம் (ஏழை பணக்காரன்), பாலினம் அல்லது நிலப்பரப்பு / புவியியல் அடிப்படையிலான அசமத்துவங்கள் உள்ளிட்ட அசமத்துவங்களைக் கையாள்வது மிகவும் அவசியம். இவ்வாறு கையாள்வதில், சமமான வாய்ப்புகள், சேவைகள் அனைவருக்கும் கிடைப்பது, ஓரம்கட்டப்பட்ட மற்றும் நலிவடைந்த நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்வதும் உள்ளடங்கும்.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 16:** அமைதி, நீதி, வலிமையான நிறுவனங்கள் வன்முறை, தீங்கிழைத்தல், சுரண்டல் ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதும் குழந்தை நேய நீதி அமைப்புகளையும் நிறுவனங்களையும் உறுதிப்படுத்துவதும் குழந்தைகள் நலமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதற்கு பங்களிக்கிறது. குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்துவதும் குழந்தை நேய சட்ட செயல்முறைகளை உறுதிப்படுத்துவதும் முக்கியமான விஷயம்.

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - 17:** இலக்குகளை நோக்கி இணைந்து செயல்படுபவர்கள் குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் அரசாங்கம், சிவில் சமூக அமைப்புகள், சமூகங்கள், குழந்தை உரிமைகளோடு தொடர்புடைய பிறர் ஆகியோருக்கிடையிலான ஒருங்கிணைப்பு மிகவும் அவசியம். குழந்தையை மையப்படுத்திய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக இணைந்து வேலை செய்வது, இது குறித்த அறிவையும் வளங்களையும் பகிர்ந்துகொள்வது, குழந்தை உரிமைகளுக்காக வாதாடுவதும் ஒட்டுமொத்த தாக்கத்தை வலிமைப்படுத்தும்.

## குறிப்பும் வாசிப்பதற்கான பரிந்துரைகளும்


1. சோப்ரா G. (2016) இந்தியாவில் குழந்தை உரிமைகள் சவால்களும் சமூக செயல்பாடும், SPRINGER, INDIA, PRIVATE
2. பாஜ்பாய், A. (2017) இந்தியாவில் குழந்தை உரிமைகள் சட்டம், கொள்கை மற்றும் நடைமுறை. புது டெல்லி - Oxford University Press
3. பெரிக் J.D., கில்பர்ட், N. மற்றும் ஸ்கிவீன்ஸ், M. (2023) குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகள் பற்றிய ஆக்ஸ்போர்டு வெளியிட்டுள்ள கையேடு
4. புரி, S. (2021a) இந்தியாவில் குழந்தைகள் வாய்ப்புகளும் சவால்களும், நியூயார்க் நோவா சயின்ஸ் பதிப்பகம்
5. குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கை (குழந்தைகளின் கருத்துகள்) (தேதி இல்லை) யூனிசெப் <https://www.unicef.org/child-rights-convention/convention-text-childrens-version> என்ற இணைய முகவரியில் கிடைக்கும்.
6. குழந்தை உரிமைகள் சட்டத்துக்கான மையம் (தேதி இல்லை) நாம் ஏன் குழந்தைகளை கவனித்துக்கொள்ள வேண்டும் <https://ccl.nls.ac.in/wp-content/uploads/2021/11/9.-Why-should-we-care-a-guide-for-india-civil-service-officers.pdf>. என்ற இணைய முகவரியில் கிடைக்கும்.

## யூனிட்டுக்கு முடிவில் உள்ள பயிற்சிகள்

### குழந்தைகள் பங்கேற்பு குறித்த கட்டுக்கதைகளும் உண்மையும்

கவனமாகப் படித்து கட்டுக்கதையா அல்லது உண்மையா என்பதை தேர்வு செய்யவும்

| நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் | கட்டுக்கதை | உண்மை |
|---|---|---|
| 1. குழந்தைகளுக்கு போதுமான அனுபவம் இல்லாததால் அவர்களால் பங்கேற்க முடியாது | | |
| 2. சிறிய குழந்தைகளால் எதையும் விரும்ப முடியும் அல்லது விரும்ப முடியாது | | |
| 3. குழந்தைகள் சொல்வது கவனிக்கப்படவேண்டும் என்ற அவர்களின் உரிமை குழந்தையின் குழந்தைப் பருவத்தைக் களவாடுகிறது | | |
| 4. குழந்தைகள் பங்கேற்றால், அதன் பிறகு அவர்கள் பெற்றோர்களையோ அல்லது ஆசிரியர்களையோ மதிக்க மாட்டார்கள் | | |
| 5. குழந்தைகள் சொல்வதை கவனிப்பது என்றால், குழந்தைகளை மதிப்பதும் அவர்கள் பிறரை பாராட்ட அவர்களுக்கு உதவுவதும் ஆகும் | | |
| 6. பாடங்களை இன்னும் அதிக ஆர்வத்துடன் எடுக்க குழந்தைகளிடம் நல்ல நல்ல ஆலோசனைகள் இருக்கலாம், அவர்கள் பிற குழந்தைகளுக்கும் உதவி செய்யலாம் | | |
| 7. கவனித்தல் என்பது முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒரு வழி, தீர்வுகளை இணைந்து கண்டறிவதும் பரஸ்பரப் புரிதலை மேம்படுத்துவதும் இத்தகைய அம்சங்கள் குடும்பத்துக்கு பலனளிக்கும் | | |
| 8. உரிய இடங்களில், முடிவு எடுக்கும் போது, சிறு குழந்தைகளின் கருத்துகள் கூட கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அதாவது அவர்களின் நண்பர்கள், பெற்றோர்களின் மணமுறிவு, பெற்றோர்களோடு அவர்களுக்கு உள்ள முரண்பாடு, அவர்கள் என்ன விளையாட்டு விளையாட வேண்டும், பின்பற்ற வேண்டிய விதி பற்றிய பேச்சுவார்த்தை நடத்துவது | | |
| 9. பங்கேற்கும்போது குழந்தைகள் கிளர்ச்சியும் முரண்பாடும் அடைவார்கள் | | |
| 10. பங்கேற்பதற்கான திறன்கள் சிறுமிகளிடம் குறைவாக உள்ளது. அவர்களைப் பொறுத்தவரை பங்கேற்பது அபாயம். | | |

## இந்த யூனிட்டுக்கான (அலகு) கேள்விகள்

1. ஐக்கிய நாடுகள் சபையின் 'குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கை'யின் படி குழந்தைகளின் வயது என்ன என்பதை வரையறை செய்யவும்.
2. இந்தியாவில் உள்ள வெவ்வேறு சட்டங்களின் படி குழந்தைகளின் வயதை வரையறை செய்யவும்.
3. குழந்தைகள் பற்றிய கட்டுக்கதைகளையும் உணர்வுகளையும் விவாதிக்கவும்.
4. பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணோட்டத்திலிருந்து குழந்தை உரிமைகளை புரிந்துகொள்ள முயற்சிக்கும் போது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் என்ன?
5. ஐக்கிய நாடுகள் சபை குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கை என்றால் என்ன?
6. ஐக்கிய நாடுகள் சபை குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையின் முக்கிய கொள்கைகள் என்ன?
7. ஐக்கிய நாடுகள் சபை குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையின் படி குழந்தை உரிமைகளின் வகையை விளக்கவும்.
8. இந்தியாவில் குழந்தை உரிமைகள் வரலாற்றை விளக்கவும்.
9. தமிழ்நாட்டில் சமூக நீதி மற்றும் சீர்திருத்த இயக்கங்கள் பற்றி விளக்கவும்.
10. குழந்தை உரிமைகள் தொடர்பான நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் பற்றி விவாதிக்கவும்.

அலகு-2

# குழந்தைகளுக்கு எதிரான வன்முறை

தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையின் (கு.எ.வ) பல்வேறு வடிவங்களும் போக்குகளும் – உடல்ரீதியான, உளவியல் ரீதியான, உணர்வு ரீதியான, பாலியல் சுரண்டலும் தீங்கிழைத்தலும், பாகுபாடு, புறக்கணிப்பு, மறுப்பு மற்றும் இணையவழி பாலியல் தீங்கிழைத்தல் – ஊடறுக்கும் தன்மை – தமிழ்நாட்டில் சுரண்டலுக்கு ஆளாகக் கூடிய நிலைக்குக் குழந்தைகளை இலக்காக்கும் காரணிகளும் மூல காரணங்களும்.

# குழந்தைகளுக்கு எதிரான வன்முறை (கு.எ.வ): தமிழ்நாட்டில் பல்வேறு வடிவங்களும் போக்குகளும்

### உடல் ரீதியான வன்முறை

உடல் ரீதியான வன்முறை என்பது குழந்தைகள் மீது வேண்டுமென்றே உடல் ரீதியான வலுவைச் செலுத்தி அதன் மூலம் குழந்தைக்கு ஊறு அல்லது காயம் ஏற்படுத்துதலைக் குறிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக குழந்தைகளுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை என்பது தமிழ்நாடு உட்பட உலகின் பல்வேறு பகுதிகளில் தீவிரமான பிரச்சினையாகத் தொடர்கிறது. குழந்தைகளுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை தொடர்பாக சில முக்கிய அம்சங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **உடல் ரீதியான வன்முறையின் வடிவங்கள்:** உடல் ரீதியான வன்முறை பல்வேறு வடிவங்களில் வெளிப்படும். அவை அடித்தல். அறைதல், மிதித்தல், குத்துதல், உலுக்குதல், சவுக்கால் அடித்தல் அல்லது குழந்தைக்கு உடல் ரீதியாக ஊறு விளவிக்கும் வேறு எந்த ஒரு செயலும் ஆகும். ஏதேனும் ஒரு பொருளைப் பயன்படுத்தி ஊறு விளைவிப்பதையும் இது உள்ளடக்குகிறது.

2. **உடல் ரீதியான வன்முறையின் இடங்கள்:** குழந்தைகளுக்கு எதிரான உடல் ரீதியான வன்முறை, வீடு, பள்ளி, நிறுவனங்கள் அல்லது சமூகம் என பல்வேறு இடங்களில் நடைபெற முடியும். குடும்ப உறுப்பினர்கள், பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள், சமவயதினர், அதிகாரம் செலுத்துபவர் அல்லது நம்பிக்கைக்குரிய இடத்தில் இருக்கும் பிற தனிநபர்கள் ஆகியோரால் அது முன்னெடுக்கப்பட முடியும்.

3. **விளைவுகளும் தாக்கமும்:** உடல்ரீதியான வன்முறை என்பது குழந்தைகளிடையே கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். உடலில் காயங்கள், வலி, துன்புறுத்தல், அதோடு உணர்வு ரீதியான, உளவியல் ரீதியான வேதனை ஆகியவற்றை விளைவிக்கக்கூடும். ஒரு குழந்தையின் ஒட்டுமொத்த நல்வாழ்விலும் மனநலத்திலும் சுயமரியாதையிலும் சமூக வளர்ச்சியிலும் எதிர்மறையான பாதிப்பை செலுத்தக்கூடும். சில நேரம் உடல் ரீதியான வன்முறையானது நீண்டகால உடல் மற்றும் மனநலப் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கக்கூடும்.

4. **உடல் ரீதியான வன்முறைக்குப் பங்களிக்கும் காரணிகள்:** குழந்தைகள் மீதான உடல் ரீதியான வன்முறைக்குப் பல காரணிகள் பங்களிக்கக் கூடும். தலைமுறைகளாகத் தொடரும் வன்முறை வடிவங்கள், உடல்சார் தண்டனையை மன்னிக்கும் பண்பாட்டு நம்பிக்கைகள், குழந்தை வளர்ப்புத் திறன்களின் போதாமை, குடும்பத்துக்குள் நிலவும் அழுத்தங்கள், போதைப் பொருள் பயன்பாடு, வன்முறைக்கான சமூகரீதியான ஏற்பு ஆகியவை இதில் அடங்கும்.

5. **சட்ட ரீதியானதும் பாதுகாப்புக்கானதுமான நடவடிக்கைகள்:** இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் குழந்தைகளை உடல் ரீதியான வன்முறையிலிருந்து பாதுகாப்பதற்கான சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015, குழந்தைகளை உடல் சார்ந்து தண்டிப்பதையும் உடல் ரீதியான துன்புறுத்தலையும் தடை செய்கின்றது. ஆனால் இந்தச் சட்டங்களின் அமலாக்கமும் இவை குறித்த விழிப்புணர்வும் இடங்களுக்கேற்ப வேறுபடலாம். குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்புகளுக்கு வலுவூட்டி வன்முறையை நிகழ்த்தியவர்கள் அதற்கு பதில் அளிப்பதை உறுதி செய்வதற்கான தொடர் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

### உளவியல் ரீதியான தீங்கிழைத்தல்

குழந்தைகள் மீதான உளவியல் ரீதியான துன்புறுத்தல் என்பது ஒரு குழந்தையின் நலனில் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு அதனை உணர்வு அல்லது மனரீதியாக தவறாகக்

கையாளுதலைக் குறிக்கும். ஒரு குழந்தையின் சுயமதிப்பு, தன்னம்பிக்கை, உளவியல் வளர்ச்சி ஆகியவற்றை பலவீனப்படுத்தும் நடத்தைகளையும் செயல்பாடுகளையும் இது உள்ளடக்குகிறது. உளவியல் ரீதியான துன்புறுத்தலின் சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன":

1. **வார்த்தை அல்லது உணர்வு ரீதியான இழிவுபடுத்துதல்:** தொடர்ச்சியாக சிறுமைப்படுத்துதல், அவமதித்தல், தாழ்வாக உணரவைத்தல், மோசமான சொற்களைப் பிரயோகித்தல், குழந்தைகளின் திறமை, தோற்றம், மதிப்பு ஆகியவை குறித்து எதிர்மறைக் கருத்துகளை வெளிப்படுத்துதல் உள்ளிட்டவை.

2. **நிராகரிப்பும் புறக்கணிப்பும்:** ஒரு குழந்தையின் தேவைகளையோ உணர்வுகளையோ அல்லது அக்குழந்தை இருப்பதையேவோ பராமரிப்பாளர்கள் தொடர்ச்சியாக பொருட்படுத்தாமல் இருப்பது அக்குழந்தை தான் கைவிடப்பட்டுவிட்டதாகவும் தனக்கு மதிப்பில்லை என்றும் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாகவும் உணரவைப்பதற்கு வழிவகுக்கும்.

3. **தொடர்ச்சியான விமர்சனம்:** ஒரு குழந்தை எவ்வளவு முயற்சி செய்தாலும் அல்லது சாதித்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அக்குழந்தையை அடிக்கடி விமர்சித்துக் கொண்டே இருப்பது அக்குழந்தையின் சுயகௌரவத்தைப் படிப்படியாகச் சிதைத்து தான் குறைபட்டவர் (போதுமான அளவுக்கு அறிவு வளர்ச்சி இல்லாதவர்) அல்லது மதிப்பற்றவர் என்று குழந்தையை உணர வைக்கும்.

4. **தனிமைப்படுத்துதலும் அடைத்துவைத்தலும்:** ஒரு குழந்தையை வேண்டுமென்றே தனிமைப்படுத்தி சமூக உரையாடல்கள் அல்லது அதன் வயதுக்கேற்ற பிற செயல்பாடுகளைச் செய்யவிடாமல் தடுத்தல் அக்குழந்தைக்கு தனிமை, பதற்றம் ஆகிய உணர்வுகளைத் தருவதோடு அதன் சமூகரீதியான வளர்ச்சியைக் குன்றவைக்கும்.

5. **தவறாகக் கையாளுதலும் சுரண்டலும்:** சண்டை சச்சரவுகளில் குழந்தையைப் பகடைக்காயாகப் பயன்படுத்துதல், அவர்களின் பலவீனங்களைச் சுரண்டுதல் என ஒரு குழந்தையின் எண்ணங்களையும் உணர்வுகளையும் தனது தனிப்பட்ட ஆதாயங்களுக்காக தவறாகக் கையாள்வது அக்குழந்தைக்குக் குறிப்பிடத்தக்க உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும்.

6. **பயமுறுத்துதல் அல்லது மிரட்டுதல்:** பயம், அச்சுறுத்தல், ஆபத்துகள் குறித்த மிரட்டல்கள் ஆகியவற்றுக்கு ஒரு குழந்தையைத் தொடர்ந்து ஆளாக்குவது அக்குழந்தைக்கு பதற்றச் சூழலை உருவாக்கி பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் தனக்கு உதவ யாரும் இல்லை என்றும் அக்குழந்தையை உணரவைக்கும்.

7. **அன்பையும் பாசத்தையும் தர மறுத்தல்:** ஒரு குழந்தைக்கு அன்பு, பாசம் அல்லது உணர்வு ரீதியான ஆதரவைத் தர மறுப்பது அக்குழந்தை ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளுதல், பிறரை நம்புதல், தனது சுய மதிப்பு குறித்த நேர்மறை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான திறனை பாதிக்கும்.

உளவியல் ரீதியான துன்புறுத்தல் என்பது ஒரு குழந்தையின் மன நலன், உணர்வு ரீதியான நல்வாழ்வு, ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவற்றில் கடுமையான தீய விளைவுகளை ஏற்படுத்தும். தாழ்வான சுயகௌரவம், மன அழுத்தம், பதற்றம், சமூகரீதியான பின்வாங்கல், உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதில் சிக்கல்கள், நடத்தைசார் பிரச்சினைகள், கல்விசார் சிக்கல்கள் ஆகியவற்றோடு நீண்டகால உளவியல் சீர்குலைவுகளுக்கும் கூட வழிவகுக்கும்.

ஒரு குழந்தை உளவியல் ரீதியான துன்புறுத்தலை எதிர்கொள்வதாக நீங்கள் சந்தேகித்தீர்கள் என்றால் உரிய குழந்தைப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் அது குறித்து புகார் அளிப்பது அல்லது ஆலோசகர்கள், சிகிச்சையாளர்கள், சமூகப் பணியாளர்கள் உள்ளிட்டோரிடமிருந்து தொழில்முறை ரீதியான உதவியை நாடுவது மிகவும் முக்கியம்.

## குழந்தைகள் மீதான உணர்வு ரீதியான தீங்கிழைத்தல்

குழந்தைகள் மீதான உணர்வு ரீதியான தீங்கிழைத்தல் என்பது அவர்களின் உணர்வு ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான நல்வாழ்வை பாதிக்கும் வகையில் அவர்களை மோசமாக நடத்துதல் ஆகும். இது பெரியவர்களும் பராமரிப்பாளர்களும் ஒரு குழந்தையின் சுயகௌரவ உணர்வு, உணர்வு ரீதியான பாதுகாப்பு, ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவற்றைப் பலவீனப்படுத்தும் நடத்தைகளிலும் செயல்பாடுகளிலும் ஈடுபடுவதைக் குறிக்கிறது.

1. **தொடர்ச்சியான விமர்சனம் அல்லது அவமதிப்பு:** தனியாகவோ பிறர் முன்னிலையிலோ தொடர்ச்சியாக ஒரு குழந்தையை விமர்சித்தல், கேலி செய்தல், இழிவுபடுத்துதல் ஆகியவை அக்குழந்தைக்கு அவமானம், குற்ற உணர்வு, தான் மதிப்பற்றவர் என்னும் எண்ணம் ஆகியவை ஏற்பட வழிவகுக்கும்.
2. **பழிசுமத்துதல், பலிகடாவாக்குதல்:** ஒரு குழந்தையின் மீது அதன் கட்டுப்பாட்டு எல்லைக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்காக பழிசுமத்துவது, குடும்பத்துக்குள் நிலவும் பிரச்சினைகள், மோதல்களில் தமக்கு பங்குண்டு என்று குழந்தைகளை உணரவைப்பது ஆகியவை கணிசமான அளவில் குழந்தைகளை உணர்வு ரீதியான வேதனைக்கு உள்ளாக்கும்.
3. **நிராகரிப்பும் புறக்கணிப்பும்:** ஒரு குழந்தையின் உணர்வு ரீதியான தேவைகளைப் பொருட்படுத்தாமல் இருத்தல், அவர்களின் உணர்வுகளை நிராகரித்தல் அல்லது அன்பு, பாசம் செலுத்தாமல் இருத்தல் ஆகியவை அக்குழந்தைக்குக் கைவிடப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட உணர்வுகளையும், தனக்கு மதிப்பில்லை என்ற ஆழமான உணர்வையும் அளிக்கக்கூடும்.
4. **உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் (Gaslighting):** உண்மையில் நடப்பவை குறித்த ஒரு குழந்தையின் எண்ணத்தை உள்நோக்கத்துடன் திசைதிருப்புதல், உண்மையைத் திரித்தல், அவர்களின் அனுபவங்களையும் உணர்வுகளையும் மறுத்தல் ஆகியவை அக்குழந்தைகள் தமது சுயதூய்மையை சந்தேகித்துக்கொள்ளவைக்கும். அவர்களுக்கு அவர்கள் மீது இருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்கும்.
5. **உணர்வுகளை வெளிப்படுத்தாமல் இருத்தல்:** தண்டனை அல்லது கட்டுப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான வழியாக அன்பு, பாசம் அல்லது உணர்வு ரீதியான ஆதரவை வெளிப்படுத்தாமல் இருத்தல் ஒரு குழந்தையை அன்பைப் பெறாதவராக, யாருக்கும் தேவைப்படாதவராக, உணர்வுரீதியான பஞ்சத்தில் இருப்பவராக உணரவைக்கும்.
6. **மிரட்டல்களும் அச்சுறுத்தலும்:** ஒரு குழந்தையின் நடத்தையைக் கட்டுப்படுத்தவோ உள்நோக்கத்துடன் கையாளவோ மிரட்டல், அச்சுறுத்தல், அச்சத்தை விளைவிக்கும் உத்திகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது அக்குழந்தை தொடர் பதற்றத்தை உணரும் சூழலை ஏற்படுத்தி அதன் பாதுகாப்பு உணர்வை சீர்குலைக்கும்.

**தனிமைப்படுத்தலும் சமூகரீதியான இழப்புக்கு உள்ளாக்குதலும்:** ஒரு குழந்தை சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுவதையும் தக்கவைப்பதையும் தடுத்தல், அவர்களை நண்பர்களிடமிருந்து பிரித்து தனிமைப்படுத்துதல், அவர்களின் சமூக உரையாடல்களைத் தடுத்தல் ஆகியவை குழந்தைகளிடம் தனித்துவிடப்பட்ட உணர்வு, சமூகப் பதற்றம், குறையுற்ற சமூக வளர்ச்சி ஆகியவற்றை விளைவிக்கும்.

உணர்வு ரீதியான துன்புறுத்தல் என்பது குழந்தைகளின் மன நலத்திலும் நல்வாழ்விலும் கடுமையான நீண்டகாலத்துக்கு தொடரும் பாதிப்புகளை ஏற்படுத்தும். தாழ்வான சுய கௌரவம், மன அழுத்தம், பதற்றம் சார்ந்த பிரச்சினைகள், தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்ளும் பழக்கம், உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதிலும் தக்கவைத்துக் கொள்வதிலும் சிக்கல்கள், 18 வயதை அடைந்த பிறகு உளவியல் ரீதியான பிரச்சினைகளை வளர்த்துக்கொள்வதற்கான அதிக ஆபத்து ஆகியவற்றுக்கு உணர்வு ரீதியான துன்புறுத்தல் பங்களிக்கும்.

**பாலியல் சுரண்டலும் தீங்கிழைத்தலும்**

குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல், தீங்கிழைத்தல் ஆகியவை குழந்தைகளைப் பாலியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் மிகுந்த கவலைக்குரிய சட்டவிரோத செயல்பாடுகளாகும். இது குழந்தைகளின் உடல், உணர்வு மற்றும் உளவியல் நல்வாழ்வில் குறிப்பிடத்தக்க தீங்கை விளைவிக்கும். இது பல்வேறு விதமான தீங்கிழைத்தல்களை உள்ளடக்கியது. பின்வருவது அவற்றுள் சில:

1. **குழந்தைகளின் பாலியல் ரீதியான படங்கள்:** குழந்தைகளின் பாலியல் ரீதியான படங்களை எடுத்தல் / தயாரித்தல், விநியோகித்தல் அல்லது வைத்திருத்தல்.

2. **பாலியல் நோக்கத்துக்காக குழந்தையைக் கடத்துதல்:** பாலியல் சுரண்டலுக்காகக் குழந்தைகளைப் பணியமர்த்துதல், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அழைத்துச் செல்லுதல், பெற்றுக்கொள்ளுதல்.

3. **பாலியல் சுரண்டல் / தொழிலில் குழந்தைகளை ஈடுபடுத்துவது:** பணம், பொருள் அல்லது சேவைகளைப் பெறுவதற்காக, வணிக ரீதியான பாலியல் செயல்பாடுகளில் குழந்தைகளை ஈடுபடுத்துதல்.

4. **இணையவழி சுரண்டல்:** பாலியல் செயல்பாடுகளைப் படம்பிடித்து மிரட்டுதல், நேரலையில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துதல் அல்லது பாலியல் ரீதியான வெளிப்படையான உரையாடலில் ஈடுபடுதல் உள்பட இணையவழியில் பாலியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக குழந்தைகளை வற்புறுத்துதல், தயார்படுத்துதல், தவறாகக் கையாளுதல் ஆகியவை.

5. **குழந்தைக்கு பாலியல் ரீதியாக தீங்கிழைத்தல்:** தொடுதல், அணைத்தல், தழுவுதல், உறுப்பை உள்ளே செலுத்துதல், வேறுவகையான பாலியல் தொடர்பு என ஒரு குழந்தையுடன் எந்த வகையான பாலியல் செயல்பாட்டில் ஈடுபடுவதும் இதில் அடங்கும். ஒரு குழந்தையால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத, விவரமறிந்து ஒப்புதல் தர முடியாத பாலியல் செயல்பாடுகளில் குழந்தையை ஈடுபடுத்துதலும் தொடுதல் (தொடர்பு) அல்லது தொடுகை இல்லாத (தொடர்பற்ற) செயல்பாடுகளுக்கு தயார்நிலையில் இருக்கக்கூடிய அளவு வளர்ச்சியடைந்திராத குழந்தையை பாலியல் செயல்பாடுகளில் ஈடுபடுத்துவது ஆகியவையும் இதற்குள் அடங்கும்.

6. **குழந்தையை பாலியலுக்குத் தயார்படுத்துதல்:** குழந்தையின் நம்பிக்கையை வென்று அதனை பாலியல் செயல்பாடுகளில் ஈடுபடவைக்கும் அளவுக்கு தவறாகக் கையாள்வதற்கான உணர்வு ரீதியான தொடர்பை வளர்த்துக் கொள்ளுதல்.

7. **குழந்தை பாலியல் சுரண்டல் சாதனங்கள்:** குழந்தைகள் மீதான பாலியல் தீங்கிழைத்தல் அல்லது சுரண்டலை காண்பிக்கும் அல்லது பதிவு செய்யும் சாதனங்களை உருவாக்குதல், வைத்திருத்தல், விநியோகித்தல், பயன்படுத்துதல்.

குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டலும் தீங்கிழைத்தல்களும் குற்றங்கள். இவை மனித உரிமை மீறல்களும் கூட என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பாதிக்கப்படும் குழந்தைகள் அதனால் உடல் காயங்கள், உளவியல் வாதை, பாலியல் வழியாகப் பரவும் தொற்றுகள், தேவையற்ற கர்ப்பம், சமூகத்தின் அவமதிப்பு, ஆரோக்கியமான உறவுகளை வளர்த்துக்கொள்வதில் சிக்கல்கள் என கடுமையானவையும் நீண்டகாலத்துக்கு நீடிப்பவையுமான விளைவுகளை எதிர்கொள்கின்றன.

**ஆன்மிகச் சுரண்டல்**

ஆன்மிகச் சுரண்டல் என்பது ஆன்மிகத் தலைவர் அல்லது ஆன்மிகரீதியாக வலிமையும் அதிகாரமும் மிக்க பதவியில் இருப்பவர் (நிறுவனம், அமைப்பு, கோயில், மசூதி, தேவாலயம் அல்லது குடும்பம் எதுவாகினும்) தனது வலிமையையும் அதிகாரத்தையும் தன் மீது வைக்கப்படும்

நம்பிக்கையையும் ஒரு குழந்தையை கட்டுப்படுத்துதல், வற்புறுத்துதல், தவறாகக் கையாளுதல் அல்லது ஆதிக்கம் செலுத்துதலுக்காகத் தவறாகப் பயன்படுத்துவதாகும். ஒரு குழந்தையின் தேவைகளை விலையாகக் கொடுத்து சுரண்டலை நிகழ்த்துபவர் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக (அல்லது தனது நிலையை மேம்படுத்திக்கொள்வதற்காக) ஆன்மிக நம்பிக்கை அல்லது மரபின் சட்டகத்துக்குள் நிகழும் அதிகார துஷ்பிரயோகமே (அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்) ஆன்மிகத் துன்புறுத்தல் ஆகும். ஆன்மிகச் சுரண்டல் என்பது ஒரு குழந்தைக்கு ஆன்மிக ரீதியான தீங்கை விளைவிப்பதோடு உடல், பாலியல் மற்றும் உணர்வுரீதியான சுரண்டலுக்கும் வழிவகுக்கும்.

## நம்பிக்கையைத் தவறாகப் பயன்படுத்தி தீங்கிழைத்தல்

நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு உறவு என்பதை, ஒருவர் தன்னுடன் உறவைப் பகிர்ந்துகொள்ளும் இன்னொருவர் மீது அவர்களின் பணியின் காரணமாகவோ செயல்பாடுகளின் இயல்பினாலோ அதிகாரம் அல்லது செல்வாக்கு செலுத்தக்கூடிய நிலையில் இருப்பது என்று வரையறுக்கலாம். எனவே நம்பிக்கையை தவறாகப் பயன்படுத்துவது அல்லது துஷ்பிரயோகம் என்பது ஒரு ஆசிரியர், மனிதநேய அல்லது வளர்ச்சிப் பணியாளர், விளையாட்டுப் பயிற்சியாளர், ஸ்கவுட் தலைவர், மதத் தலைவர் உள்ளிட்டோரால் இழைக்கப்படலாம். நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பதவிகளில் இருப்போர் தான் சுமக்கும் பொறுப்புகளைத் தெளிவுறப் புரிந்துகொண்டிருப்பதும் தம் மீது நியாயமான அல்லது ஆதாரமில்லாத சுரண்டல் சார்ந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் நிலைக்கு இட்டுச் சென்றிடாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான தெளிவான வழிகாட்டுதலைப் பெற்றிருப்பதும் அவசியம். அச்சம் அல்லது உதவியின் பெயரால் இத்தகைய உறவு சிதைக்கப்படலாம். நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பதவியில் இருப்பவர்கள் தாம் அக்கறை செலுத்த வேண்டியவர்கள் மீது இந்த உறவு தமக்கு அளிக்கும் அதிகாரம் குறித்தும் அதன் விளைவாக தாம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் குறித்தும் புரிதலைப் பெற்றிருப்பது அவசியமானது.

கொடுமைப்படுத்துதல் / அடாவடித்தனம் செய்தல் இப்போது குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு அதிகளவில் தீங்கு விளைவிப்பதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது உடல்ரீதியான மிரட்டல், சாதி, பாலினம் மற்றும் பாலியல் சார்ந்து இழிவான கருத்துக்களைக் கூறுவது உட்பட வாய்மொழி மிரட்டல் அல்லது ஒருவரைத் தனிமைப்படுத்துதல் அல்லது விலக்குதல் உள்ளிட்ட உணர்ச்சி ரீதியான மிரட்டல் போன்ற வடிவங்களை எடுக்கலாம். அதை வரையறுப்பது கடினம், ஆனால் குறைந்த அளவு அதிகாரமுடைய ஒரு நபர் எப்போதும் வெளிப்படையாக தெரியும் வகையில் பகையுணர்ச்சியை / வெறுப்பை அனுபவிப்பதை இது உள்ளடக்கியிருக்கிறது.

## பாகுபாடு

இனம், பாலினம், மதம், குறைபாடு, சமூகபொருளாதார நிலை அல்லது பிற பாதுகாக்கப்பட்ட பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அநீதியாகவும் சமமற்றவராகவும் நடத்தப்படும்போது குழந்தைகளிடையே பாகுபாடு ஏற்படுகிறது. பாகுபாடு என்பது பல்வேறு வடிவங்களிலும் அமைப்புகளுக்குள்ளும் நிகழ முடியும், கல்விச் சாலைகள், மருத்துவ மையங்கள், சமூக உரையாடல்கள் நிகழும் இடங்கள், மற்றும் குடும்ப அமைப்புக்குள்ளேயும் பாகுபாடு வெளிப்படும். பின்வருவன, குழந்தைகள் எதிர்கொள்ளக்கூடிய பாகுபாட்டின் சில எடுத்துக்காட்டுகள்:

1. **சாதி அடிப்படையிலான பாகுபாடு:** குழந்தைகள் அவர்களின் சாதிப் பின்னணியின் அடிப்படையில் காழ்ப்பு, பாரபட்சம், வித்தியாசமாக நடத்தப்படுதல் ஆகியவற்றை எதிர்கொள்ளக் கூடும். இது அவர்கள் விலக்கிவைக்கப்படுதல், அவர்கள் மீது குறிப்பிட்ட பிம்பம் சுமத்தப்படுதல், வாய்ப்புகளைப் பெறுவதில் சமமின்மை ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.

2. **பாலினப் பாகுபாடு:** குழந்தைகள் பாலின அடிப்படையில் பாகுபாட்டை எதிர்கொள்ளக்கூடும். இதன் மூலமாக அவர்களுக்குக் கல்வி, மருத்துவம் ஆகியவை கிடைப்பது மட்டுப்படுத்தப்படும். சமூக விதிமுறைகள் மற்றும் மரபுகளின் காரணமாக சில செயல்பாடுகளில் அவர்களால் பங்கேற்க இயலாமல் போகும்.

3. **மதம் அல்லது நம்பிக்கை அடிப்படையிலான பாகுபாடு:** குழந்தைகள் அவர்கள் பின்பற்றும் மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் பாகுபாட்டை எதிர்கொள்ளக்கூடும். இதனால் விலக்கிவைக்கப்படுதல், களங்கம் சுமத்தப்படுதல், வளங்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதிலிருந்து தடுக்கப்படுதல் ஆகியவை நிகழும்.

4. **குறைபாடுடைய குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடு:** குறைபாடுகளை உடைய குழந்தைகள் உடல், மனப்போக்கு மற்றும் அமைப்பு ரீதியான தடைகளால் கல்வி, மருத்துவம், சமூகரீதியான பங்கேற்பு, வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பெறுவதில் பாகுபாட்டை எதிர்கொள்ளக்கூடும்.

5. **சமூகபொருளாதாரப் பாகுபாடு:** சமூகபொருளாதார ரீதியாக கடைநிலையில் உள்ள குழந்தைகள் அவர்களின் பொருளாதார நிலை காரணமாக கல்வி, மருத்துவம், மேல்நோக்கிய நகர்வுக்கான வாய்ப்பு ஆகியவற்றைப் பெறுவது மட்டுப்படுத்தப்பட்டிருப்பது உள்ளிட்ட பாகுபாடுகளை எதிர்கொள்ளக்கூடும்.

6. **குடும்பத்துக்குள் நிலவும் பாகுபாடு:** குழந்தைகள் அவர்களது குடும்பத்துக்குள்ளேயேகூட பாகுபாட்டையே பாரபட்சமாக நடத்தப்படுவதையோ எதிர்கொள்ளக்கூடும். பாலினம், பெற்றோருக்கு எத்தனையாவது குழந்தை என்பது அல்லது வேறு காரணிகளின் அடிப்படையில் பாரபட்ச அணுகுமுறையாக இது வெளிப்படலாம். இது குழந்தைகளின் சுய கௌரவத்திலும் உணர்வுரீதியான நல்வாழ்விலும் எதிர்மறையான பாதிப்புகளை விளைவிக்கும்.

பாகுபாடு, குழந்தைகளின் சுயகௌரவம், கல்வி அடைவு, மனநலம் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியில் தீய விளைவுகளை ஏற்படுத்தும். அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பாக வளர்வதற்கு உகந்த சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கு சமத்துவம், உள்ளடக்கும் தன்மை, வேறுபாடுகளை மதிப்பது ஆகியவற்றை வளர்த்தெடுப்பது அவசியம்.

**குழந்தையை புறக்கணிப்பது / குழந்தை மீதான அலட்சியம்**

குழந்தை மீதான அலட்சியம் (கவனம் செலுத்தாமல் இருப்பது) குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பில் இருப்போர் அக்குழந்தையின் உடல் ரீதியான, உணர்வு ரீதியான, கல்வி, மருத்துவம் சார்ந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமல் புறக்கணிப்பதைக் குறிக்கிறது. இதன் மூலம் தீங்கு விளையக்கூடும் அல்லது இது குழந்தையின் நல்வாழ்வை பாதிக்கும் தீங்காக உருவெடுக்கக்கூடும். இது பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்து குழந்தையின் உடல்நலத்திலும் வளர்ச்சியிலும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். குழந்தை மீதான புறக்கணிப்புக்கு பின்வரும் எடுத்துக்காட்டுகளைப் பார்க்கலாம்:

1. **உடல் ரீதியாக (வளர்ச்சிக்கு தேவையானவற்றை வழங்காமல்) அலட்சியப்படுத்துவது / புறக்கணிப்பது:** ஒரு குழந்தையைப் பராமரிப்பவர் அதற்கு அத்தியாவசியமான உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவோ குழந்தையின் உடல்ரீதியான நல்வாழ்வை உறுதிபடுத்தும் கண்காணிப்பைத் தரவோ தவறுவது உடல்ரீதியாக புறக்கணிப்பதாகும். ஊட்டச்சத்துக் குறைபாடு, போதுமான அல்லது சரியான உடைகள் இல்லாமை, பாதுகாப்பற்ற வாழ்க்கைச் சூழல் அல்லது குழந்தையை நீண்ட காலத்துக்கு கண்காணிப்பின்றி விடுதல் ஆகியவை இதில் உள்ளடங்கும்.

2. **உணர்வு ரீதியாக புறக்கணிப்பது /அலட்சியப்படுத்துவது :** ஒரு குழந்தையைப் பாரமரிப்பவர் குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தேவைப்படும் உணர்வுரீதியான ஆதரவு, கவனம், பாசம் ஆகியவற்றை தரத் தவறுவது உணர்வு ரீதியான புறக்கணிப்பு. ஒரு குழந்தையின் உணர்வுரீதியான தேவைகளை கவனிக்காமல் விடுவது, உணர்வுகளை புறக்கணிப்பது, தொடர்ந்து, அன்பு அல்லது அக்கறையை வெளிக்காட்டாமல் இருப்பது ஆகியவை இதில் உள்ளடங்கும்.

3. **மருத்துவ ரீதியாக புறக்கணிப்பது / அலட்சியப்படுத்துவது:** ஒரு குழந்தையின் உடல்நிலை அல்லது உளவியல் நிலைக்குத் தேவையான மருத்துவப் பராமரிப்பு அல்லது சிகிச்சையைக் கொடுக்க குழந்தையின் பராமரிப்பாளர் தவறுவதுதான் மருத்துவ ரீதியான புறக்கணிப்பு. மருத்துவருடனான சந்திப்புகள், மருந்து, சிகிச்சை, இடையீடுகள் ஆகியவற்றைத் தாமதப்படுத்துவது அல்லது தவிர்ப்பது ஆகியவை இதில் உள்ளடங்கும்.

4. **கல்வி சார்ந்து புறக்கணிப்பது / அலட்சியப்படுத்துவது:** கல்வி தொடர்பான புறக்கணிப்ப என்பது குழந்தையின் பரமாரிப்பாளர்கள், ஒரு குழந்தை அதற்கு உரிய கல்வி அல்லது கல்விக்கான உதவிகளைப் பெறுவதற்கான வழிகளை ஏற்படுத்தத் தவறுவது. குழந்தை தொடர்ச்சியாக பள்ளிக்கு போகாமல் விடுப்பெடுப்பது, குழந்தையைப் பள்ளியில் சேர்க்காமல் இருப்பது அல்லது குழந்தையின் சிறப்பு கல்வித் தேவைகளை நிறைவேற்றாமல் இருப்பது ஆகியவற்றை இது உள்ளடக்கும்.

5. **கண்காணிப்பு ரீதியாக புறக்கணிப்பது / அலட்சியப்படுத்துவது:** கண்காணிப்பு ரீதியான புறக்கணிப்பு என்பது ஒரு குழந்தைக்கு போதுமான கண்காணிப்பையும் பாதுகாப்பையும் அதன் பராமரிப்பாளர் கொடுக்கத் தவறுவதாகும். இதனால் அந்தக் குழந்தையின் பாதுகாப்பும் நல்வாழ்வும் ஆபத்துக்குள்ளாகின்றன. உரிய வயதை அடையாத குழந்தையை யாரும் இல்லாமல் தனியாக விட்டுச் செல்லுதல் அல்லது பார்த்துக்கொள்ளும் திறனற்ற அல்லது பொறுப்பற்றவரிடம் குழந்தையை விட்டுச் செல்வது ஆகியவை இதில் அடங்கும்.

குழந்தைகள் மீதான புறக்கணிப்பு / அலட்சியம் ஒரு குழந்தையின் உடல், அறிவாற்றல், சமூக மற்றும் உணர்வு ரீதியான வளர்ச்சியில் நீண்டகாலம் நீடிக்கும் கடுமையான தாக்கங்களை விளைவிக்கக்கூடும். குழந்தை மீதான புறக்கணிப்பு, ஊட்டச்சத்துக் குறைபாடு, உடலில் காயங்கள், மோசமான சுத்தமும் சுகாதாரமும், மூளை வளர்ச்சி குன்றுவது, கல்வி கற்பதில் சிக்கல்கள், தாழ்வான சுயகௌரவம், உறவுகளுடனான ஒன்றுதலில் பிரச்சினைகள், மனநலம் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் ஆபத்தான செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான கூடுதல் சாத்தியம் ஆகியவற்றுக்குக் காரணமாக இருக்கும்.

## குழந்தைகள் போதை மருந்துகளை சார்ந்து இருப்பது / அடிமையாவது

இந்தியாவில் குழந்தைகள் போதை மருந்தை சார்ந்து இருப்பது என்பது சமீப காலங்களில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ள ஒரு தீவிரமான பிரச்சனையாகும். இந்தியாவில் உள்ள குழந்தைகள் பல்வேறு சமூகப் பொருளாதாரக் காரணிகளால் போதைப் பழக்கத்துக்கு ஆட்படுகிறார்கள், போதை மருந்துகளை சார்ந்து இருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்தியாவில் குழந்தைகள் போதை மருந்துகளை சார்ந்து இருப்பதற்கு பல்வேறு காரணிகள் பங்காற்றுகின்றன. வறுமை, கல்வி அறிவு இல்லாமை, வேலை இல்லாத் திண்டாட்டம், சம வயதுடைய நண்பர்களின் அழுத்தம், குடும்பம் சீர்குலைவது, வன்முறைக்கும் மனம் சார்ந்த அதிர்ச்சிக்கும் ஆளாவது, சில பகுதிகளில் போதைப்பொருட்கள் எளிதில் கிடைப்பது ஆகியவற்றை உள்ளடக்கியது. மன அழுத்தம் அல்லது உணர்வுரீதியான சிக்கல்களைச் சமாளிக்க, அவற்றிலிருந்து தப்பிக்க அல்லது ஆர்வத்தின் காரணமாக குழந்தைகள் போதைப்பொருளை நோக்கி தங்கள் கவனத்தை செலுத்தி அதற்கு அடிமையாகலாம்.

இந்தியாவில், மது, புகையிலை, மோந்து பார்த்து அதன் மூலம் போதையை உள்ளிழுக்க பயன்படுத்தும் பொருட்கள் (பசை, பெயிண்டை திரவமாக்கப் பயன்படுத்தப்படும் தின்னர் எனப்படும் ஒரு வகை வேதியியல் பொருள் போன்றவை), கஞ்சா மற்றும் சில நேரங்களில் ஓபியாய்டுகள் போன்ற கடினமான மருந்துகள் குழந்தைகள் மத்தியில் பொதுவாக தவறாகப் பயன்படுத்தப்படும் பொருட்களாகும். போதைப்பொருள் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்க ஆரோக்கியம் சார்ந்த அபாயங்களை ஏற்படுத்துகிறது, குழந்தைகளுக்கு நீண்ட கால எதிர்மறையான உடல், உளவியல் மற்றும் சமூக விளைவுகள் வர வழிவகுக்கும்.

1. **மது:** குழந்தைகள் மதுவை தவறாகப் பயன்படுத்துவது கவலைகொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விஷயம். உரிய வயதுக்கு முன்னர் மது அருந்துவதால் அவர்கள் எல்லாவற்றுக்கும் அடுத்தவரை சார்ந்து இருக்கும் நிலைக்கு தள்ளப்படும் அபாயம் உள்ளது. மேலும் பல விஷயங்களில் பலவீனமான முடிவுகளை எடுப்பது, உடல் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சனைகளை சந்திப்பது, அபாயகரமான நடத்தைக்கு உள்ளாவது ஆகிய பிரச்சனைகளை குழந்தைகள் சந்திப்பார்கள்.

2. **புகையிலை:** குழந்தைகள் சிகரெட் புகைப்பது அல்லது பிற புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துவது என்பது அவர்களிடையே போதைப் பொருள் சார்பு நிலை இருப்பதன் இன்னொரு வடிவம். நிகோடினுக்கு அடிமையாவது தீவிரமான ஆரோக்கியம் சார்ந்த பின்விளைவுகளைக் கொண்டுவரும், சுவாசப் பிரச்சனைகள், புற்றுநோய், புகையிலை தொடர்பான பிற நோய்கள் வரும் / அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

3. **உள்ளிழுக்கும் பொருட்கள் (Inhalants):** போதையை உண்டாக்க முகர்ந்து அல்லது சுவாசம் வழியாக உடலுக்குள் செல்லும் பொருட்கள் உள்ளிழுக்கும் பொருட்கள் ஆகும் . பசை, பெயிண்டை திரவமாக்கப் பயன்படும் தின்னர்கள், பெட்ரோல், ஏரோசல் ஸ்ப்ரேக்கள் மற்றும் வீடு சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் திரவங்கள் போன்ற ஆவியாகும் கரைப்பான்கள் ஆகியவை போதைக்காக உள்ளிழுக்கப்படும் சில பொருட்கள். முகர்தல், உள்ளிழுத்தல் மூலமாக போதைப் பொருட்களை தவறாகப் பயன்படுத்துவது மூளை, கல்லீரல், சிறுநீரகங்கள் மற்றும் பிற உறுப்புகளுக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்ட கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

4. **கஞ்சா:** பொதுவாக மரிஜுவானா அல்லது களை (weed) என்று அழைக்கப்படும் கஞ்சா, குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தக்கூடிய மற்றொரு போதைப்பொருள். இது சார்புநிலைக்கும், அறிவாற்றல் குறைபாடுகளுக்கும் மனநலப் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும்.

5. **பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள்:** ஓபியாய்டுகள் (வலி நிவாரணிகள்), பென்சோடியாசெபைன்கள் (மயக்க மருந்துகள்) அல்லது சில உணர்வுகளை தூண்டுவதற்கு கொடுக்கப்படும சில மருந்துகள் (கவனப் பற்றாக்குறை, தேவைக்கு அதிகமாக துறுதுறு என்று இருக்கும் பிரச்சனை (Hyperactivity) ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படுபவை) போன்ற பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை சில குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தலாம். பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை தவறாகப் பயன்படுத்துவதால் கடுமையான உடல்நல அபாயங்கள் ஏற்படலாம். தேவைக்கு அதிகமான அளவு மருந்து உடலுக்குள் செல்லும் அபாயம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

6. **தூண்டுதல்கள் (மத்திய நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகளை தூண்டும் மருந்துகள்):** கொகேயின் அல்லது ஆம்பெடமைன்கள் போன்ற தூண்டுதல் ஏற்படுத்தக்கூடிய மருந்துகள் குழந்தைகளால் தவறாகப் பயன்படுத்தப்படலாம். இந்த மருந்துகள் இருதய பிரச்சினைகளுக்கும் போதைக்கு அடிமையாதல் உட்பட உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கும்.

7. **ஓபியாய்டுகள் (ஹெராயின், மார்பின் போன்ற வலிநிவாரண மாத்திரைகள் உள்ளிட்ட மருந்துகள்):** குழந்தைகளிடையே ஓபியாய்டு தவறாகப் பயன்படுத்தப்படுவது நாம் கவலைப்படவேண்டிய அளவுக்கு வளர்ந்து வரும் ஒரு பழக்கமாக உள்ளது. பரிந்துரைக்கப்பட்ட ஓபியாய்டுகளை குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தலாம் அல்லது ஹெராயின் போன்ற சட்டவிரோதப் பொருட்களை பயன்படுத்துவதை நோக்கி திரும்பலாம். ஓபியாய்டுகளை சார்ந்திருப்பது அழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் மற்றும் மருந்துகளை தேவைக்கு அதிகமான அளவில் எடுப்பதால் ஏற்படும் ஆபத்தும் வரலாம்.

குழந்தைகள் போதைப்பொருள்களை சார்ந்து இருப்பது என்பது தனிப்பட்ட சூழ்நிலைகள், உடன் பழகும் நண்பர்களின் அழுத்தம், குடும்பச் சூழ்நிலைகள் மற்றும் சமூகப் பொருளாதார நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படும் ஒரு சிக்கலான பிரச்சினை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். ஆரம்ப காலத் தலையீடு, தடுப்புக்கான திட்டங்கள், கல்வி, ஆலோசனை மற்றும் பொருத்தமான நலவாழ்வு சேவைகள் கிடைப்பதை உறுதிசெய்தல் ஆகியவை குழந்தைகள் போதைப் பொருட்களை சார்ந்திருப்பதை நிவர்த்தி செய்வதிலும் அவர்களுக்கு ஆதரவும் மறுவாழ்வும் வழங்குவதிலும் முக்கியமானவை.

## இளம் சிறார்கள் குற்றச் செயலில் ஈடுபடுவது

இந்தியாவில் சட்டத்தோடு முரண்படும் குழந்தை என்பது 18 வயதுக்கு கீழ் உள்ள தனிநபர்கள். சமூக விரோதச் செயல் அல்லது சட்டவிரோதம் என்று கருதப்படுகிற குற்றச் செயல்களிலோ அல்லது நடவடிக்கைகளிலோ ஈடுபடுவதைக் குறிக்கும். இளம் சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015, இந்தியாவில் சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளைக் கையாள்வதற்கான சட்டக் கட்டமைப்பு ஆகும்.

சமூக, பொருளாதார, குடும்பம் மற்றும் தனிப்பட்ட சூழ்நிலைகள் உட்பட பல்வேறு காரணிகளின் பாதிப்பால் சிறார்கள் குற்றச்செயல்களில் ஈடுபடலாம். சிறார் குற்றத்திற்கான காரணங்கள் சிக்கலானதும் பன்முகத்தன்மை கொண்டதுமாக இருந்தாலும், அதன் நிகழ்வுக்கு பங்களிக்கும் சில பொதுவான காரணிகள் இங்கே உள்ளன:

1. **குடும்பம் சார்ந்த காரணிகள்:** ஒரு குழந்தையின் பழக்கவழக்கத்துக்கு உருவம் கொடுப்பதில் குடும்பச் சூழல் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. பெற்றோர்களால் புறக்கணிக்கப்படுவது, தீங்கிழைத்தல், குடும்பத்துக்குள் நிலவும் போதைப் பொருள் பழக்கம், பெற்றோரின் குற்றவியல் நடத்தை, பெற்றோர்கள் மேற்பார்வை இல்லாமல் இருப்பது, உறுதியாக இல்லாமல் சீரற்ற முறையில் ஒழுக்கம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகிய நடவடிக்கைகளால் குழந்தைகள் குற்றச் செயலில் ஈடுபடுவது அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

2. **உடன் பழகும் நண்பர்களின் தாக்கம்:** உடன் பழகும் நண்பர்களின் தாக்கமும் குற்றச் செயலில் ஈடுபடுகிறவர்களுடன் பழகுவதும் ஒரு குழந்தையின் பழக்கவழக்கங்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். குழந்தைகளைச் சுற்றி சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிற நண்பர்கள் இருந்தால், அத்தகைய குழந்தைகள் குற்றச் செயலில் பங்கேற்க அதிக வாய்ப்பிருக்கிறது.

3. **பள்ளிச் சூழல்:** கல்வி சார்ந்த சிக்கல்கள், பள்ளிச் சூழலுக்குள் நிலவும் சிக்கல்கள், அடாவடித்தனம் செய்தல் (Bullying), பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் ஊழியர்களிடமிருந்தும் போதிய அளவு ஆதரவு இல்லாத நிலை உள்ளிட்ட பள்ளிச் சூழலில் உள்ள சிக்கல்கள் மாணவர்களின் குற்றச்செயல்களுக்கு பங்களிக்கலாம். கல்வியில் (தேர்வில்) தோல்வியும் பள்ளிக்கு விடுப்பு எடுப்பது ஆகியவை மாணவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கலாம்.

4. **போதைப்பொருட்களை தவறாகப் பயன்படுத்துவது:** மது மற்றும் போதைப்பொருள் பயன்பாடு உட்பட போதைப்பொருட்களை தவறாகப் பயன்படுத்தும் பழக்கம், சிறார்கள் குற்றச் செயலில் ஈடுபடுவதற்கான குறிப்பிடத்தக்க அபாயகரமான காரணியாகும். போதைப்பொருள் தவறாகப் பயன்படுத்துவது என்பது முடிவெடுக்கும் திறனில் பாதிப்பை ஏற்படுத்தலாம், ஆக்கிரமிப்பு உணர்வை அதிகரிக்கலாம். போதைப்பொருள் பயன்பாட்டை ஆதரிக்க அல்லது போதைப்பொருளைப் பெற குற்றவியல் நடத்தையை மேற்கொள்ளலாம் என்ற பழக்கத்துக்கு வழிவகுக்கலாம்.

5. **ஊடகத்தின் தாக்கம்:** வன்முறை, சண்டைபோடுதல் ஆகியவற்றை பார்ப்பதும், தொலைக்காட்சி, திரைப்படங்கள், வீடியோ கேம்கள் மற்றும் இணையம் உள்ளிட்ட ஊடகங்களில் வரும் வயதுக்கு பொருத்தமற்ற உள்ளடக்கத்தைப் பார்ப்பதும், குழந்தையின் நடத்தையைப் பாதிக்கலாம். வன்முறை குறித்த உணர்வை இல்லாமல் போகச் செய்யலாம்.

**தனிப்பட்ட காரணிகள்:** சுயமரியாதை குறைவாக இருப்பது, தன் செயல்கள் மீதான கட்டுப்பாடு குறைவாக இருத்தல், உணர்ச்சியைத் தேடும் நடத்தை, உளவியல் கோளாறுகள் மற்றும் முன்னர் செய்த குற்றச் செயல்கள் போன்ற சில தனிப்பட்ட குணாதிசயங்கள் குற்றச் செயல் ஈடுபடுவதற்கு பங்களிக்கலாம்.

இந்தக் காரணிகள் குற்ற நடத்தையில் ஒரு குழந்தை ஈடுபடும் என்பதற்கான உத்தரவாதங்கள் அல்ல என்பதையும், இத்தகைய சவால்களை எதிர்கொள்ளும் பல குழந்தைகள் குற்ற நடத்தைகள் உள்ளவர்களாக மாறுவதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். வலுவான ஆதரவு அமைப்பு, நேர்மறையான முன்மாதிரிகள், கல்வியும் வாய்ப்புகளும் கிடைப்பது, சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் போன்ற பாதுகாப்புக் காரணிகள் குழந்தைகள் குற்றச் செயலில் ஈடுபடும் அபாயத்தைத் தணிக்க உதவும்.

சிறார்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை நிவர்த்தி செய்வதற்கு, தடுப்பு, ஆரம்பகால தலையீடு, மறுவாழ்வு மற்றும் ஆதரவு சேவைகளில் கவனம் செலுத்தும் ஒரு விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. குடும்பங்களை வலுப்படுத்தவும், தரமான கல்வியும் வேலை வாய்ப்புகளும் கிடைக்கச் செய்யவும், நேர்மறையான சக உறவுகளை மேம்படுத்தவும், குற்றமிழைக்கும் ஆபத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஆதரவான சமூக சூழலை உறுதிப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## இணைய வழி தீங்கிழைத்தல் (Online Abuse)

இணையவழியில் குழந்தைகள் சுரண்டப்படுதல், இணையவழியில் குழந்தைகள் மீது தீங்கிழைத்தல் என்றும் அழைக்கப்படுகிறது. இது டிஜிட்டல் தளங்கள் வாயிலாகவும் இணையத்தின் வழியாகவும் குழந்தைகளை குறிவைத்து நடக்கும் அவர்களை துன்புறுத்துகிற சட்டவிரோதமான செயல்பாடுகளைக் குறிக்கும். இது ஆன்லைனில் குழந்தைகளை சுரண்டுதல், கையாளுதல் அல்லது தீங்கு விளைவிப்பதை நோக்கமாகக் கொண்ட பலவிதமான நடத்தைகளை உள்ளடக்கியது. ஆன்லைனில் குழந்தைகளை தவறாகப் பயன்படுத்துவதற்கான சில எடுத்துக்காட்டுகள் இங்கே தரப்பட்டுள்ளன :

1. **தயார்படுத்துதல் (Grooming) :** இணைய வழி தயார்படுத்துதல் என்பது ஒரு பெரியவர் ஒரு குழந்தையின் நம்பிக்கையைப் பெற, அந்தக் குழந்தையை பாலியல் ரீதியாக அல்லது பிற தீங்கு விளைவிக்கும் நோக்கங்களுக்காக சுரண்டும் நோக்கத்துடன் உணர்ச்சிபூர்வமான தொடர்பை உருவாக்குவதை உள்ளடக்குகிறது.

2. **ஒருவரின் பாலியல் செயல்பாட்டின் ஆதாரங்களை வெளிப்படுத்துவதாக அச்சுறுத்துவதன் மூலம் பணம் அல்லது பாலியல் தேவைகளைப் பெறுகிற நடைமுறை (Sextortion):** யாராவது ஒருவர் யாரோ ஒரு குழந்தையின் வெளிப்படையான படங்கள், வீடியோக்கள் அல்லது தனிப்பட்ட தகவல்களைப் பகிரும்படி வற்புறுத்தி, பின்னர் அதைக் காட்டி குழந்தையை மிரட்டுவது அல்லது மேலும் சுரண்டுவதற்காகவோ அல்லது நிதி ஆதாயத்திற்காகவோ பயன்படுத்தும்போது மேலே குறிப்பிட்ட பாலியல் கொடுமை ஏற்படுகிறது.

3. **ஆன்லைன் துன்புறுத்தலும் அடாவடித்தனமும்:** வதந்திகளைப் பரப்புதல், இழிவான கருத்துகளை வெளியிடுதல் அல்லது அச்சுறுத்தும் செய்திகளை அனுப்புதல் உள்ளிட்ட பல்வேறு வகையான துன்புறுத்தல் ஆகிய செயல்பாடுகளால் இணையவழி மிரட்டல் அல்லது ஆன்லைன் மிரட்டலுக்கு குழந்தைகள் உட்படுத்தப்படலாம்.

4. **சிறார்கள் பாலியல் ரீதியாக தவறாகப் பயன்படுத்தப்படுகிற மாதிரியான புகைப் படங்கள் உள்ளிட்ட பொருட்களின் விநியோகம்:** பொதுவாக குழந்தைகளின் ஆபாசப் படங்கள் என்று அழைக்கப்படுகிற குழந்தைகளின் வெளிப்படையான படங்கள் அல்லது வீடியோக்களை தயாரித்தல், விநியோகம் செய்தல் அல்லது வைத்திருப்பது, தீவிரமான ஆன்லைன் தவறாகப் பயன்படுத்தப்படுகிற ஒரு செயலாகும். இதனால் குழந்தைகள் நிரந்தரமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

5. **இணைய வழியாக குழந்தைக் கடத்தல்:** ஆட்சேர்ப்பு, விளம்பரம் மற்றும் குழந்தைகளைச் சுரண்டுவது தொடர்பான சட்ட விரோதமான பரிவர்த்தனைகள் உட்பட குழந்தைக் கடத்தலை எளிதாக்குவதற்கான தளமாக இணையத்தைப் பயன்படுத்தலாம்.

6. **ஆன்லைன் வாயிலாக வசீகரித்தல்:** பெரியவர்கள் குழந்தைகளை நேரிடையான சந்திப்புகளுக்காகக் கவர முயற்சி செய்யலாம். அல்லது இணைய தளங்கள் மூலம் தகாத செயல்களில் ஈடுபட்டு, அவர்களின் பாதிக்கப்பட்ட நிலையையும் நம்பிக்கையையும் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

7. **வயதுக்குப் பொருந்தாத உள்ளடகத்தை குழந்தைகள் பார்க்கச் செய்வது:** வெளிப்படையான கருத்துக்கள், வன்முறையான கருத்துக்கள் அல்லது தனக்குத் தானே தீங்கு விளைவித்துக்கொள்தல் அல்லது அபாயகரமான நடத்தைகளை ஊக்குவிக்கும் உள்ளடக்கம் / கருத்துக்கள் உள்ளிட்ட அவர்கள் வயதுக்குப் பொருத்தம் இல்லாத அல்லது தீங்கு விளைவிக்கத்தக்க உள்ளடக்கத்தை குழந்தைகள் ஆன்லைனில் பார்க்க நேரிடலாம்.

குழந்தைகளை இணையவழி தீங்கிழைத்தலிலிருந்து பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பான டிஜிட்டல் சூழலை உருவாக்குவது அவசியம். பெற்றோர்கள், பராமரிப்பை வழங்குபவர்கள், கல்வியாளர்கள் இணையவழி பாதுகாப்பு குறித்து குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். மேலும் பொறுப்பான இணையப் பயன்பாட்டை மேம்படுத்துவது குறித்தும், வெளிப்படையான தகவல் தொடர்பை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் ஊக்கப்படுத்தவேண்டும். இணைய வழி தீங்கிழைத்தல் குறித்து புகார் அளிப்பதிலும் கண்காணிப்பதிலும் இணைய சேவை வழங்குபவர்கள், சமூக வலைத்தளங்கள், சட்டத்தை அமல்படுத்தும் அமைப்புகள் ஆகியவை முக்கியப் பங்காற்றுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதற்காக, குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஏதேனும் சந்தேகத்திற்கிடமான அல்லது தவறான செயல்கள் பற்றி தெரியவந்தால் உடனடியாக உரிய அதிகாரிகளிடம் புகாரளிப்பது அவசியம்.

## குழந்தைகளிடையே தற்கொலை எண்ணம்

இந்தியாவில் குழந்தைகளிடையே தற்கொலை எண்ணம் வருவது என்பது ஒரு கவலைக்குரிய பிரச்சினையாகும். இதில் கவனமும் தலையீடும் தேவைப்படுகிறது. இந்தியாவில் சமீப ஆண்டுகளில் குழந்தைகளிடையேயும் இளம் பருவத்தினரிடையேயும் தற்கொலை விகிதம் அதிகரித்து வருகிறது. 1529 வயதிற்குட்பட்டவர்களின் மரணத்திற்கான முக்கிய காரணங்களில் தற்கொலையும் ஒன்றாகும். இதில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வழக்குகள் குழந்தைகளை உள்ளடக்கியது. தற்கொலை என்பது ஒரு சிக்கலான நிகழ்வாகும். கல்வி சார்ந்த அழுத்தம், பெற்றோரின் எதிர்பார்ப்புகளினால் வரும் அழுத்தம், உடன் படிக்கும் குழந்தைகளின் அடாவடித்தனம் (bullying), உறவுச் சிக்கல்கள், போதைப்பொருள் தவறாகப் பயன்படுத்துதல், மனநலப் பிரச்சினைகள், குடும்பத்துக்குள் நிகழும் முரண்பாடுகள், வறுமை மற்றும் சமூகக் காரணிகள் உள்ளிட்ட பல்வேறு சவால்களையும் அழுத்தங்களையும் குழந்தைகள் எதிர்கொள்ளலாம்.

**மனநலன் சார்ந்த பிரச்சனைகள்:** மனச்சோர்வு, மனப்பதட்டம் சார்ந்த கோளாறுகள், தீவிர மனநிலை மாற்றங்களை ஏற்படுத்துகிற இருமுனைக் கோளாறு (bipolar disorder) அல்லது போதைப்பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் கோளாறுகள் போன்ற கண்டறியப்படாத அல்லது சிகிச்சையளிக்கப்படாத மனநல நிலைமைகள், குழந்தைகளிடையே தற்கொலை எண்ணத்தையும்

அது குறித்த நடத்தைக்கான அபாயத்தையும் அதிகரிக்கலாம். வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வு, மன நலம் சார்ந்து நமக்கு இருக்கும் தாழ்வான எண்ணம் மற்றும் மனநல சுகாதாரச் சேவைகள் எளிதாகக் கிடைக்காமல் இருப்பது ஆகியவை இந்தச் சிக்கலை மோசமாக்குகின்றன.

**கல்வி சார்ந்த அழுத்தம்:** இந்தியாவில் குழந்தைகள் எதிர்கொள்ளும் கடுமையான கல்வி சார்ந்த அழுத்தம், அதிகப் போட்டி நிறைந்த கல்வி முறை மற்றும் சமூக எதிர்பார்ப்புகளால் இயக்கப்படுகிறது. இதனால் குழந்தைகளுக்கு மன அழுத்தமும், பதட்டமும் போதாமை உணர்வுகளும் வரும். கல்வி செயல்திறன் தொடர்பான மன அழுத்தம், தோல்வி பயம், பெற்றோரின் அதிகப்படியான எதிர்பார்ப்புகள் சில குழந்தைகளுக்கு அதிகமாக இருக்கலாம்.

**அடாவடித்தனமும் உடன் பழகும் நண்பர்களின் அழுத்தமும்:** அடாவடித்தனம் அது நேரில் அல்லது இணையவழியில் எப்படி இருந்தாலும் குழந்தைகள் தற்கொலை செய்துகொள்ளும் அபாயத்துக்கு குறிப்பிட்ட அளவு பங்கு வகிக்கிறது. தொடர்ச்சியான துன்புறுத்தல், அவமானம் அல்லது இணைய மிரட்டலுக்கு உட்படுத்தப்படுவது குழந்தையின் மன நலனை கடுமையாகப் பாதிக்கும். நண்பர்களின் அழுத்தத்தால் அபாயகரமான நடத்தைகளை செய்வதற்கு இணங்குவது, அதற்கு பொருந்திப்போவது அல்லது அதில் ஈடுபடுவது கூட குழந்தைகளின் பாதிப்புக்குப் பங்களிக்கும்.

**உறவுச் சிக்கல்கள்:** தன் வயதுடைய நண்பர்கள், காதல் இணையர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் ஆகியவர்களோடு ஏற்படும் சண்டைகள் போன்ற உறவு முறை சார்ந்த சிக்கல்களை குழந்தைகள் சந்திக்கலாம். இவை அவர்களின் உணர்வுபூர்வமான பாதிப்புக்கும் தனிமை உணர்வுக்கும் காரணமாக இருக்கலாம். உறவுமுறைகளில் ஏற்படும் விரிசல், குடும்பச் சண்டைகள் அல்லது ஆதரவான உறவுகள் இல்லாதது ஆகியவை குழந்தைகளின் மன நலத்தை குறிப்பிடத்தகுந்த அளவுக்கு பாதிக்கலாம்.

**குடும்பக் காரணிகள்:** குடும்பச் சண்டைகள், சரியாக செயல்படாத அல்லது நிலையற்ற குடும்பச் சூழல்கள் ஒரு குழந்தையின் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு பங்களிக்கலாம். பெற்றோர்கள் விவாகரத்து செய்து கொள்வது, குடும்ப வன்முறை, குடும்பத்துக்குள் போதைப் பொருள் பயன்பாடு, புறக்கணிப்பு அல்லது உணர்வுபூர்வமான ஆதரவு இல்லாமை ஆகியவை குழந்தைகள் தற்கொலை செய்துகொள்ளும் அபாயத்தை அதிகரிக்கலாம்.

**சமூகப் பொருளாதாரக் காரணிகள்:** வறுமை, நிதி சார்ந்த அழுத்தம், தரமான கல்வி அல்லது சுகாதாரம் கிடைக்காத நிலை, கட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள் உள்ளிட்ட சமூகப் பொருளாதாரக் காரணிகள் குழந்தைகளிடையே தற்கொலை எண்ணங்கள் வரப் பங்காற்றலாம். பொருளாதாரம் சார்ந்த கடினமான சூழலும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மையும் அவர்களின் பாதிப்பை மேலும் அதிகரிக்கலாம்.

**பண்பாடும் சமூகக் காரணிகளும்:** சமூக எதிர்பார்ப்புகள், பாலினப் பாகுபாடு, இளம் வயது திருமணம், கட்டுப்படுத்துகிற விதிகள் உள்ளிட்ட பண்பாட்டுக் காரணிகளும் சமூகக் காரணிகளும் இந்தியாவில் குழந்தைகளிடையே தற்கொலை செய்துகொள்ளும் அபாயத்தை அதிகரிக்க பங்காற்றுவதற்கு வாய்ப்பு உண்டு. சமூக விதிமுறைகளுக்கு இணங்க அழுத்தமும் அவர்கள் சுயத்தின் மீதான கட்டுப்பாடுகளும் அவர்களின் துயரத்திற்கு பங்களிக்கலாம்.

**ஊடகத்தின் தாக்கம்:** சுய துன்புறுத்தல், தற்கொலை ஆகியவற்றை காட்சிப்படுத்துகிற அல்லது அபாயகரமான செயல்பாடுகளை சாகசம் என்று கவர்ச்சிகரமாகக் காட்டுகிற சமூக வலைத்தளம், தொலைக்காட்சி, திரைப்படங்கள் அல்லது செய்திகள் உள்ளிட்ட ஊடகங்களைப் பார்ப்பது பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கும் குழந்தைகளிடம் தாக்கத்தை ஏற்படுத்தும், தற்கொலை எண்ணம் வரக் காரணமாக இருக்கும்.

மனநல விழிப்புணர்வு, கிடைக்கக்கூடிய மனநலச் சேவைகள், கல்வி, மனநலம் சார்ந்த பிரச்சனையில் ஆரம்பகால தலையீடு, அடாவடித்தனத்துக்கு எதிரான நடவடிக்கைகள், ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் குழந்தைகளுக்கான நேர்மறையானதும் உள்ளடக்கியதுமான சூழலை ஊக்குவித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான அணுகுமுறையின் மூலம் இந்தக்

காரணிகளை கையாள்வது அவசியம். குழந்தைகள் தற்கொலை தடுப்பு நடவடிக்கைக்கு குடும்பங்கள், பள்ளிகள், சமூகங்கள் மற்றும் மனநல நிபுணர்கள் ஆகியோருக்கு இடையே ஒரு ஒருங்கிணைந்த செயல்பாடு முக்கியம். இவர்கள் ஆபத்தில் இருக்கும் குழந்தைகளைக் கண்டறிந்து ஆதரிக்க வேண்டும்.

## இனமும், வர்க்கமும், பாலினமும், பாலியலும், மனிதர் அடையாளத்தின் பல்வேறு வடிவங்களும் இயல்பில் இணைந்து, ஊடுறுவியிருக்கும் நிலையும் ஒடுக்குமுறையின் வடிவங்களும் (Intersectionality)

சட்ட அறிஞர் கிம்பர்லே கிரன்ஷா 1989ல் Intersectionality எனும் ஆங்கில வார்த்தை உருவாக்கத்தோடு ஒரு கருத்தாக்கத்தை வெளியிட்டார். இனமும், வர்க்கமும், பாலினமும், பாலியலும், மனிதர் அடையாளத்தின் பல்வேறு வடிவங்களும், இயல்பில் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு, எவ்வாறு இணைந்திருக்கின்றன என்பதும், எவ்வாறு அவை ஒன்றின் மீது ஒன்று தழுவிக் கிடக்கின்றன என்பதும் எவ்வாறு அவை ஒன்றை மற்றொன்று ஊடுறுவியிருக்கின்றன என்பதையும் அவை எவ்வாறு ஒரு தனிநபரின் அனுபவங்களையும் சமூகத்தில் அவரது நிலையையும் வடிவமைக்கின்றன என்பதைப் பற்றிய கருத்தாக்கம் அது.

ஒன்றோடொன்று ஊடுறுவியிருக்கிற இந்த அடையாளங்களின் அடிப்படையில் தனிநபர்கள் ஒரே நேரத்தில் பல வகையான ஒடுக்குமுறைகளையும் பாகுபாடுகளையும் அனுபவிக்கிறார்கள் என்பதை இந்த கருத்தாக்கம் ஒப்புக்கொள்கிறது.

பல்வேறு சமூகப் பிரிவுகளை தனித்தனியாகவும் தனித்தன்மை உடையதாகவும் கருதுவதற்குப் பதிலாக, மக்களின் அனுபவங்கள் அவர்களது அடையாளங்களின் பல்வேறு அம்சங்களுக்கு இடையே நிகழும் பரஸ்பர தொடர்புகள், ஊடுறுவல்கள், இணைப்புகளால் வடிவமைக்கப்படுகின்றன என்பதை இனம், வர்க்கம், பாலினம் உள்ளிட்டவற்றில் ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்கள் என்னும் கருத்தாக்கம் (Intersectionality) ஒப்புக்கொள்கிறது.

உதாரணமாக, வெள்ளையர் அல்லாத ஒரு பெண் சந்திக்கிற தனித்தன்மையான சவால்களும், பாகுபாட்டின் வடிவங்களும் ஒரு வெள்ளை இனப் பெண் அல்லது வெள்ளையர் அல்லாத ஆண் சந்திக்கும் பாகுபாடுகளின் வடிவங்களிலிருந்தும் சவால்களிலிருந்தும் தனித்தன்மையானவை. ஒரு நபரின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் யதார்த்தங்களை வடிவமைப்பதில் அந்த நபருக்கு உள்ள பல்வேறு வகையான சிறப்புரிமைகளும் அவர் சந்திக்கும் ஒடுக்குமுறைகளும் ஒன்றோடொன்று எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளன என்பதையே, இனம், வர்க்கம், பாலினம் உள்ளிட்டவற்றில் ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்கள் எனும் கருத்தாக்கம் (Intersectionality) எடுத்துக் காட்டுகிறது.

இனம், வர்க்கம், பாலினம் உள்ளிட்டவற்றில் ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்கள் எனும் கருத்தாக்கம் (Intersectionality) பொதுவாக விமர்சன ரீதியான இனக் கோட்பாடு, பெண்ணியக் கோட்பாடு மற்றும் சமூக நீதி செயல்பாடு ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. முறையான ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும் சமூக நீதியை நோக்கிச் செயல்படுவதற்கும் தனிநபர்களின் அடையாளங்கள் மற்றும் அனுபவங்களின் சிக்கலானதும் ஒன்றோடொன்று இணைந்ததுமான தன்மையைக் கருத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. பல ஒடுக்குமுறை அமைப்புகள் ஒரே நேரத்திலும் பரஸ்பரம் வலுப்படுத்தும் வழிகளிலும் செயல்பட முடியும் என்பதை உணர்ந்து, இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்களிடையே நிலவும் சமநிலை அல்லது சமநிலை அற்ற நிலையையும் சமூகக் கட்டமைப்புகளின் மிகவும் உள்ளடக்கியதும் விரிவானதுமான பகுப்பாய்வையும் இனம், வர்க்கம், பாலினம் உள்ளிட்டவற்றில் ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்கள் எனும் கருத்தாக்கம் (Intersectionality) ஊக்குவிக்கிறது.

## குழந்தைகள் மீது வன்முறையின் பாதிப்பு அல்லது விளைவுகள்

வன்முறையானது குழந்தைகளின் மீது ஆழமான மற்றும் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துகிறது, அவர்களின் உடல், உணர்ச்சி, அறிவாற்றலையும் சமூக நல்வாழ்வையும் பாதிக்கிறது.

வன்முறையின் தீவிரம், வன்முறை எவ்வளவு காலத்துக்கு ஒரு முறை நிகழ்கிறது, அது எவ்வளவு நேரம் நிகழ்கிறது உள்ளிட்ட காரணிகளைப் பொருத்து குழந்தைகள் மீதான வன்முறையின் தாக்கம் மாறுபடும். அத்துடன் குழந்தையின் வயது, நெகிழ்வுத் திறன் மற்றும் ஆதரவு ஆகியவற்றைப் பொருத்தும் வன்முறையின் பதாக்கம் மாறுபடும். சில பொதுவான விளைவுகள் இங்கே:

உடல் நலன்: வன்முறையை அனுபவிக்கும் குழந்தைகள், காயங்கள் மற்றும் வெட்டுக்கள் முதல் கடுமையான காயங்கள் வரை உடல் ரீதியான காயங்களை சந்திக்க நேரிடும். உடல் ரீதியான காயங்களும் தீங்கும் அவர்களின் ஆரோக்கியத்திலும் வளர்ச்சியிலும் நீடித்த விளைவுகளை ஏற்படுத்தும்.

1. **உணர்ச்சி மற்றும் உளவியல் சார்ந்த விளைவுகள்:** பதட்டம், மன அழுத்தம், மன அதிர்ச்சிக்கு பிந்தைய மனஉளைச்சல் சீர்கேடு ( றிஜிஷிஜி), தன்னைப் பற்றிய மிகவும் குறைந்த மதிப்பீடு மற்றும் குற்ற உணர்வு அல்லது அவமானம் உள்ளிட்ட பலவிதமான உணர்ச்சி சிக்கல்களுக்கும் உளவியல் சிக்கல்களுக்கும் வன்முறை வழிவகுக்கும். குழந்தைகளுக்கு இரவு கெட்ட கனவுகள் வரலாம், அவர்கள் தூக்கமின்மையும் கவனிப்பதில் சிக்கல்களையும் அவர்களின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் சிரமங்களையும் அனுபவிக்கலாம்.

2. **நடத்தை சிக்கல்கள்:** வன்முறைக்கு ஆளாகும் குழந்தைகள் ஆக்கிரமிப்பு உணர்வு, மனக்கிளர்ச்சி, கீழ்ப்படியாமை அல்லது ஒரு விஷயத்திலிருந்து பின்வாங்குதல் போன்ற நடத்தை சிக்கல்களை வெளிப்படுத்தலாம். அவர்களுக்கு அவர்களுடைய உணர்ச்சிகளைக் கையாள்வதில் சிரமம் இருக்கலாம். அதனால் அவர்கள் ஆரோக்கியமற்ற சமாளிக்கும் வழிமுறைகளை நாடலாம் அல்லது சுய அழிவு நடத்தைகளில் ஈடுபடலாம்.

3. **அறிவாற்றலிலும் கல்வியிலும் ஏற்படும் தாக்கம்:** குழந்தையின் அறிவாற்றல் வளர்ச்சியிலும் கல்வித் திறனிலும் வன்முறை குறுக்கிட்டு தாக்கத்தை ஏற்படுத்தலாம். கவனமாக இருப்பதிலும், நினைவாற்றலிலும் சிக்கலைத் தீர்க்கும் திறனிலும் அவர்களுக்கு சிரமங்கள் இருக்கலாம். இதனால் படிப்பில் குறைவான அளவுக்கே சாதிக்க முடியும், இது குறைவான கல்வியை அடைவதற்கு வழிவகுக்கும்.

4. **சமூகச் சிக்கல்கள்:** வன்முறையை அனுபவித்த குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உறவுமுறைகளையும் நம்பிக்கையையும் உருவாக்குவது போராட்டமாக இருக்கலாம். அவர்களுக்கு சமூகத் தொடர்புகளில் சிரமங்கள் இருக்கலாம். தன் மீதான சுயபச்சாதாபத்தோடு அவர்கள் போராடலாம். சக வயதுள்ளவர்களிடம் பழகுவதில் சிரமம் இருக்கலாம். இந்த சவால்கள் இளமைப் பருவத்தில் நீடிக்கின்றன. ஆரோக்கியமான உறவுகளை உருவாக்கி சமூகத் தொடர்புகளைப் பேணுவதற்கான அவர்களின் திறனை இத்தகைய சவால்கள் பாதிக்கின்றன.

5. **நீண்ட கால விளைவுகள்:** குழந்தைகளுக்கு அவர்கள் 18 வயதை அடைந்து பெரியவர்களான பருவம் வரை கூட வன்முறையின் தாக்கம் தொடரும் வாய்ப்புள்ளது. இது மன நலம் சார்ந்த பிறழ்வுகள், போதைப் பொருட்களுக்கு அடிமையாதல், குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல், மீண்டும் பாதிக்கப்படுதல் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.

வன்முறையை சந்திக்கிற அனைத்துக் குழந்தைகளும் கட்டாயம் இந்தப் பின்விளைவுகளை சந்திக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. தனிப்பட்ட காரணங்கள், ஆதரவு தருகிற ஒரு சூழல், மனநல சுகாதார சேவைகள் கிடைப்பது, பின்னடைவு உள்ளிட்ட பாதுகாப்புக் காரணிகள் இத்தகைய பின்விளைவுகளைத் தணிப்பதில் / குறைப்பதில் ஒரு பங்கு வகிக்க முடியும் என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஆரம்பகாலத் தலையீடு, மன அதிர்ச்சி பற்றி தெரிந்து கொண்டு அதற்கேற்ற பராமரிப்பு, பாதுகாப்பான வளர்ப்புச் சூழல்களை வழங்குதல் ஆகியவை வன்முறையின் தாக்கத்திலிருந்து குழந்தைகளை மீட்டெடுப்பதற்கும் அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் முக்கியமானவை.

## தமிழ்நாட்டில் குழந்தைகள் பாதிப்பிற்கு வழிவகுக்கும் காரணிகளும் அடிப்படைக் காரணங்களும்.

மற்ற இடங்களில் உள்ள குழந்தைகளைப் போலவே தமிழகக் குழந்தைகளும் பல்வேறு காரணிகளால் பல்வேறு பாதிப்புகளை சந்திக்க நேரிடுகிறது. தமிழ்நாட்டில் குழந்தைகளின் பாதிப்புக்கு பங்களிக்கும் சில காரணிகள், அவற்றின் மூல காரணங்களுடன் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

**வறுமை:** பொருளாதாரப் பற்றாக்குறையும் உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் கிடைக்காமல் இருப்பது குழந்தைகளை மேலும் பாதிப்படையச் செய்யலாம். வளங்களின் சமமற்ற விநியோகம், வரையறுக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஆகியவை பிரச்சனைகளுக்கான மூல காரணங்களுள் சில.

1. **குழந்தைத் தொழிலாளர்:** தமிழ்நாட்டில் பல குழந்தைகள் குழந்தைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர், குறிப்பாக ஜவுளி, விவசாயம், வீட்டு வேலை போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். வறுமை, கல்வியின்மை, குழந்தைத் தொழிலாளர் சட்டங்களின் பலவீனமான அமலாக்கம் ஆகியவை இந்தப் பிரச்சினைக்கு பங்களிக்கின்றன.

2. **கல்வியின்மை:** பலருக்கு குறிப்பாக கிராமப்புறங்களில் தரமான கல்வி வரையறுக்கப்பட்ட அளவில் கிடைப்பதால், குழந்தைகள் சுரண்டலுக்கு ஆளாக நேரிடலாம், அவர்களின் வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படலாம். போதிய உள்கட்டமைப்பும், ஆசிரியர் பற்றாக்குறையும் குழந்தைத் தொழிலாளர் அல்லது இளவயது திருமணத்திற்கு முன்னுரிமை அளிக்கும் சமூக விதிமுறைகளும் போன்ற காரணிகள் குழந்தைகள் கல்வியை அணுகுவதைத் தடுக்கலாம்.

3. **குழந்தைத் திருமணம்:** தமிழ்நாட்டில், குறிப்பாக சில சமூகங்களிலும் கிராமப்புறங்களிலும் குழந்தைத் திருமணம் கவலை கொள்ளத்தக்க ஒரு அம்சமாகும். வறுமை, கல்வியறிவு இல்லாமை, பாரம்பரியமானதும் பண்பாட்டு ரீதியிலானதுமான நடைமுறைகள், குழந்தைத் திருமணத்தைப் பற்றியும் இளம் வயதில் திருமணம் செய்வதால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளைப் பற்றியும் குறைந்த அளவே புரிந்துவைத்திருப்பது உள்ளிட்ட பல்வேறு காரணிகள் குழந்தைத் திருமணத்துக்கு பங்களிக்கின்றன.

4. **பாலின அசமத்துவமும் பாகுபாடும்:** பாலின அடிப்படையிலான பாகுபாடுகளாளும் சமூக விதிமுறைகளாளும் பெண்கள் அதிக பாதிப்புக்குள்ளாகும் அபாயம் உள்ளது. பாகுபாடு, பெண் குழந்தைகளுக்கு கிடைக்கும் குறைந்த வாய்ப்புகள், பெண் சிசுக்கொலை, குழந்தைத் திருமணம் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை போன்ற தீங்கான நடைமுறைகள் அவர்களின் பாதிப்பிற்கு பங்களிக்கின்றன.

5. **கடத்தலும் சுரண்டலும்:** மனிதக் கடத்தல் நேரிடையாக நடைபெறும் மாநிலமாகவும், ஒரு நாடு / மாநிலத்திலிருந்து வேறு நாடு / மாநிலத்துக்கு கடத்துவதற்கு இடையே கைமாற்றிவிடும் மாநிலமாகவும், வேறு இடத்திலிருந்து மனிதர்களை கடத்துகிற இலக்கு மாநிலமாகவும் தமிழ்நாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. வறுமை, கல்வியின்மை, சமூகம் சார்ந்த நிலையில்லாத தன்மையும் பலவீனமான சட்ட அமலாக்கமும் போன்ற காரணிகள் குழந்தைகளை கடத்தலுக்கும் சுரண்டலுக்கும் உள்ளாக்கும் தன்மைக்கு பங்களிக்கின்றன.

6. **குழந்தைகள் மீதான தீங்கிழைத்தலும் புறக்கணிப்பும்:** தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் உடல்ரீதியான, பாலியல் ரீதியான, உணர்வு ரீதியான தீங்கிழைத்தல், புறக்கணிப்பு உள்ளிட்ட பல்வேறு வடிவங்களிலான தீங்கிழைத்தல்களை குழந்தைகள் சந்தித்து வருகின்றனர். வறுமை, விழிப்புணர்வு இல்லாமை, சமூக இழிவு, பலவீனமாக இருக்கும் குழந்தை பாதுகாப்பு முறைகள் ஆகிய காரணிகள் தீங்கிழைத்தலுக்கு பங்களிக்கலாம்.

இந்த பாதிப்புகளின் மூல காரணங்களை எதிர்கொள்ள, வறுமை ஒழிப்பு, குழந்தைகளுக்கு கல்வி கிடைப்பதை மேம்படுத்துதல், சிறுமிகளையும் பெண்களையும் ஆற்றல்படுத்துதல், குழந்தை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், குழந்தைப் பாதுகாப்பு வழிமுறைகளை

வலுப்படுத்துதல் மற்றும் குழந்தைத் தொழிலாளர், குழந்தை திருமணம், குழந்தைக் கடத்தல் தொடர்பான சட்டங்களை அமல்படுத்துதல் உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்ட அணுகுமுறை தேவைப்படுகிறது. மேலும், குழந்தைகளின் நல்வாழ்வையும் உரிமைகளையும் மதிக்கிற, முன்னுரிமை அளிக்கிற ஆதரவான சூழலை உருவாக்குவதும் இதில் அடங்கும்.

## குறிப்புகளும் படிக்க வேண்டியவைகளும்


1. சோப்ரா T (2016) இந்தியாவில் குழந்தை உரிமைகள்: சவால்களும் சமூக செயல்பாடும், ஸ்பிரிங்ஜெர், இந்தியா பிரைவேட்

2. பாஜ்பாய் A. (2017) இந்தியாவில் குழந்தை உரிமைகள்: சட்டம், கொள்கை, நடைமுறை. புதுடெல்லி: ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் பிரஸ்.

3. பெரிக் J.D., கில்பர்ட் N. மற்றும் ஸ்கிவ்நெஸ் M. (2023) குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகள் பற்றிய ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் கையேடு, நியூயார்க்: ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பிரஸ்.

4. பூரி S. (2021a) இந்தியாவில் குழந்தைகள்: வாய்ப்புகளும் சவால்களும். நியூயார்க்: நோவா சயின்ஸ் பதிப்பகம்.

5. குழந்தை உரிமைகள் சட்ட மையம் (தேதி இல்லை) (Center for child rights law) நாம் ஏன் குழந்தைகளுக்காக Why should we care for children. Available at: <https://ccl.nls.ac.in/wp-content/uploads/2021/11/9.-Why-should-we-care-a-guide-for-india-civil-service-officers.pdf>.


## கேள்விகள்

1. இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் வெவ்வேறு வன்முறை என்ன?
2. உளவியல் ரீதியான தீங்கிழைத்தல் என்றால் என்ன? விரிவாக விளக்கவும்
3. குழந்தைக்கு தீங்கிழைத்தல் என்றால் என்ன? குழந்தை தீங்கிழைத்தலின் வெவ்வேறு வகைள் பற்றி விவாதிக்கவும்
4. இந்தியாவில் குழந்தைகள் சந்திக்கும் வெவ்வேறு வகையான பாகுபாடுகள் என்ன?
5. இணையவழி தீங்கிழைத்தல் என்றால் என்ன?
6. இணைய வழி தீங்கிழைத்தலின் வெவ்வேறு வகைகள் பற்றி விவாதிக்கவும்
7. குழந்தைகள் மீது வன்முறையின் தாக்கம் என்ன என்பது பற்றி விளக்கவும்
8. இனம், வர்க்கம், பாலினம் உள்ளிட்டவற்றில் ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்கள் / Intersectionality என்றால் என்ன? (சாதி, பாலினம், பொருளாதாரக் காரணிகள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்புகள்)
9. தமிழ்நாட்டில் குழந்தைகள் துன்பத்துக்கு ஆளாகும் நிலைக்கு செல்லவைக்கும் காரணிகளை விளக்கவும்
10. தற்கொலை என்றால் என்ன? குழந்தைகள் மத்தியில் தற்கொலை செய்யத் தூண்டும் காரணிகள் பற்றி விளக்கவும்

அலகு-3

# குழந்தை உரிமைகள் -கொள்கைகள், சட்டங்கள் மற்றும் அமைப்புகள்

குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை – குழந்தைகள் தொடர்பான சட்டங்கள் – அரசியல் சாசன பாதுகாப்புகள் – குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையின் முக்கியத்துவம் – கிராமம், நகரம், மாவட்டம், மாநிலம், நாடு மற்றும் சர்வதேச அளவில் குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகள்

## குழந்தை உரிமைகளுக்காக இந்திய அரசியல் சாசனத்தில் உள்ள சட்டப் பிரிவுகள்

இந்தியாவில், குழந்தை உரிமைகளுக்கான அரசியலமைப்பு விதிகள் முதன்மையாக 1950 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய அரசியலமைப்பிலிருந்து உருவாகின்றன. அரசியலமைப்பில் உள்ள பல சட்டக்கூறுகள் குழந்தைகளின் உரிமைகளையும் பாதுகாப்புகளையும் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றன. இந்தியாவில், குழந்தை பராமரிப்புக்கும் பாதுகாப்புக்குமான கட்டமைப்பானது குழந்தைகளின் நல்வாழ்வு, மேம்பாடு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு சட்டங்களையும் கொள்கைகளையும் திட்டங்களையும் உள்ளடக்கியது. இந்திய அரசியலமைப்பில் உள்ள சில முக்கிய விதிகள் இங்கே:

**சமத்துவத்துக்கான உரிமை:** அனைத்துக் குழந்தைகளும் சட்டத்தின் முன் சமம் என்பதையும் அனைத்துக குழந்தைகளுக்கும் சமமான சட்டப் பாதுகாப்பு உள்ளது என்பதையும் சட்டக்கூறு 14 உறுதி செய்கிறது.

**சுதந்திரத்துக்கான உரிமை:** பேச்சு சுதந்திரம், நாம் நினைத்ததை வெளிப்படுத்தும் சுதந்திரம் ஆகியவற்றை சட்டக்கூறு 19 உறுதிப்படுத்துகிறது. இது குழந்தைகளுககும் பொருந்தும்.

**சுரண்டப்படுவதற்கு எதிரான உரிமை:** சட்டக்கூறு 14 குழந்தைகள் கடத்தப்படுவது, கட்டாய உழைப்பில் ஈடுபடவைப்பது, உள்ளிட்ட எந்தவித வடிவத்திலான சுரண்டலையும் தடுக்கிறது

**கல்விக்கான உரிமை:** சட்டக்கூறு 21கி இலவச கட்டாயக் கல்வியை 6 லிருந்து 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடிப்படை உரிமையாக வழங்குகிறது.

**பாதுகாப்புக்கான உரிமை:** அபாயகரமான வேலைகளில் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை ஈடுபடுத்துவதை சட்டக்கூறு 14 தடைசெய்கிறது.

**சுகாதாரத்துக்கும் ஊட்டச்சத்துக்குமான உரிமை:** சட்டக்கூறு 39, ஆரோக்கியமான முறையில் வளர்வதற்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புகளையும் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும் என்பதை அரசுக்கு கட்டாயமாக்குகிறது

**பண்பாடும் கல்வி உரிமைகளுக்கு பாதுகாப்பும்:** தங்கள் மொழி, பண்பாடு ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை சிறுபான்மை குழந்தைகளுக்கு அளித்தன் வாயிலாக சட்டக்கூறு 29 சிறுபான்மை குழந்தைகளின் நலனை பாதுகாக்கிறது.

**இளம் சிறார் நீதியை பாதுகாக்கும் உரிமை:** சட்டக்கூறுகள் 15(3), 39(e), 39(f) ஆகியவை சட்டத்துக்கு முரண்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வை மேம்படுத்துவதன் மூலம் அவர்களது பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்துகிறது.

அரசியல் சாசனத்தைத் தவிர குழந்தை உரிமைகளை பாதுகாக்க சில குறிப்பிட்ட சட்டங்களையும் இந்தியா இயற்றியிருக்கிறது. அவை:

**இளம் சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015:** பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுடைய பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுக்கான சட்டப் பிரிவுகள் இதில் உள்ளது. அதே நேரத்தில் சட்டத்தோடு முரண்பட்ட குழந்தைகளை எவ்வாறு நடத்துவது என்பதும் இதில் உள்ளது.

கல்வி உரிமைச் சட்டம் 2009 - 6 லிருந்து 14 வயதுவரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாய கல்வியை உறுதிப்படுத்துகிறது.

**குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012:** குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை இந்தச் சட்டம் கையாள்கிறது. அவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் ஆதரவு பற்றியும் குறிப்பிடுகிறது.

**குழந்தைத் திருமண தடைச் சட்டம் 2006:** குறிப்பாக குழந்தைத் திருமணங்களைப் பற்றி இந்தச் சட்டம் கையாள்கிறது. 18 வயதுக்கு கீழே உள்ள பெண் அல்லது 21 வயதுக்கு கீழே உள்ள ஆணுக்கு நடக்கும் திருமணம் குழந்தைத் திருமணம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

**குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986:** இந்தச் சட்டம் குழந்தைத் தொழிலாளர் முறை பிரச்சனை பற்றி கையாள்கிறது. சில அபாயகரமான தொழில்களில் குழந்தைகளை ஈடுபடுத்துவதைத் தடைசெய்வதையும், அபாயமற்ற தொழில்களில் குழந்தைகளின் வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதையும் இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த அரசியலமைப்புச் சாசனப் பிரிவுகளும் சட்டங்களும் இந்தியாவில் உள்ள குழந்தைகளின் உரிமைகளையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## இளம் சிறார் நீதி குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2015

சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 என்பது ஒரு விரிவான சட்டமாகும், இது சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளுக்கும் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கும் அவர்களின் வளர்ச்சித் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் சரியான பராமரிப்பையும் பாதுகாப்பையும் வழங்குகிறது. குழந்தைகளின் சிறந்த நலனை கவனத்தில் கொண்டு இந்தச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் மூலம் குழந்தைகளின் மறுவாழ்வுக்காகவும் வழக்குகளை தீர்ப்பதிலும், சரிசெய்வதிலும் குழந்தை நேய அணுகுமுறையைக் கடைபிடிக்கிறது. இந்தச் சட்டம் குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை, சிறார் நீதியை கையாள்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் தரமான குறைந்தபட்ச விதிகள் (பெய்ஜிங் விதிகள்) 1985, சுதந்திரம் பறிக்கப்பட்ட, சட்டத்தோடு முரண்படும் சிறார்களைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விதிகள், இவற்றோடு தொடர்புடைய பிற தேசிய மற்றும் சர்வதேச ஆவணங்களோடு ஒத்துப் போகிறது.

### சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளைப் பற்றி அக்கறையோடு பார்க்கும் சட்டத்தின் வரலாறு

1. இந்தியாவில் சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளோடு தொடர்புடைய முதன் முதலில் இயற்றப்பட்ட சட்டம் பயிற்சியாளர்கள் சட்டம், 1850 (The Apprentices Act). சிறிய குற்றங்களைச் செய்த குழந்தைகளை சிறைக்கு அனுப்பவதற்கு பதிலாக அவர்களை பயிற்சி பெறுபவர்களாக கருத நீதிமன்றத்துக்கு இந்தச் சட்டம் அனுமதி அளித்தது.
2. சட்டத்தோடு முரண்பட்டு குற்றங்கள் செய்யும் இளம் சிறார்களோடு தொடர்புடைய இரண்டாவது சட்டம் சீர்திருத்தப் பள்ளிகள் சட்டம், 1876
3. சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளைப் பொறுத்த அளவில் இந்திய சிறைகள் குழுவும் (191920) சில பரிந்துரைகளை வழங்கியது.
4. 1960 ஆம் ஆண்டில், புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த குழந்தைகளுக்கான ஆதரவு, பராமரிப்பு, பாதுகாப்பு, நலன், கல்வி, பயிற்சி, சோதனை மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை வழங்குவதற்காக குழந்தைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
5. இளம் சிறார் நீதிச் சட்டம்,1986: இந்த வகையில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான சட்டத்தை வழங்கிய ஒன்றிய அளவிலான சிறார் நீதி தொடர்பான முதல் சட்டம் இதுவாகும்.
6. 1992ல், இந்திய அரசு ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டது. அதனால் அந்த உடன்படிக்கையின் தரத்தோடு ஒன்றுபடுகிற ஒரு சட்டத்தை இயற்றவேண்டிய கட்டாயம் இந்திய அரசுக்கு வந்தது.

7. எனவே, இளம் சிறார் நீதிச் சட்டம், 1986 திரும்பப் பெறப்பட்டது. இளம் சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000 இயற்றப்பட்டது.

**குழந்தை என்றால் யார் என்ற வரையறை:** இந்தச் சட்டம் குழந்தை என்றால் 18 வயதை பூர்த்தி செய்யாத ஒரு நபர் என்று வரையறை செய்கிறது. குழந்தைகளுக்கு சிறப்புப் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிறது என்பதை இந்தச் சட்டம் அங்கீகரிக்கிறது.

**இளம் சிறார் நீதிக் குழுமங்கள் (JJBs):** இந்தச் சட்டம் இளம் சிறார் நீதிக் குழுமங்களை மாவட்ட அளவில் உருவாக்கியுள்ளது. இதில் ஒரு நடுவர் நீதிபதியும் (மாஜிஸ்ட்ரேட்) இரண்டு சமூகப் பணியாளர்களும் இருப்பார்கள். குழந்தைகள் செய்த குற்றங்களின் தன்மையை முடிவுசெய்வதும் அவர்களின் மறுவாழ்வுக்கு தேவையான உரிய நடவடிக்கைகளைப் பற்றி முடிவுசெய்வதும் இளம் சிறார் நீதிக் குழுமங்களின் பொறுப்பாகும்.

**குழந்தை நலக் குழுக்கள் (CWCs):** ஆதரவு / பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளைக் கையாள்வதற்கு இந்தச் சட்டம் மாவட்ட அளவில் குழந்தை நலக் குழுக்களை உருவாக்கியிருக்கிறது. அத்தகைய குழந்தைகளின் நல்வாழ்வு, பராமரிப்பு மற்றும் மறுவாழ்வை உறுதிப்படுத்துவது குழந்தை நலக் குழுக்களின் பொறுப்பாகும்.

**வேறுபட்ட அணுகுமுறை:** சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளைக் கையாள்வதில், அவர்களின் வயது, முதிர்ச்சி மற்றும் செய்த குற்றத்தின் தன்மை / முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்தச் சட்டம் வேறுபட்ட அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. இது அவர்களின் மறுவாழ்வையும் அவர்கள் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்படுவதையும் ஊக்குவிக்கிறது.

**குழந்தை நேய நடைமுறைகள்:** வழக்கு சார்ந்து தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்கும் நிலை, சந்தேகப்படும் நபர் மீது குற்றம் சுமத்த போதுமான ஆதாரங்கள் உள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நிலை, சந்தேகப்படும் நபரின் குற்றம் அல்லது குற்றமற்ற தன்மையை தீர்மானிக்கும் நிலை, இந்த ஒட்டுமொத்த நிலையிலும் குழந்தை நேய அணுகுமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது. குழந்தைகளின் உரிமைகள் பாதுகாப்படுகிற அதே நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பானதும் ஆதரவானதுமான சூழல் நிலவுகிறது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

**மறுவாழ்வும் சமூக மறு ஒருங்கிணைப்பும்:** சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளின் மறுவாழ்வையும் சமூக மறு ஒருங்கிணைப்பையும் இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது. அவர்கள் சமூகத்தோடு மறு ஒருங்கிணைக்கப்படுவதை நெறிப்படுத்துதல், ஆற்றுப்படுத்துதல், கல்வி, தொழில் பயிற்சி, திறன் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்தச் சட்டம் வழங்குகிறது.

**வளர்ப்புப் பராமரிப்பும் (Foster Care) தத்துக்கொடுத்தலும்:** பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கு ஒரு மாற்று வழியாக வளர்ப்புப் பராமரிப்பு (வளர்ப்புப் பெற்றோர் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்) முறையை சட்டம் அங்கீகரிக்கிறது. சட்டம், குழந்தையின் சிறந்த நலனை உறுதிப்படுத்தும் வகையில் தத்துக் கொடுப்பது பற்றிய வழிகாட்டுதல்களையும் வழங்குகிறது.

**கொடும் குற்றங்களுக்கு சிறப்புப் பிரிவுகள்:** இந்தச் சட்டம் கொலை, பாலியல் வல்லுறவு போன்ற கொடும் குற்றங்களில் ஈடுபடும் 16 லிருந்து 18 வயதுள்ள குழந்தைகளைக் கையாள சிறப்புச் சட்டப் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. சில சூழல்களில் அவர்களை 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகக் கருதி வழக்கு விசாரணை செய்ய அனுமதிக்கிறது.

சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015, சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளுடைய மற்றும் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அவர்களின் பராமரிப்பு, மறுவாழ்வு, அவர்களை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. அவர்களின் சிறந்த நலன்களுக்கும் நல்வாழ்வுக்கும் வலுவான முக்கியத்துவம் அளிக்கிறது

## இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009

கல்வி உரிமைச் சட்டம் என்று அழைக்கப்படுகிற இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், இந்திய நாடாளுமன்றத்தால் 2009ல் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1 ஏப்ரல் 2010ல் நடைமுறைக்கு வந்தது. இந்தியாவில் 6 லிருந்து 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, தரமான, கட்டாயக் கல்வியை வழங்கும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டது.

கல்வி உரிமைச் சட்டம் என்பது சிவில் சமூக அமைப்புகள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்களின் பல ஆண்டுகால ஆதரவு திரட்டும் முயற்சிகளின் விளைவாக உருவான ஒரு முக்கியச் சட்டமாகும். இது குறைந்த மாணவர் சேர்க்கை, உயர் கல்வி இடைநிற்றல் விகிதங்கள் மற்றும் இந்திய மக்கள் தொகையில் கணிசமான பிரிவினருக்கு தரமான கல்வி கிடைக்காமல் இருக்கும் நிலை போன்ற பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**அரசியல் சாசன திருத்தம்:** கல்வியை அடிப்படை உரிமையாக்க, சட்டக்கூறு 21A ஐ உள்ளடக்க இந்திய அரசியல் சாசன சட்டம் 2002ல் திருத்தப்பட்டது. இந்தச் சாசனக் கூறு 6 லிருந்து 14 வயதுவரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்விக்கான உரிமையை உத்திரவாதப்படுத்துகிறது.

கல்வி உரிமைச் சட்டம், 2009, அதிகாரபூர்வமாக குழந்தைகளுக்கு இலவச, கட்டாய கல்வி உரிமைச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இது 6 லிருந்து 14 வயதுவரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாயக் கல்வியை உத்திரவாதப்படுத்துகிற ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சட்டமாகும். இந்தச் சட்டம், அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குவதோடு கல்வியில் அனைத்து மக்களும் சமமான வாய்ப்பைப் பெறுவதற்கான திறனை மேம்படுத்தும் நோக்கதையும் கொண்டுள்ளது. கல்வி உரிமைச் சட்டம் 2009ன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

**இலவச கட்டாயக் கல்வி:** 6 லிருந்து 14 வயது வரை இலவச கட்டாயக் கல்வியை அருகமைப் பள்ளியில் பெறும் ஒரு குழந்தையின் உரிமையை இந்தச் சட்டம் வலுவாக எடுத்துரைக்கிறது. இந்த வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் அரசு இலவசக் கல்வியை வழங்குவதை இந்தச் சட்டம் கட்டாயமாக்குகிறது.

**பாகுபாடு இல்லாமை:** பாலினம், சாதி, மதம், சமூகப் பொருளாதாரப் பின்னணி உள்ளிட்ட எந்த அடிப்படையிலும் பாகுபாடு காட்டுவதை இந்தச் சட்டம் தடைசெய்கிறது. அனைத்துக் குழந்தைகளும் சமமான வாய்ப்புகளையும் கல்வி பெறுவதையும் இந்தச் சட்டம் உறுதிப்படுத்துகிறது.

**தரமான தரநிலைகள்:** இச்சட்டம் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள், ஆசிரியர்மாணவர் விகிதம், குடிநீர், கழிப்பறைகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்ற அடிப்படை வசதிகள் உள்ளிட்ட குறைந்தபட்ச விதிமுறைகளையும் தரங்களையும் அமைக்கிறது. இது தரமான கல்வியின் முக்கியத்துவத்தையும் கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதையும் வலியுறுத்துகிறது.

**அருகாமைப் பள்ளிகள்:** ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்தில் பள்ளி இருப்பதை உறுதி செய்யும் வகையில், அருகமைப் பள்ளிகள் என்ற கருத்தை இந்தச் சட்டம் ஊக்குவிக்கிறது. இது பள்ளி செல்வதற்கான நீண்ட தூரப் பயணங்களை ஊக்கப்படுத்துவதில்லை. மற்றும் அனைவருக்கும் கல்வி கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMCs):** பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழுக்கள் உருவாக்குவதை இந்தச் சட்டம் கட்டாயமாக்குகிறது. பள்ளிச் செயல்பாடுகளை கண்காணிப்பதிலும், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதிலும் கல்வி அமைப்பில் சமூகப் பங்கேற்பை மேம்படுத்துவதிலும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

**இடஒதுக்கீடு:** பட்டியல் சாதியினர், பழங்குடியினர் மற்றும் பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினர் உள்ளிட்ட வாய்ப்பு மறுக்கப்பட்ட குழுக்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு (அரசுப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளில் சேர்வதற்கு) இந்தச் சட்டம் இடஒதுக்கீடு வழங்குகிறது. கல்வியில் உள்ள

இடைவெளிகளைக் குறைக்கவும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் உள்ளடக்கப்படுவதை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**நிதி ஏற்பாடுகள்:** இலவச மற்றும் கட்டாயக் கல்வியை செயல்படுத்துவதற்கு ஆதரவாக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே நிதிப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு கட்டமைப்பை இந்தச் சட்டம் நிறுவுகிறது.

**கண்காணிப்பும் பொறுப்புக்கூறலும்:** இந்தச் சட்டம், சட்டத்தை செயல்படுத்துவதை கண்காணிப்பதற்கான வழிமுறைகளை அமைக்கிறது. மேலும் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் இணக்கத்தை உறுதி செய்வதற்கும் பொறுப்பான அதிகாரிகளை நிறுவுகிறது.

கல்வி உரிமைச் சட்டம், 2009, இந்தியாவில் குழந்தைகளின் கல்விக்கான உரிமையை மேம்படுத்துவதிலும், கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. இது கல்விக்கான தடைகளை நீக்குவதற்கும், உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும், கல்வியின் ஒட்டுமொத்த தரத்தை மேம்படுத்துவதற்கும் பாடுபடுகிறது.

## குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் (POCSO Act) 2012

இந்தியாவில் அதிகரித்து வரும் குழந்தைகள் மீதான பாலியல் தீங்கிழைத்தல் மற்றும் சுரண்டல் வழக்குகளுக்கு தீர்வு காண ஒரு பிரத்யேக சட்டக் கட்டமைப்பு அவசரமாக தேவைப்பட்டதன் காரணமாக இந்தியாவில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டத்தின் தேவை எழுந்தது.

குழந்தை மீதான பாலியல் தீங்கிழைத்தல் என்பது குழந்தையின் வாழ்வதற்கான உரிமை, கடினமான சூழலைத் தாக்குப்பிடித்து வாழ்வதற்கான உரிமை, வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு உரிமை உள்ளிட்ட குழந்தையின் அடிப்படை உரிமைகளை கடுமையாக மீறுகிறது. போக்சோ சட்டம், பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதற்கான அவர்களின் உரிமையை நிலைநிறுத்துகிறது. இந்தியாவில் பல ஆண்டுகளாக குழந்தைகள் பாலியல் தீங்கிழைத்தல் தொடர்பான வழக்குகளில் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்படுகிறது. குழந்தைகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இத்தகைய குற்றங்களுடன் தொடர்புடைய தனித்துவமான பாதிப்புகளையும் உணர்திறன்களையும் கையாள ஒரு சிறப்புச் சட்டத்துக்கான தேவை உள்ளது என்பது தெளிவாகியுள்ளது. போக்சோ சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு, சிறுவர் பாலியல் தீங்கிழைத்தல் சார்ந்த வழக்குகள் இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC) கீழ் கையாளப்பட்டன. ஆனால் இந்திய தண்டனைச் சட்டம் குழந்தை பாலியல் குற்றங்களின் தனித்துவமான அம்சங்களைக் கையாளவில்லை. குழந்தை பாலியல் தீங்கிழைத்தலுக்கும் சுரண்டலுக்கும் தீர்வு காண்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான சட்டக் கட்டமைப்பை வழங்குவதன் மூலம் போக்சோ சட்டம் இந்த இடைவெளியை நிரப்புகிறது.

போக்சோ சட்டம் குழந்தைகளுக்கு எதிரான பல்வேறு வகையான பாலியல் குற்றங்களை குற்றமாக்குவது மட்டுமல்லாமல், அவர்களின் மறுவாழ்விலும் ஆதரவிலும் கவனம் செலுத்துகிறது. வழக்கு விசாரணையை விரைவுபடுத்த சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்படுவதோடு, குழந்தை நேய நடைமுறைகள், ஆலோசனைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது ஆகியவற்றின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

குழந்தைகளின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை (UNCRC) உட்பட பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளிலும் ஒப்பந்தங்களில்ம் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. பாலியல் குற்றங்கள் உட்பட அனைத்து வகையான தீங்கிழைத்தல்களிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான இந்த சர்வதேசக் கடமைகளுடன் போக்சோ சட்டம் இயற்றப்பட்டது.

குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2012, இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை எதிர்கொள்வதிலும் தடுப்பதிலும் கவனம்

செலுத்தும் ஒரு முக்கியமான சட்டமாகும். பாலியல் தீங்கிழைத்தலுக்கும் சுரண்டலுக்கும் ஆளாகும் குழந்தைகளின் பாதுகாப்பையும் கவனிப்பையும் ஆதரவையும் சட்டம் வழங்குகிறது. போக்ஸோ சட்டம், 2012 இன் முக்கிய அம்சங்கள் இங்கே:

**பாலியல் குற்றங்கள் வரையறை:** குழந்தை மீதான பாலியல் தீங்கிழைத்தல், பாலியல் துன்புறுத்தல், குழந்தைகளை ஆபாசமாக சித்தரித்தல் (படம், காணொளி) ஆகிய குற்றங்களை உள்ளடக்கிய ஆனால் இவற்றோடு மட்டும் முடிந்துவிடாத, குழந்தைகளுக்கு எதிரான பல்வேறு பாலியல் குற்றங்களை வரையறை செய்கிறது. இணையவழியில் அல்லது டிஜிட்டல் தளங்களில் நடக்கும் குற்றங்களும் இதில் அடங்கும்.

1. **உட்செலுத்தும் பாலியல் தாக்குதல்** (Penetrative Sexual Assault): ஒருவர் தன்னுடைய பிறப்புறுப்பையோ அல்லது வேறெந்த உறுப்புகளையோ (வாய், விரல் மற்றும் பொருள்) ஒரு குழந்தையின் உடலில் உட்செலுத்துவதோ, உடலுறவு கொள்வதோ “உட்செலுத்தும் பாலியல் தாக்குதல்” எனப்படும்.

2. **கடுமையான உட்செலுத்தும் பாலியல் தாக்குதல் (Aggravated Penetrative Sexual Assault):** ஒரு குழந்தையின் மீது காவல்துறை அலுவலர்கள், ராணுவ வீர்ர்கள், அரசு ஊழியர்கள், சிறைச்சாலை ஊழியர்கள், அரசு / தனியார் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவன ஊழியர்கள் தன்னுடைய பிறப்புறுப்பையோ அல்லது வேறெந்த உறுப்புகளையோ (வாய், விரல் மற்றும் பொருள்) ஒரு குழந்தையின் உடலில் உட்செலுத்துவதோ, உடலுறவு கொள்வதோ (பிரிவு 5ன் கீழ் a முதல் u வரை) செய்தால் அது “கடுமையான உட்செலுத்தும்” பாலியல் தாக்குதல் ஆகும்.

3. **பாலியல் தாக்குதல் (Sexual Assault):** பாலியல் உள்நோக்கத்துடன் குழந்தைகளின் அந்தரங்க உறுப்புகளில் பிறப்புறுப்புகளை உட்செலுத்தாமல் தவறான நோக்கத்துடன் தொடுவது, தான் மட்டுமல்லாது குழந்தையையும் தொடச்செய்வது, பார்க்கச் செய்வது பாலியல் தாக்குதல் ஆகும்.

4. **பாலியல் தொந்தரவு (Sexual Harassment) :** பாலியல் உள்நோக்கத்துடன் குழந்தையிடம் பேசுவது, ஆபாசப் படங்களைக் காட்டுவது, ஜாடை காட்டுவது, ஒலி எழுப்புவது, ஆபாசப் படமெடுக்கும் நோக்கத்துடன் பாலியல் தொந்தரவு செய்வது ஆகியன பாலியல் தொந்தரவு ஆகும்.

5. **குழந்தையை ஆபாசமாகக் காட்சிப் படுத்துவது (Child Pornography):** குழந்தை சம்பந்தப்பட்ட வெளிப்படையான படம், காணொளி உள்ளிட்ட சிறுவர் ஆபாசப் படங்களை உருவாக்குதல், வைத்திருத்தல், விநியோகம் செய்தல் அல்லது நுகர்தல் / பயன்படுத்துதல் ஆகியவற்றை சட்டம் தடை செய்கிறது.

6. **ஆபாசமாகக் காட்சிப்படுத்துவதற்காக குழந்தையைப் பயன்படுத்துவது (Use of Child for Pornographic Purposes):** நேரடி நிகழ்ச்சிகள் அல்லது இணைய தளங்கள் (ஆன்லைன் பிளாட்ஃபார்ம்கள்) உட்பட எந்தவொரு ஆபாச நிகழ்ச்சிக்கும் குழந்தையைப் பயன்படுத்துவது போக்ஸோ சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படுகிறது.

7. **தூண்டுதலும் முயற்சியும் (Abetment and Attempt):** குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தூண்டுதல் மற்றும் மேற்கூறிய பாலியல் குற்றங்களைச் செய்வதற்கான முயற்சிகள் தொடர்பான குற்றங்களையும் சட்டம் உள்ளடக்கியது.

**சிறப்பு நீதிமன்றங்கள்:** போக்ஸோ சட்டத்தின் கீழ் குற்றங்களை விரைவாகவும் திறமையாகவும் விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்படுகிறது. இந்த சிறப்பு நீதிமன்றங்கள் இந்தச் சட்டப்படியான குற்றங்களை விசாரிப்பதற்கென்றே தனித்துவமாக நிறுவப்படுகின்றன. சட்ட நடவடிக்கைகள் நடக்கும் காலம் முழுவதும் இந்த நீதிமன்றங்கள் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தனியுரிமையையும் பாதுகாப்பையும் உறுதி செய்கின்றன.

**குழந்தை நேய நடைமுறைகள்:** வழக்கு விசாரணையின் போதும், மருத்துவப் பரிசோதனைகளின் போதும் நீதிமன்ற நடைமுறைகளின் போதும் குழந்தை நேய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என சட்டம் வலியுறுத்துகிறது. பாதிக்கப்பட்ட குழந்தைகள் அனுபவித்த மன அதிர்ச்சியையும் மன அழுத்தத்தையும் குறைக்கும் நோக்கத்துடனும் அவர்களுக்கு பாதுகாப்பானதும் ஆதரவானதுமான சூழலை வழங்குவதற்காகவும் சட்டம் மேற்கூறியவாறு வலியுறுத்துகிறது.

**கட்டாயமாகப் புகார் பதிவு செய்தல்:** குழந்தைக்கு நடந்த பாலியல் தீங்கிழைத்தல்கள் பற்றி தெரியவந்தால் எந்த ஒரு தனிநபரும் உரிய அதிகாரத்துவ அமைப்புகளிடம் புகார் அளிக்கவேண்டும் என்பது சட்டப்படியான ஒரு கடமை என்று சட்டம் வலியுறுத்துகிறது. அத்தகைய சம்பவங்களைப் பற்றி புகார் செய்யத் தவறுவது தண்டனை கிடைக்கத்தக்க குற்றச் செயலாகும்.

போக்சோ சட்டம் பிரிவு 19 சில தனிநபர்கள் அல்லது “கட்டாயமாக புகார் அளிக்கவேண்டியவர்கள்” என சிலருக்கு ஒரு குழந்தைக்கு எதிரான பாலியல் தீங்கிழைத்தல் நடந்தால் புகார் அளிக்க வேண்டும் என்ற சட்டப்பூர்வ கடமையை விதிக்கிறது. இத்தகைய தீங்கிழைத்தல் குற்றம் நடந்தது என்று தெரியவந்தால் அல்லது குற்றம் நடந்தது என்று நம்பத்தகுந்த வகையில் தகவல் தெரிந்தால் அவர் புகார் அளிக்க வேண்டும் என்கிற பொறுப்பை அவருக்கு சட்டம் வழங்குகிறது.

கட்டாயமாகப் புகார் செய்ய வேண்டும் என்று கடமைப்பட்டவர்களாக பல்வேறு வகையான தனிநபர்களைப் பற்றி சட்டம் குறிப்பிடுகிறது. குழந்தைகளை தொழில் ரீதியாக கையாளக் கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய மருத்துவர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், சமூகப் பணியாளர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் போன்ற எந்தவொரு நபரும் இதில் அடங்குவர்.

அடையாளம் பாதுகாக்கப்படுவது: இந்தச் சட்டம் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் அடையாளம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது. காவல்துறை விசாரணையின் போதும் நீதிமன்ற விசாரணையின்போதும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தனிப்பட்ட தகவல்களை வெளியிடுவதைத் தடை செய்கிறது. பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தனியுரிமையையும் கண்ணியத்தையும் பாதுகாக்க இந்த ஏற்பாடு உதவுகிறது.

**மறுவாழ்வும் ஆதரவும்:** இச்சட்டம் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வுக்கும் ஆதரவுக்கும் முன்னுரிமை அளிக்கிறது. இது அவர்களின் மீட்புக்கும் நல்வாழ்வுக்கும் உதவ சிறப்பு பராமரிப்பு இல்லங்கள், ஆலோசனை சேவைகள் மற்றும் பிற ஆதரவு வழிமுறைகளை நிறுவுவதை கட்டாயமாக்குகிறது.

**தண்டனைகள்:** குற்றமிழைத்தவர்களுக்கு குற்றத்தின் தீவிரத்தின் அடிப்படையில் சிறைத் தண்டனையும் அபராதமும் உட்பட இந்தச் சட்டம் கடுமையான தண்டனைகளை வலியுறுத்துகிறது. மீண்டும் மீண்டும் தவறு செய்பவர்களுக்கு கூடுதல் அபராதம் விதிக்கவும் இது வலியுறுத்துகிறது.

போக்சோ சட்டம், 2012 என்பது பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதையும், இந்தியாவில் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க சட்டமாகும். இது குழந்தைகள் பாதிக்கப்படக்கூடிய நிலமையில் இருப்பதை அங்கீகரிக்கிறது. அவர்களின் உரிமைகளும் நல்வாழ்வும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது.

## குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006

குழந்தை திருமணச் சட்டங்கள் காலப்போக்கில், சிறிய வயதில் செய்யப்படும் கட்டாயத் திருமணங்கள் என்கிற பிரச்சினையைத் தீர்க்கவும், குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும் உருவாகியுள்ளன.

**குழந்தைத் திருமணம் கட்டுப்பாடுச் சட்டம் (CMRA) 1929:** இந்தியாவில் குழந்தைத் திருமணம் தொடர்பான முதல் குறிப்பிடத்தக்க சட்டம் 1929 இல் இயற்றப்பட்ட குழந்தை திருமணத்தில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்த சட்டம். இது சாரதா சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

திருமணத்திற்கான சட்டப்பூர்வ வயதை நிர்ணயித்து குழந்தைத் திருமணம் என்கிற நடைமுறையை கட்டுப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கும், 18 வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளுக்கும் திருமணம் செய்வதற்கான கட்டுப்பாட்டை இந்தச் சட்டம் விதித்தது.

**குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் (PCMA) 2006:** காலாவதியான குழந்தைத் திருமணம் கட்டுப்படுத்துதல் சட்டம் 1929க்கு பதிலாக குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனால் 1929 சட்டம் ரத்து செய்யப்பட்டது. மாற்றியமைக்கபட்ட சட்டம் 2006 இல் இயற்றப்பட்டது. குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006, சட்டக் கட்டமைப்பில் பல மேம்பாடுகளை அறிமுகப்படுத்தியது. பெண்களின் திருமண வயதை 18 ஆகவும், ஆண் குழந்தைகளின் திருமண வயதை 21 ஆகவும் உயர்த்தி, சட்டப்பூர்வ வயதுடைய வயதுடன் அதை சீரமைத்து. குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்கும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வலுவான விதிகள், தண்டனைகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளையும் இந்தச் சட்டம் உள்ளடக்கியது.

குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006 குறிப்பாக குழந்தைத் திருமணங்கள் என்கிற பிரச்சனையைக் கையாள்கிறது. 18 வயதுக்குக் குறைவாக உள்ள ஒரு சிறுமிக்கும் 21 வயது குறைவாக உள்ள ஒரு சிறுவனுக்கும் நடக்கும் திருமணமே குழந்தைத் திருமணம் என்று பார்க்கப்படுகிறது.

குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006ன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

**வரையறையும் தண்டனையும்:** குழந்தைத் திருமணம் என்றால் என்ன என்று இந்தச் சட்டம் வரையறை செய்கிறது. அது செல்லாதது என்றும் அறிவிக்கிறது. பெற்றோர்கள் அல்லது காப்பாளர்கள் உள்ளிட்ட எவரொவரும் குழந்தைத் திருமணங்களை நடத்திவைத்தால், அதை ஊக்குவித்தால் அது சொல்லாதது என்றும் அவர்களுக்கு தண்டனையை பரிந்துரைக்கிறது. தண்டனையில் சிறைத்தண்டனை மற்றும் / அல்லது அபராதமும் அடங்கும்.

**குற்றங்களும் அவை பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்வதும்:** குழந்தைத் திருமணங்களை நிச்சயம் செய்தல், அனுமதித்தல் அல்லது ஊக்குவித்தல் உள்ளிட்ட குழந்தைத் திருமணம் தொடர்பான பல்வேறு குற்றங்களைச் சட்டம் அடையாளம் காட்டுகிறது. இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்கென்றே பணி அமர்த்தப்பட்ட நீதிமன்றங்கள் இத்தகைய குற்றங்களின் முழு விவரங்களை அறிந்துகொள்ளவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

**குழந்தைத் திருமணத்தை தடைசெய்யும் அலுவலர்கள் (CMPO's):** குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், விசாரணை செய்யவும், நடவடிக்கை எடுக்கவும் பல்வேறு நிலைகளில் குழந்தைத் திருமணத்தை தடுக்கும் அலுவலர்களை நியமிக்க இந்தச் சட்டம் அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்த அலுவலகர்களுக்கு குழந்தைத் திருமணங்களில் தலையிட்டு அவற்றைத் தடுக்க அதிகாரம் உள்ளது. இந்தப் பணிக்கென்றே நியமிக்கப்பட்ட குழந்தை திருமண தடை அதிகாரிகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மாவட்ட சமூக நல அலுவலர்கள் (DSWOs) தான் குழந்தைத் திருமணத்தை தடுக்கும் அதிகாரம் கொண்ட அலுவலர்கள்.

**பாதுகாப்பும் ஆதரவும்:** சட்டம் குழந்தை மணமகள் மற்றும் மணமகன்களின் பாதுகாப்பிலும் ஆதரவிலும் கவனம் செலுத்துகிறது. குழந்தைத் திருமணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி, ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்குவதற்கு பொறுப்பான குழந்தைத் திருமண பாதுகாப்பு அதிகாரிகளை நியமிக்க சட்டம் வழி வகை செய்கிறது.

**குழந்தைத் திருமணத் தடை நிதி:** குழந்தைத் திருமணத்தை தடைசெய்வதோடு குழந்தை திருமணங்களால் பாதிக்கப்பட்டவர்களின் நலன் மற்றும் மறுவாழ்வு உட்பட பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வகையில் நிதி ஒதுக்குவதை இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது.

**விழிப்புணர்வும் கல்வியும்:** குழந்தைத் திருமண விவகாரம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, கல்வி கற்பிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சட்டம் வலியுறுத்துகிறது. குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்கான திட்டங்களையும் பிரச்சாரங்களையும் மேற்கொள்ள அரசாங்கம், அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களையும் பிற அமைப்புகளையும் ஊக்குவிக்கிறது.

குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 என்பது இந்தியாவில் குழந்தைத் திருமணத்தை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கியமான சட்டமாகும். குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், குழந்தைத் திருமணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்கவும் அதன் விதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## குழந்தைத் தொழில் முறை (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986

குழந்தைத் தொழில் முறை (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1986 குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையைக் கையாள்கிறது. சில அபாயகரமான தொழில்களில் குழந்தைகளை ஈடுபடுத்துவதைத் தடைசெய்வதையும், அபாயமற்ற தொழில்களில் குழந்தைகளின் வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதையும் இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. சட்டப் பிரிவுகளை வலுப்படுத்தவும், குழந்தை உரிமைகள் பாதுகாப்பை மேம்படுத்தவும் 2016ல் இந்தச் சட்டம் திருத்தப்பட்டது. குழந்தைத் தொழில் முறை (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1986ன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

**குழந்தைத் தொழில் முறைக்கு தடை:** சில குறிப்பிட்ட அபாயகரமானதாக இல்லாத, குடும்பம் சார்ந்த வேலையையும் பொழுதுபோக்குக்கான தொழிலையும் தவிர, 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை எந்தத் தொழிலிலும் ஈடுபடுத்துவதை இந்தச் சட்டம் தடை செய்கிறது.

**இளவயது தொழிலாளர்களை ஒழுங்குபடுத்துதல்:** இந்தச் சட்டம் 14 முதல் 18 வயது வரையிலான வளரிளம் பருவத்தினரை வேலைக்கு அமர்த்துவதற்கான விதிமுறைகளைக் கட்டமைத்துள்ளது. இது வளரிளம் பருவத்தினரின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் நலன்களை உறுதிசெய்து, அவர்கள் பணியமர்த்தப்படக்கூடிய நிலைமைகளை வரையறுக்கிறது.

**அபாயகரமான தொழில்களும் செயல்முறைகளும்:** குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது கண்டிப்பாக தடைசெய்யப்பட்ட அபாயகரமான தொழில்கள் மற்றும் செயல்முறைகளின் பட்டியலை இந்தச் சட்டம் குறிப்பிடுகிறது. சுரங்கங்கள், தொழிற்சாலைகள், கட்டுமானத் தளங்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் அல்லது ஆபத்தான இயந்திரங்களைக் கையாளும் தொழில்கள் ஆகியவை இதில் அடங்கும்.

**கல்விக்கான உரிமை:** குழந்தைகளுக்கான கல்வியின் முக்கியத்துவத்தை இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது. அதை அடிப்படை உரிமையாக்குகிறது. 6 வயது முதல் 14 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதை சட்டம் கட்டாயக் கடமையாக்குகிறது.

**அமலாக்கமும் தண்டனைகளும்:** சட்டம் அதன் விதிகளை அமல்படுத்துவதற்கான பொறுப்புகளை அரசாங்கத்துக்கும் பல்வேறு அதிகாரிகளுக்கும் வழங்குகிறது. குற்றத்தின் தன்மையையும் தீவிரத்தையும் பொறுத்து, சிறைத்தண்டனை மற்றும் அபராதம் உள்ளிட்ட மீறல்களுக்கான தண்டனைகளை இது கோடிட்டுக் காட்டுகிறது.

**மறுவாழ்வும் நலனும்:** இந்தச் சட்டம் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கானதும் நலனுக்கானதுமான விதிகளை உள்ளடக்கி உள்ளது. இது சிறப்பு மறுவாழ்வு மையங்களை நிறுவுதலையும் அவர்களின் உடல், உளவியல் மற்றும் சமூக வளர்ச்சிக்கான கல்வி, தொழில் பயிற்சி மற்றும் பிற ஆதரவு சேவைகளை வழங்குவதையும் கட்டாயமாக்குகிறது.

குழந்தைத் தொழில் முறை (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1986, அடுத்தடுத்த திருத்தங்களுடன், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்து, குழந்தைகளின் பாதுகாப்பையும் நலனையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அபாயகரமான மற்றும் சுரண்டப்படக்கூடிய வேலைகளில் குழந்தைகள் ஈடுபடுவதைத் தடுக்கும் அதே வேளையில், அவர்கள் வளரவும், கற்றுக் கொள்ளவும், மேம்படுத்தவும் பாதுகாப்பானதும் உகந்ததுமான சூழலை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

# குழந்தைகளுக்கான தேசிய மற்றும் மாநிலக் கொள்கைகள்

## குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை - 2013

குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை 2013ம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தியாவில் குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு முழுமையான கொள்கைக் கட்டமைப்பு. இந்தக் கொள்கை குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கையின் கொள்கைகளையும் விதிகளையும் அடிப்படையாகக் கொண்டது. குழந்தைகளின் பாதுகாப்பு, உயிர்வாழ்வு, மேம்பாடு மற்றும் பங்கேற்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் கொள்கை குழந்தைகளின் உடல்நலம், ஊட்டச்சத்து, கல்வி, பாதுகாப்பு, பங்கேற்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் குழந்தையின் முழுமையான வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது. குழந்தைகளை குறிப்பாக மாற்றுத்திறனாளிகள், தெருவோரக் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் கடினமான சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் போன்ற ஒதுக்கப்பட்ட, பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள குழுக்களைச் சேர்ந்தவர்களைப் பாதிக்கும் ஏற்றத்தாழ்வுகளையும் சமத்துவமின்மைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை இந்தக் கொள்கை வலியுறுத்துகிறது..

ஒன்றிய அளவிலும் மாநில அளவிலும் குழந்தை நேய சட்டங்களை இயற்றுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இந்தக் தேசியக் கொள்கை ஆதரவைத் திரட்டுகிறது. குழந்தை வளர்ச்சியோடு தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய முழுமையான குழந்தை வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, சுகாதாரம், கல்வி, சமூக நலன், நீதி மற்றும் சட்ட அமலாக்கம் போன்ற களங்களில் சேவைகளை ஒருங்கிணைத்தும் ஒன்றோடு ஒன்று கலந்து செயல்படவேண்டியதின் அவசியத்தை இந்தக் கொள்கை வலியுறுத்துகிறது. தங்களின் வாழ்க்கையை பாதிக்கும் முடிவுகளில் தங்கள் கருத்துக்களைச் சொல்ல குழந்தைகள் பங்கேற்க வேண்டியதின் முக்கியத்துவத்தை இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது. அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவர்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்கிறது. குழந்தைகள் தொடர்பான கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்துவதை ஒருங்கிணைத்துக் கண்காணிக்க தேசிய, மாநில மற்றும் உள்ளூர் மட்டங்களில் பொருத்தமான நிறுவன வழிமுறைகளையும் கட்டமைப்புகளையும் நிறுவுவதற்கு அழைப்பு விடுக்கிறது. குழந்தைக்கு தீங்கிழைத்தல், சுரண்டுவது, வன்முறை மற்றும் கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதில் கவனம் செலுத்துகிறது, மேலும் குழந்தை நேய நீதி முறையின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை ஒரு பரந்த கட்டமைப்பை வழங்குகிறது, மேலும் குறிப்பிட்ட வகையில் செயல்படுத்துவதும் நடவடிக்கை எடுப்பதும் மாநிலங்கள் சார்ந்தும் பகுதி சார்ந்தும் வேறுபடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கொள்கையின் செயலாக்கமும் முன்முயற்சிகளும் பற்றிய விரிவான தகவலுக்கு, அதிகாரப்பூர்வ அரசாங்க ஆதாரங்கள் அல்லது இந்தியாவில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தைப் பார்க்க பரிந்துரைக்கப்படுகிறது.

## குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை - 2021
**(Tamilnadu State Policy for Children 2021)**

குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை 2021ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. குழந்தைகள் தொடர்பான பல குறியீடுகளில் தேசிய சராசரியை ஒப்பிடும் போது பல அம்சங்களில் தமிழ்நாடு மேம்பட்டதாக இருந்தாலும், தவிர்க்கப்படவேண்டிய, தமிழ்நாடு அரசாங்கத்தின் கவனம் தேவைப்படுகிற சில பிரச்சனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஊட்டச் சத்துக் குறைபாடு, ரத்தசோகை, குழந்தை இறப்பு விகிதம், 5 வயதுக்குள் குழந்தைகள் இறப்பு விகிதம், குழந்தை பாலின விகிதம், நோய்த்தடுப்பு, உடல் நிறை குறியீட்டு எண் (உயரத்துக்கு ஏற்ற எடையோடு இருப்பது), உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் சேர்க்கை விகிதம், திறந்தவெளியில் மலம் கழித்தல் போன்றவை.

தமிழ்நாடு அரசு இந்தப் பிரச்சனைகளைத் தீவிரமாக எடுத்துக்கொள்வதோடு, மாநிலத்திற்கான தனது 10 ஆண்டு கால தொலைநோக்குத் திட்டத்தை அடைவதற்கு இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு

காண்பது மிக முக்கியமானது என்பதை உறுதியாக நம்புகிறது. குழந்தைகளுக்கான இந்த மாநிலக் கொள்கையானது குழந்தைகளின் ஒட்டுமொத்த நல்வாழ்வை கணிசமாக மேம்படுத்துவதையும் சர்வதேசத் தரத்திற்கு இணையாக அனைத்துக் குறியீடுகளிலும் வரையறைகளை அமைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கையின் நோக்கம், வளரிளம் பருவத்தினர், வளரிளம் பருவத்தினரின் நல்வாழ்வு, அவர்கள் பாதிக்கப்படக்கூடிய அம்சங்கள் ஆகியவற்றில் சிறப்புக் கவனத்துடன் கூடிய மாநிலத்தின் குழந்தைகளின் பாதுகாப்புக்கும் நல்வாழ்வுக்கும் சவால் விடும் பிரச்சினைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கையாள்வதாகும். குழந்தைகளை பாதிக்கும் அனைத்து அம்சங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தக் கொள்கையை உருவாக்கும் போது விவாதிக்கப்பட்டன அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மனிதாபிமான சூழ்நிலைகளில் குழந்தைகளின் பாதுகாப்பின் அவசியத்தையும் இந்தக் கொள்கை வலியுறுத்துகிறது.

இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கம், அனைத்து/எந்தவித வன்முறைகளிலிருந்தும், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளிலிருந்து குழந்தைகளைத் தடுப்பதையும் பாதுகாப்பதையும் கீழ்கண்ட முறையில் உறுதி செய்வதாகும்.

1. ஏற்கனவே உள்ள அமைப்புகளை வலுப்படுத்துதல்
2. கொள்கை நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க சரியான அமைப்புகளை நிறுவுதல்
3. தொடர்புடைய அனைத்துத் துறைகளுக்கிடையேயான நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு
4. இந்தக் கொள்கை பற்றியும் குழந்தைகளின் நலனுக்கான தமிழக அரசின் கொள்கை உறுதி குறித்தும் குழந்தைகளிடமும் குழந்தைகள் உரிமையோடு தொடர்புடைய அனைத்து நபர்களிடமும் (Stakeholders) விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
5. மாநிலத்தின் மக்கள்தொகையில் குழந்தைகள் எவ்வளவு என்கிற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் போதுமான பட்ஜெட்டை ஒதுக்கீடு செய்தல் மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் சிறுமிகளுக்கும் தமிழக அரசு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற உதவுகிறது.
6. மாநிலத்தின் அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசின் கொள்கை உறுதியை உணர்ந்துகொள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்களை உகந்த அளவில் பயன்படுத்துதல்.

## முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

1992ல் அப்போதைய மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் பெண் குழந்தைகளின் நலனில் உடைப்பை ஏற்படுத்தக்கூடிய முன்னோடித் திட்டமாகும். அரசாங்கத்தின் நேரடியான முதலீட்டின் வாயிலாக பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் பெண் குழந்தைகளை ஆற்றல்படுத்துவதன் வாயிலாக பாலினப் பாகுபாட்டை தடுக்கும் நோக்கத்தோடு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

இந்தத் திட்டம் கீழ்கண்டவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- பெண் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதையும், தக்கவைப்பதையும் ஊக்குவித்தலும் குறைந்தபட்சம் இடைநிலை வரையிலான கல்வியை உறுதி செய்தலும்.
- 18 வயது முடிந்த பிறகுதான் திருமணம் செய்ய வேண்டும் என்பதை பெண் குழந்தைகளிடம் ஊக்குவிப்பது.
- இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்பக் கட்டுப்பாடு நெறிமுறையைப் பின்பற்ற பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தலும் பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் நிதி அதிகாரத்தை வழங்குதலும்.
- பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்துவதில் குடும்பத்தின் பங்கை வலுப்படுத்துதல்.

**திட்டம்-I**

01/08/2011 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த பெண் குழந்தையின் பெயரில், ஒரே ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பத்திற்கு, தமிழ்நாடு பவர் ஃபைனான்ஸ் மற்றும் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் நிலையான வைப்புத் தொகையாக டெபாசிட் செய்யப்படுகிறது. நிலையான வைப்புத் தொகை ரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்-II**

ரூ. 01/08/2011 அன்று அல்லது அதற்குப் பிறகு ஒரு குடும்பத்தில் பிறந்த இரண்டு பெண் குழந்தைகளின் பெயரில் தமிழ்நாடு பவர் ஃபைனான்ஸ் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தில் (இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே உள்ள குடும்பத்திற்கு) 25,000 நிலையான வைப்புத் தொகையாக டெபாசிட் செய்யப்படுகிறது. பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு நிலையான வைப்புத் தொகைக்கான ரசீது நகல் வழங்கப்படுகிறது.

மேற்கூறிய வைப்புத்தொகை ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு, 18 வயது நிறைவடைந்தவுடன், பெண் குழந்தைக்கு வட்டியுடன் சேர்த்து வைப்புத் தொகை வழங்கப்படும். இந்தப் பலனைப் பெற, பெண் குழந்தைகள் 10ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத வேண்டும். வைப்புத் தொகை முதிர்ந்து (deposit matured) அது அந்தப் பெண் குழந்தைகளின் உயர்கல்வியைத் தொடர உதவும். 01.08.2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய திட்டத்தின் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி முதிர்வு நன்மைகளைக் கொண்டுள்ளது.

**மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வித் திட்டம்**

அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், நிதியுதவியாக பல்கலைக்கழக பட்டப்படிப்பு / டிப்ளமோ/ ஐடிஐ/ வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பை முடிக்கும் வரை பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை நேரடியாக மாணவிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

கற்றலில் நிதி உதவி தேவைப்படும் மாணவிகள் மீது கவனம் செலுத்துவது இந்த முன் முயற்சித் திட்டத்தின் ஒரு பகுதி. இந்தத் திட்டம் பெண் குழந்தைகள் கல்வி கற்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதுமைப் பெண் திட்டம் என்று அழைக்கப்படும் இந்தத் திட்டம், பொருளாதாரத்தில் பின்தங்கிய, நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, தங்கள் மகள்களை கல்லூரிக்கு அனுப்ப முடியாத குடும்பங்களுக்கு உதவியாக இருக்கும். மாணவிகளின் கல்விக்கு உதவியாக ரூ.1000 அடிப்படைப் பணமாக வழங்குவதன் வாயிலாக வாழ்க்கையின் முக்கியமான காலகட்டங்களில் அவர்கள் சிறந்து விளங்க புதுமைப் பெண் திட்டம் உதவுகிறது.

புதுமைப் பெண் திட்டத்தின் நன்மைகள் பின்வருமாறு:

i. புதுமைப் பெண் திட்டம் மற்ற திட்டங்களில் இருந்து வேறுபட்டது, ஏனெனில் இது நிதி உதவி வழங்குதல், மாணவிகளின் கல்வியைத் தொடர ஊக்குவிப்பது மற்றும் பெற்றோர்களும் பாதுகாவலர்களும் தங்கள் மகள்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து வைக்காமல் இருப்பதை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகிறது.

ii. சமகால சூழ்நிலைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையால், புதுமைப் பெண் திட்டம் அடுத்த சில ஆண்டுகளில் புதிய சகாப்தத்தை உருவாக்க உள்ளது.

iii. பட்டதாரி அல்லது சான்றிதழ் அல்லது டிப்ளமோ பெறும் வரை கல்வியைத் தொடரும் மாணவிகளுக்கு, அவர்கள் எந்தத் துறை சார்ந்து கல்வியைத் தொடர்கிறார்களோ அதைப் பொருட்படுத்தாமல், மாதம் ரூ.1,000 பரிசாக வழங்கப்படும்.

iv. நம் நாட்டில் மாணவிகள் கல்வியைத் தொடர அவ்வளவாக ஊக்கப்படுத்தப்படுவதில்லை என்பது அனைவரும் அறிந்ததே. அதனால், இந்தத் திட்டம் இளம் பெண்களின் நம்பிக்கையை மேம்படுத்துகிறது.

**எண்ணும் எழுத்தும்**

தமிழ் நாட்டில் ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் தரத்தை மேம்படுத்த எண்ணும் எழுத்தும் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1,2 மற்றும் 3ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணவர்களும் புரிந்துணர்வோடு படித்து அடிப்படை எண்கணிதத் திறன்களைப் பெற்றிருப்பதை உறுதி செய்வதே எண்ணும் எழுத்தும் திட்டத்தின் குறிக்கோள் ஆகும். கோவிட்19 முழு அடைப்பின் போது பள்ளிகள் மூடப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட கற்றல் இடைவெளியைக் கையாள்வதும் இந்தத் திட்டத்தின் நோக்கம். மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் (SCERT) தலைமையின் கீழ், எண்ணும் எழுத்தும் திட்டம் 202223ஆம் கல்வியாண்டு முதல் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்படும்.

**நான் முதல்வன் திட்டம்**

நான் முதல்வன் இயங்குதளமானது கல்லூரி மாணவர்களுக்கு படிப்புகள் மற்றும் தொழில் சார்ந்த திறன் சலுகைகள் பற்றிய தொடர்புடைய தகவல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டு மாணவர்கள் தங்களின் தொழில் இலக்குகளை அடைய உதவும். அவர்கள் தேர்ந்தெடுத்த ஆர்வமுள்ள துறையில் பயிற்சி பெற முடியும்.

இத்திட்டத்தின் நோக்கம், தற்போதைய தொழில்துறை இடைவெளிகளின் அடிப்படையில் பல்வேறு திறன் பயிற்சிகளை வழங்குவதற்கு, சாத்தியமான பயிற்சியாளர்களை அடையாளம் காண்பதாகும். இந்த முதன்மைத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் பயிற்சி பெற்று, அவர்களின் திறமைக்கு ஏற்ப வேலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மாநிலக் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு தொழில் மற்றும் கல்வி வழிகாட்டுதலும் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

**இல்லம் தேடிக் கல்வி**

தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை, இல்லம் தேடி கல்வித் திட்டம் என்ற புதிய திட்டத்தை 2021 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளின் கற்றல் இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு இல்லம் தேடி கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக, தினமும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை பள்ளி நேரம் முடிந்ததும் தன்னார்வலர்கள் மாணவர்களின் வீடுகளுக்கு அருகில் வகுப்புகளை எடுப்பார்கள். ஒரு தன்னார்வலருக்கு 20 மாணவர் என்ற விகிதத்தில் (1:20) ஒரு லட்சத்திற்கும் அதிகமான தன்னார்வலர்கள் தமிழ்நாடு இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் சேருவார்கள் என இந்தத் திட்டம் துவங்கும் போது எதிர்பார்க்கப்பட்டது.

## குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை

குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை என்பது தீங்கிழைத்தல், புறக்கணிப்பு, சுரண்டல் மற்றும் பிற வகையான தீங்குகளிலிருந்து குழந்தைகளின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளின் தொகுப்பாகும். குழந்தைகளுடன் பணிபுரியும் அல்லது குழந்தைகளுக்குப் பொறுப்புடைய அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் சமூகங்களால் இது செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்:

**தடுப்பு:** ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் குழந்தைகளோடு தொடர்புடைய பிறர் ஆகியோருக்கு விழிப்புணர்வையும், கல்வியையும் பயிற்சியையும் ஊக்குவிப்பதன் மூலம் குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல், துன்புறுத்தல் நடப்பதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்தக்

கொள்கை கோடிட்டுக் காட்டுகிறது. இது குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்க தெளிவான எதிர்பார்ப்புகளையும் நடத்தைக்கான தரங்களையும் நிறுவுகிறது.

**புகாரளித்தலும் எதிர்வினையாற்றுவதும்:** குழந்தைக்கு தீங்கிழைத்தல் , புறக்கணிப்பு அல்லது சுரண்டல் நடத்திருக்கிறது என்ற சந்தேகத்திற்கிடமான அல்லது வெளிப்படுத்தப்பட்ட வழக்குகளைப் பற்றி புகாரளிப்பதற்கும் எதிர்வினையாற்றுவதற்கும் தேவையான நடைமுறைகளை இந்தக் கொள்கை வழங்குகிறது. மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் உடனடியாகவும், ரகசியமாகவும், சட்டத்தின்படியும் கையாளப்படுவதை இது உறுதி செய்கிறது.

**நடத்தை விதிகள்:** குழந்தைகளுடன் பழகும் ஊழியர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் தனிநபர்களுக்குமான நடத்தை விதிகள் கொள்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இது குழந்தைகளின் உரிமைகளையும் கண்ணியத்தையும் மதிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, எவ்வாறு உரிய முறையில் நடந்துகொள்வது என்பதையும், எல்லைகளையும் நெறிமுறை நடத்தைக்கான எதிர்பார்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

**ஆட்களை பணிக்கு அமர்த்துவதும் அவர்களை சோதனை செய்வதும் (ஸ்கிரீனிங்):** குழந்தைகளை அணுகக்கூடிய நபர்களை பணிக்கு அமர்த்துவது, தேர்வு செய்வது, அவர்களை சோதனை செய்வது ஆகியவற்றுக்கான வழிகாட்டுதல்களை இந்தக் கொள்கை உருவாக்கியுள்ளது. குழந்தைகளுடன் பணிபுரிபவர்களில் குழந்தைகளுக்கு தீங்கிழைப்பவர்கள் இருப்பதற்கான அபாயத்தைக் குறைப்பதற்கு அவர்களின் பின்னணியை சரிபார்த்தல், அவர்களை யார் பரிந்துரைத்தார்கள் என்பதை சரிபார்த்தல், மற்றும் அவர்களை சோதனை செய்வதற்கான நடைமுறைகள் ஆகியவை இதில் அடங்கும்.


**பயிற்சியும் திறன் மேம்பாடும்:** பணியாளர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் பிற தொடர்புடைய நபர்களுக்கும் பயிற்சியையும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களையும் வழங்குவதன் முக்கியத்துவத்தை கொள்கை வலியுறுத்துகிறது. குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும் பற்றிய பயிற்சி, தீங்கிழைத்தலின் அறிகுறிகளை அங்கீகரிப்பதும் பொருத்தமான முறையில் எதிர்வினையாற்றுவதும் இதில் அடங்கும்.

**ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும்:** திறன்மிக்க வகையில் குழந்தைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக குழந்தைப் பாதுகாப்போடு தொடர்புடைய அதிகாரிகள், ஏஜென்சிகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் இந்தக் கொள்கை ஊக்குவிக்கிறது. இதில் உள்ளூர் குழந்தை பாதுகாப்பு முகமைகளுடன் இணைந்து வேலைசெய்வது, தகவல்களைப் பகிர்வது மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான கூட்டு முயற்சிகளில் பங்கேற்பது உள்ளிட்டவையும் இருக்கும்.

**கண்காணிப்பும் மதிப்பாய்வும்:** இந்தக் கொள்கையானது அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணித்து மதிப்பாய்வு செய்வதற்கும், செயல்திறன், விதிகளுக்கு உட்பட்டு நடப்பது ஆகியவற்றுக்கான வழிமுறைகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. கொள்கை தொடர்ந்து புதுப்பிக்கப்படுவதையும், மாறிவரும் தேவைகளுக்கும் சிறந்த நடைமுறைகளுக்கும் ஏற்ப இதை மாற்றியமைப்பதையும் இந்தக் கொள்கை உறுதி செய்கிறது.

குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை என்பது குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் ஒரு செயல்திறன் மிக்க மற்றும் தடுப்புக்கான அணுகுமுறையாகும். இது பொறுப்பான நடைமுறைகளுக்கான ஒரு கட்டமைப்பை நிறுவுகிறது, தீங்கு அல்லது சுரண்டலுக்கு பயப்படாமல் குழந்தைகள் நன்கு வளர்வதற்கும் மேம்படுவதற்குமான சூழலையும் வளர்க்கிறது.

## இந்தியாவில் குழந்தைப் பாதுகாப்பு அமைப்பு




### சைல்ட் லைன் 1098

சைல்டுலைன் என்பது பிரச்சனை / துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய அளவிலான 24 மணி நேர இலவச உதவி எண். இது ஒரு முக்கியமான ஹெல்ப்லைன் சேவையாகும், இது பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கு உடனடி உதவியையும் ஆதரவையும் பாதுகாப்பையும் வழங்குகிறது. எந்த மொபைல் அல்லது லேண்ட்லைன் தொலைபேசியிலிருந்தும் 1098க்கு டயல் செய்வதன் மூலம் சைல்டுலைனை அணுகலாம்.

**கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு** (VLCPC) என்பது ஒரு கிராமம் அல்லது சமூகத்தில் உள்ள குழந்தைப் பாதுகாப்புச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக நிறுவப்பட்ட உள்ளூர் அளவிலான குழு ஆகும். குழந்தைக்கு தீங்கிழைத்தல், சுரண்டல், புறக்கணிப்பு மற்றும் பிற வகையான தீங்கு விளைவித்தல் போன்ற நிகழ்வுகளைக் கண்டறிந்து பதிலளிப்பதில் கிராம அளவிலான குழந்தைப் பாதுகாப்புக் குழுக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

கிராம அளவிலான குழந்தைப் பாதுகாப்புக் குழுக்களும் வார்ட் அளவிலான குழந்தைப் பாதுகாப்புக் குழுக்களும் பொதுவாக உள்ளூர் சமூக உறுப்பினர்களால் உருவாக்கப்படுகின்றன. இதில் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகத் தலைவர்கள், இளைஞர் அமைப்புகள், உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் பணிபுரியும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்ற சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு (WLCPC) என்பது ஒரு நகரம் அல்லது நகர்ப்புறத்தில் வார்டு அளவில் நிறுவப்பட்ட ஒரு குழு ஆகும். வார்ட் அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கள் குழந்தைப் பாதுகாப்புப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதிலும், அந்தந்த வார்டுகளில் உள்ள குழந்தைகளின் நல்வாழ்வை உறுதி செய்வதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**செயல்பாடுகளும் பொறுப்புகளும்:** கிராம அளவிலான குழந்தைப் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் வார்டு அளவிலான குழந்தப் பாதுகாப்புக் குழுக்களின் செயல்பாடுகளும் பொறுப்புகளும் கீழ்கண்டவற்றை உள்ளடக்கியது:

- கிராம அளவில் அல்லது வார்டு அளவில் குழந்தைக்கு தீங்கிழைத்தல், புறக்கணிப்பு, சுரண்டல் அல்லது எந்த வடிவிலான தீங்கையும் கண்டறிவதும் அது குறித்து புகார் செய்வதும்
- உடனடி ஆதரவு, தலையீடு அல்லது தொடர்புடைய அதிகாரிகள் அல்லது சேவை வழங்குநர்களுக்குப் பரிந்துரைத்தல் உள்ளிட்ட தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குழந்தைப் பாதுகாப்பு சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்வது.
- குழந்தை உரிமைகள், குழந்தைப் பாதுகாப்பு, குழந்தைக்கு தீங்கிழைத்தல் மற்றும் சுரண்டலைத் தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதலும் சமூக அளவிலான பிரச்சாரங்களை நடத்துதலும்.
- குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும் வளர்ச்சி தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறைகளில் அவர்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- உள்ளூர் அளவில் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகளையும் முன்முயற்சிகளையும் வலுப்படுத்த அரசுத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்போடு தொடர்புடைய பிறருடன் ஒத்துழைத்தல்.
- கிராமம் அல்லது வார்டுக்குள் குழந்தைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும். தேவையான தலையீடுகள் அல்லது மேம்பாடுகளுக்கு பரிந்துரைத்தலும்.

### மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு

**மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலகு (DCPU)** இந்தியாவில் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் முக்கிய அங்கமாகும். இது மாவட்ட அளவில் இயங்குகிறது. மாவட்டத்திற்குள் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகளையும் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு இந்த அமைப்பு பொறுப்பாகும்.

மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலகானது குழந்தைப் பாதுகாப்புக்காக அர்ப்பணிக்கப்பட்ட வல்லுநர்கள் மற்றும் பணியாளர்களின் குழுவைக் கொண்டுள்ளது. இதில் மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி, நிறுவனப் பராமரிப்புக்கான பாதுகாப்பு அலுவலகம், நிறுவனம் அல்லாத பராமரிப்புக்கான பாதுகாப்பு அலுவலகம், ஆற்றுப்படுத்துபவர், சட்டம் மற்றும் நன்னடத்தை அதிகாரி, இரண்டு சமூகப் பணியாளர்கள், அவுட்ரீச் தொழிலாளர்கள், தரவுகளை ஆய்வு செய்யும் ஆய்வாளர், தரவுகளை கணிணியில் உள்ளடக்குபவர் (டேட்டா என்ட்ரி ஆபரேட்டர்) மற்றும் கணக்காளர் ஆகியோர் அடங்குவர். மாவட்ட ஆட்சியர் மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகின் தலைவராக உள்ளார்.

மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு குழந்தைப் பாதுகாப்பு தொடர்பாக தான் கட்டாயம் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்கிறது. அவற்றுள் கீழ் கண்டவையும் உள்ளடங்கும்:

- மாவட்ட அளவில் குழந்தைக்கு தீங்கிழைத்தல், புறக்கணிப்பு, சுரண்டல் மற்றும் பிற வடிவங்களிலான தீங்குகள் தொடர்பான வழக்குகளைக் கண்டறிவதும் அவை குறித்து புகாரளிப்பதும்
- தத்தெடுப்பு, வளர்ப்புப் பராமரிப்பு, ஸ்பான்சர்ஷிப், குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களின் மேலாண்மையும் கண்காணிப்பும், மறுவாழ்வும் ஆலோசனைகளும் போன்ற குழந்தைப் பாதுகாப்புத் திட்டங்களையும் சேவைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்த மற்ற அரசுத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் (NGOக்கள்) மற்றும் குழந்தைப் பாதுகாப்போடு தொடர்புடையவர்களுடன் இணைந்து வேலை செய்தல்.
- குழந்தைகள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பல்வேறு நபர்களுக்கும் அமைப்புகளுக்கும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களையும், பயிற்சி அமர்வுகளையும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களையும் நடத்துதல்.
- மாவட்டத்திற்குள் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டங்களையும், கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.
- மாவட்டத்திற்குள் செயல்படும் குழந்தைகள் நலக் குழு (CWC), சிறார் நீதிக் குழுமம் (JJB) மற்றும் பிற குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளுக்கு ஆதரவையும் உதவியையும் வழங்குதல்.
- பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் மறுவாழ்வையும் மறு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் .
- **அறிக்கை அளிப்பதும் தரவு மேலாண்மையும்:** மாவட்டத்திற்குள் குழந்தைப் பாதுகாப்பு சார்ந்த வழக்குகள் பற்றிய தரவுகளைப் பராமரிப்பதற்கும், குழந்தைகள் பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கைகளையும் புள்ளிவிவரங்களையும் உருவாக்குவதற்கும் மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு பொறுப்பாகும். பயனுள்ள தலையீடுகளையும் கொள்கைகளையும் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் இந்தத் தகவல் உதவுகிறது.

**பரிந்துரை செய்வதற்கான வழிமுறை (Referral Mechanism)**: குழந்தைப் பாதுகாப்பு சார்ந்த வழக்குகளில் ஆலோசனை, மதிப்பாய்வு அல்லது அடுத்த நடவடிக்கைக்கு யாரையாவது அல்லது எதையாவது பரிந்துரை செய்யும் ஒரு மையமாக (Referral Point) மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு செயல்படுகிறது. தேவைப்படும் குழந்தைகளுக்கு சரியான நேரத்தில், பொருத்தமான உதவியை உறுதி செய்வதற்காக பல்வேறு ஏஜென்சிகளுடனும் சேவை வழங்குநர்களுடனும் இந்த அலகு வேலை செய்கிறது.

## குழந்தை நலக் குழு (CWC)

குழந்தை நலக் குழு (CWC) இந்தியாவின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பில் ஒரு முக்கியமான அமைப்பாகும். இது சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 இன் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். குழந்தை நலக் குழுவின் முதன்மை நோக்கம், பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை உறுதி செய்வதாகும். கடினமான சூழ்நிலைகளில் குழந்தைகள் தொடர்பான விஷயங்களில் முடிவெடுக்கும் முதன்மை அதிகார மையமாக இது செயல்படுகிறது. ஒவ்வொரு குழந்தைகள் நலக் குழுவிலும் ஒரு தலைவரும் குறைந்தது ஒரு பெண் உறுப்பினர் உட்பட நான்கு உறுப்பினர்களும் இருப்பார்கள். குழந்தைகள் நலன் தொடர்பான விஷயங்களில் அவர்களின் அறிவு, நிபுணத்துவம் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் அந்தந்த மாநில அரசாங்கத்தால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

குழந்தை நலக் குழு குழந்தைகளின் உரிமைகளையும் நலனையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் பல்வேறு செயல்பாடுகளைச் செய்கிறது, அவற்றுள் கீழ் கண்டவை உள்ளடங்கும்:

i. காவல் துறை, சைல்டு லைன் அல்லது வேறு ஏதேனும் சம்பந்தப்பட்ட நபர் அல்லது அமைப்பால் குறிப்பிடப்படும் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் வழக்குகளைப் பெறுதலும் செயலாக்குதலும்.

ii. குழந்தையின் சிறந்த நலன்களைத் தீர்மானிக்க தகவல்களை சேகரிப்பதும் விசாரணைகளை நடத்துதலும் மற்றும் பராமரிப்பு, பாதுகாப்பு, மறுவாழ்வு தொடர்பான முடிவுகளை எடுத்தல்.

iii. குழந்தைகள் இல்லங்களில் தங்க வைத்தல், வளர்ப்பு பராமரிப்பு அல்லது தத்தெடுப்பு உட்பட குழந்தைகளுக்கான இடைக்கால மற்றும் நீண்ட கால பராமரிப்புக்கான உத்தரவுகளை வழங்குதல்.

iv. தன்னுடைய பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் நல்வாழ்வைக் கண்காணித்தலும் தீங்கிழைத்தல், புறக்கணிப்பு, சுரண்டல் மற்றும் பிற வகையான தீங்குகளிலிருந்து அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தலும்.

v. குழந்தைகளின் சிறந்த நலன்களின் அடிப்படையில் அவர்களை மீட்டெடுத்தல், அவர்களின் வீடுகளுக்கு திருப்பி அனுப்புதல் அல்லது தத்தெடுப்பு ஆகியவற்றை எளிதாக்குதல்.

vi. குழந்தைகளின் பிரச்சனைகளில் செய்யப்படும் தலையீடுகளும் சேவைகளும் திறன்மிக்க வகையில் இருப்பதை உறுதி செய்வதற்காக மதிப்பாய்வுகளையும் மதிப்பீடுகளையும் செய்தல்.

குழந்தை நலக் குழுவுக்கு சாட்சிகளை வரவழைத்து விசாரிக்கவும், ஆவணங்களைத் தாக்கல் செய்யவும், குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கான உத்தரவுகளை வழங்கவும் அதிகாரம் உள்ளது. அதன் முடிவுகளும் உத்தரவுகளும் சட்டப்படி கட்டுப்படும். குழந்தை நலக் குழு, குழந்தைகள் பாதுகாப்பு முயற்சிகளை ஒருங்கிணைத்து, குழந்தைகள் நலக் கொள்கைகளையும் திட்டங்களையும் திறம்பட செயல்படுத்துவதை உறுதிசெய்ய, அரசுத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் (ழிநிளிக்கள்), காவல்துறை மற்றும் நீதித்துறை உள்ளிட்ட தொடர்புடைய பிறருடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

இந்தியாவின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பில் குழந்தை நலக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. இது ஒரு அறைநீதித்துறை அமைப்பாக செயல்படுகிறது, கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் சிறந்த நலன்களுக்காக முடிவுகளை எடுக்கிறது. கவனிப்பு, ஆதரவு மற்றும் மறுவாழ்வு வழங்குவதன் மூலம், குழந்தைகள் பாதுகாப்பான மற்றும் கவனமாக பராமரிக்கப்படும் வளர்ப்புச் சூழலிலும் வளர்வதை உறுதிசெய்ய குழு பாடுபடுகிறது.

**இளம் சிறார் நீதிக் குழுமம் (JJBs)**

இளம் சிறார் நீதிக் குழுமம் இந்தியாவில் இளம் சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு வாய்ந்த நீதித்துறை அமைப்பாகும். இளம் சிறார் நீதிச் சட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதும் சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளின் உரிமைகளைபும் நலன்களையும் பாதுகாப்பதும் இளம் சிறார் நீதிக் குழுமத்தின் முதன்மைப் பணியாகும். சிறார் நீதிக் குழுமம் குற்றம் சாட்டப்படும்போது 18 வயதுக்குட்பட்ட நபர்களாக இருக்கும் சட்டத்திற்கு முரணான குழந்தைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கையாளும் பொறுப்புடைய அமைப்பாகும். ஒவ்வொரு சிறார் நீதிக் குழுமமும் ஒரு மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்திரேட் அல்லது முதல் தரமான நீதித்துறை மாஜிஸ்திரேட் மற்றும் இரண்டு சமூக சேவகர்களைக் கொண்டுள்ளது. இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும். மாஜிஸ்திரேட் குழுவுக்கு தலைமை தாங்குகிறார். மேலும் சமூக சேவையாளர்கள் முடிவெடுக்கும் போது தங்கள் நிபுணத்துவத்தையும் கண்ணோட்டங்களையும் வழங்குகிறார்கள்.

சிறார் நீதிக் குழுமம் சட்டத்திற்கு முரணான குழந்தைகளுக்கான நலன் மற்றும் நீதி தொடர்பான பல்வேறு செயல்பாடுகளைச் செய்கிறது, அவற்றுள் சில பின்வருமாறு:

i. குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட சிறார்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் பற்றிய விசாரணைகளை நடத்துதல்.

ii. சட்டத்தோடு முரண்பட்ட சிறாரின் வயது தொடர்பான சர்ச்சை இருந்தால், வயது சரிபார்ப்பு நடைமுறைகள் மூலம் வயதை நிர்ணயித்தல்

iii. குழந்தை மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு அனுப்படவேண்டுமா, கண்காணிப்புடன் கூடிய விடுதலை செய்யப்படவேண்டுமா (released on probation) அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவேண்டுமா என்பதை முடிவு செய்வது

iv. இயற்கையான நீதிக்கான கொள்கைகளோடு பொருந்தக்கூடியதும் குழந்தை நேய நடைமுறைகளையும் கொண்ட நியாயமான விசாரணை குழந்தைக்கு கிடைப்பதை உறுதிசெய்தல்

v. சட்டத்தோடு முரண்படும் இளம் சிறார்கள் சார்ந்த வழக்குகளின் முன்னேற்றத்தையும் விளைவுகளையும் பற்றிய ஆவணங்களைப் பராமரிப்பதும் அவ்வப்போது அறிக்கைகள் வழங்குவதும்

சிறார் நீதிக் குழுமம், குழந்தையின் மறுவாழ்விலும் சீர்திருத்தத்திலும் கவனம் செலுத்தி, குழந்தை நேய நடைமுறைகளைப் பின்பற்றுகிறது. சிறார் நீதிக் குழுமம் முடிவுகளை எடுக்கும்போது குழந்தையின் சிறந்த நலன்களைக் கணக்கில் எடுக்கிறது. எடுக்கப்படும் நடவடிக்கைகள் முழுவதிலும் குழந்தையின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது.

சிறார் நீதிச் சட்டம் சிறார்களை உள்ளடக்கிய நடவடிக்கைள் இரகசியமாக வைக்கப்படவேண்டியதை வலியுறுத்துகிறது. இது குழந்தையின் அடையாளத்தை வெளிப்படுத்துவதையும், அத்துடன் குழந்தையை அடையாளம் காண வழிவகுக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தகவலையும் வெளிப்படுத்தைக் கட்டுப்படுத்துகிறது. சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளுக்கு சரியான கவனிப்பு, ஆதரவு மற்றும் மறுவாழ்வு கிடைப்பதை உறுதி செய்வதில் சிறார் நீதிக் குழுமம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது சிறார்களை குற்றவாளியாக்குவதைத் தடுப்பதையும், சட்டத்தை மதிக்கும் குடிமக்களாக சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைவதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஒன் ஸ்டாப் மையங்கள் (One Stop Centres)**

ஒன் ஸ்டாப் மையங்கள் (OSC), சகி மையங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன, இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இந்திய அரசாங்கத்தால் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒருங்கிணைந்த ஆதரவு சேவைகளை வழங்குவதற்கான ஒரு முயற்சியாகும். குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமை, வரதட்சணை துன்புறுத்தல், ஆசிட் தாக்குதல்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல்வேறு வகையான வன்முறைகளை அனுபவித்த பெண்களுக்கு முழுமையான ஆதரவையும் உதவியையும் வழங்குவதே ஒன் ஸ்டாப் மையங்களின் முதன்மை நோக்கமாகும்.

**வழங்கப்படும் சேவைகள்:** வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒன் ஸ்டாப் மையங்கள் பலதரப்பட்ட சேவைகளை வழங்குகிறது. அவற்றுள் சில பின்வருமாறு:

i. **அவசரமானதும் உடனடியானதுமான ஆதரவு:** பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பாதுகாப்பான சூழலையும், மருத்துவ உதவிகளையும் ஆற்றுப்படுத்தலையும் வழங்குதல்

ii. **சட்ட உதவியும் ஆற்றுப்படுத்துதலும்:** சட்ட உதவியை வழங்குவது, புகார்களைப் பதிவு செய்ய உதவுவது, சட்ட உதவிக்கான வழக்கறிஞர்களை அணுக உதவுவது, சட்ட நடைமுறையின் வாயிலாக வழிகாட்டுவது.

iii. **உளவியல்சமூக ஆதரவு:** பாதிக்கப்பட்டவர்கள் அதிர்ச்சியை சமாளித்து அவர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க உதவுவதற்காக ஆலோசனைகளையும் உணர்ச்சிபூர்வமான ஆதரவையும் மறுவாழ்வு சேவைகளையும் வழங்குதல்.

iv. **தங்குமிடமும் பாதுகாப்பும்:** தங்குவற்கு பாதுகாப்பான ஒரு இடம் தேவைப்படும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்காலிக தங்குமிடங்களையும் பாதுகாப்பையும் வழங்குவது.

v. **மருத்துவ உதவி:** பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை, சிகிச்சை மற்றும் ஆதரவை வழங்க மருத்துவமனைகளோடும் சுகாதார சேவை வழங்குபவர்களோடும் ஒருங்கிணைத்தல்.

vi. **காவல் நிலையத்தில் உதவி:** பாதிக்கப்பட்டவர்கள் குற்றங்களை சொல்வதிலும், புகார்கள் அளிக்கவும், சட்ட அமலாக்க ஏஜன்சிகளோடு ஒருங்கிணைப்பதிலும் உதவுவது.

தேவை இருக்கும் பெண்கள் அணுகுவதை உறுதிப்படுத்த ஒன் ஸ்டாப் சென்டர்கள் இந்தியாவின் எல்லா மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. காவல்நிலையங்கள், மருத்துவமனைகள், இவற்றோடு தொடர்புடைய பிற சேவை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வெகு அருகில் தான் ஒன் ஸ்டாப் மையங்கள் இருக்கும். ஒன் ஸ்டாப் மையங்கள் அரசாங்கத் துறைகள், காவல்துறை, சுகாதாரப் பாதுகாப்பு வழங்குநர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உட்பட பெண்களுக்கான பிரச்சனை தொடர்பான பல்வேறு நிறுவனங்கள் / அமைப்புகளோடு இணைந்து செயல்படுகின்றன.

பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை திறன் மிக்க வகையில் பூர்த்தி செய்ய ஒரு ஒருங்கிணைந்த சேவையை உருவாக்குவதே ஒன்ஸ்டாப் மையங்களின் நோக்கம். துன்பத்தில் இருக்கும் பெண்களுக்கு உடனடியான ஆதரவையும் உதவியையும் வழங்க, பெண்களுக்கான உதவி தொலைபேசி சேவையையும் (181) ஒன் ஸ்டாப் மையங்கள் வழங்குகின்றன. இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தீர்ப்பதில் ஒன் ஸ்டாப் மையங்களை நிறுவுவது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். அவர்கள் ஒரு கூரையின் கீழ் விரிவான அளவிலான ஆதரவு சேவைகளை வழங்குகிறார்கள், பாதிக்கப்பட்டவர்கள் தேவையான உதவியையும் ஆதாரங்களையும் எளிதாக அணுகுவதை உறுதி செய்கிறது. இந்த மையங்கள் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதிலும், அவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதிலும், வன்முறையின் தாக்கத்திலிருந்து மீள்வதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன.

**தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (TNSCPCR):** ஒரு சட்டபூர்வ அமைப்பாகும். இது தமிழ்நாடு மாநிலத்தின் குழந்தைகளின் உரிமைகளையும் நல்வாழ்வையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு. ஒன்றிய சட்டமான குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டம் 2005ன் பிரிவுகளின் கீழ் தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில குழந்தை உரிமைகள் திறன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய இந்த ஆணையம் உருவாக்கப்பட்டது.

இந்த ஆணையத்தில் மாநில அரசால் நியமிக்கப்படும் ஒரு தலைவரும் ஆறு உறுப்பினர்களும் உள்ளனர். குழந்தை உரிமைகள், குழந்தைகள் நலனோடும் குழந்தை உரிமையோடும் தொடர்புடைய துறைகளில் அவர்களின் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் பல்வேறு செயல்களை செய்து வருகிறது, அவை கீழ்கண்டவற்றையும் உள்ளடக்கியது:

i. குழந்தை உரிமைகள் தொடர்பான புகார்களை விசாரித்து அவற்றை எதிர்கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுப்பது

ii. மாநிலத்தில் குழந்தைகள் தொடர்பான சட்டங்கள், கொள்கைகள், நிகழ்வுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதைக் கண்காணிப்பது.

iii. குழந்தை தொடர்பான பிரச்சனைகளில் விசாரணைகள், உண்மை அறியும் குழுக்கள், ஆய்வுகள் மேற்கொள்வது

iv. குழந்தை உரிமைகளோடு தொடர்புடைய கொள்கைகள், சட்டங்கள் தொடர்பாக மாநில அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் வழங்குவது

v. குழந்தை உரிமைகள் பற்றியும் குழந்தைப் பாதுகாப்பு குறித்தும் விழிப்புணர்வை பரப்புவதும் பொதுக் கல்வியை ஊக்குவித்தலும்

vi. குழந்தைகள் நலம் சார்ந்து பணியாற்றும் பிற அரசுத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய மற்றவர்களுடன் ஒத்துழைத்தலும் ஒருங்கிணைத்தலும்.

vii. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் மறுவாழ்வுக்காகவும் சமூக ஒருங்கிணைப்புக்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்

தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்துக்கு புகார்களை விசாரிக்க சிவில் நீதிமன்றத்தின் அதிகாரம் உள்ளது. ஆணையம் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பி அவர்கள் விசாரணைக்கு வருவதை உறுதிப்படுத்தலாம். பிரமாணத்தின் கீழ் அவர்களை விசாரிக்கலாம், ஆதாரங்களைப் பெறலாம் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரலாம்.

இந்த ஆணையம் குழந்தை உரிமைகளை செயல்படுத்துவதில் மாநில அரசுகளின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் ஆண்டு அறிக்கைகளைத் தயாரிக்கிறது. கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளை அடையாளம் காட்டுகிறது. குழந்தைகளின் உரிமைகளை திறம்பட பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மாநில அரசுக்கும் குழந்தைகளோடு தொடர்புடைய பிற அமைப்புகளுக்கும் இது பரிந்துரைகளை வழங்குகிறது.

**தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR)** குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான ஆணையங்கள் (CPCR) சட்டம் 2005ன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டபூர்வ அமைப்பாகும். இது இந்தியாவில் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேசிய அளவில் உச்ச அமைப்பாக செயல்படுகிறது.

**இளம் சிறார் நீதி குறித்த உச்ச நீதிமன்ற / உயர்நீதிமன்றக் குழு**

நாட்டில் இளம் சிறார் நீதி தொடர்பான பிரச்சனைகளைக் கையாள இந்தியாவின் உச்ச நீதிமன்றம் பல்வேறு குழுக்களையும் அமைப்புகளையும் நியமித்துள்ளது. இத்தகைய குழுக்களுள் குறிப்பிட்டு சொல்லவேண்டிய குழு இளம் சிறார் நீதிக்கான உச்ச நீதிமன்றத்தின் குழு ஆகும்.

இளம் சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பும் பாதுகாப்பும்) சட்டம் 2015 மற்றும் தொடர்பான வழிகாட்டல்கள் திறன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்தப் படுவதை உறுதிப்படுத்தவும் கண்காணிக்கவும் இளம் சிறார் நீதிக்கான உச்ச நீதிமன்றக் குழு அமைக்கப்பட்டது.

i. இந்தக் குழு உச்ச நீதிமன்றத்தால் பணி அமர்த்தப்பட்ட உறுப்பினர்களைக் (பணியில் இருக்கிற உச்ச நீதிமன்ற நீதிபதி) கொண்டது.

ii. சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளுடைய, பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுடைய உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் இந்தக் குழு பல்வேறு பணிகளை மேற்கொள்ளும். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளையும் உள்ளடக்கியது:

iii. மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் இளம் சிறார் நீதிச் சட்டமும் வழிகாட்டல்களும் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பது

iv. கூர்நோக்கு இல்லங்கள், கண்காணிப்பு இல்லங்கள், பிற நிறுவனங்களுக்கு செல்வது, ஆய்வு செய்வது

v. சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளின் வழக்குகளை மதிப்பாய்வு செய்தல். உரிய செயல்முறைகளும் குழந்தை உரிமைகளும் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்தல்.

vi. இளம் சிறார் நீதி அமைப்பில் தேவைப்படும் முன்னேற்றங்களையும் சீர்திருத்தங்களையும் பரிந்துரைப்பது

vii. இளம் சிறார் நீதிக் குழுமங்களும் குழந்தை நலக் குழுக்களும் திறன்மிக்க வகையில் செயல்படுவதற்கான வழிகாட்டுதல்களை மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் வழங்குவது

viii. சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளின் மறுவாழ்விலும் அவர்களை பொதுச் சமூகத்தோடு மீண்டும் ஒன்றிணைய வைப்பதிலும் உள்ள பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொள்வது

ix. தேவைப்படும் போதெல்லாம் இளம் சிறார் நீதி தொடர்பான விஷயங்களில் உச்ச நீதிமன்றத்துக்கு உதவுவது

x. **அறிக்கை அளிப்பதும் பரிந்துரைகளும்:** இந்தக் குழு குறிப்பிட்ட கால இடைவெளியில் உச்ச நீதிமன்றத்துக்கு அறிக்கைகள் அளித்து நாட்டின் சிறார் நீதியின் நிலையை எடுத்துக் காட்டுகிறது. கவலைக்குறிய பகுதிகளை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குகிறது.

சிறார் நீதிக்கான உச்ச நீதிமன்றக் குழு சட்டத்தோடு முரண்படும் குழந்தைகளுக்கும் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பையும் பராமரிப்பையும் மறுவாழ்வையும் உறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. கண்காணிப்பு, வழிகாட்டுதல் மற்றும் பரிந்துரைகள் அளிப்பதன் மூலம், சிறார் நீதி அமைப்பை வலுப்படுத்தவும், இந்தியாவில் உள்ள குழந்தைகளின் உரிமைகளையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்தவும் குழு பாடுபடுகிறது. இதேபோல், இந்தியாவின் அந்தந்த மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு உயர் நீதிமன்றங்களிலும் அந்தந்த அதிகார வரம்புக்கு சிறார் நீதிக்கான குழு உள்ளது. சிறார் நீதிக்கான உயர் நீதிமன்றக் குழுவில் பணியாற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள்.

## மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் கவுன்சில் (UNHRC)

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் கவுன்சில் (UNHRC) என்பது ஐக்கிய நாடுகளின் அமைப்பில் உள்ள அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பாகும். இது உலகளவில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்புடைய ஒரு அமைப்பாகும். மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் கவுன்சில் 2006ல் மார்ச் 15 அன்று ஐக்கிய நாடுகளின் பொது சபையின் தீர்மானத்தால் (தீர்மானம் எண் 60/251) நிறுவப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்துக்கு மாற்றாக வந்தது. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் கவுன்சில் (UNHRC) ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட 47 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. உறுப்பு நாடுகளின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள். அவற்றின் பதவிக்காலம் முடிந்தவுடன் உடனடியாக அவை மறுதேர்தலில் பங்கு பெறலாம். ஒவ்வொரு புவியியல் பிரதேசத்தின் பிரதிநிதித்துவம் சமமான அளவில் இருப்பதன் அடிப்படையில் பிராந்தியங்களுக்கிடையேயான இடங்களின் பகிர்வு இருக்கும்

**மனித உரிமைகளை ஊக்குவித்தலும் பாதுகாத்தலும்:** மனித உரிமைக் கவுன்சில் உலகளவில் மனித உரிமை மீறல்களைக் கையாள்கிறது. மனித உரிமை மீறல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கிறது. இது உலகெங்கிலும் உள்ள மனித உரிமைகள் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான உரையாடலையும் ஒத்துழைப்பையும் தொழில்நுட்ப உதவிகளையும் ஊக்குவிக்கிறது.

**உலகளாவிய அளவிலான ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை செய்யப்படும் மீளாய்வு (UPR):** UNHRC ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளின் மனித உரிமைகள் குறித்த பதிவுகளை ஹிறிஸி செயல்முறை மூலம் மதிப்பாய்வு செய்கிறது. இது ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மனித உரிமைகள் நிலைமையை மதிப்பிடுகிறது, முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளை வழங்குகிறது.

**சிறப்பு நடைமுறைகள்:** UNHRC குறிப்பிட்ட மனித உரிமைகள் பிரச்சினைகள் அல்லது நாட்டின் சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்து அறிக்கையிட, சிறப்பு நடைமுறைகளுக்கான நிபுணர்களை நியமிக்கிறது. இவர்கள் இத்தகைய நடைமுறைகளைக் கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும். இவர்கள் எந்த அமைப்பையும் சாராத தனித்த நிபுணர்களாக இருப்பார்கள் (Independent Expers). இந்த நிபுணர்கள் கவுன்சிலுக்கு அறிக்கை அளித்து நடவடிக்கைக்கான பரிந்துரைகளை வழங்குகின்றனர்.

**ஒவ்வொரு கருத்தும் ஒவ்வொரு நாடு சார்ந்த தீர்மானங்களும்:** பெண்கள், குழந்தைகள், பழங்குடியினர் மற்றும் நலிந்த நிலையில் உள்ள பிற குழுக்களின் உரிமைகள் போன்ற குறிப்பிட்ட மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்த தீர்மானங்களை கவுன்சில் ஏற்றுக்கொள்கிறது. இது ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ள பிரத்யேகமான கவலைக்குரிய சூழ்நிலைகளை சரி செய்கிறது. மனித உரிமை மீறல்களை முன்னிலைப்படுத்தவும், தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமான தீர்மானங்களை ஏற்றுக்கொள்கிறது.

**மனித உரிமைகளோடு தொடர்புடைய அனைத்து அமைப்புகளோடும் உரையாடல்:** UNHRC அதன் உறுப்பு நாடுகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தொடர்புடைய பிற அமைப்புகளுடன் மனித உரிமைகள் பிரச்சனைகளைப் பற்றி உரையாடவும் மனித உரிமைகள் தொடர்பான விஷயங்களில் உரையாடல்களை மேம்படுத்தவும் உரையாடல் நிகழ்வுகளை நடத்துகிறது.

**துணை அமைப்புகள்:** UNHRC ஆனது உலகளாவிய அளவில் குறிப்பிட்ட கால இடைவெளியில் மனித உரிமைகள் நிலை குறித்து ஆய்வு செய்யும் பணிக்குழு, ஆலோசனைக் குழு மற்றும் ஒவ்வொரு கருத்து (thematic) சார்ந்த, நாடு சார்ந்த பணிக்குழுக்கள் உட்பட பல துணை அமைப்புகளைக் கொண்டுள்ளது. இந்த அமைப்புகள் கவுன்சிலுக்கு அதன் பணிகளில் உதவுவதோடு நிபுணத்துவத்தையும் பரிந்துரைகளையும் வழங்குகின்றன.

**மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR):** மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் கவுன்சில் (UNHRC) மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் அலுவலகத்தால் (OHCHR) ஆதரிக்கப்படுகிறது, இது மனித உரிமைகள் துறையில் தொழில்நுட்ப உதவி, ஆராய்ச்சி மற்றும் திறனை வளர்ப்பதற்கான ஆதரவை வழங்குகிறது. OHCHR கவுன்சிலுடைய பணிகளையும் அதன் துணை அமைப்புகளுடைய பணிகளையும் எளிதாக்குகிறது.

## குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழுவும் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளுக்கான சிறப்பு அறிக்கையாளர்களும் (Special Rapporteurs)

குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழு எந்த அமைப்பையும் சாராத தனிப்பட்ட வல்லுனர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும். இந்தக் குழு, குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றன என்பதைக் கண்காணிக்கும். கூடுதலாக, குழந்தைகளின் குறிப்பிட்ட சில பிரச்சனைகளை மையப்படுத்தி வேலைசெய்கிற சிறப்பு அறிக்கையாளர்களை ஐக்கிய நாடுகள் சபை நியமிக்கும். குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழு மற்றும் சிறப்பு அறிக்கையாளர்களைப் பற்றி சில விவரங்கள் பின்வருமாறு:

### குழந்தைகள் பிரச்சனைகள் தொடர்பாக கண்காணித்து அறிக்கை அளிக்கும் சிறப்பு அறிக்கையாளர்கள் (Special Rapporteurs on issues related to children):

குழந்தை உரிமைகள் தொடர்பான குறிப்பிட்ட பிரச்சனைகளில் கவனம் செலுத்த ஐக்கிய நாடுகள் சபை சிறப்பு அறிக்கையாளர்களை நியமிக்கிறது. இந்த வல்லுனர்கள் குழந்தைகளை பாதிக்கும் குறிப்பிட்ட பிரச்சனைகளை எதிர்கொள்ள பரிந்துரைகளை வழங்குவது, ஆய்வு நடத்துவது, வன்முறைகள் குறித்து தெரியப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை செய்வார்கள்.

சிறப்பு அறிக்கையாளர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் அல்லது பிற பொருத்தமான ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளால் நியமிக்கப்படுகின்றனர். குழந்தைக் கடத்தல், குழந்தை தொழிலாளர் முறை, குழந்தை ராணுவ வீரர்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறை, கல்வி பெறுவதற்கான உரிமை ஆகிய குழந்தை உரிமைகளின் பல்வேறு அம்சங்களைப் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறப்பு அறிக்கையாளர்கள் வெவ்வேறு நாடுகளுக்கு செல்வார்கள், அரசாங்கங்களோடும், சிவில் சமூக அமைப்புகளோடும் குழந்தைகள் உரிமைகளோடு தொடர்புடைய மற்றவர்களோடும் உரையாடுவார்கள். பின்னர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ள

குறிப்பிட்ட பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான பரிந்துரைகளோடு ஒரு அறிக்கை வெளியிடுவார்கள். விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், கொள்கை மாற்றங்களுக்காக வாதிடுவதையும், குழந்தை உரிமைகள் சார்ந்து அவர்கள் எதில் நிபுணத்துவம் பெற்றிருக்கிறார்களோ அதில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

குழந்தைகளின் உரிமைகளுக்கான குழுவும் சிறப்பு அறிக்கையாளர்களும் உலகளவில் குழந்தைகளின் உரிமைகளைக் கண்காணிப்பதிலும், ஆதரவு திரட்டி வாதிடுவதிலும் ஊக்குவிப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் கீழ் அரசுகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் அடைந்துள்ள முன்னேற்றத்தை அவர்கள் மதிப்பிடுகின்றனர். கவனமும் நடவடிக்கையும் தேவைப்படும் குறிப்பிட்ட சிக்கல்களை முன்னிலைப்படுத்துகின்றனர். அவர்களின் பணி கொள்கைகளை வடிவமைப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், உலகளவில் குழந்தைகளின் உரிமைகளையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதற்கும் பங்களிக்கிறது.

## Reference and Suggested Readings


குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவோம் 2020 யுனிசெப் (UNICEF End violence Against Children Strategy 2020 . Available at: <https://www.unicef.org/india/media/4151/file/End%20Violence%20Against%20Children%20Strategy%20India.pdf>.

மிஷன் வாத்சல்யா வழிகாட்டுதல்கள் (2022) பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் (Mission Vatsalya Guidelines (2022) Ministry of women and child development Available at): <https://wcd.nic.in/sites/default/files/GUIDELINES%20OF%20MISSION%20VATSALYA%20DATED%2005%20JULY%202022_0.pdf>.

குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை 2021 (Tamilnadu State Child Policy 2021. Available at): <http://languageinindia.com/dec2021/TNStateChildPolicy2021_English.pdf>.


## கேள்விகள்

1. குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்த அரசியல் சாசனத்தில் உள்ள பிரிவுகளைப் பட்டியலிடவும்
2. இளம் சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015ல் வகைப்படுத்தப்படுள்ள குழந்தைகள் வகைகள் பற்றி விளக்கவும்
3. மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகின் கீழ் வழங்கப்படுகிற நிறுவனமயம் அல்லாத பராமரிப்பு சேவைகள் என்ன?
4. இந்தியாவில் உள்ள குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகள் பற்றி விளக்கவும்
5. குழந்தை நலக் குழு மற்றும் இளம் சிறார் நீதிக் குழுமம் வேறுபடுத்திக் காட்டவும்
6. குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாநில ஆணையத்தின் செயல்பாடுகளும் பங்கும் என்ன?
7. ஒன் ஸ்டாப் சென்டர் என்கிற மையத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகள் பற்றி விளக்கவும்
8. போக்சோ சட்டம் 2012 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட குற்றங்களின் வகைகள் என்ன
9. குழந்தைத் திருமண தடைச் சட்டம் 2006ன் முக்கிய அம்சங்களை விளக்கவும்
10. குழந்தைகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசாங்கம் முன்முயற்சி எடுத்துள்ள நலத்திட்டங்களை விவரிக்கவும்

அலகு-4

# குழந்தை நேயப் பள்ளிகளும் ஆசிரியர்களின் பங்கும்

**பள்ளிகளில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆசிரியர்களின் பங்கும் பொறுப்பும்:–**

குழந்தை நேயப் பள்ளிகள் – கற்பிக்கும் முறையையும் மதிப்பீடுகளையும் மதிக்கும் உரிமைகள், குழந்தைகள் பங்குபெறுவதற்கும் அவர்களின் குரல்கள்/கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் இடங்களையும் வாய்ப்புகளையும் உருவாக்குதல் – பள்ளிகளில் குழந்தை உரிமை மன்றங்களின் முக்கியத்துவம் – பள்ளி மேலாண்மைக் குழுக்களின் பங்கு (SMCக்கள்) – குழந்தை உரிமையை பின்பற்றுபவர்களாக ஆசிரியர்களின் சவால்கள்.

## குழந்தை நேயப் பள்ளிகளும் கற்றல் சூழலும் கருத்தும் அவற்றின் முக்கியத்துவமும்

குழந்தை நேயப் பள்ளியும் கற்றல் சூழலும் என்பது குழந்தைகளின் நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் முழுமையான வளர்ச்சிக்கும் முன்னுரிமை அளிக்கும் கல்வி அமைப்பைக் குறிக்கிறது. இது பள்ளிகளின் உள்கட்டமைப்பு, கற்பித்தல் முறைகள், பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் ஆதரவான கொள்கைகள் உட்பட பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. நேர்மறையானதும், அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதுமான குழந்தைகளை ஈர்க்கும் பள்ளிச் சூழலை உருவாக்குவதை இந்தக் கருத்து வலியுறுத்துகிறது. இத்தகைய சூழலில்தான் குழந்தைகள் மதிப்புமிக்கவர்களாகவும், மதிக்கப்படுபவர்களாகவும், கற்றுக்கொள்ள உந்துதல் பெறுவதாகவும் உணர்வார்கள். குழந்தை நேயப் பள்ளிகள் மற்றும் கற்றல் சூழல்களின் முக்கியத்துவத்தை பின்வரும் முக்கிய குறிப்புகள் மூலம் புரிந்து கொள்ளலாம்:

**முழுமையான வளர்ச்சி:** அறிவாற்றல், உணர்வு, சமூக மற்றும் உடல் வளர்ச்சி உட்பட குழந்தையின் வளர்ச்சி சார்ந்த அனைத்து அம்சங்களையும் பராமரித்து வளர்ப்பதில் கவனம் செலுத்தப்படும். குழந்தை நேயப் பள்ளிகளில் கல்வியாளர்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நல்ல முழுமையான கல்வியை வழங்குகிறார்கள். படைப்பாற்றல், விமர்சன சிந்தனை, சிக்கல் தீர்க்கும் வழிமுறை மற்றும் வாழ்க்கை திறன்களை ஊக்குவிக்கிறார்கள்.

**யாரையும் ஒதுக்காமல் உள்ளடக்குவதும் (inclusivity) பன்முகத்தன்மையும்:** பன்முகத்தன்மையை உள்ளடக்கி, ஒவ்வொரு குழந்தைக்கும், அவர்களின் பின்னணி, திறன்கள் அல்லது குணாதிசயங்களைப் பொருட்படுத்தாமல், கற்றுக்கொள்வதற்கும் செழித்து வளர்வதற்கும் சம வாய்ப்புகள் இருப்பது உறுதிசெய்யப்படும். குழந்தை நேயப் பள்ளிகள் வேறுபாடுகளைக் கொண்டாடுகின்ற, சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கின்ற, பாகுபாட்டை ஊக்கப்படுத்தாமல் இருக்கிற அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சூழலை உருவாக்குகின்றன.

**பாதுகாப்பானதும் அச்சமில்லாததுமான சூழல்:** மாணவர்களின் பாதுகாப்புக்கும் அவர்கள் பயமில்லாமல் இருப்பதற்கும் முன்னுரிமை கொடுக்கப்படும். குழந்தை நேயப் பள்ளிகளில் தகுந்த உள்கட்டமைப்பைப் பராமரித்து, பாதுகாப்பு நெறிமுறைகளைச் செயல்படுத்தி, உடல் மற்றும் உளவியல் பாதிப்பிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க முறையான மேற்பார்வை நடக்கிறது என்பதை உறுதி செய்கிறார்கள். அடாவடித்தனத்துக்கும் (புல்லியிங்), வன்முறைக்கும் தீங்கிழைத்தலுக்கும் எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

**ஈடுபாடும், பங்கேற்புடன் கூடிய கற்றலும்:** கற்றலை சுவாரஸ்யமாகவும், அர்த்தமுள்ளதாகவும் மாற்ற புதுமையானதும் குழந்தைகளை மையமாகக் கொண்டதுமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். ஆர்வத்தையும், புதிய புதிய, வழிமுறைகளைக் கண்டுபிடித்து ஆய்வு செய்வதையும், சுதந்திரமான சிந்தனையையும் வளர்க்க, தீவிரமான பங்கேற்பு, செயல் வழிக் கற்றல், குழுப்பணி மற்றும் ஊடாடும் விவாதங்களை குழந்தை நேயப் பள்ளிகளில் ஊக்குவிக்கின்றனர். இத்தகைய அணுகுமுறைகள் குழந்தைகள் கற்றல் மீதான ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளவும், கருத்தாக்கங்களைத் (concepts) நினைவு வைத்துக் கொள்ளவும், புரிந்துகொள்ளவும் உதவுகின்றன.

**ஆதரவான உறவு முறைகள்:** மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பரந்த சமூகத்தினரிடையே நேர்மறையானதும், ஆதரவானதுமான உறவுகளை வளர்க்க வேண்டும். குழந்தை நேயப் பள்ளிகள் திறந்த மனதோடு பேசுவதையும், இணைந்து வேலை செய்வதையும், ஒருவர் மீது ஒருவருக்கு பரஸ்பர மரியாதையையும் ஊக்குவிக்கின்றன. ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகவும், வழிநடத்துபவர்களாகவும் செயல்படுகிறார்கள். மாணவர்களின் கற்றல் பயணங்களை வழிநடத்துகிறார்கள், தேவைப்படும்போது உணர்வுபூர்வமான ஆதரவை வழங்குகிறார்கள்.

**ஆரோக்கியமும் நல்வாழ்வும்:** மாணவர்களின் ஆரோக்கியத்துக்கும் நல்வாழ்வுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். குழந்தை நேயப் பள்ளிகளில் ஆரோக்கியமான பழக்கங்களை ஊக்குவிக்கின்றனர், சத்தான உணவை வழங்குகின்றனர், சுத்தமான நீரையும் சுகாதார வசதிகளையும் வழங்குகின்றனர். மேலும் உடற்பயிற்சி தினசரி செயல்பாடுகளில் இணைக்கப்படுவதை உறுதி

செய்கின்றனர். உணர்வு பூர்வமான சவால்களை எதிர்கொள்ள மனநல ஆதரவும் ஆற்றுப்படுத்தும் சேவைகளும் வழங்கப்படலாம்.

**குழந்தைப் பங்கேற்பும் ஆற்றல்படுத்தலும்:** குழந்தைகளின் கல்வியையும் நல்வாழ்வையும் பாதிக்கிற முடிவுகள் எடுக்கும் போது அதில் குழந்தைகளின் கருத்துக்களைக் கேட்க வேண்டும், அவர்களை ஈடுபடுத்த வேண்டும். குழந்தை நேயப் பள்ளிகள் மாணவர் தலைமையிலான முன்முயற்சிகளை ஊக்குவிக்கின்றன, கருத்துகளையும், யோசனைகளையும் வெளிப்படுத்துவதற்கான தளங்களை உருவாக்குகின்றன. மேலும் மாணவர் கவுன்சில்கள் அல்லது அது போன்ற வழிமுறைகளை தீவிரமாகப் பங்கேற்க ஊக்குவிக்கின்றன. இது மாணவர்களிடையே உரிமையையும், அதிகார உணர்வையும் பொறுப்புணர்வையும் வளர்க்கிறது.

**பெற்றோர்களும் சமுதாயத்தின் ஈடுபாடும்:** கல்விச் செயல்பாட்டில் பெற்றோர்களையும் உள்ளூர் சமுதாயத்தையும் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை குழந்தை நேயப் பள்ளிகள் அங்கீகரிக்கின்றன. அவர்கள் வலுவான இணைந்த செயல்பாட்டை நிறுவுகிறார்கள், பள்ளி நடவடிக்கைகளில் பெற்றோரின் ஈடுபாட்டை ஊக்குவிக்கிறார்கள். குழந்தைகளின் கற்றல் அனுபவத்தை வளப்படுத்த சமூக ஆதரவை நாடுகிறார்கள்.

ஒட்டுமொத்தமாக, குழந்தை நேயப் பள்ளிகளும் குழந்தை நேயக் கற்றல் சூழல்களும் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், மேம்பாடுக்கும் கற்றலுக்குமான உகந்த நிலைமைகளை உருவாக்குவதற்கு முக்கியமானவை. அவை வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அடித்தளத்தை அமைக்கின்றன. கல்வியில் நேர்மறையான அணுகுமுறைகளை உருவாக்க உதவுகின்றன. மேலும் சமூகத்தின் பொறுப்பான உறுப்பினர்களாவதற்குத் தேவையான திறன்களோடும், அறிவோடும் மதிப்புகளுடனும் குழந்தைகளை உருவாக்குகின்றன.

## குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பதில் ஆசிரியர்களின் பங்கும் பொறுப்புகளும்

பள்ளிகளில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். அவர்களின் பொறுப்புகள் மாணவர்களின் நல்வாழ்வு, பயமில்லாமல் இருப்பது மற்றும் பாதுகாப்பு, தொடர்பான பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது.

**பாதுகாப்பானதும் அனைவரையும் உள்ளடக்கியதுமான சூழலை உருவாக்குவது:**

ஒவ்வொரு குழந்தையும் மரியாதையாகவும் பாதுகாப்பாகவும் மதிப்புமிக்கவர்களாகவும் உணருகிற வகையிலான பாதுகாப்பான, அனைவரையும் வரவேற்கிற, அனைவரையும் உள்ளடக்குகிற ஒரு வகுப்பறைச் சூழலை உருவாக்குவது ஆசிரியர்களின் பொறுப்பு. அவர்கள் பரஸ்பர மரியாதை, மற்றொருவருடைய உணர்ச்சிப் போக்கை ஊகித்துணர்ந்து அவரது மனப்பாங்கை அறியும் திறன் (empathy) மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றின் சூழ்நிலையை ஊக்குவிக்கிறார்கள். அனைத்து மாணவர்களும் அவர்களின் பின்னணி, திறன்கள் அல்லது பண்புகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சமமாக நடத்தப்படுவதை உறுதிசெய்கிறார்கள்.

**கவலைகளைக் கண்டறிவதும் புகாரளிப்பதும்:**

தீங்கிழைத்தல், புறக்கணிப்பு, அடாவடித்தனம் செய்தல் அல்லது வேறு ஏதேனும் தீங்கு விளைவிக்கும் அறிகுறிகளை அடையாளம் காண்பதில் ஆசிரியர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். சாத்தியமான சிக்கல்கள் பற்றிய அறிகுறிகளைப் புரிந்துகொள்வதற்கு அவர்கள் தகுந்த பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். தீங்கிழைத்தல் அல்லது புறக்கணிப்பு பற்றிய சந்தேகங்கள் அல்லது வெளிப்பாடுகளை பள்ளி அல்லது தொடர்புடைய குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களுக்குள் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் புகாரளிப்பது தங்கள் கடமை என்பதை அறிந்திருக்க வேண்டும்.

நேர்மறையான உறவுகளை உருவாக்குவதல்: தங்கள் மாணவர்களுடன் நேர்மறையான, நம்பிக்கையான உறவுகளை உருவாக்குவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். மாணவர்களோடு வலுவான உறவுகளை வளர்த்துக்கொள்வதன் மூலம், மாணவர்கள் நம்பிக்கை வைப்பதற்கும், தேவைப்படும்போது ஆதரவைப் பெறுவதற்குமான பாதுகாப்பான இடத்தை ஆசிரியர்கள்

உருவாக்குகிறார்கள். மாணவர்களோடு நல்லுறவைக் கட்டியெழுப்புவது, மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அல்லது கவலைகளை ஆசிரியர்கள் நன்கு புரிந்துகொண்டு அவற்றை நிவர்த்தி செய்ய அனுமதிக்கிறது.

**தனிப்பட்ட பாதுகாப்புத் திறன்களைக் கற்பித்தல்:**

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்புத் திறன்களைப் பற்றிக் கற்பித்து, தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அவர்களை ஆற்றல்படுத்த வேண்டும். எந்த எல்லை வரை அவர்கள் போகலாம் என்பது , தனிப்பட்ட இடம், உறுதியான தன்மை, பாதுகாப்பானதும் பாதுகாப்பற்றதுமான சூழ்நிலைகளுக்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொள்வது பற்றி குழந்தைகளுக்குக் கற்பிப்பது இதில் அடங்கும். ஆன்லைன் பாதுகாப்பு, தொழில்நுட்பத்தின் பொறுப்பான பயன்பாடு மற்றும் இணைய வழி அடாவடித்தனம் செய்தல் (சைபர்புல்லியிங்) தடுப்பு பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும்.

**உணர்வு பூர்வமான ஆதரவை வழங்குதல்:**

ஆசிரியர்களுக்கு தங்கள் மாணவர்களின் உணர்வு பூர்வமான நல்வாழ்வு பற்றிய விழிப்புணர்வு வேண்டும். குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளையும் கவலைகளையும் வெளிப்படுத்த வசதியாக இருக்கும் சூழலை அவர்கள் உருவாக்க வேண்டும். தேவைப்பட்டால், ஆசிரியர்கள் ஆதரவையும், வழிகாட்டுதலையும் ஆலோசனைகளையும் வழங்கலாம். மேலும் தேவைப்படும்போது தொழில்முறை உதவியை அணுகுவதற்கு பொருத்தமான பரிந்துரை செய்யும் அமைப்புகள் இருப்பதை உறுதிசெய்யலாம்.

**தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல்:**

குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அடாவடித்தனம் செய்தல், அடாவடித்தனம் செய்வதற்கு எதிரான கொள்கைகள் மூலம் அடாவடித்தனம் செய்வதை நிவர்த்தி செய்தல், நேர்மறை நடத்தை மேலாண்மை உத்திகளை ஊக்குவித்தல் மற்றும் மாணவர்களிடையே மரியாதை பண்பாட்டை வளர்ப்பது ஆகியவை இதில் அடங்கும். வகுப்பறைகளும் பள்ளி வளாகங்களும் பாதுகாப்பாக இருப்பதையும், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளதையும் ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**சக பணியாளர்களோடும் கல்வியோடு தொடர்புடையவர்களோடும்** (Stakeholders) **இணைந்து வேலை செய்தல்:**

ஆசிரியர்கள் தங்களுடன் வேலை செய்பவர்கள், பள்ளி ஊழியர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்கள், சமூக உறுப்பினர்கள் போன்றவர்கள் பள்ளிக்கு வெளியே உள்ள பள்ளியோடு தொடர்புடையவர்களோடு இணைந்து மாணவர்களுக்கு ஒரு விரிவான ஆதரவுக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்களில் பங்கேற்பது, பயிற்சி அமர்வுகளில் கலந்துகொள்வது, குழந்தைகளின் நலன் மற்றும் உரிமைகள் தொடர்பான தகவல்களை மற்றவர்களுக்கு தீவிரமாகத் தெரிவிப்பதும் பகிர்வதும் இதில் அடங்கும்.

**வேலைக்குத் தகுந்த / வேலை சார்ந்த தொடர்ச்சியான வளர்ச்சி:**

குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான தங்களின் அறிவையும் திறன்களையும் ஆசிரியர்கள் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். வேலை சார்ந்த மேம்பாட்டுக்கான வாய்ப்புகளில் பங்கேற்பதும், பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்வதும் சிறந்த நடைமுறைகளையும் சட்டத் தேவைகளையும் பற்றி அறிந்திருப்பதும் ஆசிரியர்கள் தங்கள் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றுவதை உறுதிசெய்ய உதவுகிறது.

## பள்ளிகளில் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையின் (Child Safeguarding Policy) அவசியம்

குழந்தைகளின் பாதுகாப்பையும், நல்வாழ்வையும் உறுதி செய்ய குழந்தை பாதுகாப்புக் கொள்கைகள் பள்ளிகளில் அவசியம். தீங்கிழைத்தல், புறக்கணிப்பு அல்லது குழந்தைகளுக்கு ஏற்படும் எந்த விதமான துன்புறுத்தும் சம்பவங்களைத் தடுப்பதற்கும் அதற்கு எதிர்வினையாற்றுவதற்கும் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை தெளிவான வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் நிறுவுகிறது. அனைத்து மாணவர்களுக்கும் பாதுகாப்பானதும் பயமில்லாததுமான சூழலை வழங்குவதற்கான பள்ளியின் உறுதிப்பாட்டை இந்தக் கொள்கை கோடிட்டுக் காட்டுகிறது. பல நாடுகளில் பள்ளிகள் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் உள்ளன. இந்த சட்டப்பூர்வக் கடமைகளைக் கடைபிடிப்பது பள்ளிகளுக்கு சட்டரீதியான பின்விளைவுகளைத் தவிர்க்க உதவுகிறது. குழந்தைகளின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது.

**தீங்கிழைத்தலைத் தடுத்தலும் நிவர்த்தி செய்தலும்:** குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள் பள்ளிக்குள் தீங்கிழைத்தலை தடுப்பதற்கான கட்டமைப்பை வழங்குகிறது. கவலைகளைக் கண்டறிந்து புகாரளிப்பது, சரியான நேரத்தில் தலையீடு செய்வதை உறுதி செய்தலும் தொடர்புடைய குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பதும் போன்ற நடைமுறைகளை அவை நிறுவுகின்றன. தெளிவான நெறிமுறைகளைக் கொண்டிருப்பதன் மூலம், குழந்தைகளைப் பாதுகாக்கவும், குற்றவாளிகளைப் பொறுப்பேற்கச் செய்யவும் பள்ளிகள் உடனடி நடவடிக்கை எடுக்கலாம்.

**பாதுகாப்புக் கலாச்சாரத்தை உருவாக்குதல்:** குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை பள்ளிச் சூழலுக்குள் பாதுகாப்புக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது. குழந்தைகளைப் பாதுகாப்பதில் ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அவர்களின் பங்கும் பொறுப்புகளும் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இது வெளிப்படையான தகவல் தொடர்பையும் நம்பிக்கையையும் விழிப்பாக இருப்பதையும் ஊக்குவிக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் அக்கறைகளையும் கவலைகளையும் சொல்வதற்கும் குழந்தைகளைப் பாதுகாக்க ஒன்றாகச் செயல்படுவதற்கும் அதிகாரம் பெற்றவர்களாக உணரும் சூழலை வளர்க்கிறது.

**ஊழியர்களுக்கான பயிற்சியும் விழிப்புணர்வும்:** குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள், தீங்கிழைத்தலின் அறிகுறிகளை அங்கீகரிப்பது, சரியான முறையில் பதிலளிப்பது மற்றும் தொழில்முறை எல்லைகளை பராமரிப்பதில் ஊழியர்களின் பயிற்சிக்கும் மேம்பாட்டுக்குமான கட்டமைப்பை வழங்குகிறது. பணியாளர்கள் நன்கு அறிந்தவர்களாகவும், தேவையான அறிவும் திறன்களும் கொண்டவர்களாகவும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம், பள்ளிகள் குழந்தைகளின் உரிமைகளைத் திறம்படப் பாதுகாக்க முடியும்.

**பெற்றோர்களுடனும் சமூகத்துடனும் நம்பிக்கையை வளர்ப்பது:** ஒரு பள்ளியில் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை ஒன்று இருப்பது, அதன் மாணவர்களின் நலனுக்கான அந்தப் பள்ளியின் அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது. குழந்தைப் பாதுகாப்பை பள்ளி தீவிரமாக எடுத்துக்கொள்கிறது என்ற நம்பிக்கையை பெற்றோர்களிடமும் பரந்த சமூகத்திடமும் இது ஏற்படுத்துகிறது. இது நம்பிக்கையையும் நேர்மறையான உறவுகளையும் உருவாக்க உதவுகிறது. நிறுவனத்தின் ஒட்டுமொத்த நற்பெயரையும் நம்பகத்தன்மையையும் மேம்படுத்துகிறது.

**குழந்தைகளை மையமாகக் கொண்ட அணுகுமுறையை ஊக்குவித்தல்:** குழந்தைகளைப் பாதுகாக்கும் கொள்கையானது, அனைத்து முடிவெடுக்கும் செயல்முறைகளிலும் குழந்தைகளை மையமாக வைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இது குழந்தைப் பங்கேற்பை ஊக்குவிக்கிறது, அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதை உறுதிசெய்கிறது. மேலும் அவர்களின் கருத்துக்களும் கவலைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. குழந்தைகளை மையமாகக் கொண்ட இந்த அணுகுமுறை மாணவர்களிடையே உரிமை, அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகிய உணர்வுகளை உருவாக்குகிறது.

**தொடர்ச்சியான முன்னேற்றமும் பொறுப்புக்கூறலும் (Accountability):** குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள் நிலையான ஆவணங்கள் அல்ல. மாறிவரும் சூழ்நிலைகள், வளர்ந்து வரும் அபாயங்கள், சிறந்த நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அவை தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான முன்னேற்றத்தின் இந்த செயல்முறையானது, குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பள்ளி பதிலளிக்கக் கூடியதாகவும், செயலூக்கமாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்திறனைக் கண்காணித்து மதிப்பிடுவதற்கான வழிமுறைகளை நிறுவுவதன் மூலம் இது பொறுப்புணர்வை ஊக்குவிக்கிறது.

சுருக்கமாக, பள்ளிகளில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, ஆதரவான சூழலை உருவாக்குவதற்கு குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள் முக்கியமானவை. தீங்கிழைத்தலைத் தடுப்பதற்கும் எதிர்வினையாற்றுவதற்கும், விழிப்புணர்வையும் பயிற்சியையும் ஊக்குவிப்பதற்கும், பாதுகாப்பானதும் மரியாதைக்குரியதுமான பண்பாட்டை வளர்ப்பதற்கும் அவை விரிவான கட்டமைப்பை வழங்குகின்றன. இத்தகைய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், கடைப்பிடிப்பதன் மூலமும், குழந்தைகளின் உரிமைகளையும் நல்வாழ்வையும் பாதுகாக்கும் பொறுப்பை பள்ளிகள் நிறைவேற்ற முடியும்.

## கற்பிக்கும் முறையும் மதிப்பீடும் (Pedagogy and Evaluation):

### கற்பிக்கும் முறையையும் மதிப்பீட்டையும் மதிக்கும் உரிமைகள்.

**குழந்தை உரிமைகள் கற்பிக்கும் முறையை மதிப்பது:** குழந்தை உரிமைகள்கற்பிக்கும் முறையை மதிப்பது என்பது கல்விச் செயல்பாட்டில் குழந்தை உரிமைகளின் கொள்கைகளையும் மதிப்புகளையும் ஒருங்கிணைக்கும் கற்பித்தலையும் கற்றலுக்கான அணுகுமுறையையும் குறிக்கிறது. இது குழந்தைகளை அவர்கள் கல்வியில் தீவிரமாகவும் முனைப்புடனும் பங்கேற்பதை அங்கீகரிக்கிறது. அவர்களின் பங்கேற்பு உரிமை, பாகுபாடு இல்லாமல் கற்பதற்கான உரிமை, பாதுகாப்பு உரிமை, உயிர் வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை ஆகிய உரிமைகளை மதிக்கிறது. குழந்தை உரிமைகளை மதிக்கும் கற்பிக்கும் முறையின் சில முக்கியக் கூறுகள் இங்கே:

i. **குழந்தைப் பங்கேற்பு:** கற்பிக்கும் முறை, குழந்தைகளின் கற்றலில் அர்த்தமுள்ளதும் திறன்மிக்க வகையிலான பங்கேற்புக்கு முன்னுரிமை அளிக்கிறது. முடிவெடுப்பதில் குழந்தைகளை ஈடுபடுத்துவது, அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த அனுமதிப்பது மற்றும் விமர்சன சிந்தனை, சிக்கலைத் தீர்ப்பதும் படைப்பாற்றலை ஊக்குவிப்பதுமான கூட்டு நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்துவது ஆகியவை இதில் அடங்கும்.

ii. **வேறுபாடு இல்லாமல் அனைவரையும் உள்ளடக்கியதும் சமமானதுமான நடைமுறைகள்:** குழந்தை உரிமைகளை மதிக்கும் கற்பித்தல் அனைத்துக் குழந்தைகளுக்கும் கற்கவும் செழிப்பாக வளரவும் சம வாய்ப்புகள் இருப்பதை உறுதி செய்கிறது. இது ஒவ்வொரு குழந்தையின் பின்னணி, பாலினம், இயலாமை அல்லது வேறு எந்தப் பண்புகளையும் பொருட்படுத்தாமல், பன்முகத்தன்மையையும் உள்ளடக்கத்தையும் . வேறுபாடுகளையும் மதிக்கும், கொண்டாடும் ஆதரவானதும் மரியாதையானதுமான கற்றல் சூழலை ஊக்குவிக்கிறது.

iii. **முழுமையான வளர்ச்சி:** குழந்தைகளின் அறிவாற்றல், உணர்வு, சமூக மற்றும் உடல் நலன் உள்ளிட்ட முழுமையான வளர்ச்சியை கற்பித்தல் வலியுறுத்துகிறது. இது கல்விச் சாதனைகளுக்கு அப்பாற்பட்டது. குழந்தைகள் சுறுசுறுப்பானதும் பொறுப்பானதுமான குடிமக்களாக மாறுவதற்கு அவசியமான வாழ்க்கைத் திறன்களையும், மதிப்புகளையும் அணுகுமுறைகளையும் வளர்ச்சியையும் உள்ளடக்கியது.

iv. **குழந்தைகளை மையமாகக் கொண்ட கற்றல்:** குழந்தை உரிமைகளை மதிக்கும் கல்வியியல் கற்றல் செயல்முறையின் மையத்தில் குழந்தையை வைக்கிறது. இது ஒவ்வொரு குழந்தையின் தனித்துவத்தையும் தனித்துவமான திறனையும் அங்கீகரிக்கிறது.

அவர்களின் தேவைகளுக்கும் ஆர்வங்களுக்கும் பலங்களுக்கும் ஏற்ப கற்பித்தல் முறைகளையும் கற்றல் அனுபவங்களையும் உருவாக்குகிறது. இது கேள்வி கேட்கும் அடிப்படையிலான கற்றல் முறை, நடைமுறைச் செயல்பாடுகள் மற்றும் கற்றலின் மீது ஈடுபாட்டையும் உரிமையையும் ஊக்குவிக்கும் மாணவர் தலைமையிலான முயற்சிகளை ஊக்குவிக்கிறது.

v. **உரிமைகள் அடிப்படையிலான பாடத்திட்டம்:** குழந்தை உரிமைகளின் கொள்கைகளையும் மதிப்புகளையும் பாடத்திட்டம் பிரதிபலிக்கிறது என்பதை கற்பித்தல் உறுதி செய்கிறது. மனித உரிமைகள், சமூக நீதி, நீடித்த தன்மை ஆகியவற்றிற்கான புரிதலையும் மரியாதையையும் ஊக்குவிக்கும் உள்ளடக்கமும் செயல்பாடுகளும் இதில் அடங்கும். இது குழந்தைகள் தங்கள் உரிமைகள் பற்றியும் பொறுப்புகள் பற்றியும் விமர்சன பூர்வமான விழிப்புணர்வை வளர்த்துக்கொள்ள உதவுகிறது. அவர்களின் சொந்த உரிமைகளுக்காகவும் மற்றவர்களின் உரிமைகளுக்காகவும் வாதாடி ஆதரவு திரட்ட அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

**பள்ளிகளில் குழந்தைகளுக்கான மதிப்பீடு:** பள்ளிகளில் குழந்தைகளை மதிப்பிடும்போது, குழந்தை உரிமைகளுடன் ஒத்துப்போகும் அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது அவசியம். அது அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் வளர்ச்சியையும் மேம்படுத்துகிறது. குழந்தை உரிமைகளுக்கு ஏற்ப மதிப்பீடு செய்வதற்கான சில பரிசீலனைகள் இங்கே:

i. **முழுமையான மதிப்பீடு:** குழந்தையின் அறிவாற்றல் திறன்கள், சமூகத் திறன்கள், உணர்வு பூர்வமாக நன்றாக இருப்பது மற்றும் உடல் திறன்கள் உட்பட குழந்தையின் வளர்ச்சியின் பல அம்சங்களை மதிப்பீடு கருத்தில் கொள்ள வேண்டும். இது பாரம்பரிய முறையில் செய்யப்படும் சோதனைகளுக்கும் தேர்வுகளுக்கும் அப்பால் சென்று குழந்தையின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் மதிப்பிடும் முறைகளை இணைக்க வேண்டும்.

ii. **நீடித்த செல்வாக்கு செலுத்துகிற மதிப்பீடு:** குழந்தையின் கற்றலுக்கும் மேம்பாட்டிற்கும் ஆதரவாக கருத்துக்களையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவதில் நீடித்த செல்வாக்கு செலுத்துகிற மதிப்பீடு கவனம் செலுத்துகிறது. இது பலம், முன்னேற்றத்திற்கான பகுதிகள் மற்றும் தனிப்பட்ட கற்றல் தேவைகளை அடையாளம் காண உதவும் நாம் தொடர்ச்சியாக கூர்ந்து கவனித்தவைகள், உரையாடல்கள், நமது கருத்துக்களை பிரதிபலிக்கிற விவாதங்களை உள்ளடக்கியது. நீடித்த செல்வாக்கு செலுத்துகிற மதிப்பீடு தனிப்பட்ட கற்றலை ஆதரிக்கிறது. ஒவ்வொரு குழந்தையின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய அறிவுறுத்தல்களை உருவாக்க ஆசிரியர்களுக்கு உதவுகிறது.

iii. **குழந்தைப் பங்கேற்பு:** மதிப்பீட்டில் குழந்தைகளை ஈடுபடுத்த வேண்டும். குழந்தைகள் தங்கள் சொந்த முன்னேற்றத்தைப் பற்றி சிந்திக்கவும், இலக்குகளை நிர்ணயிக்கவும், சுய மதிப்பீட்டில் ஈடுபடவும் வாய்ப்பளிக்க வேண்டும். கற்றல் சூழல், கற்பித்தல் முறைகள் மற்றும் அவர்களின் சொந்த கற்றல் அனுபவங்களை மதிப்பீடு செய்வதிலும், முன்னேற்றத்திற்கான மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குவதிலும் அவர்கள் பங்களிக்க முடியும்.

iv. **நம்பத்தகுந்த மதிப்பீடு:** நம்பத்தகுந்த மதிப்பீடு என்பது நிஜ வாழ்க்கைச் சூழல்களிலும் அர்த்தமுள்ள பணிகளிலும் குழந்தைகளின் கற்றலை மதிப்பிடுவதை உள்ளடக்குகிறது. இது மனப்பாடம் செய்வதில் கவனம் செலுத்துவதைவிட நடைமுறைப் பயன்பாடு, சிக்கலைத் தீர்க்கும் திறன், விமர்சன சிந்தனைத் திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. நம்பத்தகுந்த மதிப்பீட்டு முறைகளில் திட்டங்கள், போர்ட்ஃபோலியோக்கள், விளக்கக்காட்சிகள், குழு வேலை மற்றும் நிஜ உலக சூழ்நிலைகளுடன் பொருந்திப்போகிற செயல்திறன் அடிப்படையிலான பணிகள் ஆகியவை அடங்கும்.

v. **பாரபட்சமற்ற நடைமுறைகள்:** மதிப்பீடு நியாயமான முறையிலும் பாரபட்சமற்ற முறையிலும் நடத்தப்பட வேண்டும். இது பல்வேறு கற்றல் பாணிகள், பண்பாட்டுப் பின்னணிகளையும் தனிப்பட்ட திறன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். மதிப்பீட்டுப் பணிகளும் அளவுகோல்களும் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகவும், சார்புநிலை இல்லாமல் இருக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு குழந்தைக்கும் தங்கள் அறிவையும் திறன்களையும் வெளிப்படுத்த சம வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

vi. **வளர்ச்சி மனப்பான்மை சார்ந்த அணுகுமுறை:** மதிப்பீடு ஒரு வளர்ச்சி மனநிலையை ஊக்குவிக்க வேண்டும். தரங்கள் அல்லது நிலையான திறன்களை விட முயற்சி, முன்னேற்றம் மற்றும் பின்னடைவை வலியுறுத்துகிறது. இது தவறுகளையும் சவால்களையும் கற்றல் வாய்ப்புகளாகக் கருதுவதற்கு குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும். கற்றலிலும் சுய வளர்ச்சியிலும் நேர்மறையான அணுகுமுறையை வளர்க்க வேண்டும்.

குழந்தை உரிமைகளை மதிக்கும் கல்விமுறையை ஏற்றுக்கொள்வதன் மூலமும், குழந்தை உரிமைக் கொள்கைகளுடன் மதிப்பீட்டு நடைமுறைகளை சீரமைப்பதன் மூலமும், ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளையும் மதிக்கிற, ஊக்குவிக்கிற, உள்ளடக்கிய, ஆதரவாக இருக்கிற, ஆற்றல்படுத்துகிற கற்றல் சூழலை பள்ளிகள் உருவாக்க முடியும்.

குழந்தைகள் பங்கேற்கவும் அவர்களின் குரல்கள்/கருத்துகளை வெளிப்படுத்தவும் இடங்களையும் வாய்ப்புகளையும் உருவாக்குதல்.

## பள்ளிகளில் குழந்தை உரிமைகள் மன்றங்களின் (Child Rights Clubs) அவசியம்

பள்ளிகளில் குழந்தை உரிமைகள் மன்றங்கள் விழிப்புணர்வு, ஆதரவு திரட்டுதல் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை உணர்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. குழந்தை உரிமைகள் மன்றங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் சில முக்கிய காரணங்கள் பின்வருமாறு:

- **விழிப்புணர்வும் கல்வியும்:** மாணவர்களும், ஆசிரியர்களும் உள்ளிட்ட பள்ளிசார்ந்து பணியாற்றுகிற விரிவான பகுதியினர் மத்தியில் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த குழந்தை உரிமைகள் மன்றங்கள் ஒரு தளத்தை வழங்குகின்றன. அவர்கள் குழந்தை உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (ஹிழிசிஸிசி) பற்றி உறுப்பினர்களுக்குக் சொல்லித் தருவதோடு, குழந்தைகளுக்கு அவர்களின் உரிமைகளையும் மற்றவர்களின் உரிமைகளையும் புரிந்துகொள்ள உதவுகிறார்கள். இந்த அறிவு குழந்தைகள் தங்களுக்கும் தங்கள் சகாக்களுக்கும் உரிமைகள் பற்றி தெரிந்து கொண்டு ஆதரவு திரட்டுபவர்களாக இருக்க உதவுகிறது.

- **அதிகாரமளித்தலும் பங்கேற்பும்:** குழந்தை உரிமை மன்றங்கள் மாணவர்களிடையே தீவிரமான பங்கேற்பை வளர்க்கிறது. அவர்களை ஆற்றல்படுத்துகிறது. குழந்தைகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், முடிவெடுக்கும் செயல்முறைகளில் ஈடுபடவும், அவர்களின் கருத்துக்கள் கேட்கப்படவும் அவை வாய்ப்புகளை வழங்குகின்றன. மன்ற நடவடிக்கைகளில் பங்கேற்பதன் மூலம், குழந்தைகள் தலைமைத்துவம், விமர்சன சிந்தனை, தகவல் தொடர்பு மற்றும் குழுப்பணி போன்ற முக்கியமான திறன்களை வளர்த்துக் கொள்கிறார்கள்.

- **ஆதரவு திரட்டுவதும் சமூக மாற்றமும்:** குழந்தை உரிமை மன்றங்கள் பள்ளிக்கு உள்ளேயும் அதற்கு அப்பாலும் குழந்தைகளின் உரிமைகளுக்காக ஆதரவு திரட்டி வாதிடுவதற்கான தளங்களாக செயல்படுகின்றன. அடாவடித்தனம் செய்தல், பாகுபாடு, குழந்தைத் தொழிலாளர் முறை அல்லது கல்வியை அணுக முடியாத நிலை போன்ற குழந்தைகளின் உரிமைகளைப் பாதிக்கும் பிரச்சினைகளில் நடவடிக்கை எடுக்க மாணவர்களை ஊக்குவிக்கின்றன. விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், நிகழ்வுகள்,

முன்முயற்சிகள் மூலம், குழந்தை உரிமைகள் மன்றங்கள் நேர்மறையான சமூக மாற்றத்திற்கு பங்களிக்கின்றன. குழந்தைகளின் உரிமைகளை மதிக்கும் கலாச்சாரத்தை மேம்படுத்துகின்றன.

- **நண்பர்களின் ஆதரவும் ஒற்றுமையும்:** குழந்தைகள் உரிமைகள் மன்றங்கள் குழந்தைகள் உரிமைகளை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ள ஒரே ரசனைகளைக் கொண்ட உடன் படிக்கும் / பழகும் நண்பர்களுடன் இணைக்கக்கூடிய ஒரு ஆதரவான சூழலை வழங்குகின்றன. இது மன்ற உறுப்பினர்களிடையே மன்றம் எனக்கானது என்கிற உணர்வையும், நட்பையும் ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்துகிறது. சவால்களை எதிர்கொள்ளும் அல்லது வழிகாட்டுதலைத் தேடும் குழந்தைகளுக்கு, அவர்களின் உணர்வு ரீதியான நல்வாழ்வை வளர்ப்பதற்கு இந்த ஆதரவுக் கூட்டமைப்பு குறிப்பாக விலை மதிப்பு மிக்கதாக இருக்கும்.

- **கற்றலும் திறன் மேம்பாடும்:** குழந்தை உரிமைகள் மன்றங்கள் வகுப்பறைக்கு அப்பால் கற்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன. அவர்கள் குழந்தை உரிமைகள், தலைமைத்துவம், ஆதரவு திரட்டுதல் மற்றும் தொடர்புடைய தலைப்புகளில் பட்டறைகளையும், கருத்தரங்குகளையும் பயிற்சிகளையும் ஏற்பாடு செய்கிறார்கள். மன்ற உறுப்பினர்கள் அறிவைப் பெறுகிறார்கள். புதிய திறன்களை வளர்த்துக் கொள்கிறார்கள். மேலும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய அவர்களின் புரிதலை மேம்படுத்துகிறார்கள். அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் இது பங்களிக்கிறது.

- **சமூக ஈடுபாடு:** குழந்தை உரிமை மன்றங்கள் பள்ளி வளாகத்திற்கு அப்பால் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்தி உள்ளூர் சமூகத்துடன் ஈடுபடுகின்றன. குழந்தைகள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சமூக முன்முயற்சிகளை மேற்கொள்வதற்காகவும், சமூக வளர்ச்சிக்குப் பங்களிக்கவும் பிற நிறுவனங்களோடும், அரசு சாரா நிறுவனங்களோடும் சமூகத் தலைவர்களுடனும் அவர்கள் இணைந்து வேலை செய்கின்றனர். இந்த ஈடுபாடு பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை பலப்படுத்துகிறது, குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான கூட்டுப் பொறுப்பை வளர்க்கிறது.

- **நீண்டகாலத் தாக்கம்:** குழந்தை உரிமை மன்றங்கள் மாணவர்களின் வாழ்க்கையில் நீடித்த தாக்கத்தை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. மன்ற செயல்பாடுகள் மூலம் பெறப்படும் அறிவும், திறன்களும் மதிப்புகளும், அவர்களின் பள்ளிப் பருவத்திற்கு அப்பாலும் அவர்களின் அணுகுமுறைகளையும், நடத்தைகளையும் செயல்களையும் வடிவமைக்க முடியும். மன்ற உறுப்பினர்கள் தங்கள் எதிர்கால முயற்சிகளில் குழந்தைகளின் உரிமைகளுக்காக ஆதரவு திரட்டுபவர்களாக மாறலாம், மேலும் நியாயமானதும் உள்ளடக்கியதுமான பங்களிப்பை வழங்கலாம்.

பள்ளிகளில் குழந்தை உரிமைகள் மன்றங்களை நிறுவுவதன் மூலம், கல்வியாளர்கள் குழந்தைகள் தங்கள் உரிமைகளை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் திறன்மிக்க பங்கேற்பாளர்களாக மாறுவதற்கான தளத்தை குழந்தைகளுக்கு வழங்குகிறார்கள். இந்த மன்றங்கள் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கின்றன, தனக்கு உரிமையானது என்கிற உணர்வையும் ஒற்றுமை உணர்வையும் வளர்க்கின்றன. மேலும் அனைத்துக் குழந்தைகளின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு விழிப்புணர்வும், கருணையும், அர்ப்பணிப்பும் கொண்ட ஒரு தலைமுறையை உருவாக்குகின்றன.

## பள்ளி மேலாண்மைக் குழுக்களின் பங்கு (SMCs)

பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMC க்கள்), பள்ளிகளை திறன்மிக்க வகையில் நிர்வாகம் செய்வதிலும் தினசரிப் பணிகளை மேலாண்மை செய்வதிலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன. பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக உறுப்பினர்கள், பள்ளி நிர்வாகிகள் உள்ளிட்ட பள்ளியோடு தொடர்புடை பல்வேறு நபர்களை பிரதிநிதிகளாகக் கொண்ட ஒரு அமைப்பாகும். பள்ளி மேலாண்மைக் குழுக்களின் முக்கிய பங்கும் பொறுப்புகளும் பின்வருமாறு:

1. **பங்கேற்புடன் கூடிய முடிவெடுத்தல்:** SMCக்கள் பள்ளியில் பங்கேற்புடன் கூடிய முடிவெடுக்கும் செயல்முறைகளை எளிதாக்குகின்றன. மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள் பாடத்திட்டம், கொள்கைகள், உள்கட்டமைப்பு மற்றும் மாணவர் நலன் உள்ளிட்ட பள்ளி நிர்வாகத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய அவர்களின் கண்ணோட்டங்களையும், யோசனைகளையும் அக்கறைகளையும் பகிர்ந்துகொள்ள பள்ளி மேலாண்மைக் குழுக்கள் ஒரு தளத்தைக் கொடுக்கின்றன. அனைத்து பங்குதாரர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, கூட்டாக முடிவுகள் எடுக்கப்படுவதை பள்ளி மேலாண்மைக் குழுக்கள் உறுதிப்படுத்துகின்றன.

2. **பள்ளி மேம்பாட்டுத் திட்டமிடல்:** பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதற்கு பள்ளி மேலாண்மைக் குழுக்கள் பொறுப்பு. அவர்கள் பள்ளியின் பலத்தையும், பலவீனங்களையும் முன்னுரிமைகளையும் மதிப்பிடுகின்றனர். மேலும் முன்னேற்றத்திற்கான உத்திகளை அடையாளம் காட்டுகின்றனர். ஷிவிசிக்கள் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் தொடர்புடைய பிறருடன் இணைந்து இலக்குகளை நிர்ணயிக்கவும், வளங்களை ஒதுக்கவும், பள்ளியின் வளர்ச்சிக்காக செய்யப்படும் முயற்சிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் செய்கின்றன.

3. **வளங்களைத் திரட்டுதலும் மேலாண்மையும்:** பள்ளிக்கான வளங்களைத் திரட்டுவதில் ஷிவிசிக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவும் வகையில் போதுமான நிதி ஆதாரங்கள், உள்கட்டமைப்பு மற்றும் கற்றல் பொருட்களைப் பாதுகாப்பதில் அவர்கள் வேலை செய்கிறார்கள். SMC க்கள் நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். பள்ளி மேம்பாட்டுக்கான பங்குதாரராக இணையும் படி உள்ளூர் நிறுவனங்களைக் கேட்கலாம். போதுமான அரசாங்க நிதியுதவிக்காக ஆதரவு திரட்டலாம். கிடைக்கக்கூடிய வளங்களை திறம்பட பயன்படுத்துவதையும் அவற்றை மேலாண்மை செய்வதையும் ஷிவிசி க்கள் மேற்பார்வையிடுகின்றன.

4. **கண்காணிப்பும் மதிப்பீடும்:** SMC க்கள் பள்ளியின் ஒட்டுமொத்த செயல்திறனைக் கண்காணித்து மதிப்பீடு செய்கின்றன. அவர்கள் கல்வி முன்னேற்றம், மாணவர் வருகை, கற்பித்தல் தரம், கொள்கைகள், திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்கின்றன. ஷிவிசி க்கள் பள்ளிக்கு அவ்வப்போது சென்று பார்வையிடலாம். மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் உரையாடலாம், பள்ளி திறன்மிக்க வகையில் செயல்படுகிறதா என்பதை மதிப்பிடுவதற்கு பள்ளி தொடர்பான தரவுகளை பகுப்பாய்வு செய்யலாம். தரவுகளை பகுப்பாய்வு செய்து கண்டறிந்தவைகளின் அடிப்படையில், அவர்கள் கல்வியின் தரத்தை மேம்படுத்து குறித்த தங்கள் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் வழங்குகிறார்கள்.

5. **சமூக ஈடுபாடும் தொடர்பும்:** SMC க்கள் பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடையே ஒரு இணைப்பாக செயல்படுகின்றன. அவை சமூக ஈடுபாட்டை ஊக்குவிக்கின்றன. பள்ளி நடவடிக்கைகளில் பெற்றோர்களுடைய மற்றும் சமூக உறுப்பினர்களின் தீவிர ஈடுபாட்டை ஊக்குவிக்கின்றன. பள்ளி நிகழ்வுகள், கொள்கைகள், சாதனைகள் பற்றிய தகவல்களைப் பரப்புவதன் மூலம் பயனுள்ள தகவல்தொடர்புக்கு ஷிவிசிக்கள் உதவுகின்றன. SMC உறுப்பினர்கள் மக்களிடமிருந்து கருத்துக்களை சேகரித்து பள்ளி நிர்வாகத்திடம் பரிசீலனைக்கு அனுப்புகிறார்கள்.

6. **தரமான கல்விக்காக ஆதரவு திரட்டுதல் :** தரமான கல்விக்காக பள்ளிக்குள்ளும், அரசின் கொள்கை அளவிலும் எஸ்எம்சி ஆதரவு திரட்டுகிறது. அவர்கள் கல்வியின் முக்கியத்துவம், குழந்தை உரிமைகள், பள்ளி மற்றும் அதன் மாணவர்களின் குறிப்பிட்ட தேவைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள். SMC க்கள் ஆதரவு திரட்டும் பிரச்சாரங்களில் ஈடுபடலாம். கல்வி தொடர்பான மன்றங்களில் பங்கேற்கலாம். கல்வி சார்ந்த மேம்பட்ட விளைவுகளை ஆதரிக்கும் கொள்கைகளில் தாக்கம் செலுத்த தொடர்புடைய மற்றவர்களோடு இணைந்து வேலை செய்யலாம்.

7. **முரண்பாடுகளுக்குத் தீர்வும் குறைகளைக் கையாளுதலும்:** பள்ளியோடு தொடர்புடைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பள்ளிச் சமூகத்தில் உள்ள மோதல்களையும் குறைகளையும் நிவர்த்தி செய்வதில் ஷிவிசி க்கள் பங்கு வகிக்கின்றன. பள்ளியோடு தொடர்புடையவர்கள் தங்கள் கவலைகளை வெளிப்படுத்தவும், தீர்வுகளைத் தேடவும் ஷிவிசி க்கள் ஒரு தளத்தை வழங்குகின்றன. SMCக்கள் சச்சரவுகள் நடக்கும்போது பேச்சுவார்த்தை நடத்தலாம், உரையாடலை எளிதாக்கலாம். மேலும், மோதல்களைத் தீர்ப்பதற்கு நியாயமானதும் வெளிப்படையானதுமான செயல்முறைகள் இருக்கிறது என்று உறுதிப்படுத்தலாம்.

8. **மேற்பார்வையும் பொறுப்புக்கூறலும்:** பள்ளி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புணர்வையும் ஷிவிசிக்கள் உறுதி செய்கின்றன. கொள்கைகளை செயல்படுத்துவதையும், விதிமுறைகளைக் கடைபிடிப்பதையும் வளங்களை திறமையாகப் பயன்படுத்துவதையும் அவர்கள் கண்காணிக்கின்றனர். ஷிவிசிக்கள், தரமான கல்வியை வழங்குவதற்கும் மாணவர்களுக்கு பாதுகாப்பானதும் அனைத்து அம்சங்களையும் (பன்முகத்தன்மை, பங்கேற்பு, வெவ்வேறு கற்றல் தேவைகள்) உள்ளடக்கியதுமான கற்றல் சூழலை பராமரிப்பதற்கும் பள்ளி நிர்வாகத்தை பொறுப்பேற்க வைக்கின்றனர்.

பள்ளி மேலாண்மைக் குழுக்கள் தங்கள் பாத்திரங்களையும் பொறுப்புகளையும் தீவிரமாக நிறைவேற்றுவதன் மூலம், திறமையான நிர்வாகம், பள்ளியோடு தொடர்புடையவர்களின் ஈடுபாடு மற்றும் மாணவர்களுக்கான கல்வி அனுபவத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு பங்களிக்கின்றன. ஒருங்கிணைந்த செயல்பாட்டை வளர்ப்பதிலும், வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதிலும், பள்ளி அதன் மாணவர்கள் மற்றும் பரந்த சமூகத்தின் சிறந்த நலன்களுக்காக செயல்படுவதை உறுதி செய்வதிலும் எஸ்எம்சிக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## குழந்தை உரிமைகள் பயிற்சியாளர்களாக ஆசிரியர்கள் சந்திக்கும் சவால்கள்

குழந்தைகள் உரிமைப் பயிற்சியாளர்களாக, கல்விச் சூழலில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் உறுதி செய்வதில் ஆசிரியர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த சவால்களில் பின்வருபவையும் அடங்கும்:

**1. வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வும் புரிதலும்:**

குழந்தை உரிமைகள் பற்றியும் கல்வி அமைப்பில் அவற்றின் தாக்கங்கள் பற்றிபும் குறைவான விழிப்புணர்வும் புரிதலுமே ஆசிரியர்களுக்கு இருக்கலாம். சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது தேசிய சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட உரிமைகளை அவர்கள் அறிந்து கொள்ளாமலும் இருக்கலாம். இது பற்றிய தெளிவின்மை குழந்தைகளின் உரிமைகளை திறம்பட வாதிடுவதற்கும் பாதுகாப்பதற்கும் அவர்களின் திறனில் தடையை ஏற்படுத்தலாம்.

**2. போட்டி முன்னுரிமைகளை சமநிலைப்படுத்துதல்:**

ஆசிரியர்கள் பெரும்பாலும் கல்விச் சாதனை, வகுப்பறை மேலாண்மை மற்றும் பாடத்திட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளையும் முன்னுரிமைகளையும் ஆசிரியர்களாக தங்கள் செய்ய வேண்டிய வேலைகளின் போது எதிர்கொள்கின்றனர். குழந்தை உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், குறிப்பாக குறைந்த வளங்கள், நேரக் கட்டுப்பாடுகள் மற்றும்

செயல்திறன் இலக்குகளை அடைவதற்கான அழுத்தம் இருக்கும் போது, இந்தப் பொறுப்புகளைச் சமநிலைப்படுத்துவது, சவாலானதாக இருக்கலாம்,

**3. போதுமான அளவுக்கு பயிற்சிகள் இல்லாததும் வேலை சார்ந்த வளர்ச்சியும்:**

ஆசிரியர்கள் குழந்தை உரிமைகள் சார்ந்த பிரச்சனைகளில் தேவையான அளவுக்கு பயிற்சியையும் வேலை சார்ந்த வளர்ச்சியையும் பெறாமல் இருக்கலாம். பல்வேறு கற்றல் தேவைகளைக் கையாள்வது, அனைவரையும் உள்ளடக்கும் கல்வியை ஊக்குவித்தல் அல்லது குழந்தைப் பாதுகாப்புப் பிரச்சனைகளைக் கையாள்வது போன்ற குறிப்பிட்ட உரிமைகள் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள ஆசிரியர்களுக்குத் தேவையான திறன்களும் அறிவும் இல்லாமல் இருக்கலாம்.

**4. ஆதரவான கொள்கைகளும் ஆதார வளங்களும் இல்லாமல் இருப்பது:**

ஆதரவான கொள்கைகள், வழிகாட்டுதல்கள், ஆதார வளங்கள் பள்ளியிலும் அமைப்பு ரீதியாகவும் இல்லாதது குழந்தை உரிமைகளைப் பின்பற்றுகிறவர்களாக / பயிற்சியாளர்களாக இருப்பதற்கு ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாக இருக்கலாம். ஆற்றுப்படுத்துபவர்கள் அல்லது சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு தேவையான வளங்கள் போன்ற ஆதரவு சேவைகள் மிகக் குறிப்பிட்ட அளவே இருப்பது தங்களின் மாணவர்களின் பன்முகத்தன்மையுடன் கூடிய தேவைகளை எதிர்கொள்ளும் ஆசிரியர்களின் திறமைக்கு தடையாக இருக்கலாம். தெளிவான கொள்கைகளும் ஆதார வளங்களும் இல்லாமல் குழந்தை உரிமைகள் பிரச்சனைகளை தொடர்ச்சியாகவும் திறன்மிக்க வகையிலும் கையாள்வது ஆசிரியர்களுக்கு ஒரு போராட்டமாக இருக்கலாம்

**5. மாற்றமும் பாரம்பரிய நடைமுறைகளுக்கு எதிர்ப்பும்:**

பாரம்பரிய கற்பித்தல் முறைகளும், ஒழுங்குமுறை நடைமுறைகளும் பண்பாட்டு விதிமுறைகளும் குழந்தை உரிமைக் கொள்கைகளுடன் ஒத்துப்போகாது. இந்தப் பாரம்பரிய நடைமுறைகளுக்கு சவால் விட்டு அவற்றுக்கு எதிராக குழந்தைகளை மையப்படுத்தியதும் உரிமைகள் சார்ந்ததுமான அணுகுமுறைகளை ஊக்குவிக்க முயற்சிக்கும் போது ஆசிரியர்கள் எதிர்ப்பை சந்திக்க நேரிடலாம். எதிர்ப்பை சமாளிப்பதும் மனநிலையிலும் நடைமுறைகளிலும் மாற்றத்தை வளர்ப்பதும் குறிப்பிடத்தக்க ஒரு சவாலாக இருக்கலாம்.

**6. ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும் இல்லாமல் இருப்பது:**

குழந்தைகள் உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆசிரியர்கள், நிர்வாகிகள், பெற்றோர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் உட்பட பல தரப்பினர்களிடையே ஒத்துழைப்பும் ஒருங்கிணைப்பும் தேவைப்படுகிறது. எனினும், பயனுள்ள ஒருங்கிணைப்பும் ஒத்துழைப்பும் இல்லாதது பள்ளிகளில் குழந்தை உரிமைகள் நடைமுறைகளை செயல்படுத்துவதில் தடையாக இருக்கலாம். குழந்தை உரிமைகளோடு தொடர்புடையவர்களிடையே வரையறுக்கப்பட்ட தொடர்பும் ஒத்துழைப்பும் இருப்பது, குழந்தைகளுக்கு ஆதரவானதும் உரிமைகளை மதிக்கக் கூடியதுமான சூழலை உருவாக்குவதற்கான முயற்சிகளைத் தடுக்கலாம்.

**7. வரையறுக்கப்பட்ட அளவில் பெற்றோரின் ஈடுபாடும் சமூக ஈடுபாடும்:**

குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பெற்றோர்களையும் பரந்த சமூகத்தையும் ஈடுபடுத்துவது முக்கியமானது. இருப்பினும், வரையறுக்கப்பட்ட அளவில் இருக்கும் பெற்றோரின் ஈடுபாடு, விலகல் அல்லது குழந்தை உரிமைகள் பற்றிய புரிதல் இல்லாமை ஆகியவை ஆசிரியர்களுக்கு சவாலாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில், பண்பாடு அல்லது சமூகப் பொருளாதாரக் காரணிகள் குழந்தை உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெற்றோரின் பங்கேற்பையும் ஆதரவையும் தடுக்கலாம்.

இந்த சவால்களை எதிர்கொள்ள, குழந்தை உரிமைகள் பிரச்சினைகளில் தொடர்ந்து ஆசிரியர் பயிற்சிக்கும் தொழில்முறை மேம்பாட்டிற்கும் முன்னுரிமை அளிப்பது, ஆதரவான கொள்கைகளையும் வள ஆதாரங்களையும் வழங்குதல், குழந்தை உரிமைகளோடு தொடர்புடையவர்களிடையே

ஒருங்கிணைந்த செயல்பாட்டை வளர்ப்பதும் பள்ளிகளுக்குள் உரிமைகள் அடிப்படையிலான கலாச்சாரத்தை மேம்படுத்துதலும் முக்கியம். கூடுதலாக, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பரந்த சமூகத்தினரிடையே குழந்தை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, அனைத்து குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இருதரப்பினரிடையே புரிதலையும் அர்ப்பணிப்பையும் உருவாக்க உதவும்.

## Reference and Suggested Readings


1. ஜெரோம் லி. மற்றும் ஸ்டார்கி பி. (2023) பல்வேறுவகையான வகுப்பறைகளில் குழந்தைகளின் உரிமைகள் சார்ந்த கல்வி: கற்பித்தலும், கொள்கைகளும் நடைமுறையும். லண்டன்: புளூம்ஸ்பெரி அகடெமிக் Jerome L. and Starkey H. (2023) Children’s rights education in diverse classrooms: Pedagogy, principles and practice. London: Bloomsbury Academic.

2. யுனெஸ்கோ, தழுவிய பன்முகத்தன்மை: உள்ளடக்கிய, கற்றலுக்கு ஏற்ற சூழல்களை உருவாக்குவதற்கு தேவையானவற்றின் தொகுப்பு. UNESCO Embracing diversity: toolkit for creating inclusive, learning-friendly environments. Unesdoc.unesco.org. (n.d.). https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000137522


## பாட முடிவிலான கேள்விகள்

1. குழந்தை நேயப் பள்ளி என்கிற கருத்தை விளக்கவும்
2. பள்ளிகளில் குழந்தை நேயச் சூழலை வைத்திருப்பது ஏன் அவசியம்?
3. குழந்தை நேய வகுப்பறையை வடிவமைக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சரிபார்ப்புப் பட்டியல் என்ன?
4. பள்ளிகளில் குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஆசிரியர்களின் பங்கும் பொறுப்புகளும் பற்றி விளக்கவும்.
5. பள்ளிகளில் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை ஒன்றை வைத்திருப்பது ஏன் அவசியம்?
6. உரிமை அடிப்படையிலான கற்பித்தல் முறை (right based pedagogy) என்றால் என்ன?
7. பள்ளிகளில் பின்பற்றப்படும் வெவ்வேறு வகையான மதிப்பீடு முறைகள் பற்றி விளக்கவும்.
8. குழந்தை உரிமைகள் மன்றம் என்றால் என்ன? பள்ளிகளில் குழந்தை உரிமைகள் மன்றங்களை வைத்திருப்பது ஏன் அவசியம்?
9. பள்ளி மேலாண்மைக் குழுவின் பங்கு பற்றி விளக்கவும்?
10. குழந்தை உரிமைகளைப் பின்பற்றுபவராக இருக்கும் ஆசிரியர்கள் சந்திக்கும் சவால்கள் என்ன?

அலகு-5

# குழந்தைப் பாதுகாப்பும் பங்கேற்புக்கான திறன்களை ஊக்குவித்தலும்

பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை அடையாளம் காணுதல் – வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கையாள்வதற்கான திறன்கள் – பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கான உளவியல் சமூக ஆதரவும், பரிந்துரைகளும் சேவைகளும் – குழந்தைகளின் பங்கேற்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் – குழந்தை உரிமைகளைக் கொண்டாடுவதற்கான திறன்கள்.

## பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை அடையாளம் காணுதல்

பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை அடையாளம் காண்பது அவர்களின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதற்கு முக்கியமானது. பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை அடையாளம் காண நாம் மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகள்:

**'பாதிப்பு' என்ற கருத்தைப் பற்றி புரிந்துகொள்ளவேண்டும்:**

தீங்கிழைத்தல், புறக்கணிப்பு, வறுமை, வீடற்ற நிலை, குடும்பத்தில் போதைப்பொருள் பழக்கத்தால் நேரும் தீங்கு, இதர குறைபாடுகள், மனநலப் பிரச்சினைகள் இன்னும் பிற பிரச்சனைகள் போன்ற குழந்தையின் பாதிப்புக்கு காரணமாக இருக்கும் பல்வேறு காரணிகளைப் பற்றி நாம் நமது புரிதலை நன்கு மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தப் புரிதல் குழந்தை பாதிப்புக்கான அறிகுறிகளை மிகவும் திறம்பட நாம் அடையாளம் காண உதவும்.

**குழந்தையின் மீது மேற்கொள்ளப்படும் தீங்கிழைத்தலும் புறக்கணிப்பும்:**

உடல், உணர்ச்சி அல்லது பாலியல் ரீதியிலான தீங்கிழைத்தல்களை அனுபவிக்கும் குழந்தைகளும், புறக்கணிப்பு அல்லது போதிய கவனிப்பு இல்லாதவர்களும் பாதிக்கப்படக்கூடியவர்களாகக் கருதப்படுகிறார்கள். தீங்கிழைத்தல்கள் அல்லது புறக்கணிப்புக்கான அறிகுறிகளில் விவரிக்கப்படாத காயங்கள், நடத்தை மாற்றங்கள், பயம், புறச்சூழலில் இருந்து விடுபடுதல், மோசமான சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவை அடங்கும்.

**வறுமையும் வீடற்ற நிலையும்:**

வறுமையில் வாழும் அல்லது வீடற்ற நிலையை அனுபவிக்கும் குழந்தைகள்; அடிப்படைத் தேவைகள், கல்வி வாய்ப்புகள், சுகாதாரப் பாதுகாப்பு போன்றவற்றை மற்ற குழந்தைகள் போல இயல்பாக அனுபவிக்க இயலாத சூழலில் இருப்பது உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சீரற்ற பள்ளி வருகை (பள்ளிக்கு அவ்வப்போது விடுப்பு எடுப்பது), மோசமான ஊட்டச்சத்து, போதிய உடைகள் இல்லாமை அல்லது நிலையற்ற வீடுகள் போன்ற அறிகுறிகளை அவர்கள் வெளிப்படுத்தலாம்.

**அகதிகளும் இடம்பெயர்ந்த குழந்தைகளும்:**

வன்முறைகள், போர் அல்லது இயற்கைப் பேரழிவுகள் காரணமாக வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்த குழந்தைகள் குறிப்பாக பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் குடும்பத்தில் இருந்து பிரிந்திருப்பது, கல்வியும் சுகாதாரமும் போதுமான அளவில் கிடைக்காதது, வன்முறை அல்லது சுரண்டலுக்கு ஆளாவது போன்ற சவால்களை அக்குழந்தைகள் எதிர்கொள்வார்கள்.

**மாற்றுத்திறனுடைய குழந்தைகள்:**

உடல், உணர்ச்சி, அறிவுசார் அல்லது வளர்ச்சிக் குறைபாடுகள் உள்ள குழந்தைகள் அதிகப்படியான பாகுபாடு, விலக்கு மற்றும் தேவையான ஆதரவு சேவைகளை பெறுவதில் உள்ள சிரமங்கள் காரணமாக மிகவும் பாதிக்கப்படுகின்றனர். வளர்ச்சியில் தாமதம், குறைவான தகவல் தொடர்பு திறன் அல்லது பொருத்தமான இடவசதி இல்லாமை ஆகியவை அவர்களின் பாதிப்புக்கான அறிகுறிகளில் அடங்கும்.

**குழந்தைத் தொழிலாளரும் சுரண்டலும்:**

குழந்தைக் கடத்தல், வணிக ரீதியான பாலியல் சுரண்டல் அல்லது கட்டாயப்படுத்தி பிச்சை எடுக்க வைப்பது உள்ளிட்ட அபாயகரமான அல்லது உடலுழைப்பை கட்டயாப்படுத்தி சுரண்டும் வகையான தொழிலில் ஈடுபடும் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளனர். அவர்கள் உடல் சோர்வு, மோசமான உடல்நலம், புறச்சூழலில் இருந்து விடுபட்டு விலகியிருத்தல் அல்லது சுரண்டும் நபர்களுடன் சேர்ந்து இருப்பது போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தலாம்.

**போதைப் பொருள்களை பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்கிழைத்தலும் மன நல ஆரோக்கியமும்:**

போதைப் பொருள்களால் ஏற்படும் தீங்குகள் தொடர்பான பிரச்சனைகள் உள்ள குடும்பங்களில் வாழும் குழந்தைகள் அல்லது மனநலப் பிரச்சனைகள் உள்ள குழந்தைகள்; புறக்கணிப்பு, உறுதியற்ற தன்மை அல்லது தீங்கு விளைவிக்கும் சூழலுக்கு ஆட்படுதல் ஆகியவற்றை எதிர்கொள்ளலாம். ஒழுங்கற்ற நடத்தை, மோசமான கல்வித் திறன் அல்லது சுயதீங்கு ஆகியவை அதற்கான அறிகுறிகளில் அடங்கும்.

**ஆதரவற்ற குழந்தைகளும் ஆதரவற்ற சிறார்களும்:**

பல்வேறு சூழ்நிலைகளால் பெற்றோரை இழந்த அல்லது குடும்பத்தை விட்டுப் பிரிந்த குழந்தைகள் சுரண்டல், தீங்கிழைத்தல்கள் மற்றும் ஆதரவின்மை ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் தனிமை உணர்வு, தன் நிலை இழத்தல், மற்றவர்களுடன் தொடர்புகளை உருவாக்குவதில் சிரமம் போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தலாம்.

**நாம் நம்மை ஒரு குழந்தை பாதிப்பின் அறிகுறிகளை அடையாளம் காணக்கூடியவர்களாக பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்:**

ஒரு குழந்தை பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருப்பதைக் குறிக்கும் பொதுவான குறியீடுகள் அல்லது அறிகுறிகளைப் பற்றி நாம் அறிய வேண்டும். இந்தக் குறியீடுகளில் தீங்கிழைத்தல் அல்லது புறக்கணிப்பு (எ.கா., விவரிக்கப்படாத காயங்கள் அல்லது பொதுவான வெளிப்படையான காயங்கள், ஊட்டச்சத்துக் குறைபாடு), நடத்தை மாற்றங்கள் (எ.கா., புறச்சூழலில் இருந்து விடுபடுதல், ஆக்ரோசமாக இருத்தல், அதிகப்படியான பயம்), மோசமான பள்ளி வருகை அல்லது செயல்திறன், பொருத்தமான ஆடை அணியாமல் இருத்தல் அல்லது சுகாதாரம் இல்லாமை, உணர்ச்சி ரீதியிலான பாதிப்புகள் ஆகியவை அடங்கும். இந்தக் குறியீடுகளை / அறிகுறிகளை நாம் அறிந்து வைத்திருப்பது பாதிப்பில் உள்ள குழந்தைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவ பயன்படும்.

**பாதுகாப்பானதும் ஆதரவானதுமான சூழலை உருவாக்குங்கள்:**

குழந்தைகள் தங்கள் கவலைகள் அல்லது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வசதியாகவும் பாதுகாப்பாகவும் உணரும் சூழலை வழங்க வேண்டும். பொறுமையாகக் கேட்பது, அவர்களுடன் நல்லவிதமான உரையாடலை மேற்கொள்வது, அவர்களின் நம்பிக்கைக்கு உரியவராக செயல்படுவது, அவர்களிடம் இரக்கம் கொள்வது மற்றும் முன்தீர்மானமற்ற உரையாடல்களை நிகழ்த்துவதன் மூலம் குழந்தைகளுடன் நம்பிக்கையையும் நல்லுறவையும் உருவாக்க வேண்டும். மனம் திறந்த உரையாடலை ஊக்குவிக்கவும் குழந்தைகள் தங்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கவும் வேண்டும்.

**நிபுணர்களுக்கு பயிற்சியும் கல்வியும்:**

ஆசிரியர்கள், சுகாதாரப் பராமரிப்பாளர்கள், சமூகப் பணியாளர்கள் போன்ற குழந்தைகளுடன் பழகும் நிபுணர்கள்/வல்லுநர்கள், குழந்தைகளின் பாதிப்பைக் கண்டறிந்து அவற்றிற்காக செயலாற்றுவதில் தகுந்த பயிற்சியைப் பெற வேண்டும். இந்தப் பயிற்சியானது பாதிப்பின் அறிகுறிகளைக் கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கான அவர்களின் திறனை மேம்படுத்தும்.

**புகாரளிப்பதை ஊக்குவிக்கவும்:**

குழந்தைக்கு நேரும் பாதிப்பு தொடர்பான ஏதேனும் பிரச்சனைகள் குறித்தோ அல்லது சந்தேகங்களைப் பற்றியோ புகாரளிப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். குழந்தையின் மீதான தீங்கிழைத்தல், புறக்கணிப்பு அல்லது பிற வகையான பாதிப்புகள் பற்றி குழந்தைப் பாதுகாப்பு சேவைகளுடன் தொடர்புடைய அல்லது சட்ட அமலாக்கம் போன்ற துறை சார்ந்த அதிகாரிகளிடம் புகாரளிக்க வல்லுநர்களையும், பெற்றோர்களையும், பராமரிப்பாளர்களையும் சமூகத்தின் உறுப்பினர்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

**குழந்தைப் பாதுகாப்பிற்காக செயல்படக் கூடிய பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும்:**

குழந்தைகளுடன் பணிபுரியும் குழந்தைகள் பாதுகாப்பு முகவர்/அரசுத் துறைகள், காவல்துறை, சிவில் சமூக அமைப்புகளுடன் தொடர்பையும் இணைந்த செயல்பாட்டையும் ஏற்படுத்த வேண்டும். பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளுக்கு விரிவான நடவடிக்கைகளை உறுதிசெய்யவும், தகவலைப் பகிரவும், முயற்சிகளை ஒருங்கிணைக்கவும் நெறிமுறைகளை உருவாக்கிடவும் வேண்டும்.

**சட்ட மற்றும் சமூக நெறிமுறை வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்:**

குழந்தை பாதிப்பைப் புகாரளிக்கும் போது சட்ட மற்றும் சமூக நெறிமுறைக் கடமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைப் பாதுகாப்பு, புகாரளித்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல் தொடர்பான நமது அதிகார வரம்பில் உள்ள சட்டங்களையும் கொள்கைகளையும் பற்றி நாம் நன்கு பரிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட குழந்தைகளின் தனியுரிமையையும் ரகசியத்தன்மையையும் பாதுகாக்கும் வகையில் நாம் இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

நினைவில் கொள்ளுங்கள், பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் குழந்தைகளை அடையாளம் காண்பது முதல் நடவடிக்கையாகும். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேவையான ஆதரவை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பதும் சமமான அளவில் முக்கியமானது. ஒரு குழந்தை உடனடி ஆபத்தில் இருப்பதாக அல்லது தீங்கு விளைவிக்கும் அபாயத்தில் இருப்பதாக நீங்கள் சந்தேகித்தால், உடனடியாக உங்கள் உள்ளூர் குழந்தைப் பாதுகாப்பு அமைப்பு / நிறுவனம் அல்லது அவசரகால சேவைகளைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

## பல்வேறு வகையான குழந்தை தீங்கிழைத்தல், புறக்கணிப்பு பற்றி எச்சரிக்கும் அறிகுறிகளையும், காரணிகளையும் அடையாளம் காணுதல்

குழந்தை தீங்கிழைத்தல் மற்றும் புறக்கணிப்புக்கான எச்சரிக்கை அறிகுறிகளையும் காரணிகளையும் கண்டறிவது; குழந்தைகளின் பாதுகாப்பிற்கான உடனடி தலையீட்டிற்கும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் முக்கியமானது. குழந்தை தீங்கிழைத்தல் மற்றும் புறக்கணிப்பின் சில பொதுவான வகைகள், அவற்றின் எச்சரிக்கை அறிகுறிகளும் பங்களிக்கும் காரணிகளும் பின்வருமாறு:

**உடல் ரீதியான தீங்கிழைத்தல்கள் குறித்த எச்சரிக்கை அறிகுறிகள்:**

- விவரிக்கப்படாத காயங்களும், பிற வெளிப்படையான காயங்களும் அல்லது பொதுவாக குணப்படுத்தும் பல்வேறு நிலைகளில் உள்ள காயங்கள்
- அடிக்கடி ஏற்படும் உடல் காயங்கள் அல்லது தெரிவிக்கப்பட்ட விளக்கத்திற்கு முரணாக இருக்கக் கூடிய காயங்கள்
- வீட்டிற்குச் செல்வதற்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபரைச் சுற்றி இருப்பதற்கோ பயம்
- அதிகப்படியான ஆக்ரோசமான நிலையில் இருப்பது, புறச்சூழலில் இருந்து விடுபடுதல், அதிகப்படியான பயம்

**உடல் ரீதியிலான தீங்கிழைத்தல்களுக்குப் பங்களிக்கும் காரணிகள்:**

- அதிக மன அழுத்தம் நிறைந்த குடும்பச் சூழல்
- குடும்பத்தில் வன்முறை வரலாறு
- பராமரிப்பாளரின் போதைப்பொருள் பழக்கத்தால் ஏற்படும் தீங்கு அல்லது மனநலப் பிரச்சினைகள்

**உணர்ச்சி ரீதியான தீங்கிழைத்தலுக்கான எச்சரிக்கை அறிகுறிகள்:**

- அதிகப்படியான பயம், ஆக்ரோசமான நிலையில் இருப்பது மற்றும் புறச்சூழலில் இருந்து விடுபடுதல்
- தாழ்வான சுயமரியாதை, மனச்சோர்வு அல்லது பதட்டம்
- தீவிர நடத்தை அல்லது உணர்ச்சி வெடிப்புகள்
- தாமதமான உணர்ச்சி வளர்ச்சி.

**உணர்ச்சி ரீதியிலான தீங்கிழைத்தல்களுக்குப் பங்களிக்கும் காரணிகள்:**

- குழந்தை பற்றி பராமரிப்பாளர் அடிக்கடி விமர்சனம் செய்வது, நிராகரிப்பு அல்லது அவமானப்படுத்துதல்
- குடும்ப வன்முறைகளை நேரில் பார்த்தல் அல்லது குடும்பப் பிரச்சனையால் ஏற்படும் பாதிப்புகளை அனுபவிப்பது
- சமூக ஆதரவு வலையிலிருந்து தனிமைப்படுத்துதல்

**பாலியல் தீங்கிழைத்தலுக்கான எச்சரிக்கை அறிகுறிகள்:**

- நடப்பதில் அல்லது உட்காருவதில் சிரமம், அல்லது ஆடைகளை மாற்றுவது சம்பந்தப்பட்ட செயல்களில் பங்கேற்க திடீரென மறுப்பது
- விவரிக்க முடியாத பிறப்புறுப்பு அல்லது குதவலி, இரத்தப்போக்கு அல்லது தொற்று
- வயதுக்கு பொருந்தாத பாலியல் அறிவு அல்லது நடத்தைகள்
- குறிப்பிட்ட நபர்கள் அல்லது குறிப்பிட்ட இடங்களைத் தவிர்த்தல்

**பாலியல் தீங்கிழைத்தலுக்குப் பங்களிக்கும் காரணிகள்:**

- தீங்கிழைத்தல் செய்பவர் அணுகும் சூழலில் குழந்தை இருப்பது
- பாலியல் தீங்கிழைத்தல் பற்றிய விழிப்புணர்வு அல்லது கல்வி இல்லாமை
- பாலியல் தீங்கிழைத்தல் தொடர்பாக அமைதி மற்றும் இரகசியத்தை நிலைநாட்டும் குடும்ப அல்லது சமூக விதிமுறைகள்

**புறக்கணிப்பு சார்ந்த எச்சரிக்கை அறிகுறிகள்:**

- மோசமான சுகாதாரம், போதிய உடைகள் அல்லது ஊட்டச்சத்து குறைபாடு
- பள்ளிக்கு அடிக்கடி வராதது அல்லது சிகிச்சையளிக்கப்படாத மருத்துவ நிலைமைகள்
- மேற்பார்வை இல்லாமை அல்லது பொருத்தமற்ற வயதில் குழந்தையை தனியாக விட்டுவிடுதல்
- சீரற்ற கவனிப்பின்மை அல்லது பெற்றோரின் கவனிப்பின்மை

**புறக்கணிப்பு சார்ந்த எச்சரிக்கை அறிகுறிகள்:**

- பெற்றோரின் போதைப்பொருள் பழக்கத்தால் நேரும் துன்புறுத்தல், மனநலப் பிரச்சினைகளும் அறிவுசார் வரம்புகளும்
- வறுமையும் வளங்களின் பற்றாக்குறையும்
- குடும்ப வன்முறை அல்லது நிலையற்ற வாழ்க்கை நிலைமைகள்

**குழந்தை சுரண்டலுக்கான எச்சரிக்கை அறிகுறிகள்:**

- வணிகரீதியான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் அல்லது குழந்தையை ஆபாசப் படங்களில் ஈடுபடுத்துதல்
- வீட்டிற்கோ அல்லது பள்ளிக்கோ அடிக்கடி உரிய விளக்கமில்லாமல் வராமல் இருப்பது
- விலையுயர்ந்த பொருட்கள் வாங்குதல் அல்லது திடீரென பணப் புழக்கம்
- போதைப்பொருள் பழக்கத்தால் ஏற்படும் தீங்கு அல்லது உணர்ச்சி தீங்கிழைத்தலுடன் கூடிய நடத்தைகளை வெளிப்படுத்துதல்

**குழந்தை சுரண்டலுக்கு பங்களிக்கும் காரணிகள்:**

- வறுமை நிலையும் சரியான பொருளாதார வாய்ப்புகள் இல்லாமையும்
- குடும்பம் செயலிழந்து இருப்பது அல்லது புறக்கணிப்பு
- கடத்தல் தொடர்புகளும் திட்டமிடப்பட்ட குற்றவியல் செயல்பாடுகளும்

இந்த எச்சரிக்கை அறிகுறிகளும் காரணிகள் அனைத்தும் மிக முக்கியமானவை என்றாலும், இதனோடு மட்டுமே குழந்தைகள் மீதான தீங்கிழைத்தல்களுக்கும் புறக்கணிப்புக்குமான முழுமையான காரணிகளாக இருக்க வாய்ப்பில்லை; என்றாலும் இது ஒரு சிவப்புக் கொடியாக நம் முன் இருக்கிறது. நாம் இப்பிரச்சனைகள் மீதான தீவிரமான தலையீடுகளையும் விசாரணைகளையும் தேர்ந்த பயிற்றுநர்கள் அல்லது நிபுணர்களைக் கொண்டு நடத்த வேண்டியிருக்கிறது. ஒரு குழந்தைக்கு தீங்கிழைத்தல் நிகழ்த்தப்படுவதாகவோ அல்லது அந்தக் குழந்தை புறக்கணிக்கப்படுவதாக நீங்கள் சந்தேகித்தால், அந்தத் தகவல்களைப் பற்றி காவல்துறை, மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவு, குழந்தைகள் உதவி எண், குழந்தை நலக் குழு (CWC) போன்ற முறையான அதிகாரிகளிடம் / அமைப்புகளிடம் தெரிவித்தால், அவர்கள் முழுமையான விசாரணையை நடத்தி அக்குழந்தைக்குத் தேவையான ஆதரவையும் பாதுகாப்பையும் உடனடியாக வழங்க முடியும்.

**வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கையாளும் திறன்**

வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கையாள்வதற்கு பரிவானதும் ஆதரவானதுமான அணுகுமுறை தேவை. அந்தக் குழந்தைகளை திறம்பட ஆதரிக்கவும் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் உதவும் சில அத்தியாவசியத் திறன்கள் பின்வருமாறு:

**நிதானமாகவும் பொறுப்போடும் கேட்பது:** குழந்தைகள் தங்கள் உணர்வுகளையும் அனுபவங்களையும் வெளிப்படுத்த பாதுகாப்பானதும் ஆதரவானதுமான இடத்தை உருவாக்க, நிதானமாகவும் பொறுப்போடும் கேட்கும் திறனை பயிற்சி செய்து வளர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் முழு கவனத்தையும் அவர்களுக்குக் கொடுங்கள், கண்ணோடு கண் பார்த்தும் பேசும் பார்வைத் தொடர்பைப் பின்பற்றுங்கள், பரிவு காட்டுங்கள். அவர்கள் பேசும் போது இடையில் குறுக்கிடுவதையோ அல்லது முன்தீர்மனத்தோடு அணுகுவதையோ தவிர்த்து, அவர்களின் உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள்.

**பரிவும் உணர்திறனும்:** குழந்தையின் அனுபவங்களின் மீதும் உணர்ச்சிகளின் மீதும் பரிவு காட்டுங்கள். அவர்களின் பார்வையைப் புரிந்துகொண்டு அவர்களின் உணர்வுகளை மதிக்கப் பழகுங்கள். அவர்களின் தனிப்பட்ட தேவைகள், உணர்ச்சி நிலைகள், மற்றும் எந்த எல்லை வரை நாம் நெருங்கி அவர்களின் தனியுரிமையில் தலையிடலாம் என்பதில் மிகுந்த கவனமாக உள்ளவர்களாக இருக்கவும்; அதற்கேற்ப அவர்களை அணுகவும் பயிற்சி பெறுங்கள்.

**நம்பிக்கையும் நல்லுறவையும் ஏற்படுத்துதல்:** வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நம்பிக்கையான உறவை உருவாக்குவது மிகவும் முக்கியம். நீங்கள் அவர்களை அணுகும் போது உங்கள் உரையாடல்களில் நம்பகமான, நிதானமான மற்றும் மரியாதையான அணுகுமுறையைக் கடைபிடியுங்கள். நீங்கள் அக்குழந்தைகள் நம்புவதற்கு பாதுகாப்பான நபர் என்பதையும், முன் தீர்மானமின்றி அவர்களை ஆதரிப்பீர்கள் என்பதையும் உறுதிபடுத்த வேண்டும்.

அதிர்ச்சிஅறிவிக்கப்பட்ட பராமரிப்புக் கொள்கைகளுடன் கூடிய அணுகுமுறை: குழந்தைகளின் நடத்தையிலும் உணர்ச்சிகளிலும் அதிர்ச்சியின் தாக்கத்தைப் புரிந்து கொள்ளுங்கள். பாதுகாப்பு, நம்பகத்தன்மை, தேர்வு, தொடர்பு மற்றும் அதிகாரமளித்தல் போன்ற அதிர்ச்சி குறித்தஅறிவிக்கப்பட்ட பராமரிப்புக் கொள்கைகளைப் பற்றி நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். அதிர்ச்சி குறித்த உணர்திறனுடன் கூடிய சூழலை உருவாக்க உங்கள் அணுகுமுறையை மாற்றியமைக்கவும்.

**பாதுகாப்பு திட்டமிடல்:** குழந்தையின் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்க குழந்தையுடன் ஒத்துழைக்கவும். வன்முறை அல்லது ஆபத்தை எதிர்கொள்ளும் போது பாதுகாப்பான இடங்களையும், நம்பகமான பெரியவர்களையும் சமாளிக்கும் உத்திகளையும் அடையாளம் காண அவர்களுக்கு உதவுங்கள்.

**உணர்ச்சிக் கட்டுப்பாடு:** ஆரோக்கியமான வழிகளில் தங்கள் உணர்ச்சிகளை நிர்வகிக்க குழந்தைகளுக்கு சமாளிக்கும் உத்திகளை கற்றுக்கொடுங்கள். அவர்களின் உணர்வுகளை அடையாளம் காணவும் வெளிப்படுத்தவும் அவர்களுக்கு உதவுங்கள், ஆழ்ந்த சுவாசப் பயிற்சிகள், நினைவாற்றல் நுட்பங்கள் அல்லது ஆக்கப்பூர்வமாக மன உணர்வுகளை வெளிப்படுத்த உதவும் கலை வெளிப்பாடுகள் அல்லது எழுத்து போன்றவற்றைப் பற்றி பேசவும்.

**வயதுக்கு ஏற்ற உரையாடல்:** குழந்தையின் வயது மற்றும் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப உங்கள் தகவல் தொடர்பு முறையையும் மொழியையும் மாற்றியமைக்கவும். வன்முறை மற்றும் அதன் விளைவுகள் பற்றி விவாதிக்க வயதுக்கு ஏற்ற விளக்கங்களையும் சொற்களஞ்சியத்தையும் பயன்படுத்தவும். கிராஃபிக் விவரங்களுடன் அவர்கள் தகவல்களைப் புரிந்துகொள்வதை உறுதிசெய்யவும்.

**நிபுணர்களுடன் இணைந்து வேலை செய்யவும்:** சிகிச்சையாளர்கள், ஆலோசகர்கள், சமூக சேவையாளர்கள் அல்லது மருத்துவர்கள், உளவியலாளர்கள் போன்ற குழந்தைகளின் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள பிற நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுங்கள். குழந்தை உளவியல் பற்றிய தகவல்களைப் பகிரவும் குழந்தைக்கு அனைத்து சூழலிலும் ஆதரவளிப்பதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையை உறுதிப்படுத்தவும் அவர்கள் பரிந்துரைக்கும் வழிகாட்டுதலைப் பின்பற்றவும்.

**எல்லைகளும் சுயகவனிப்பும்:** குழந்தைகளுக்கு ஆதரவு வழங்கும் போது பொருத்தமானதும் தனிப்பட்டதும் நெறிபடுத்தப்பட்டதுமான தொழில்முறையான எல்லைகளைப் பராமரிக்கவும். குழந்தைகளை எந்தவிதத்திலும் சரியாக அணுகாத செயல்பாடுகளைக் களைய உங்கள் சொந்த வரம்புகளை உணர்ந்து, சுயகவனிப்பைப் பயிற்சி செய்து கொள்ள வேண்டும். தேவைப்படும்போது நிபுணர்களின் மேற்பார்வை அல்லது ஆதரவைப் பெறவும்.

**கலாச்சார உணர்திறன்:** குழந்தைகளுடைய கலாச்சாரப் புரிதல்கள், கருத்துகள் பற்றி அறிந்திருங்கள். குழந்தையின் கலாச்சாரப் பின்னணியை மதிக்கவும். குழந்தைகள் எதிர்கொள்ளும் வன்முறைகளைப் பற்றி புரிந்து கொள்ளவும், அவற்றைப் பாதிக்கும் காரணிகளில் கலாச்சாரக் காரணிகள் எவ்வாறு உள்ளன என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்ற அவர்களின் கலாச்சார நம்பிக்கைகள், மதிப்புகள் செயல்பாடுகள், மற்றும் அவர்களின் அனுபவங்கள் என்னவென்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நினைவில் கொள்ளுங்கள், ஒவ்வொரு குழந்தையின் அனுபவமும் தனித்துவமானது, மேலும் அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு உங்கள் அணுகுமுறையை மாற்றியமைப்பது முக்கியம். ஒரு குழந்தை உடனடியாக ஆபத்தில் இருப்பதாக நீங்கள் நம்பினால், அக்குழந்தை பற்றிய உங்கள் தகவல்களைப் பொருத்தமான குழந்தைப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவிக்கவும்.

குழந்தை தீங்கிழைத்தலும் புறக்கணிப்பும் போன்ற சந்தேகத்திற்கிடமான வழக்குகளைக் கண்டறிந்து புகாரளிப்பதில் ஆசிரியர்கள் மற்றும் பிற நிபுணர்களின் பங்கு

குழந்தைகள் தீங்கிழைத்தலும் புறக்கணிப்பும் போன்ற சந்தேகத்திற்கிடமான வழக்குகளைக் கண்டறிந்து புகாரளிப்பதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். சிறுகுழந்தைகளுக்கு தீங்கிழைத்தலும் புறக்கணிப்பும் போன்ற சந்தேகத்திற்குரிய வழக்குகளைக் கண்டறிந்து புகாரளிப்பதில் அவர்களின் பொறுப்புகள் பற்றிய கண்ணோட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**கவனிப்பும் அங்கீகாரமும்:** குழந்தைகளுடன் நெருக்கமாகப் பணிபுரியும் ஆசிரியர்களே பெரும்பாலும் குழந்தை தீங்கிழைத்தல் மற்றும் புறக்கணிப்பு அறிகுறிகளை அங்கீகரிக்கும் நிலையில் உள்ளனர். மேலும் அவர்கள் பல்வேறு வகையான தீங்கிழைத்தல், புறக்கணிப்பு அல்லது பிற வகையான தீங்குகளுடன் தொடர்புடைய எச்சரிக்கை அறிகுறிகளைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

**ஆவணப்படுத்தல்:** ஒரு குழந்தை துன்புறுத்தல் அல்லது புறக்கணிப்புக்கு ஆளாவதாக ஆசிரியர்கள் சந்தேகிக்கும்போது, அப்பிரச்சனை தொடர்பாக அவர்கள் துல்லியமாக உற்றுநோக்கவும் சரியான நேரத்தில் அதனை ஆவணப்படுத்துவதும் மிக அவசியம். அந்த ஆவணத்தில் உடல்

காயங்கள், நடத்தை மாற்றங்கள் அல்லது குழந்தையுடன் நடத்தப்படும் உரையாடல்கள் பற்றிய தெளிவான பார்வையுடன் கூடிய விரிவான விளக்கங்கள் இருக்கலாம்.

**தொடர்பு முறையும் இணைந்து செயல்படுதலும்:** ஆசிரியர்கள் இவ்விவகாரங்களில் தங்களது கவனங்களைப் பற்றி தங்கள் அமைப்பு அல்லது நிறுவனத்தில் உள்ள பொருத்தமான நபர்களிடம் தெரிவிக்க வேண்டும். நியமிக்கப்பட்ட குழந்தைப் பாதுகாப்பு அதிகாரி, பள்ளி ஆலோசகர், முதல்வர் அல்லது மேற்பார்வையாளரிடம் சந்தேகங்களை விவாதிப்பதும் இதில் அடங்கும். மற்றவர்களுடன் இணைந்து செயல்படுவது ஒரு விரிவான புரிதலையும் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பொருத்தமான முறையில் தொடந்து கண்காணிக்கவும் முக்கியமான செயல்பாடாகும்.

**புகாரளித்தல்:** ஒரு குழந்தைக்கு தீங்கிழைக்கப்படுகிறதா அல்லது அந்தக் குழந்தை புறக்கணிக்கப்படுகிறதா என்ற நியாயமாக நம்பும்படியான சந்தேகம் இருந்தால், சந்தேகத்திற்குரிய தீங்கிழைத்தல் குறித்து சம்பந்தப்பட்ட குழந்தைப் பாதுகாப்பு நிறுவனம் அல்லது அதிகாரிகளுக்குப் புகாரளிக்க நிபுணர்களுக்கு சட்ட மற்றும் நெறிமுறைக் கடமை உள்ளது. அதிகார வரம்பைப் பொறுத்து புகாரளிக்கும் நடைமுறைகள் மாறுபடலாம், ஆனால் ஆசிரியர்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட நெறிமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்ற வேண்டும்.

**இரகசியத் தன்மையும் தனியுரிமையும்:** வன்முறைகளால் அல்லது துன்புறுத்தலால் பாதிக்கப்படும் குழந்தைகள் மற்றும் அவர்களின் குடும்பத்தின் இரகசியத்தன்மையையும் தனியுரிமையையும் ஆசிரியர்கள் மதிக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே தவிர்க்கமுடியாத காரணங்கள் இருந்தால் மட்டுமே குழந்தைப் பாதுக்காப்பில் ஈடுப்பட்டுள்ள மற்றவர்களுடன் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பற்றிய தகவல்களைப் பகிர வேண்டும். புகாரளிப்பதும், ஆவணப்படுத்துவதும் விசாரணை செயல்முறை முழுவதும் குழந்தையின் உரிமைகளும் கண்ணியமும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். இவ்விவகாரத்தில் உணர்திறனுடன் கூடிய செயல்பாடு என்பது மிக மிக முக்கியம்.

**ஆதரவான பங்களிப்பு:** ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் தேர்ந்த வளர்ப்புச் சூழலை உருவாக்கி, உணர்ச்சிபூர்வமான ஆதரவை வழங்க வேண்டும். குழந்தை மற்றும் அவர்களின் குடும்பத்தை பொருத்தமான ஆதார வளங்களுடனும் சேவைகளுடனும் இணைக்க உதவுவதன் மூலம் ஆசிரியர்கள் குழந்தைக்கு ஆதரவான பங்கை வகிக்க முடியும். இதனை குழந்தையின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக செயல்படும் பள்ளி ஆலோசகர்கள், சிகிச்சையாளர்கள் அல்லது பிற நிபுணர்களையும் உள்ளடக்கி செயல்படுத்தலாம்.

## பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கான உளவியல் - சமூக ஆதரவு சார்ந்த பரிந்துரைகளும் சேவைகளும்

உளவியல்சமூக ஆதரவு என்பது குறிப்பிடத்தக்க உளவியல், சமூக அல்லது உணர்ச்சிரீதியான சவால்களை அனுபவித்த அல்லது அனுபவிக்கும் நபர்களின் உளவியல், சமூக நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தலையீடுகள் மற்றும் சேவைகளின் வரம்பைக் குறிக்கிறது. இது உளவியல் காரணிகளும் சமூகக் காரணிகளும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதைக் குறிக்கிறது. ஒரு நபரின் ஒட்டுமொத்த நல்வாழ்வில் இந்தக் காரணிகள் தாக்கத்தை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. உளவியல்சமூக ஆதரவு என்பது ஒரு நபரின் எண்ணங்கள், உணர்ச்சிகள், நடத்தைகள் மற்றும் சமூக சூழல் ஆகியவற்றுக்கு இடையேயான சிக்கலான தொடர்புகளையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. மன அழுத்தத்தைச் சமாளிப்பதற்கும், உணர்ச்சிகளை நிர்வகிப்பதற்கும், உளவியல் சிக்கல்களைத் தடுப்பதற்கும், ஆரோக்கியமான உறவுகளைப் பேணுவதற்கும் தனிநபர்களின் திறன்களை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

உளவியல் சமூக ஆதரவின் முக்கிய உட்கூறுகளும் உள்ளடக்கங்களும் பின்வருமாறு:

**உணர்ச்சிநிலை ஆதரவு:** தனிநபர்கள் தங்கள் உணர்வுகள், அச்சங்கள் மற்றும் பிரச்சனைகளை முன்தீர்மானமின்றி வெளிப்படுத்தக்கூடிய பாதுகாப்பானதும் பரிகாசமானதுமான ஓர் சூழலை வழங்க வேண்டும்.

**உளவியல் ஆலோசனையும் சிகிச்சையும்:** மன உளைச்சல், மன அதிர்ச்சி அல்லது மனநலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சரிசெய்து கொள்ளவும் தனிநபருக்கோ, ஒரு குழுவிற்கோ அல்லது குடும்பத்திற்கோ பயிற்சி அளிக்கும் பல்வேறு விதமான அமர்வுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

**திறமையை வளர்த்தலும் சமாளிக்கும் உத்திகளும்:** மன அழுத்தத்தை நிர்வகிக்கவும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும், சிக்கலைத் தீர்க்கவும், ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்தவும் நடைமுறைத் திறன்கள், அறிவுத் திறனுடன் கூடிய நுட்பங்களையும் உத்திகளையும் கொண்டு தனிநபர்களை தயார்படுத்த வேண்டும்.

**தகவலும் உளவியல் கல்வியும்:** உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் பற்றிய துல்லியமானதும் பொருத்தமானதுமான தகவல்களை வழங்கியும் சுய விழிப்புணர்வை ஏற்படுத்தியும் தனிநபர்கள் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய அனுபவங்களையும் ஆதாரங்களையும் புரிந்துக் கொள்ள உதவிட வேண்டும்.

**சமூக ஆதரவு கூடடமைப்புகள் / வலைபின்னல்கள்:** சமூக ஆதரவு கூட்டமைப்புகள் / வலைப்பின்னல்கள் என்பது குடும்பம், நண்பர்கள், சகக் குழுக்கள், போன்ற ஆதரவான உறவுகளுடன் இணைப்புகளை எளிதாக்குவதற்கும் வளர்ப்பதற்கும் ஆதரவை வழங்குவதாகும்.

**சமூக ஒருங்கிணைப்பும் பங்கேற்பும்:** தனிநபர்கள் தாங்கள் தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்த்து, சமூகத் திறன்களை வளர்த்து, அவர்களுக்கு அதிகாரமளிக்கவும் உள்ளடக்கிய உணர்வை வளர்ப்பதற்கும் அது சார்ந்த சமூக நடவடிக்கைகள், சமூகத் திட்டங்கள் மற்றும் ஆதரவுக் குழுக்களில் ஈடுபட அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**ஆதரவு திரட்டுவதும் ஆற்றல்படுத்துவதும்:** தனிநபர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கும், ஆதரவு திரட்டுவது பற்றி ஊக்குவிப்பதற்கும் அவர்களின் சொந்த வாழ்க்கையைப் பற்றிய புரிதல்களை மேம்படுத்தி அவர்கள் சுயமாக முடிவுகளை எடுக்க அவர்களை ஆற்றல் படுத்துதல்.

உளவியலாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் சமூக சேவகர்கள் உட்பட பல்வேறு வல்லுநர்களால் உளவியல்சமூக ஆதரவை வழங்க முடியும். இது பெரும்பாலும் மனிதத்தன்மையுடன் கூடிய மேம்பாட்டுத் திட்டங்கள், சுகாதார அமைப்புகள், பள்ளிகள் மற்றும் இதர சமூக அடிப்படையிலான செயல்பாடுகளால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

சவால்களைச் சமாளிப்பதற்கான தனிநபர்களின் திறனை மேம்படுத்துவதே உளவியல்சமூக ஆதரவின் குறிக்கோள் ஆகும். இதில் அவர்களின் பின்னடைவான சூழலை மேம்படுத்துதலும் அவர்களின் ஒட்டுமொத்த உளவியலையும் சமூக நல்வாழ்வையும் மேம்படுத்துதலும் அடங்கும். உளவியல் அம்சங்களையும் சமூக அம்சங்களையும் கையாள்வதன் மூலம், கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் தனிநபர்களுக்கான முழுமையான கவனிப்பு மற்றும் ஆதரவின் முக்கியத்துவத்தை வழங்க முடியும்.

தொழில்முறை வல்லுநர்களும் பராமரிப்பாளர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது முக்கியமான நடவடிக்கையாகும். குழந்தைகள் தகுந்த உளவியல்சமூக ஆதரவைப் பெறுவதையும் அவர்களின் தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் பரிந்துரைகள் வழங்குவதற்கும் சேவைகளை அணுகுவதற்கும் ஒருங்கிணைந்த செயல்பாடு உறுதிசெய்கிறது. பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கு பரந்துபட்ட கவனிப்பையும் ஆதரவையும் வழங்குவதற்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களிடையே ஒருங்கிணைப்பும் தொடர்ச்சியான தொடர்பும் அவசியம்.

### குழந்தைகளின் பங்கேற்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான வழிகாட்டிகளாக ஆசிரியர்கள்

குழந்தைகளின் பங்கேற்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். குழந்தைகளின் பங்கேற்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு ஒரு விரிவான, பன்முக அணுகுமுறையும் தேவைப்படுகிறது. ஆசிரியர்கள் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான சில வழிகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது:

**நம்பிக்கையை உருவாக்குதலும் பாதுகாப்பான சூழலை உருவாக்குதலும்:** பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய வகுப்பறை சூழலை உருவாக்குவதன் மூலம் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுடன் நம்பகமான உறவுகளை ஏற்படுத்த முடியும். அனைத்து மாணவர்களையும் மரியாதையுடன் நடத்துவது, அவர்களின் கவலைகளை/ குறைகளைத் தீவிரமாகக் கேட்பது மற்றும் ஒருமித்த உணர்வை வளர்ப்பது ஆகியவை இதில் அடங்கும்.

**செயல்பாடுகளில் பங்கேற்பதை ஊக்குவித்தல்:** வகுப்பறை விவாதங்களில் ஈடுபடுவதற்கும், அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், முடிவெடுக்கும் செயல்பாடுகளில் பங்களிப்பதற்கும் வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் ஆசிரியர்கள் குழந்தைகளின் பங்கேற்பை ஊக்குவிக்கலாம். இது குழந்தைகள் தங்கள் கல்வியின் மீது தங்களுக்குள்ள உரிமையை உணரவும் அவர்களது பங்களிப்பை வளர்த்துக் கொள்ளவும் உதவுகிறது.

**பாகுபாடின்றி அனைவரையும் உள்ளடக்குவதையும் சமத்துவத்தையும் ஊக்குவித்தல்:** ஆசிரியர்கள் பன்முகத்தன்மையைக் கொண்டாடும் ஒரு வகுப்பறைச் சூழலை உருவாக்க வேண்டும். ஒரு விவகாரத்தில் பல்வேறு விதமான கண்ணோட்டங்களை மதிக்கவும், மேலும் அனைத்து மாணவர்களும் தங்களை மதிப்புமிக்கவர்களாகவும் அனைத்து விதத்திலும் உள்ளடக்கப்பட்டவர்களாகவும் உணரப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். குழந்தைகளிடையே உருவாகும் ஒருசார்பு நிலைகளை நிவர்த்தி செய்யவும், ஒரே மாதிரியான பிற்போக்கான தொடர் பழக்கங்களை நிவர்த்தி செய்து மாணவர்களிடையே மற்றொருவருடைய உணர்ச்சிப் போக்கை ஊகித்துணர்ந்து அவரது மனப்பாங்கை அறியும் திறனையும் (empathy) தெளிவான புரிதலையும் ஊக்குவிக்கலாம்.

**தனிப்பட்ட தேவைகளை அங்கீகரித்தலும் பதிலளிப்பதும்:** ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட தேவைகளை ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் தங்களுடைய கற்பித்தல் உத்திகள், பொருட்கள் மற்றும் மதிப்பீடுகளை பல்வேறு கற்பித்தல் முறைகள், திறன்கள், உத்திகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம். தனித்துவமான ஆதரவை வழங்குவதன் மூலம், அனைத்து குழந்தைகளும் கற்றல் செயல்பாட்டில் முழுமையாக பங்கேற்க முடியும் என்பதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**வாழ்க்கைத் திறன்களும் பாதுகாப்பு நடத்தைகளை கற்பித்தலும்:** ஆசிரியர்கள் தங்கள் பாடத்திட்டத்தில் தனித்திறன்கள், தனிப்பட்ட பாதுகாப்பு, சுய மற்றும் எல்லை அமைத்தல் போன்ற வாழ்க்கைத் திறன்கள் குறித்த பாடங்களை இணைக்கலாம். இந்தத் திறன்கள் குழந்தைகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும், அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் பாதுகாப்பையும் மேம்படுத்த உதவுகின்றன.

**பிரச்சனைகளைக் கண்டறிதலும் புகாரளித்தலும்:** குழந்தைகளின் வாழ்க்கையில் ஏற்படும் துன்புறுத்தல், புறக்கணிப்பு அல்லது பிற வகையான பிரச்சனைகளின் அறிகுறிகளை முதலில் கவனிக்கும் வாய்ப்பு ஆசிரியர்களுக்கே பெரும்பாலும் கிடைக்கும். குழந்தைகளின் பிரச்சனைகளை உணர்ந்து பதிலளிப்பதில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுவது மிக அவசியம் ஆகும். குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகள் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சந்தேகங்களையும் புகாரளிப்பதற்கான பொருத்தமான வழிமுறைகளையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

**பெற்றோர்களுடனும் பாதுகாவலர்களுடனும் ஒருங்கிணைந்து செயல்படுவது:** குழந்தைகளின் பங்கேற்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய ஆசிரியர்கள் பெற்றோர்களுடனும் பாதுகாவலர்களுடனும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தகவலைப் பகிர்ந்து கொள்ளவும், பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கவும், குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆதரவான சூழலை உருவாக்கவும் இணைந்து செயல்படவும் ஒரு வெளிப்படையான தொடர்பு வழிமுறைகளை உருவாக்கிட வேண்டும்.

**தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு:** குழந்தைகள் பாதுகாப்பு, உள்ளடக்கம் சார்ந்த செயல்பாடுகள் மற்றும் குழந்தைகளின் பங்கேற்பை வளர்ப்பதிலும் அவர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கும் ஆசிரியர்கள் தொடர்ந்து தங்களை மேம்படுத்திக் கொள்ள

வேண்டும். குழந்தைகளை திறம்பட ஆதரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் சிறந்த நடைமுறைகள் மற்றும் அணுகுமுறைகள் குறித்து புதுப்பித்த நிலையில் எப்போதும் இருக்க தொடர்ச்சியான தொழில்முறையில் அவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்வது உதவுகிறது.

வழிகாட்டிகளின் பங்கை ஏற்றுக்கொள்வதன் மூலம், ஆசிரியர்கள் குழந்தைகளை மேம்படுத்தலாம். அவர்கள் திறன்மிக்க வகையில் பங்கேற்பதை ஊக்குவிக்கலாம், அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நல்வாழ்வையும் ஆதரிக்கும் ஒரு பாதுகாப்பு மற்றும் வளர்ப்புச் சூழலை ஆசிரியர்கள் உருவாக்கலாம்.

**ஆசிரியர்களுக்கான நேர்மறை ஒழுக்க முறை**

நேர்மறை ஒழுக்கம் என்பது பெற்றோர் மற்றும் நடத்தை மேலாண்மைக்கான அணுகுமுறையாகும். இது தண்டனை அல்லது வற்புறுத்தலை நம்பாமல், நேர்மறையானதும் மரியாதைக்குரியதுமான நுட்பங்களைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கு கற்பித்தலிலும் வழிகாட்டுதலிலும் கவனம் செலுத்துகிறது. இது பரஸ்பர மரியாதை, தெளிவான தொடர்பு, மற்றொருவருடைய உணர்ச்சிப் போக்கை ஊகித்துணர்ந்து அவரது மனப்பாங்கை அறியும் திறனையும் (empathy மற்றும் சுய ஒழுக்கத்தைக் கற்பித்தல் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. நேர்மறையான ஒழுக்கத்தின் குறிக்கோள் ஆரோக்கியமான வளர்ச்சியை உருவாக்குவதும், வலுவான உறவுகளை உருவாக்குவதும் குழந்தைகளிடையே நேர்மறையான நடத்தையை ஊக்குவிப்பதுமாகும். நேர்மறை ஒழுக்கத்தில் பயன்படுத்தப்படும் சில முக்கிய கொள்கைகளும் நுட்பங்களும் பின்வருமாறு:

**பரஸ்பர மரியாதை:** நேர்மறை ஒழுக்கம் குழந்தைகளை மரியாதையுடன் நடத்துவதை வலியுறுத்துகிறது. மேலும் அவர்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்கிறது. ஆரோக்கியமான பெற்றோர்குழந்தை உறவைக் கட்டியெழுப்புவதற்கும் மரியாதையுடன் கூடிய தொடர்புகளின் அவசியத்திற்கு பரஸ்பரமான மரியாதையுடன் கூடிய செயல்பாடு அவசியமாகும்.

**தெளிவான எதிர்பார்ப்புகளும் எல்லைகளும்:** தெளிவான எதிர்பார்ப்புகளையும் எல்லைகளையும் வகுப்பதன் மூலம் குழந்தைகள் ஆசிரியர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவர்களுக்கு தெளிவான விதிகளும் வழிகாட்டுதல்களும் நேர்மறையானதும் ஆக்கபூர்வமானதுமான முறையில் தெரிவிக்கப்படுவதால் குழந்தைகள் தங்கள் செயல்களின் வரம்புகளையும் விளைவுகளையும் அறிந்திருப்பதை உறுதி செய்ய முடியும்.

**நேர்மறை வலுவூட்டல்:** நேர்மறை ஒழுக்கம் நேர்மறை நடத்தையை வலுப்படுத்துதலிலும் வளர்த்தெடுப்பதிலும் கவனம் செலுத்துகிறது. விருப்பமான செயல்களை அங்கீகரித்து வெகுமதி அளிப்பதன் மூலம், குழந்தைகள் தொடர்ந்து நேர்மறை நடத்தைகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள். நேர்மறையான நடத்தையை வலுப்படுத்த வாய்மொழியிலான பாராட்டுதல், ஊக்குவித்தல், வெகுமதிகள் அல்லது சலுகைகள் அளிப்பது பயன்படுத்தப்படலாம்.

**இயற்கையான விளைவுகள்:** குழந்தைகளை அவர்களின் இயற்கையான அனுபவத்தோடு இணைந்த முறையான கற்றல் செயல்பாட்டிற்கான மதிப்புமிக்க வாய்ப்புகளை அனுமதிக்க வேண்டும். கடுமையான தண்டனை முறைகளைத் திணிப்பதற்குப் பதிலாக, தங்களின் தேர்வுகளின் விளைவுகளைப் புரிந்துகொள்ளவும் அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளவும் குழந்தைகளை ஊக்குவிக்க நேர்மறை ஒழுக்கமான செயல்கள் உதவுகிறது.

**திசைதிருப்பலும் கவனச்சிதறலும்:** குழந்தைகள் விரும்பத்தகாத நடத்தையில் ஈடுபடும் போது, நேர்மறை ஒழுக்க நுட்பங்கள் பெரும்பாலும் அவர்களின் கவனத்தை திசை திருப்பவும் அல்லது மாற்று நடவடிக்கைகளை வழங்கவும் உதவும். இது எதிர்மறையான நடத்தையிலிருந்து குழந்தைகளின் கவனத்தை மாற்ற உதவுகிறது, மேலும் நேர்மறையான தேர்வுகளை ஊக்குவிக்கிறது.

**சிக்கல்தீர்வு முறையும் ஒருங்கிணைப்பும்:** நேர்மறை ஒழுக்கம் என்பது குழந்தைகளை பிரச்சனைகளைத் தீர்க்கவும் முடிவெடுக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுவதையும் ஊக்குவிக்கிறது.

மேலும் இது தீர்வுகளைக் கண்டறிவதில் அவர்கள் தீவிரமாக பங்கேற்கவும் அவர்களின் விமர்சன சிந்தனை திறன், சுயம் மற்றும் பொறுப்பு ஆகியவற்றை வளர்க்கிறது.

**நேர உள்ளடக்கம்:** நேர உள்ளடக்கம் என்பது ஒரு குழந்தையின் நடத்தையையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்க ஒரு அமைதியானதும் ஆதரவானதுமான சூழலை வழங்கும் ஒரு நுட்பமாகும். கூட்டாக அமர்ந்து, பிரச்சினையைப் பற்றி விவாதிக்கவும் குழந்தைகளின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும் வெளிப்படுத்தவும் இந்த நுட்பம் உதவுகிறது.

**பயனுள்ள தொடர்பு:** நேர்மறை ஒழுக்கம் என்பது வெளிப்படையானதும் பயனுள்ளதுமான தகவல் தொடர்புக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. சுறுசுறுப்பாகக் கேட்பது, வயதுக்கு ஏற்றாற்போல் தகுந்த மொழியைப் பயன்படுத்துவதும் குழந்தைகளின் உணர்ச்சிகளை ஆய்வு செய்வதும் இதில் அடங்கும். பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இடையே புரிதல், மற்றொருவருடைய உணர்ச்சிப் போக்கை ஊகித்துணர்ந்து அவரது மனப்பாங்கை அறியும் திறன் (empathy) மற்றும் வலுவான தொடர்புகளை இது ஊக்குவிக்கிறது.

**மாதிரியான நேர்மறையான நடத்தை:** குழந்தைகளுக்கான நேர்மறையான நடத்தையை மாதிரியாக்குவதில் பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். மரியாதையானதும் கவனமானதுமான நடத்தையை வெளிப்படுத்துவதன் மூலம், குழந்தைகள் சிறந்த மேம்பட்ட குணங்களைக் கற்றுக்கொள்கிறார்கள், பின்பற்றுகிறார்கள்.

**நிலைத்த தன்மையும் முன்கணித்தலும்:** நேர்மறை ஒழுக்கத்தில் நிலைத்த தன்மையோடு இருப்பது முக்கியமானது. தெளிவான எதிர்பார்ப்புகள், விளைவுகள் மற்றும் எல்லைகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். முன் கணிப்பது, குழந்தைகளின் செயல்களின் விளைவுகளைப் புரிந்துகொள்ளவும், பாதுகாப்பு உணர்வை உருவாக்கவும் உதவுகிறது.

நேர்மறை ஒழுக்க நுட்பங்கள் குழந்தைகளின் உணர்ச்சி நிலை, நல்வாழ்வையும், சுயமரியாதையையும் சுய ஒழுக்கத்தையும் செழுமையாக்கிட உதவும். மரியாதைக்குரிய ஒரு சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள பண்பு அது. இது குழந்தைகளின் நடத்தைக்கு வழிகாட்டும் ஒரு கூட்டு மற்றும் ஆதரவான அணுகுமுறையை ஊக்குவிக்கிறது. அவர்களின் எதிர்காலத்திற்கான அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களை வளர்க்க உதவுகிறது.

## குழந்தை உரிமைகளைக் கொண்டாடுவதற்கான திறன்கள்

குழந்தைகளின் உரிமைகளைக் கொண்டாடுவதற்கு, குழந்தைகளின் உரிமைகள் நிலைநாட்டப்படுவதையும், மேம்படுத்தப்படுவதையும் உறுதிசெய்ய, பலவிதமான திறன்கள் தேவை. குழந்தை உரிமைகளைக் கொண்டாடுவதற்கு மதிப்புமிக்க சில முக்கிய திறன்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது:

**குழந்தை உரிமைகள் பற்றிய அறிவு:** குழந்தை உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை (UNCRC) போன்ற சர்வதேச உடன்படிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குழந்தை உரிமைகள் பற்றிய புரிதலைப் பெறுங்கள். குழந்தைகளுக்குப் பொருந்தக் கூடிய குறிப்பிட்ட உரிமைகள், கொள்கைகள், அவர்களின் நல்வாழ்வு மற்றும் மேம்பாட்டிற்கான வழிமுறைகளை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

**ஆதரவு திரட்டுவதும் தகவல் தொடர்பும்:** குழந்தைகளின் உரிமைகளை திறம்பட ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் வலுவான ஆதரவு திரட்டல் மற்றும் தகவல் தொடர்புக்கான திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள். குழந்தை உரிமைகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் திறன், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், குழந்தைகளின் உரிமைகளை நிலைநிறுத்தும் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் ஆதரவு திரட்டுவதற்கு பல்வேறு நிலைகளில் உள்ள குழந்தைகளின் உரிமைகளோடு தொடர்புடைய பலருடன் இணைந்து செயல்படுதல் அவசியம்.

**மற்றொருவருடைய உணர்ச்சிப் போக்கை யூகித்து உணர்ந்து அவரது மனப்பாங்கை அறியும் திறனும் (empathy) ஆர்வத்துடன் கேட்கும் செயல்பாடுகளும்:** குழந்தைகளின் தேவைகள், பிரச்சனைகள் மற்றும் அனுபவங்களைப் புரிந்துகொண்டு பதிலளிக்கவும் மற்றொருவருடைய உணர்ச்சிப் போக்கை யூகித்து உணர்ந்து அவரது மனப்பாங்கை அறியும் திறனையும் (மீனீஜீணீமீலீஹ்) அவர்களின் பிரச்சனைகளைக் கேட்கும் திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள். குழந்தைகளுடன் பழகும் போது உண்மையான ஆர்வத்தையும் மரியாதையையும் வெளிப்படுத்தவும், அவர்கள் தங்களை பாதுகாப்பாக வெளிப்படுத்தும் ஒரு இடத்தையும் முடிவெடுக்கும் வழியையும் உருவாக்குங்கள்.

**குழந்தைப் பங்கேற்பு:** குழந்தைகளை பாதிக்கும் விஷயங்களில் அர்த்தமுள்ள பங்களிப்பை ஊக்குவிக்கவும் எளிதாக்கவும் வேண்டும். குழந்தைகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்களிக்கவும், அவர்களின் உரிமைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக பங்கேற்க முடிகிற சூழல்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதையும் மதிக்கப்படுவதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**கலாச்சார உணர்திறனும் உள்ளடக்கமும்:** குழந்தைகளின் பல்வேறு கலாச்சாரப் பின்னணிகள் மற்றும் அடையாளங்களை அங்கீகரித்து மதிக்கவும். குழந்தை உரிமைகளின் உணர்தலை பாதிக்கக்கூடிய எந்தவொரு கலாச்சார சார்பு அல்லது தடைகளையும் நிவர்த்தி செய்ய கலாச்சார உணர்திறனை வளர்த்துக் கொள்ளுங்கள். குழந்தைகளின் பின்னணியைப் பொருட்படுத்தாமல், அனைத்து குழந்தைகளுக்கும் சம வாய்ப்புகளையும் மரியாதையையும் உறுதி செய்யும் நடைமுறைகளை ஊக்குவிக்கவும்.

**ஒருங்கிணைப்பும் கூட்டமைப்பாக செயல்படுவதும்:** அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், சமூக அமைப்புகள், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் உட்பட குழந்தை உரிமைகளோடு தொடர்புடைய பலருடன் பயனுள்ள இணைந்த செயல்பாடுகளையும் ஒருங்கிணைப்புகளையும் உருவாக்குங்கள். குழந்தை உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் கொண்டாடுவதற்கும் அதிக முயற்சிகள் ஏற்பட தொடர்ந்த கூட்டமைப்பாக செயல்படுவதற்கான தொடர்புகளை உருவாக்கிடுங்கள்.

**கல்வியும் பயிற்சியும்:** குழந்தை உரிமைகள் தொடர்பான கல்விக்கானதும் பயிற்சிக்கானதுமான வாய்ப்புகள் மூலம் உங்கள் அறிவையும் திறன்களையும் தொடர்ந்து புதுப்பிக்கவும். உங்கள் அணுகுமுறை பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக, குழந்தை உரிமைகள் துறையில் தற்போது நடத்தப்படும் ஆராய்ச்சிகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் அதிகரித்து வரும் சிக்கல்கள் ஆகியவற்றைப் பற்றி அறிந்திருங்கள்.


**கண்காணிப்பும் மதிப்பீடும்:** குழந்தை உரிமைகள் தொடர்பான திட்டங்களையும் முன்முயற்சிகளையும் கண்காணித்து மதிப்பீடு செய்வதில் திறன்களை வளர்த்துக்கொள்ளுங்கள். தெளிவான நோக்கங்களை அமைத்தல், தரவுகளை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், குழந்தை உரிமைகளை கொண்டாடுவதற்கான உத்திகளை மேம்படுத்துதல் மற்றும் தகவல்களின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

இந்தத் திறன்களை வளர்த்துக்கொள்வதன் மூலம், உலகெங்கிலும் உள்ள குழந்தைகளின் நல்வாழ்வுக்கும் மேம்பாட்டிற்கும் பங்களிக்கும் வகையில், ஆசிரியர்கள் குழந்தைகளின் உரிமைகளைத் திறம்பட ஊக்குவிக்கவும், பாதுகாக்கவும் கொண்டாடவும் முடியும்.


***

# FLOW CHART

## THE JUVENILE JUSTICE (CARE AND PROTECTION OF CHILDREN) ACT 2015



**Outline of Juvenile Justice (Care and Protection of Children), Act 2015**



# குறிப்பு

ISBN
9 788197 110542